உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

திருவுசாத்தானமாகிய

# சூதவனபுராணம்.

இரண்டாம் பதிப்பு.

இது

ஸ்ரீ வன்றொண்டரவர்கள் மாணாக்கர்

காரைக்குடி

ராம. சொ. சொக்கலிங்கச் செட்டியாரவர்கள்

இயற்றியது.

௸ திருவுசாத்தானமாகிய கோயிலூர்

ஸ்ரீ மந்திரபுரீசுர சுவாமி கோவில் விசாரணை செய்துவரும்

௸ கோயிலூரைச்சார்ந்த ஆலங்காடு

ராம. சித. சிதம்பரச் செட்டியாரவர்களால்

காரைக்குடி.

'குமரன்' அச்சுக்கூடத்தில் அச்சிடப்பெற்றது.

ககூஉஎ

டைட்டில் மட்டும் ஸ்ரீ மீனாம்பிகை பிரஸ் காரைக்குடி.

சிவமயம்.

# முகவுரை.

சீர்கெழு வளத்தி னோர்கெழு சோழ
நாட்டினி லிந்திரன் வேட்டிட வந்த
பூவிரி பொழில்சூழ் காவிரி யாற்றி
னன்குறை யளவுறாத் தென்கரைத் தலங்களு
ளவந்தனை யகற்றுஞ் சிவஞ்சுயம் பிலிங்கத்
திருவுருக் கொண்டு மருவிவீற் றிருந்தருள்
சூத வனமென மாதவர் போற்றுங்
காழிவாழ் சேயி னேழிசைத் துதிபெறுந்
தன்னை யடைந்தோர் மன்னுபி றப்பொடு
மருவுசா வகற்றுந் * திருவுசாத் தானம்

* இந்தத் திருவுசாத்தானமானது தஞ்சாவூர் ஜில்லா திருத்துறைப்பூண்டி தாலுகா முத்துப்பேட்டை ரெயில்வே ஸ்டேசனுக்கு அடுத்த வட திசையில் ஒரு மைல் தூரத்திலுள்ளது. இது கோயிலூரென்னும் நாமம் வழங்கப்பெற்று வருகின்றது. இத்தலத்திலுள்ள ஸ்ரீ மந்திரபுரீசுர சுவாமி திருக்கோயிலில் ராஜகோபுரமும் ஸ்ரீ சோமாஸ்கந்த சுவாமி முன் மண்டப முதலான பலஇடங்கள் மிகவுஞ் சீரணப்பட்டு அதிசீக்கிரத்தில் சீரணோத்தாரணஞ் செய்யவேண்டிய நிலைமையிலிருக்கின்றன. இது ஸ்தலம் தீர்த்தம் மூர்த்தி மூன்றானும் அளவில்லாத அத்தியற்புத அதிமகத்துவமுள்ளதென்பது ஸ்ரீ ஞானசம்பந்த சுவாமிகள் தேவாரத்தாலும் இப்புராணத்தாலும் இனிது விளங்கும். தனவந்தர்களாயுஞ் சிவபுண்ணிய சீலர்களாயுமுள்ள சிவநேசச் செல்வர்கள் இதனைச் சீரணோத்தாரணஞ் செய்து கும்பாபிஷேகஞ் செய்வது அத்தியாவசிய மகாசிவபுண்ணியமாகும். இத்தல மகிமை உள்ளபடி தெரிந்த ராமநாதபுரம் ஜில்லா கொத்தமங்கலம் அள. அரு. முத்தய்ய செட்டியாரவர்கள் குமாரர் அருணாசலஞ் செட்டியாரவர்கள் தமது சகோதரர்களுடன் ஸ்ரீ பெரியநாயகியம்பா கோயில் முழுதும் திருப்பணி செய்யக் கருதி சுமார் ஆறு மாதத்திற்கு முன்னாகத் தொடங்கி நடந்து வருகின்றது. ஷை கோயிலிற் பழுதாயிருந்த மேலை மதில் முதலிய இடங்களை கோயில் வரும்படியில் நித்திய பூசை முதலியவைகளும் சிறப்பாய் நடத்தி மிஞ்சிய பொருளைக்கொண்டு சீரணோத்தாரணம் செய்து வருகிறேன். இனி சுவாமி கோயில் திருப்பணி செய்யக் கருதுஞ் சிவ புண்ணிய சீலர்களுக்கு ஷை கோயில் கிராம வரும்படியில் மிஞ்சுகிற பொருளும் உபயோகமாகும்.

என்னுந் திவ்விய க்ஷேத்திரத்திற்கு நூற்றறுபத்தொன்பது பாடலுள்ள தமிழ்ப் புராணம் சாம்புவனென்னுடைய ஸ்ரீ அம்பலவாண சுவாமிகளிடமிருந் தது. அதனை ஆலங்காட்டுச் சிவபுண்ணியச் செட்டியார் பார்த்தெழுதிய பிரதியொன்று கிடைத்தது. அதனை இயற்றினு ரின்னுரென்று தெரிய வில்லை. பின்பு ஷை மூலப்பிரதியும் வடமொழிப் புராணமொன்றும் பின் னத்தூர் பிர்மஸ்ரீ அ.நாராயண சாஸ்திரியாரவர்களிடமிருந்து கிடைத்தன. வடமொழிப் புராணம் ஜீரணமாயிருந்தது. திருவுசாத்தானத்தில் முன் தல புராண படனம் செய்துவந்த பெருகவாழ்ந்தான் ப்ரஹ்மஸ்ரீ வனமாலி அய்யங்காரவர்கள் வீட்டிலிருந்த ஜீரணமில்லாத வடமொழிப் பிரதி யொன்று கிடைத்தது. தஞ்சாவூர் சாஸ்வதிமால் முதலிய பலவிடங்க ளில் தேடியும் தமிழிலாவது சமஸ்கிருதத்திலாவது வேறு பிரதிகள் கிடைக்கவில்லை. திருவுசாத்தானத்தில் ப்ரஹ்மஸ்ரீ வைத்தியநாதக் குருக் களவர்களிடத்திருந்த வடமொழிப் பிரதிமுற்றுஞ் ஜீரணமாய்விட்டது. இத்தலபுராணம் இங்ஙனம் அருபதிசை யடைந்து வருவதை நோக்கி இதனை அச்சிட்டு வெளிப்படுத்தாத வரையில் இந்த உத்தமோத்தம சிவ சரித்திரம் உலகோபகாரமாகாமல் மறைந்துவிடுமே யென்ற கவற்சியால் இதனை வெளிப்படுத்த வேண்டுமென்னும் பேராசை என்னுள்ளங் கயிர்க் தெழுந்தது. அதன் வழிப்பட்டேனுதலால் இதுவும் எம்பிரான் றிரு வருளேயா மெனக் கருதிப் பெருகவாழ்ந்தான் ப்ரஹ்மஸ்ரீ நாராயண சாஸ் திரியாரவர்களைக்கொண்டு வடமொழிப் பிரதியைச் (169) செய்யுளுள்ள தமிழ்ப் புராணத்தோடு ஒத்துப்பார்த்ததில் தமிழில் மிகவுஞ்சுருக்கமாகவும் சில சரித்திரங்கள் விடுபட்டு மிருந்தமையால், வடமொழியிலுள்ள விரி வின்படியே சரித்திரங்களும் விடுபடாது தமிழில் ஒரு புராணம் செய்விக்க வேண்டுமென்று யோசித்துப், புறச்சமையக் களைகளைகிச், சுத்தாத்து வித சைவ சித்தாந்த மென்னுந் தெய்வப் பயிர் தழைத்தோங்க ராமநாத புரம் ஜில்லா காரைக்குடியில் ஒன்பது கோயில் வகுப்பினராகிய மகுட தனவைசிய நகரத்தார்களுள்ளே, கல்வாசனுட்டில் இளையாற்றக்குடியான குலசேகரபுரத்தில் இரணியூர் மருதங்கூரான ராஜநாராயணபுரத்தில் பிள்ளையார்பட்டி திருவேட்பூருடையான் என்னுங் குடிப்பெயர் பெற்ற, ராம. கு. ராமநாதச் செட்டியாரவர்கள் செய்த அருந்தவப் பயனுற் புதல் வராக அவதரித்தவர்களும், யாழ்ப்பாணம் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவ லரவர்கள் திருவடிக் கன்பராய் அவர்கள் திருச்சந்நிதானத்தில் நீடித்த காலந் தொண்டுபூண் டொழுகினவர்களும், தேவிகோட்டை ஸ்ரீ வன் றெண்டரவர்கள், அனவரத மதுராபுர நிவாஸ ஸ்ரீ மெய்யப்ப சுவாமிகள், மேற்கண்ட நாவலர்பெருமான் மருகரும் முதன் மாணுக்கரும் வித்துவ

சிரோன்மணியுமாகிய ச. பொன்னம்பல பிள்ளையவர்கள் முதலிய ஆன்றோர்களிடத்து இலக்கண இலக்கிய சிவசாஸ்திராதிகளை நன்குணர்ந்தவர்களும், சிவபுராணாதி பற்பல நூல்களை இயற்றினவர்களும், தம்மிடத்திற் கற்கு மாணாக்கர்கள் விரும்பிக் கேட்க மிக ஊக்கத்தோடு சிரமநோக்காது அரிய பொருள்கள் எளிதில் விளங்க உதாரணாதிகளோடு நன்கு போதிப்பவர்களும், சிவபுராணாதி சைவ சாஸ்திரங்களைக் கேட்போர் ஆனந்த பரவசர்களாகும்படி பிரசங்கிப்பவர்களும், தங்கள் குலவிருத்தியாகிய வியாபாராதிகளிற் சிறிதும் காலம் செலுத்தாது உள்ளபடியே மெய்யன்போடு சிவபூசாதி சிவபுண்ணியங்களையே தமக்கு இயற்றொழிலாகக்கொண்டு ஒழுகுபவர்களுமான மகா-௱-௱-ஸ்ரீ சொக்கலிங்கச் செட்டியாரவர்களிடத்தில் அடியேன் கருத்தை வெளியிட்டேன். அவ்வேண்டுகோளுக் கிசைந்து வடமொழியிலுள்ளபடி சரித்திரங்களை மொழிபெயர்த்துச் சிவாலயத் திருப்பணி, மகாகும்பாபிஷேகம், சிவபூசாவிதி முதலியவைகளை பத்ததி முதலிய நூல்களைக்கொண்டும் விரிவாகச் சேர்த்து (1520) திருவிருத்தங்களாற் செய்து தந்தார்கள். "செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும் வானகமு மாற்ற லரிது" "பயன்றூக்கார் செய்தவுதவி நயன்றூக்கி னன்மை கடலிற் பெரிது" என்று தெய்வப்புலமைத் திருவள்ளுவனாயனார் அருளியபடி அவர்கள் செய்த பேருதவிக்கு அவர்கள் பெரும்புகழை யெடுத்துப் பேசுதலன்றி வேறியாது கைம்மாறுடையேன். இப்பெருஞ் சிறப்பினதாகிய சூதவன புராணம் அத்தலத்தில் ஸ்ரீ பிரகந்நாயகி சமேத ஸ்ரீ மந்திரபுரேசுர சுவாமி சந்நிதியில் சாலிவாகன சகாப்தம் 1826 சோபகிருது வருஷம் ஆனிமீ 5உ சுக்கிரவாரம் உத்திர நட்சத்திரம் கடக லக்கினம் கூடிய சுபமுகூர்த்தத்தில் தொடங்கிச் சிங்கவனம் ப்ரஹ்மஸ்ரீ சுந்தரேச பாரதிகள் முதலியோர் கூடிய வித்வ சங்கத்தில் அரங்கேற்றப் பெற்றது. இப்புராணம் கற்றோர்க்கு மாத்திரமன்றி மற்றோர்க்கும் பயனாகும் வண்ணம் என் வேண்டுகோளின்படி இந்நூலாசிரியராலேயே சரித்திரம் விளங்கச் சுருக்கமாய்க் கத்திய ரூபமாகவுஞ் செய்யப்பெற்றுள்ளது.

மேற்படி புராணம் அப்பொழுதே பல அறிஞர்களுக்குக் கொடுத்துச் சிலவாகிவிட்டபடியால் இப்போது இரண்டாம் பதிப்பாக பத்திய ரூப புராணம் கத்திய ரூப புராணம் இரண்டுந் தனித்தனியே அச்சிடப் பெற்றன.

இந்நூலாசிரியர் செய்யுள்களாகவும் வசனமாகவுஞ் செய்த நூல்கள் இன்னின்னன வென்று இவர்கள் செய்து குரோதன வருஷம் பங்குனிமீ வெளியிட்ட வேதாந்தத் தெளிவென்னும் புஸ்தகத்தில் விவரமாகக்

தெரியலாம். அதனில் அக்காலம்வரை செய்து வெளிவந்த நூல்கள் 63 எனத்தெரிகின்றது. இதனாலும் இவர்கள் அறுபத்துமூவரிடத்துள்ள பத்தி மகிமை விளக்கமாம். அவற்றின்பின் ஸ்ரீ காசி விசுவேசர் அடைக்கலப் பதிகம், திருஞானசம்பந்தர் திருப்பெருமணத் திருவெழுச்சி, சில தோத்திரப் பாடல்களென மூன்று நூல்கள் செய்து அச்சில் வெளியிட்டார்கள். இவர்கள் முன்செய்துள்ள சம்பந்தர் பிள்ளைத் தமிழுடன் இப்போது திருநாவுக்கரசு சுவாமிகள் சுந்தரமூர்த்தி சுவாமிகள் மாணிக்கவாசக சுவாமிகள் பிள்ளைத் தமிழ் மூன்று பூர்த்தியாயிருக்கின்றன. திருத்தொண்டர் புராணசார விளக்கமென்றொரு நூல்நாயன்மார்களின் அருமை பெருமை முதலிய நுண்பொருள்கள் விளக்கிச்செய்து வருகின்றார்கள். முக்கால் வரிசைக்கு மேலாகியது. இன்னுமிவர்கள் இப்படியே சைவ சமயோபகாரமான நூல்கள் செய்து தீர்க்காயுசுடன் வாழும்படி திருவருளைப் பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம்,

**ராம. சித. சிதம்பரம் செட்டியார்,**

அலங்காரி.

சிவமயம்.

## திருவுசாத்தானம்

# திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

## தேவாரம் பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

நீரிடைத் துயின்றவன் றம்பிநீள் சாம்புவான்
போருடைச் சுக்கிரீ வன்னனு மான்றொழக்
காருடை நஞ்சுண்டு காத்தருள் செய்தவெம்,
சீருடைச் சேடர்வாழ் திருவுசாத் தானமே. (க)

கொல்லையே றுடையவன் கோவண வாடையன்
பல்லையார் படுதலைப் பலிகொளும் பரமனார்
முல்லையார் புறவணி முதுபதி நறைகமழ்
தில்லையா னுறைவிடந் திருவுசாத் தானமே. (உ)

தாமலார் போலவே தக்கனார் வேள்வியை
யூமனார் தங்கனா வாக்கினா னொருகொடிக்
காமனா ருடல்கெடக் காய்ந்தவெங் கண்ணுதல்
கோமகா வுறைவிடந் திருவுசாத் தானமே. (ங)

மறிதரு கரத்தினான் மால்விடை யேறியான்
குறிதரு கோலநற் குணத்தினா ரடிதொழ
நெறிதரு வேதியர் நித்தலு நியமஞ்செய்
செறிதரு பொழிலணி திருவுசாத் தானமே. (ச, ரு. க)

பண்டிரைத் தயனுமா லும்பல பத்தர்க
டொண்டிரைத் தும்மலர் தூவித்தோத் திரஞ்சொலக்
கொண்டிரைக் கொடியொடுங் குருகினி னல்லினத்
தெண்டிரைக் கழனிசூழ் திருவுசாத் தானமே. (எ)

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரம்.

மடவரல் பங்கினன் மலைதனை மதியாது
சடசட வெடுத்தவன் றலைபத்து நெரிதர
வடர்தர வூன்றியங் கேயவற் கருள்செய்தான்
றிடமென வுறைவிடந் திருவுசாத் தானமே. (அ)

ஆணலார் பெண்ணலா ரயனொடு மாலுக்குங்
காணொணா வண்ணத்தான் கருதுவார் மனத்துளான்
பேணுவார் பிணியொடும் பிறப்பறுப் பானிடஞ்
சேணுலா மாளிகைத் திருவுசாத் தானமே. (௯)

கானமார் வாழ்க்கையான் காரமண் டேரரொ ரால்
லூனமாக் கொண்டுநீ ருரைமினும் யவெனில்
வானமார் மதிலணி மாளிகை வளர்பொழிற்
றேனமா மதியந்தோய் திருவுசாத் தானமே. (௰)

வரைதிரிந் திழியுநீர் வளவயற் புகலிமன்
றிரைதிரிந் தெரிகடற் றிருவுசாத் தானரை
யுரைதெரிந் துணருஞ்சம் பந்தனொண் டமிழ்வல்லார்
நரைதிரை யின்றியே நன்னெறி சேர்வரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

## பெரியபுராணம்

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் புராணம்.

௬௨௪-திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

திருவுசாத் தானத்துத் தேவர்பிரான் கழல்பணிந்து
மருவியசெந் தமிழ்ப்பதிக மால்போற்றும் படிபாடி
யிருவினையும் பற்றறுப்பா றெண்ணிறந்த தொண்டருடன்
பெருகுவிருப் பினராகிப் பிறபதியும் பணிந்தணைவார்.

திருச்சிற்றம்பலம்.

# சிறப்புப்பாயிரம்

சிதம்பரம் ஸ்ரீமீனாக்ஷி தமிழ்க்காலேஜ் பிரின்சிபாலாகிய
உத்தமதானபுரம் மஹாமகோபாத்தியாய, தாக்ஷிணாத்ய கலாநிதி
பிர்மஸ்ரீ வே. சாமிநாதையரவர்கள் இயற்றியது

---

பூமேவு கடுக்கை முடிப்பரன் றிருவுசாத் தானபுராணந் தன்னைத்
தேமேவு தமிழ்மொழியிற் காரைநகர்ச் சொக்கலிங்கச் செல்வன்றன்னா
னாமேவு பத்தியமா நடையாக வியற்றுவித்து நல்கி னானாற்
பாமேவு பழம்பதியா மாலங்காட் டிலங்குசிதம் பரவேண்மன்னே

அப்பணியுஞ் செவ்வேணிக் கருமிடற்று மாதேவர்க் கன்பினோடுந்
துப்பணியுந் திருப்பணியாங் கற்பணியும் பொற்பணியுந் தொண்டர்க்காய
வெப்பணியு நிதம்புரியுஞ் சிதம்பரவேள் சொற்பணியென் றெவரும்போற்று
மிப்பணியின் றியற்றுவித்த பல்பண்பே விளம்புகென் றிசைப்பார்யாரே

---

திராவிடபாஷா துரீண

சுத்தாத்துவித சித்தாந்த சைவ விபவஸ்தாபக

ஸ்ரீமந் நாவலர்பெருமான் பாததூளி சிரமேற்கொண்ட

யாழ்ப்பாணத்து வட்டுக்கோட்டை

## ஆ. அம்பலவாண நாவலரவர்கள் இயற்றியது

---

திருவுசாத் தானமென வுலகுசாத் தானமான் மியத்தைச்செம்மை
மருவுசாத் தானதமி ழாற்றருக வென்றலங் காட்டின் வாழ்வி
னிருவுசாத் தானகவி மாலையான் சிதம்பரவே ளிசைப்பத்தந்தான்
கரு*வுசாத் தானயந்தார் கண்பாளன் சொக்கலிங்கக் கவிஞரேறே.

பாடுவதிற் பாடுநரைப் பாடுவதே பாடுபுகழ் பயக்கு மாமென்
றாடுகழன் மன்றுடையார் பாடுகொற்றங் குடியடிக ளறிவித் தாரா
மீடுபெறு சேக்கிழார் புராணமிசைத் தென்பாது பேணி யாமு
நாடிரு பாவிசைத்தவ் விருவர்செழு தகைமையு மன்னயந்தா மன்னோ

---

*உ — விஷ்ணு

சிவமயம்.

# சருக்க அட்டவணை.


| பக்கம். | சருக்கப் பெயர். | பாட்டுத்தொகை |
|---|---|---|
| ௧ | கடவுள் வாழ்த்து ... | ௩௩ |
| ௯ | பாயிரம் ... | ௩௯ |
| ௰௧ | திருநாட்டுச் சிறப்பு ... | ௩௨௮ |
| ௨௮ | திருநகரச் சிறப்பு .... | ௩௫௯ |
| ௪௯ | புராண வரலாறு ... | ௫௰ |
| ௫௬ | தலவிசேடச் சருக்கம் ... | ௨௨ |
| ௫௯ | தீர்த்த விசேடச் சருக்கம் ... | ௩௭ |
| ௬௨ | மூர்த்தி விசேடச் சருக்கம் ... | ௩௫ |
| ௬௬ | சூதவன நாமகாரணச் சருக்கம் ... | ௮௩ |
| ௭௭ | ஆதிசேடனுபதேசம் பெற்ற சருக்கம் ... | ௭௮ |
| ௮௭ | ஆதிசேடன் சிவலிங்கம்பெற்ற சருக்கம் .... | ௪௭ |
| ௯௪ | ஆதிசேடன் சூதவனம்சென்ற சருக்கம் ... | ௬௫ |
| ௱௨ | ஆதிசேடன் திருப்பணிச் சருக்கம் ... | ௧௨௭ |
| ௧௧௯ | ஆதிசேடன் சிவார்ச்சனைச் சருக்கம் ... | ௧௨௩ |
| ௧௩௫ | வருணன் சாபமோசனச் சருக்கம் ... | ௮௨ |
| ௧௪௫ | மார்க்கண்டேயச் சருக்கம் ... | ௧௨௩ |
| ௧௬௧ | இராமன் மந்திரோபதேசம் பெற்ற சருக்கம் ... | ௩௬௯ |
| ௧௮௨ | அமுதநிவேதனச் சருக்கம் ... | ௨௮ |
| ௧௮௬ | இந்திரன் திருவிழாச் சருக்கம் ... | ௩௩௬ |


ஆகத்திருவிருத்தம். ௧௫௨௦.

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# சூதவன புராணம்.

## காப்பு.

பூவரு மயன்மா லாதி புனிதரு முனிவ ராதி
யேவருஞ் சூழ்ந்து போற்ற வின்னரு ளளிதி னல்கு
மாவரும் பொழிற்பைஞ் சூத வனப்பெரு மகிமை கூற
மூவரும் பரவு மானை முகத்தனை யகத்துள் வைப்பாம். (க)

சீத மாவன மார்பினன் றெவ்வெலற்
கேத மாவன தீர்த்தரு ளீசன்வாழ்
சூத மாவனத் தோன்முகத் தோனம்பு
சாத மாவனத் தாணமந் தேத்துவாம்.

முதலடியில் மா - இலக்குமி. வனம் - துளபம். மூன்றாமடியில் மா - வண்டு. நான்காமடியில் வனம் - அழகு. நமந்து - சுபந்தமாகிய வடமொழிப் பெயரடியாற் பிறந்த வினையெச்சம். நமஸ்கரித்து என்பதாம். இதனை உமாபதிசிவம் திருத்தொண்டர்புராணசாரம் (சக) செய்யுளில் "வண்ணானை நமந்தகோ" எனறருளிய வாற்றானு முணர்க. (உ)

## நூற்பயன்.

பூத நாதன் சூதவன புராண மீதன் புறக்கேட்போ
ரோது மவரப் படனடத் துநர்முன் னுமுத் தமரெவரு
மேத மொழிந்து போதமுணர்ந் திம்பர் வாழின் பெல்லாம்பெற்
றாதி யமலன் றிருவடிக்கீ ழமர்பே ரின்புற் றுடன்வாழ்வார். (௩)

## வாழ்த்து.

வேத வேள்வி மழைவளங்கள் வீற்று வீற்றா ருயிர்க்கின்ப
மாதி யறங்க ளணிவளர்க வைந்தக் கரங்கண் டிகைநீறெ ன்
றோது சிவசா தனம்பொலிக வுயர்சை திகசை வந்தழைக
நீதி வேந்தர் மனுச்செங்கோ னிலவி வாழ்க வுலகெல்லாம். (௪)

# கடவுள் வாழ்த்து.

## மந்திரேசர்.

பூமா தமரு மணிமார்பன் புவனம் புரக்கும் புகழ்நிலைத்தற்
காமா தரவிற் றசரதன்கா லாங்கா லோர்கா லருள் வலிவேட்

டேமாண் புறப்போற் றியவளித்த வெந்தை மந்தி ரேசனடி
நாமாற் சுழிப்பட் டுலையாமே நடலைக் கடலைக் கடத்திடுமே. (௫)

திருவு சாத்தா னந்தனயந் திகழ்த்த வமர்வோ னெமதுபவம்
வெருவு சாத்தா னந்தனய விளிப்போன் முருந்த நீபின்னாண்
மருவு சாத்தா னந்தனயன் வருமென் றருள்வோன் மௌலியினிந்
துருவு சாத்தா னந்தனய னொளிர்பொற் கமலத் தாள்பணிவாம்.

திருவுசாத்தானமானது தன் நயத்தை விளக்கும்படி அமர்வோனெனவும், எமதுபவம் நந்த வெருவுசா (தான் அசை) நைய விளிப்போன் எனவும், சாத்தா நம் தனயனாய் வருவான் எனவும், இந்து உருவத்தைச்சாத்து ஆனந்தன் ஐயன் எனவும் பிரித்துப்பொருள் கொள்க.(௬)

பெரியநாயகியம்மை.

புரிய ஞயகி லம்பர வருளெனிற் புரக்குந்
துரிய ஞயகின னந்தவிர்த் தெமக்கருள் சுரக்கும்
பிரிய ஞய்கி புனிபர னிடம்பிரி யாத
பெரிய நாயகி திருவடிப் பிரசமென் மலரே.

ஆய கின்னம் - எம்மைப் பந்தித்ததாகிய துக்கம். ஆய் அகி - நூல்களை ஆராய்ந்த சர்ப்பம்; ஆதிசேடனென்க. அன்னாய் அகிலம்பரவு அருள்புரி எனில், அப்பெரிய நாயகி திருவடிமலர் புரக்கும் எனமுடிக்குக. துரியனும் பிரியனுமாகிய பரன் என்க. புரத்தல் கொடுத்தலுமாம். (௭)

நடேசர்.

மடன குஞ்சித பாதவந் தனைக்கொண்மா வனத்தெம்
மடன குஞ்சித பாதவந் தனைமுறை வகுத்து
நடன குஞ்சித பாதவந் தனைதெற நலமார்
நடன குஞ்சித பாதவந் தனைதின நயப்பாம்.

எம் மடன் நகும் சிதம் பா தவம் தனை முறை வகுத்து-எமது அறியாமையைக் கெடுக்கின்ற ஞானத்தையும் பரந்த தவத்தையும் அளவையும் முறையையும் வகுத்துக்காட்டி, அவம் தனைதெற--அவகுணங்களையும் சிவபோதத்தையும் தெறும் பொருட்டும், ந குஞ்சி தபாது நட-சிறந்த முடியின் கண்ணே நீங்காது (தன்னை) நடும்பொருட்டும், மடல் நகும் சிதம் பாதவந்தனைக் கொள் மாவனத்து-இதழ் விரிகின்ற (மலர் செறிந்த) விண்மீன் அளவுயர்ந்த விருக்ஷங்களைக் கொண்ட சூத வனத்தில் வீற்றிருந் தருளுகின்ற (நடேசப் பெருமானுடைய) நடன குஞ்சித பாத வந்தனை-நடனகுஞ்சித பாதத்திற் செய்யும் வழிபாட்டை, தினம் நயப்பாம்-தினந்தோறும் விரும்புவாம். நகுதல்-இகழ்தல்; அது கெடுத்தலைக் குறிப்பா லுணர்த்தியது. தனை-சிவனை யென்னும் பொருட்

டாய்ச் சிவபோதத்தைக் குறிப்பா லுணர்த்தியது. காட்டித் தெறும்பொருட்டும், நடும்பொருட்டும் வந்தனை தினம் நீயப்பாம் என முடிக்குக. மலர் செறிந்த விருக்ஷமென் றியையும். முதலடி சிதம்-விண்மீன். இரண்டாமடி சிதம்-ஞானம். சிவகாமி யம்மை. (௮)

பனகந் தாக்கிரு பாற்றெழுச் சிற்சபை பயிலுங்
கனகந் தானடங் காண்சிவ காமி தாட்கமல
மனகந் தாவிருள் வெளியுற மலப்பகை மடிக்கு
மனகந் தாநித மன்புசெய் தின்புற வடுப்பாம்.

பன்னகம் இடைக்குறை. மூன்றும் அடியிற் கந்தரம்-குகை. (௧)

தெட்சணாமூர்த்தி.

சிரவ ணம்புயங் கம்மதி யிதழியஞ் சிவணும்
பிரவ ணம்புய லளவுகல் லானிழற் பிரியா
வுரவ னம்புயர் நால்வர்க் குறவமர் பரம
குரவ னம்புய நாண்மலர்ச் சேவடி குறிப்பாம்.

சிரவணம்-சிரசில் கங்கை. ஆம்பிரவணம் ஈறு உருபும் பயனும் தொக்கது. வனம்புயல் எதுகை நோக்கி இயல்பாயிற்று. (௧௦)

விநாயகர்.

தவள வாரணம் புகறிரு நீற்றொளி தழைக்கும்
பவள வாரணன் மேனிய னைங்கரன் பரமன்
றிவள வாரண வஞ்சடை வேதியன் சிறுவன்
கவள வாரண முகத்தனை யகத்தினிற் கலப்பாம்.

தவள நீறென்றியையும். நீற்றொளி தழைக்கும் பவளமேனி எனக்கூட்டுக. ஆர்-அருமை. அணல் இடைக்குறை. மூன்றாமடியில் ஆர்-ஆத்தி. வார் எனப்பிரித்துக் கங்கை எனக்கொள்ளினும் அமையும். (௧௧)

சுப்பிரமணியர்.

செங்க டம்பணி புயந்தழீஇக் தேவகுஞ் சரியோ
டங்க டம்பணி கொங்கையங் குறமின்வேட் டமர்கோ
னெங்க டம்பணி துணிமயி லூரிறை யெமக்கோர்
சங்க டம்பணி யாதசெய் தாடொழு தெழுவாம்.

எங்கள் தம் இறை என்றியையும். சங்கடம் உம்மை தொக்கது.

வீரபத்திரர். (௧௨)

வீர பத்திர வீச்சுடர் வாளிறுஞ் செகன்மால்
சாரபத்திரங் காதிருண் மலப்பகை தடிவா

வீர பத்திர நாண்மல ராதிகொண் டிறைஞ்சி
வீர பத்திர னடிமுடி கொண்டுநாம் விழைவாம்.

தீரம்-தளராமை. பத்தியாகிய வாள் என்க. சார் அபத்து எனப்பிரிக்குக.

வைரவர். (௧௩)

காரி யேற்றகங் கைக்கொணு கண்ணுத னிருவி
காரி யேற்றகங் கைக்கொணு திவர்கழ னிரகங்
காரி யேற்றகங் கைக்கொணு தன்கரத் தளித்த
காரி யேற்றகங் கைக்கொணுண் மலரடி கலப்பாம்.

(அரிபிர மேந்திராதி தேவர்களைத் துரத்திக் கொண்டு வந்த) விஷத்தை எதிர்த்துச்(சென்று) உள்ளங் கையிற் (கவர்ந்து) கொண்டுவந்து, கண்ணுதலும், நிருவி காரியும், இடபத்தின்மேல் மனம் களிக்க வொண்ணுது இவருகின்ற கழலையுடைய நிரகங்காரியும், தாங்கிய கங்கையைக் கொண்ட நாதனுமாகிய ஞுதவனேசர் கரத்து அளித்த காரியாகிய வைரவமூர்த்தியி னுடைய' மிக்க பாவத்தை வெறுக்கின்ற ஒள்ளிய நாண்மலரடியை (நம்முள்ளத்திற்) கலப்பாம். ஏறு-அகம்-மிக்கபாவம், ஏற்றகமென எதுகை நோக்கிப் பிறவினை போல் நின்றது. விஷத்தைக் கொண்டு வந்து நாதன் கரத்தளித்த காரி எனக் கூட்டுக. (௧௪)

திருநந்திதேவர்.

துள்ளி மால்வரை வேணிமுச் சுடர்விழித் தூயோன்
வெள்ளி மால்வரை காத்தருள் விமலன்மெய்த் தவத்தோ
ருள்ளி மால்வரைந் துணர்சிவ ஞானபோ தந்நூல்
வள்ளி மால்வரை நந்திதாண் மலர்முடி வனைவாம்.

துள்ளி-திவலை. மேகந் தங்கிய வேணி. மால்வரைந்து-ஆசையால் எழுதி. வள்ளி-கொடைஞன். மயக்கம் நீக்கும் நந்தி. (௧௫)

இலக்குமி.

அமலை யாதியெண் செல்வ மருளுமை
யமலை தன்வலக் கண்ணம ரன்னைபாற்
கமலை மேற்றுயில் கண்ண னிறத்திசெங்
கமலை பாதங் கருத்து ளிருத்துவாம்.

அமலை ஆதி-அன்னம் முதலிய.பால் கம் அலை-பாலாகிய நீர் நிறைந்த அலை. பாற்கடல் என்க. நிறம்-மார்பு.

சரசுவதி (௧௬)

முற்று மாவியம் மூகத் தவமொரீஇச்
செற்று மாவிய லின்பரு ளூமெறீஇ

யுற்று மாவிய ளுதனெண் பாதமே
பற்று மாவியக் கன்னையைப் பாடுவாம்.

ஆவி முற்றும் எனவும், மாஇயல் செற்று எனவு மாற்றுக. மாஇயல்-ஆணவமல சத்தி. மா-கருமை; அது ஆணவமலத்தை யுணர்த்திற்று. உமா வியன் நாதன் ஏனைப் பிரிக்குக. (௧௭)

தமிழாசிரியர்.

குலைய மாதவ னேகுறு கென்றுகை
தலைய மாதவ வைத்தான் றன்னுரு
நிலைய மாதவண் டந்த நிறைதமிழ்
மலைய மாதவன் சேவடி வாழ்த்துவாம்.

குல்லையை யுடைய அழகிய மாதவனே நீ குறுகு என்று தன்கையை அவர் தலையில் அம்மா மிகவும் வைத்தழுத்தி அரனுரு நிலைக்கும்படி அவண் அழகு தந்த மலைய மாதவ னென்க. மாதவனே நீகுலைக, குறுகுக என வியங்கோளீறாக்கினும், முன்னிலைமை குலையும்படி என எச்சமாக்கினும் அமையும். அரன் றன்னுரு-சிவலிங்கரூபம். மாது-விருப்பமுமாம். அப்படிக் கொள்ளுங்கால் சிவலிங்க ரூபம் நிலைக்கும்படி தன் விருப்பத்தை அவண் செய்து முடித்த மலைய மாதவ னென்க. (௧௮)

ஆளுடைய பிள்ளையார்.

காழி நாதனைக் கௌணியர் திலகனைக் கடையேற்
சூழி நாதனைத் தொழுமுனந் துடைத்துவெம் பவஞ்சப்
பாழி ளுதனை யாளுடைப் பிள்ளையைப் பாடின்
வாழி நாதனைப் பண்முறை வணங்குவன் மன்னோ.

இனு-இடைக்குறை. பவஞ்சப்பாழி னின்றும் ஆதனுகிய என்னை எடுத்தாளுதலையுடைய பிள்ளை. வாழ்வையுடைய இனிய நாவை. (௧௯)

ஆளுடைய அரசுகள்.

வெய்ய ளுவினை வசத்துழ லென்னுள மேவுஞ்
செய்ய ளுவிலூர் பானருள் பெறுநெறிச் செலுத்து
மெய்ய ளுவிக ளுயவருண் மேனிகொள் விமலன்
றுய்ய ளுவின்வேந் தாளுடை யரசடி தொழுவாம் (௨௦)

ஆளுடைய நம்பிகள்.

சேவ லம்பதி தாவெனக் கிளத்துபொன் னிதழித்
தூவ லம்பதிர் முடிப்பா னிழலுருத் தூயோன்
மாவ லம்பதி நலந்திகழ் பைம்பொழில் வயங்கு
நாவ லம்பதி யாளுடை நம்பிதா ளமப்பாம்.

ஆதவன புராணம்.

தனிப் பொருளாகிய பரமபதி தானே யென்பதைச், பிரணவாகாரமாயமைந்த தனது ரூபத்தால் யாவருக்கு மினிது விளக்குகின்ற இதழிமாலையை யணிந்த சத்தமாகிய வன்மையை யுடைய கங்கைய திருகின்ற முடிப்பரன் என்க. இதழி முடி யென்றியையும். (உக)

ஆளுடைய அடிகள்.

பாச கத்தியற் றுவிக ளருணெறி பற்றித்
தேச கத்தியங் குறீஇச்சிவ மயமுறச் செய்யு
மாச கத்தியக் கந்தெது வரதமா ணிக்க
வாச கத்திய லாளுடை யடிகடாண் மலரே

பாச கஸ்தி தேசு அகத்து மா சக தியக்கம் என [illegible] பிரிக்குக. (உஉ)

சண்டேசுர நாயனார்.

ஓத கம்பர கதிநெறி யுற்றிடா தய்வான்
சீத கம்பர கதிர்வயற் சேய்ஞலூ ரடிகண்
மேதகம்பர கதிர்நிலை யானருள் விளைவாற்
பாத கம்பர கதிசெய்சண் டீசர்தாள் பணிவாம்.

பரகதி-அந்நியமார்க்கம். பரகதிர்-பாரமான நெற்கதிர். மேதகு அம்பரம்-ஞானாகாசம். கதிர்நிலை-வினைத்தொகை. (உங)

அறுபத்து மூவர்.

சேயன் மாண்கம லேசன் றிலையடி
வாயன் மாசற வந்தரு ளாவலூர்த்
தூயன் மாதிருத் தொண்டத் தொகையுளார்
நாயன் மார்பத நாம்பணிந் தேத்துவாம்.

சேயன்-செந்நிறத்தன். அன்பரல்லார்க்கு தூரித்தவன் என்பதுமாம். உலகம் மாசு அற என்க. நிலை அடி வாயன்-தில்லை வாழந்தணர்த மடியார்க்கு மடியேன் " என்கின்ற அடியை முதலாகக் கொண்டு பாடியருளிய வாயினன்.

நம்பியாண்டார் நம்பிகள்.

விலங்கொ ளாவருண் மேவுபே ரின்பமா
பலங்கொ ளாவெமைப் பார்த்தரு டீர்த்தன்வாழ்
நலங்கொ ளாரையூர் நம்பியாண் டார்நம்பி
யிலங்கொ ளாண்மலர்ப் பாத மிறைஞ்சுவாம். (உச)

விலகுதல் இல்லாத அருளால் மேவுகின்ற பேரின்பமாகிய பலனைக் கொண்டு வந்து எம்மைப் பார்த்து அருளுகின்ற தீர்த்தன் என்க. (உரு)

சேக்கிழார்.

உலகெ லாமென வோங்கொரு பொன்மொழி
யிலகெ லாமென வீற்றிட காட்டிமால்

விலகெ லாநூல் விரித்தருள் சேக்கிழார்
திலகெ லாமலர்ச் சேவடி போற்றுவாம்.

இலகுகின்ற (புராணம்) எல்லாமும் பொன் மொழியாலே தான் விரிந்ததென்று யாவரும் அறியும்படி அம்மொழியை ஈற்றிலும் இடையிலும் காட்டி என்க. மால் விலகு எல் ஆம் நூல்-மயக்கம் நீங்குகின்ற ஞானப்பிரகாச முண்டாகின்ற நூல் என்க. திலகம் என்பது கடைக்குறையாய்த் திலகு என நின்றது. எல் ஆம் மலர்-சூரியனால் மலர்கின்ற நீர்மலர். மெய்கண்ட சிவாசாரியர். (உசு)

மைகண் டாவருண் மேனி வரவருள்
செய்கண் டாவென வெண்ணெய்நல் லூர்த்திகழ்
மெய்கண் டானடி மேவி யிறைஞ்சிநின்
றுய்கண் டாயுப தேசமி துள்ளமே.

மைக்கண்டா என்பது எதுகை நோக்கி இயல்பாயிற்று. அருள் செய் கண் தா-கிருபா நோக்கம் தந்தருளுக. (உஎ)

அருணந்தி சிவாசாரியர்.

இகல வாகமர் வீழ்த்துமென் னெஞ்சகே
ாகல வாகமன் வாதை யருணந்தி
சகல வாகம பண்டிதர் தாட்டுதி
புகல வாகம வாழ்விற் புகுத்துமே.

இகல் அவா ஆகம் மன் வாதை அகல புகல வா எனப் பிரிக்குக.

மறைஞானசம்பந்த சிவாசாரியர் (உஅ)

வரவு மாமண வாளன் மலர்க்கழல்
விரவு மாமனம் வேட்டுமெய்ம் மாதவர்
பரவு மாமறை ஞானசம் பந்தர்தாட்
புரவு மாமலர் நாடொறும் போற்றுவாம்.

வர உடிா மணவாளன் எனப் பிரிக்குக. புரவு-காப்பு. (உக)

உமாபதி சிவாசாரியர்.

கனக வம்பல நாதன் கவிபெறீஇ
யனக வம்பல னுக்கு முமாபதி
யெனக வம்ப லழிக்கு மிணையடி
மனக வம்பலர் தூய்நிதம் வாழ்த்துவாம்.

என் அகம் வம்பு அல் அழிக்கும் எனப் பிரிக்குக. மன்-மிகவும். நக்-விளங்கும்படி. அரதத்த சிவாசாரியர். (௩0)

சிரத வேத வான்சிவ னேபதி
பரத வேத நமவிற் பகர்மெனச்

சாத வேதங் குறையா தத்தர்தம்
வாத வேதனை மாற்றடி போற்றுவாம்.

சாதம் ஏதம் தவு அரன் சிவனே பதி-மேலாகிய ஏதம் நீங்கிய அரனாகிய சிவனே பரமபதி; (இதுவே நிச்சயம்; இதனை இதற்குரிய வேதசிவாகமாதி சிவ சாத்திரங்களால் நிர்ணயம் செய்வதொன்றோ? எந்த சமயிகளும் சிறிதும் ஆசங்கை யின்றி யங்கீகரிக்கத் தக்க பொது நூலாய் நடன வேறுபாடுகள் மாத்திரமே விளக்க வந்ததாயுள்ள) பாத வேதம்-பரத சாஸ்திரமும், நமவில் பகரம் என-நமஸ்கார முத்திராபிநய த்தால் விளங்கக் கூறுமென்று சாதமாகிய ஏதுவை அங்கே யுரைத்தருளிய அரதத்த சிவாசாரிய சுவாமிகளுடைய வேதனையை மாற்றுகின்ற வாதபாதங்களைப் போற்றுவாம். (௩௧)

பாதநூலிற் கூறிய விதிப்படி நடிக்கின்ற நடனியானவன் கணேசாதி தேவ சமூகங்களின் வரவை அவரவர்களுடைய ஆயுதாதிகளைக் குறிப்பிக்கின்ற அதி சாதுரிய அநேக அபிநயங்களாற் காட்டி, அதேபோலப் பரமசிவனுடைய வரவையும் அவர்க்குரிய திரிசூலாதிகளைக் குறிப்பிக்கத்தக்க அபிநயங்களாற் காட்டுவதொழிந்து, நமசேஷி சிவனே'என்று சுருதி கூறிய உறுதி வாசகம் இனிது விளங்க, நமஸ்கார முத்திரையாற் காட்டுதலால், அரதத்த சிவாசாரிய சுவாமிகள் சிவனே பதியென்பதைப் பாதவேதம் நமஸ்கார முத்திரையாற் பகருமென்று சாத ஏது உரைத்தருளினாரென்க. (௩௧)

பட்டினத்தடிகள்.

சாம்பு கார்மலம் வீட்டிமெய் சார்ந்துய
வோம்பு கார்கோ ளுடுக்கும் வளர்ந்திகழ்
பூம்பு காரின்வெண் காடர்தம் பொற்கழ
ரோம்பு காமலர் தூய்ப்பணிந் தேத்துவாம்.

கார்மலம்-ஆணவமலம்; சாம்புகார்மலம் வினைத்தொகை. சாம்புதல்-சோர்தல் தோம் புகாமலர்-எனப்பிரிக்குக. (௩௨)

குருவணக்கம்.

மூன்கையைப்பே சுவித்தலினு முதுசெயலீ தெனச்சடமா மூட [னேற்குந்
தூங்கருணாலு ணர்த்தியவன்றொண்டகுரு மணிஞானத்துறவுக்காணி
யாங்குலமெய் யப்பகுரு வருமணிகா வலகாம மகில மெங்குந்
தேங்கியொளிர் பரமகுரு சிகாமணிக டிருவடிகள் சென்னி சேர்ப்
கடவுள் வாழ்த்து முற்றிற்று. [பாம். (௩௩)

ஆகத் திருவிருத்தம் ௩௩.

—————

# பாயிரம்.

உலகெலாமு மறைப்பொருளொன் றென்று வுணர்ந்து வேதிகளோங்
கிலகு வாய்மை யுபசார மிவையென் றன்ன படிதெளிந்து
மலைவில் பொருளொன் றேயிலையுண் மறைகாய் போலுள் வயங்குபதி
நிலவு முடியு மாபதியே நிசமென் றோர்த லருமையினால். (௧)

அன்ன மறையுட் பொருண்முடிவை யகில முணர்ந்தாங் குய்யும்வகை
சொன்ன முறைமூ வாறென்ப தோற்று புராணஞ் சாற்றவற்றின்
வன்னி புராண மொன்றிரவி மாண்சொல் புராண மொன்றயன்சீர்
புன்னு புராண மிரண்டரிசீர் பகரும் புராண மொருநான்கே. (௨)

ஈச னெமையா ளுமைநேச னெல்லா மாகி யல்லனுமாய்த்
தேசு விரியத் துவிதநிலை தேற்றும் பரம சிவன்மகிமை
பேசு புராண மைந்திரண்டப் பெரிய புராணத் தொன்றென்ப
மாசில் பௌடி யோத்தரபு ராண மதிற்கேத் திரகண்டம். (௩)

இனிது விளங்கு மிதில்விளங்கு மெந்தை பெருமான் சூதவன
புனிதன் பெரிய நாயகிவாழ் புரத்தன் வரத்தன் பெருஞ்சீர்த்தி
வினைமுற் றொழித்தின் பருளிந்த வியன்கா தையைவேற் காத்தமலன்
றனியன் புளங்கூர் நந்தீச னயந்து கேட்ப நவின்றானால். (௪)

ஈச னுமைக்கோ துறமடிமீ திருந்து கேட்ட விளங்குழவித்
தேச னுரைகேட் டுவந்தருளுந் திருநந் தீசன் றனைவினவு
நேசன் சனற்கு மாரமுனிக் குரைப்ப வனைய நிறைதவத்தோன்
பேசி னானால் வியாதனுக்கப் பெரியோ னுரைத்தா னெனக்கென்று ()

சூத முனிசொல் வடமொழியைச் சுவைத்தண் டமிழ்மா நிலமாந்த
ரோதி யுணர்ந்து திருவருள்பெற் றுய்வான் றமிழின் மொழிபெயர்த்திங்
கீதி யெனமெய் யன்புருவா யிலங்கும் பெரிய னியல்பானே
நீது கெதிக டானிருக்குந் திசையும் புகுதப் பெருச்சிலன். (௬)

சிவனே பதியென் றுள்ளபடி தேர்ந்து தெளிந்த சிந்தையினா
னவனா ரருட்புத் திரமார்க்க மாயசிவபூ சனைநாளுந்
தவறா தகத்தும் புறத்திலுஞ்செய் சகசன் மார்க்க நியமநிலைக்
கிவனே யொருவ னென்றுலக மிசைப்பச் சிறந்த விசைப்புனிதன். (௭

அறங்க ளெவற்றும் பாசவப்பே றருள்பே றறமில் லறமெனுநூற்
றிறங்கொள் சீலன் வித்துமிடல் வேண்டு மெனுமாண் டிருக்குறளே
பிறங்க நாளுந் தன்மனையெம் பிரான்மெய் யடியார் தம்மனையா
மறங்க வளர்ப்போ னமுதளிக்கும் வகையிங் கெவர்க்கும் வகுப்பரிதே()

பாசவப்பேறு, பரப் பிரயோசனமும், சுவப் பிரயோசனமுமாம்.
[illegible]-மல் தங்க மல்-வளப்பம்.

சூத வனத்தின் கீழ்பாலோர் குரோச தூரத் தாலங்காட்
டோதும் பூவை யியர்குலத்தா னுலப்பில் சீர்த்தி செறிராம
நாதன் குமர னுயர்கங்கா நதிசூழ் காசி போய்க்கொணர்ந்த
சோதி லிங்க மீனாட்சி சுந்த ரேச னெனும்பெயரால். (௯)

மன்னு மணிப்பொற் கோயில்புரீஇ வரநற் றினத்தி லவ்விலிங்கந்
தன்னை யுமையோ டலரிமுதற் சண்ட சாந்தம் பதிட்டைபுரிந்
தென்ன பொருளு நிறைதரமுன் றங்கத் தியல்பூ சனையென்று
முன்னு சிவாக மக்நெறியி னுஞற்றி வருமா முதலாக. (௧0)

வினைதண் கழனி முதற்பொருள்கண் மிகுத்து நிலைப்ப வகுத்தமைத்
தனைகொன் றிலாநல் லறத்தாற்றாற் பல்கும் பொருள்க ளுடோறு[தோன்
மனவொன் றிலாத சிவதருமமாதி யறங்கட் களித்துவட்போன்
கனவொன் றிலாவித் யாவிருத்தி கண்ணு வளர்க்குங் கடமையினன். ()

அன்பே யுருவன் குறிகுணமொன் றறியா தடியார்ப் பணிசில
னின்பே தருபா லாம்பகன்பே ரியையப் பெறுசீர்க் கோபால
னென்போ னிவனை யருந்தவஞ்செய் தீன்ற மகவின் வாஞ்சைமிகத்
தன்பாற் கல்வி நலன்முழுதுந் தாவில் குணமுந் தரப்பெற்றோன். (௧௨)

இன்ன பெருஞ்சீர்ச் சிதம்பரவே ளிசைத்தா னிவன்சொற் படியிந்தப்
புன்னு சூத வனத்தாதை பகர்தற் கறிவோர் சிறிதுமிலே
னுன்னி யிதனைச் செயலொழிந்தா லுவன்சொன் மறுத்த தாளதாகு
முன்னி முடித்து மெனநினைந்தான் முடியாச் செயன்மேற்கொளலாகும்.

என்னான் புரிகே னிரண்டிடைநின் றெண்ணித் துணிந்தே னெமையாளு
முன்னே னடியா ரெண்ணமெலா முடிக்கும் பரம னன்புசிறி
தின்றான் றொடங்கு செயற்கருளா விடினு மிசைத்த விப்பெரியோன்
றன்னு ளடப்ப தாலருளாற் றனே யுமைகோன் முடிக்குமெனா. (௧௩)

துணிந்தாங் கனைய வடமொழியைத் தூய பெரிய நாயகியைத்
தணிந்தார் முடிமந் திரநாதன் சலசத் துணைச்சே வடிமலரை
யுணர்ந்தார் பெரியர் தமையெளியேற் குணர்த்தா சிரியர் தாட்டுணையைப்
பணிந்தா தருளி னடங்கிநிதம் பாவித் தமிழிற் பகர்கின்றேன். (௧௪)

பகரும் புராண சருக்கமொரு பதினான் கொடுவாழ்த் தெழினூறு
நகர்பா யிரமே யவையடக்க நண்ணு முதல்வைத் திவைவிரிபாத்
தொகையு மீரத்தைஞ் ஞூற்றிருபான் சொற்றே னளித்தே னவரசத்து
ணைகை ரிர்தச் சுவையுண்டு நாவ லோர்க ளனியுவப்ப. (௧௫)

அவையடக்கம்,

சத்தம் யாவுஞ்சிற் சத்தி யுருவமே
யத்தம் யாவுஞ் சிவனுரு வாமென்ப
வித்த கைச்சொற் பொருள்க ளிடைவழு
வுய்த்து ணர்பவர்க் கியாமென் னுரைப்பதே. (௧௬)

யாவர் கூற்றுமின் னேவலி னல்லதை
மேவு றுவென் றியம்பினர் மேலையோ
ராவ தாலறி வுடைச்சிறி யேன்புகல்
பாவெ னுவழுப் பார்ப்பர்கொல் பண்பினோர். (௧௮)

வழுநி றைத்திறை வைத்த களஞ்சியக்
குழுவி கர்த்தவென் கூற்றெனக் கொள்ளினும்
பழுது பார்த்தல் பழிப்பென்க பாவலோர்க்
கொழிவி லொன்றின்மற் றொன்றற லின்றரோ. (௧௯)

பாயிரம் அவையடக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் ௨௰.

தற்சிறப்புப்பாயிரம். வேறு.

தேவை நகர்வாழ் வன்றொண்ட தேசி கேசன் மாணாக்கன்
றாவில் வளங்கூர் காரைநகர்த் தனமா வணிகர் குலதிலகன்
சேவில் வருவா ரடிக்கன்பன் றிகழ்சொக் கலிங்க தேசிகனிப்
பூவின் மிகுசீர்ச் சூதவன புராணம் புகன்றான் புவிவாழ.

---

# திருநாட்டுச்சிறப்பு.

---

பொது.

பொன்னாலு மணியாலும் பூவாலுங் காவேரி பொலிநீர் நாடு
பன்னாலு மறையாலும் பானாலும் வானோதும் பயில்சீர் நாடு
வன்னாலு முகத்தாலு மயனாலு மியலாத வருள்கூர் நாடு
வென்னாலுஞ்சொலத்தகுமோ வெண்ணரியதிருச்சோழ ரெழிற்போர்நாடு
உலகமொருங் குதவியநீ ரோததியி லுவணகே தனன்றேவா
துலவிறவத் துணர்வினிடை யுதித்தருளி யுவனையா கருதி யோதப்
பலர்புகழ்பொற் பதியமர்ந்தும் பாராசன் பால்வலியப் பகர்ந்து பற்றி
யிலகுதியாகேசனுறீஇயிருப்பதிந்நாட்டினசையேயெலிசைப்பதென்னே
திருநெறிய தமிழ்மூவர் தேவாரச் சிறப்புயர்கேத் திரங்க ளிந்நா [ணொப்
ளிருநிலமெங் கணுமிருநூற் றெழுபதின்மே லொருநான்கா மிவற்றுளே
பாவுறுபற் பலநாட்டும் பயில்பதியென் பதினான்கே பண்பு நீடுஞ்
சார்பரவு மொருநூற்றுத் தொண்ணூறு திருத்தலமிச் சோழ நாடே. (௧)

வைதிகசை வம்பொலிய வந்தருண்மூ வருந்தருதே வார மங்கா
ளெய்துமிரா யிரமுடிக்கொ ளிலக்கமிவற் றிறையருளாலிறந்த நீக்கி[காய
யுய்தருமூன் றெழுபெண்ணூ றுளவவற்றைஞ்ஞூற்றைம்பத்தொருநான்
தெய்விகமாண் டிருப்பதிகத் திரடனக்கே திகழ்தருமிச் சென்னி நாடு()

மூன்னாடு தம்மினுஞ்சீர் முன்னாடு மிந்நாடு மொழிதென் வேதச்
சொன்னீடு முயர்தலத்தாற் சொன்னீடு வயனலத்தாற் றொகைநீ டின்ப
மன்னீடு பலவளத்தான் மல்குபொருட் குலவளத்தால் வளர்சீர்க்கென்று
மெந்நாடு மெவ்வுலகு மிணையாகா வென்பதுல கெல்லாஞ் சொல்லும். ()

வேறு.

அரசிய னீதிக் காணி யாதிமா மனுவி னீதி
யுருவமான் றுயர்க்குத் தன்னே ரும்பன்மீ தூரு *ளுய்த் தாரூர்
வானருட் கருணூ லஞ்சீர் மனுநீதி கண்ட சோழப்
புரவல னருட்செங் கோலிற் பொலிவதிச் சோழ நாடு. (௬)

உலகெலாம் பரவு சான்றோ ருடைத்தென நாட்டி ருந்து
மலைமலை நிலன்வி ஞயோர்ந் தழைத்தன பாய நாமச்
சிலைவலான் றலைமை செய்யச் சேக்கிழார் குரிசி லாற்றும்
வலனுய ரமைச்சு நீதி மாண்பதிச் சோழ நாடு. (௭)

அருண்மொழித் தேவ ராய வருளினீர்த் தனைய வாய்மைக்
குருபரன் வாக்கின் றீக்கை கொள்கெனக் கொடுப்பித் தெம்மான்
றிருவரு ணிறைத்த சோழர் சிகாமணி யனபா யப்பேர்ப்
புரவலர் பெருமான் செங்கோல் பொலிவதிச் சோழ நாடு. (௮)

மணிகளி லமல னங்கண் மணியணி யங்க ராகக்
குணிகளிற் றிருவெண் ணீறு கூறுமங் கிரங்க டம்முட்
கணிதிரு வைந்தெ ழுத்தே கவினுறீஇ வயங்கு மாபோற்
றுணிபுயர் மேன்மைத் தான்றோர் துதிமிகுஞ் சோழ நாடு. (௯)

மன்னுமே தக்க சோழ வளநாடு சோறு டைத்தென்
றன்னையா ரவ்வையாரோ தருண்மொழிப் பொருண்மை நோக்கி
னென்னநன் னாட்டு மேலா யிகபர மோக்க வாழ்க்கைத்
தொன்னிதி தானே யீத றுலக்குமிச் சோழ நாடு. (௧௦)

நாதக்க மடந்தை யென்றே நாவலர் பாவி யேத்து
மூதக்க வாய்மை ஞான முதல்வியா மவ்வை மாதா
மேதக்க வளநா டென்ன விசேடண முன்பின் கோத்திட்
டோதக்க வின்கொண் மேன்மை யுற்றதிச் சோழ நாடு. (௧௧)

* உய்த்த வென்னும் பெயரெச்சத் தகரந் தொக்கது.

ஆருநீர் நாடென் றோதி லனையது தனையே யன்றி
யோருதல் பிறிதொன் றின்பா லுறுதிடு குறியே யாகும்
பெருநீஇப் பலமாண் செல்வப் பெருவளப் பெருக்க மென்றுஞ்
செருபு திகழும் வாய்மை தேற்றுமிச் சோழ நாடு. (௧௨)

அங்கண்மா ஞாலத் தாவிக் கருளிய கோயில் கொண்டா
னெங்கணு மென்ப தேனை யிடங்கட்கு முகம னாக
வொங்குதன் பாலவ் வாய்மை யொளிர்தர விடம்வே றின்றிச்
சங்கர னமர்பொற் கோயி றமைப்பதிச் சோழ நாடு. (௧௩)

ஒங்கு-குறுக்கல் விகாரமுற்றது. "ஒங்கு மாகடலோத நீராடிலென்" என்றதிராவிட சுருதிபோல.

செங்கம லத்தின மேவுந் திருமகள் பொதுமை நீக்கி
மங்கல வகைக ளெல்லா மலிதர வழங்கு மாண்பாற்
பொங்குறு சிறப்பி னென்றும் பொலிதலாற் பொன்னி நாடென்
றெங்கணுந் திகழ்பேர் கொண்ட திசைமிகு சோழ நாடு. (௧௪)

அரியயன் முகுந்த னாதி யமரர்நா டவனி யேனை
நிருபர்நா டொருத்தி ராதி நேசர்நா டெல்லா மென்று
மருவுதங் குறைக ணீங்க வரம்பெறச் சிரமேற் கொள்ளும்
பெருமையாற் சென்னி நாடென் பேருடைத் திந்நீர் நாடு. (௧௫)

நாடெலாம் விளைவி னீட்ட நகரெலாம் பொருளின் கூட்டங்
காடெலா மலர்ப்பூஞ் சோலை களனெலாம் பிறங்கு நெற்போர்
மாடெலாந் தரும சாலை மறுகெலா மணிக்கு வால்கள்
பாடெலா நாடும் போற்றிப் பணிதிருச் சோழ நாடு. (௧௬)

கற்பகப் பொங்க ரெங்குங் கற்பக வல்லி யெங்குங்
கற்பகல் லூரி யெங்குங் கற்பக மாத ரெங்கு
மற்பக மாந்த ரெங்கு மற்பக லறங்க ளெங்கும்
பொற்பகன் மாட மெங்கும் பொற்பகன் மணிக ளெங்கும். (௧௭)

கற்பு அகம் மாதர்-கற்பைத் தம்மிடங்கொண்ட மாதர். அற்பு அகம் மாந்தர்-மனதில் அன்புள்ள மாந்தர். அகன்ற மாடம் எங்கும் பொற்புள்ளது. பொற்பு-அழகு. அழகியபகன் போலும் மணிகள். பகன்-சூரியன்.

காத்திர நீழ லெங்குங் காத்திர வனங்க ளெங்குங்
காத்திர சுகங்க ளெங்குங் காத்திர வாமை யெங்குங்
கோத்திர குலங்க ளெங்குங் கோத்திர நலங்க ளெங்குங்
கோத்திர மேன்மை யெங்குங் கோத்திரன் பொழிபா லெங்கும். (௧௮)

காத்திரநீழல்-ஸ்திரமான காக்களினீழல். காத்திரவனம்-கனமான வனங்கள். காத்திரசுகம்-சரீரசுகம். காத்து இரவாமை-செல்வர்மனைக

ளிற்சென்று காத்திருந்து யாசிக்காமை. கோத்திரகுலம்-மலைக்கூட்டம். கோத்திரநலம்-அவரவர்கோத்திரங்களுக்குரியநலங்கள். கோத்திரமேனமை-உயர்ந்த உயுதியான மேன்மை. கோத்திரன்-பசுக்கூட்டம்.

பார்ப்பவர் கண்கட் கென்றும் பசுமையே தோன்றும் யாண்டும்
பார்ப்பயில் பயிர்முன் னுவ பலவொடே பல்கும் யாண்டும்
† பார்ப்பணி யாதி தாமும் பல்லுண நுகர்வ யாண்டும்
பார்ப்பனச் சாதி யாதி பகர்நெறி தவறு யாண்டும். (௧௯)

திரவிட வேதம் போற்று திருத்தகு மூர்த்தி யீட்டந்
திரவிட வேதம் போற்று திருத்தங்க டிருத்த லங்கள்
பரவிட மிடங்க டோறும் பல்குவ சோணுட் டென்று
பரவிடல் யாரு நேரே பார்க்கலா மின்று மென்றும். (௨௦)

பரவுறு சரியை யாதி பக்குவர்க் கருண்மெய்ஞ் ஞான
குரவர்தம் மினங்கள் வாய்மைச் சங்கம குலங்க ளாதி
வரமிகுங் கூட்டங் கூட்ட மாத்தொகு வகையிங் கன்றிப்
பரவுமெந் நாட்டு மின்றாற் பார்க்கலா மின்று மென்றும். (௨௧)

இன்னநாட் டியற்சீர் யாரே யிசைக்குநர் தொகுத்தி யாவு
மென்னநாட் டினுமே ளுட்டி னிலகுபே ரின்ப * நல்கிப்
பொன்னிநாட் டிடங்க டோறும் பொய்யுறு முனிவர் வாக்கின்
மன்னுகார் வளமுன் னேர்ந்த வகையொரு சிறிது ரைப்பாம். (௨௨)

மழைவளம்.

உருவநா லருவ நாலென் றோதிய வுபய நாப்ப
ணிருமையும் பொதுமை யாகி யிலங்கெழிற் சதாசி வன்றன்
பெருகொளிப் பளிங்கின் றோற்றம் பிறங்கிவிண் ணேக்கி சானத்
தெருண்முகப் பிரதி விம்ப மென்னவான் சேணிற் சென்ற. (௨௩)

நமதன்ப ருசை மித்த நாலையவ் வானை நீத்துக்
கமையம்பு கொண்டு பின்னுங் களிப்பது காண்டு மென்ன
வமையன்ப ரீற்றுக் கோலத் துற்றொழித் திடநேர் சென்றாங்
கிமையம்பு தஞ்சே ணின்று மெறிதிரைக் கடல்புக் கன்றே. (௨௪)

கருங்கட றிரங்கக் கையாற் காமரு தரள மாதி
யிருங்கழ லிறைஞ்சித் தூவி யிரத்தலி னாற்றல் கோளா
வொருங்குண திரங்கி யெம்மா னொழிந்தென வெழுந்து வானில்
வருங்கனம் வேண்டுங் காறு மாந்திமே லெழுந்த மாதோ. (௨௫)

---

† பார்ப்பு அணி-பறவைக் குஞ்சுகளின் கூட்டம்.

* நல்கு இப்பொன்னி நாடெனப் பிரிக்குக.

வாரிதி குழியப் புக்கு வாரிவாய் மடுத்த வானந்
தேரிய லிறைய கோரத் திருமுக காந்தி யேந்திக்
காரிய வுருவாய் வாமக் கதிர்முகச் செம்மை வாய்ந்தாங்
கேரியல் 0 சம்பை யீட்ட மெங்கணும் பரப்பிற் றன்றே. (௨௬)

மதிநதி யிதழி வேணி வானவன் கரத்தெஞ் ஞான்றும்
பொதுமையி * னிருமை யாய : புற்கல வர்க்க மெல்லா
மதிர்தரு தமரு கத்தி னழைத்தரு ளொலியே யென்னக்
கதிர்விசும் பெழுசீ மூதங் கனையொலி பெருக்கிற் றன்றே. (௨௭)

கறைமிடற் றிறைவன் மத்த கயத்துரி யெடுத்துப் போர்க்கு
முறையென நிமிருஞ் சைய முதுவரை யெங்கு மூடி
நிறையொளி நீல்வி தான நித்திலத் தொடைநி ரைத்தாங்
குறைமலி தாரை யாண்டு மொய்யெனப் பெய்யா நின்ற. (௨௮)

இறையமர்ந் தினிது வாழ்வெற் பிருஞ்சிர கரிந்தோ மிந்த
மிறையொழிந் துய்து மென்று விண்ணிறை மணிக்குடத்தி
னறைசடற் கூவத் தாணை யாங்கயி றமைத்தெ டுத்துக்
குறைதப வாட்டு லெய்ப்பக் கொண்டனீர் விண்ட மாதோ. (௨௯)

போற்றிய சதாசிவன்றற் புருட † வா சியம்போற் பொன்னின்
றோற்றமிக் கிலங்கு சாபந் துலக்குவான் பெய்ந்நீ ரன்னோன்
பாற்றிகழ் சத்தி யோசா தம்முக நிறப்ப ரப்பின்
வீற்றுவீற் றருவி சைய வெற்பிட மெங்குங் காட்டும். (௩0)

விண்ணுயர் சைய நாம வெற்பிருஞ் சிரந்தொ டுத்துத்
தண்ணிய சாரல் காறுஞ் சதமக னிதம தாகக்
கண்ணுறுந் தளவு மல்லி கைத்தொடை சாத்தி யேத்தும்
பண்ணிசை யென்னச் சூழ்ந்த பாவுநீ ரருவி யோதை. (௩௧)

தனையுறு வலியில் சீவர் தமையு § மாற் சார மென்ன
வினிதெடுத் தழுக்க கற்றி யின்பரு ளாசான் போலக்
கனைகுயி னுவரொ ழித்துக் கான்றநீ ருலக மெல்லா
நனியுணு மமுத மாகி நானிலத் தொழுகிற் றன்றே. (௩௨)

நிலையிலா i வுடலங் கையி னோர்ந்தவக் கணமே மிக்கோர்
நிலையிலா வுடலங் கையி னெறியினுய்த் துய்து மென்னு
நிலையிலார்ந் தளித்தல் போல நீள்பயோ தரநீர் 0 பெற்றந்
நிலையிலாங் கெஞ்சா நீத்த நீத்தமா வளித்த மன்னோ. (௩௩)

---

0 சம்பை-மின்னல் * இருமை-சாம் அசாம். : புற்கலவர்க்கம்-ஆண்மவர்க்கம் † ஆசியம்-முகம் § மாற்சாரம்-பூனை. i உடல்-பொன். பெற்றவென்னும்பெயரெச்சத் தகரந்தொக்கது.

கணந்தொறு மாறி மாறிக் கருதுமுள் ளத்தின் ° மாலை
°யுணர்ந்திரு நிதிசெல் வப்பே ருற்றதை யுதவுவோரை
மணந்தரு சீர்த்தி போர்த்தன் மானநீர் முழுதும் வாளந்
துணந்துற வளித்துமேனி தவளம்போர்த் தாங்கு நின்ற. (௩௪)

பொருள்படைத் தருளா ரெய்தும் புன்மையு மளித்தார் தூய்மை
மருவலுங் காட்டி யாங்கு வாரியுண் டேகுங் காறு
மிருளுறீஇச் சைய மால்வெற் பெய்திநீர் பெய்த மாரி
தெருள்பெறு தூய்மைத் தாகித் திகழ்ந்துவான் சென்ற வன்றே. (௩௫)

உடல்பெறுங் கணத்த றத்தி னுதவனூ னெறியென் றியாமிவ்
விடைபெயி னீயாச் செல்வர்க் கீந்ததா யறனு மின்றாய்க்
கடல்புகு முலக மெல்லாங் களிக் கநீ ரளிக்கும் வெற்பென்
றுடையகன் கொடைசெய் கொண்மூ வமலமா யகல்வான் சென்ற. ()

உருவுடைச் சீவர் யார்க்கு முதவிய வுருக்கொண் டெய்தும்
பரமன்யா மவணி லன்னோர் பயன்பெற வுருவு கொண்டு
வருவதே முறையென் றெம்மான் மலியருள் பிரவ கித்தாங்
கொருவுறாச் சைய வெற்பி னெழுகுமா லருவி நீத்தம். (௩௭)

ஈசன்மாட் டினித மர்ந்தே யிணையினீள் மலைய வெற்பின்
வாசனார் கமண்ட லத்தின் மந்திர நீர தாகித்
தேசமார் கணேச னீண்டே செல்கெனத் திருவு ளங்கொண்
டாசில்பூ முதல்வ னார்ப்பா னளித்ததித் தெளித்த நீத்தம். (௩௮)

இந்நதி சைய வெற்பி னிடையமர்ந் தருவி யாக
மன்னியே குறுமா லீது மந்திர தோய * மாறாற்
பன்னுமைந் தொழிலுந் தானே பண்ணுமென் றியம்ப லென்னும்
பொன்னிகா விரிமுன் னுமம் புகல்பவிப் பொருவி னீர்க்கு. (௩௯)

நதியெலாந் துதிசெய் கங்கா நதியுமிக் கதிசெய் பொன்னி
நதியினோர் கூற்றுக் கொப்பா நவில்வதும் பழுதா மென்னே
நதியிவை யிரண்டும் பூவி னடக்குங்கா ரணத்தை நோக்கி
னதிரவன் றலையன் னோர்மெய்ந் நாவெடுத் தியம்பு முண்மை. (௪0)

பிறந்திறந் துழலுந் தேவர் பேணுமூ ரமர்ந்த கங்கை
யிறந்துபா ரரசு வேண்ட மென்சடை நுதிக்குட் டுஞ்சிப்
பிறங்கொரு முனிவன் மிச்சி லாகிப்பின் காதிற் போந்தே
யிறந்தவர் சாம்ப ரென்பி னெய்திய திசைத்த கங்கை. (௪க)

---

° மாலை-தன்மையுமாம். உணர்த்தல்—இரண்டிடத்தும் பொருட
ந்து நின்றது. * ஆறல் என்பது ஈண்டுதேற்றப் பொருடந்தது.

பொன்னிமா நதியிப் பாரிற் போந்தருள் புனித மேன்மை
முன்னொரு வாறி சைத்தா முரனொழித் தோர்ந்திப் பொன்னி
தன்னிலை யுணர்க வானீர் தானுமோர் சிறிதொவ் வாவிந்
நன்னதி மேன்மை யோரா நாயினே னவில்வ தெங்ஙன். (௪௨)

வானிடைத் தாரை யாகி மலையிடை யருவி யாகி
மானிலத் திடையே யாறு வாவியாழ் கூவ லோடை
கானிலத் தடமுன் னாமங் கடற்புன லொன்றே கொண்ட
தானிடைப் பரமன் சீவர்க் கருடரப் பெறும்பேர் போல. (௪௩)

கருமுகி லாய மத்த கயமிவர்ந் தப்பு மாரி
பெருகவில் வாங்கி மின்வாள் பிறக்குகா ரெனும்பொன் மௌலி
யரசுறக் கண்ட வேனி லாங்குறும் படங்கித் தேய்ந்து
சுரநிலத் தோர்காற் சென்னி தூக்கிநீர் நோக்கி மாயும். (௪௪)

பெரியவர் முனியி னும்பின் பேறினி தடைத நிண்ணந்
தெரியுறப் பொன்னி யீர்த்துச் செல்பிணை பிரிந்த தன்கே
ளரிணநேர் புகுந்தோர் பாங்கின் படைந்ததால் வாத வூரெம்
புரவல ரொறுத்தா லொன்றும் போதுமென் றருளிற் றேர்ந்தாம்.∵ ()

கணிமலர் காசா கொன்றை கவின்பலா சலர்பூ முல்லை
யணியணி பரவப் போர்த்தாங் கைவருந் தானை யைந்து
பணிகளுந் தானே செய்யும் பரன்செயல் காட்டி யேகு
மணிகொழித் திலகும் பொன்னி மந்திரக் கரக நீத்தம். (௪௬)

ஆக்கமு மறையு முண்டா யரனரு ளொன்றிற் றாழ்ந்தோர்
மீக்கொளு நிலையர்க் கென்றன் மெய்ம்மையே தருப்பை யாதி
தாக்கு நீர்ப் பொன்னி முன்னந் தாழ்ந்தறி விருத்தி யாய
மேக்குற நிமிர்த ருக்கள் விளிந்தன வேர்கீண் டம்ம. (௪௭)

கடிகமழ் மாதர் மேனி காட்டெழின் மலர்க்கு ராவி
னொடிவின் மஞ் சரிகள் புன்னை யொண்டுணை ருடன்கொண் டேகும்
படியினீள் பொன்னி காட்டும் பசும்பொன்மூத் தாதி பூண்டு
நெடியதண் புனற்ச ரிக்கு நீரர மகளிர் தோற்றம். (௪௮)

வேறு

மூவருமுறையே யொருதொழிலிரண்டுமுத்தொழிற்குரியராய்த்துரிய
தேவினிலொடுங்கல்காட்டிடுங்குறிஞ்சித்திணையிலவ்வொருநிலப்பொரு
காவகத்திரண்டுபிணையின்முப்பொருளேகவருபுகாட்டியீர்த்தேகி [னே
யோவற வவைமுற் றுதியிற் புகுமாறுய்த்துறும்பைத்தநீர்ப் பொன்னி.

வேறு. குறிஞ்சி.

ஐந்திணையின் முதற்றிணையி தசலமாண் புணைபேரின் பமைதி தேற்று
னந்தமிணை விழைச்சினின்றநலத்திணையென்றைவரின் முன்னுதனெற்
டீசந்தழலாய்ச் சுத்தமல சித்திடையா னந்தமய தேகி யாய [றிக்
சுந்தரவே ளமர்ந்தருளே சுரந்தளிக்கப் பெறுங்குறிஞ்சித் தூயவைப்பு.

வேறு.

பூந்துணர் பொதுளும் வேங்கைப் புடைசுலா மெறுழி யீட்டஞ்
சார்ந்திற வுளர்கு ழாமச் சாமிதா ளிறைஞ்சல காட்டு
மேந்திண ரொழுக்கு செந்தே னின்னரு ளொழுக்க மேய்க்கு
மாந்துமா முசுக்க ளாடன் மற்றவர் வெறியாட் டேய்க்கும். (௩௧)

செயலையந் தருமே லோர்பைஞ் சிகியுற வண்டி சைப்ப
வயல்வரை வெடிப்ப வீழ்முத் தாங்குச்சென் றுதைக்குந் தோற்ற
மியலிதண் மேலா லோல மெனக்குரல் கவர்புள் ளோடக்
கயல்விழிக் குறமான் முன்னாட் கவணெறிந் தமர்ந்த காட்டும். (௩௨)

அருகமர் பாறை வேங்கை யடியுரு வொடுக்கிச் சீயங்
கரியுறல் கண்டு வல்லே காந்தறை பான்மை செவ்வே
ளிரிலுமா மகண்முன் போந்தாங் கிரந்திற வுளர்கோ னம்பி
வரறெரீஇக் கணியொன்றாகி மறைந் தொளிர் வாய்மை தேற்றும்.

காமுறு பிணையொன் றோர்பாற் கதுவிய வொருபால் வேழ
காமுற மருப்பு நீட்ட நாப்பணின் றலர சோக
மோமுதல் வேழ முன்ன ரூன்றல்கண் டெயினர் நங்கை
யேமுற வலித ணைப்ப விந்நடுச் சேயை யேயும். (௩௪)

புதுமலர் கணியிற் றோன்றப் புளிந்தர்கூர்ங் குயத்தி னேனல்
கதுமென நிலத்திற் சாய்வ கடம்பணி தடம்பு யத்தோ
னெதிர்பொரத் தொடர்கி ராதர் யாவருஞ் சேவ றோன்ற
விதிர்விதிர்த் தாவிசோர்ந்து மேதினி வீழ்ந்த தேய்ப்ப. (௩௫)

ㅇ அரிகுர லருவி யாவு மாங்கெயிற் றியரி * னேர்பு
குருமலர் வேங்கை நீழற் குவாலுற வீழ்வ வள்ளி
யருளினு ருயிர்பெற் றன்னோ ரறுமுகன் றிருவ டித்தா
மரைநிழ லுறமுன் வீழ்ந்து வணங்கிய வாய்மை காட்டும். (௩௬)

கறிக்கொடி யிணர்த்துச் சூழ † கருத்தரு வினர்த்த செம்மல்
வெறித்தசெங் காந்தண் மீது வீழ்த்தி நின் றொளிருந் தோற்ற
மறித்தகண் ணெறித்த வோதி வள்ளியோ டள்ளி யெம்மான்
பொறித்தழ லிடையி லாசம் போகட்டு மணந்த தேய்க்கும். (௩௭)

---

ㅇ அரிகுரல் அருவி—அரிந்த கதிருடன் கூடியதினைத்தாள்.
* ஏர்பு—எழுந்து. † அகருத்தரு—அகில்மரம்.

I தோற்றட மருப்பு கொங்கைத் துணைக்குடைந் திருவி ளர்த்துந்
தோற்றவை யனைத்து மாங்குத் துணித்தித ணமைத்து மீது
தோற்றமன் கொடிச்சி மார்கைத் தொடிச்சிமா ரீற்றிருப்பர்
தோற்றவர் வென்று ளாரைச் சுமப்பது மரபே யென்ன. (கஅ)
மருங்குலைக் கொம்ப ரென்பர் வளர்பசுங் கொடியே யென்பர்
பெருங்கவி வாண ராகு பேரவை யேனை மாதர்க்
கிருங்கழ லெயினர் மாதர்க் கியற்பெய ரேகொ லென்னத்
தருங்குளிர்.தழைதொ டுத்துத் தாமரைக் குடுத்து வாரால். (கக)
துயர்தரு கணைவேட் கீந்து சோகஞ்செய் கினக்க சோகப்
பெயர்கொலென் றெயின மாதர் பெரிதுளங் கறுத்து தைப்ப
மயர்வுறச் சிவந்து மேன்மேல் வாளிதூய் வருத்துந் தெம்மேற்
செயலைசெய் செயலை யோதுஞ் செயலெவன் செயலை யேபேர் (சு0)
அழலெரி மடுப்பித் தாங்க ணகருமுன் னகழ்ந்தெ றிந்து
பழகுமை வனமுன் வித்திப் பயனனி பல்க வாழ்வார்
தொழின்முய * லெயினர் யாவுஞ் சுடுநெருப் பிருந்த காடு
தழையுமென் றோதுக முன்னைத் தனிமொழி யசிர்த மாமே. (சுக)
ஏனலூன் கிழங்கொ டைய லின்னற வாதி யாவ
கானவ ரருத்தி யொன்றே கருத்தின ரருத்தி வள்ளி
கோனையுண் டெப்பர் யாவுங் கோதறச் சிவமாக் கண்ட
ஞானியர் வந்த வெல்லாஞ் சிவார்ப்பண நயக்கு மாபோல். (சுஉ)
வேளொனு முதனி லைப்பேர் வேடனொன் றிறுதி யாதி
கோளுறீஇ யமைய வாய்ந்து குல்முதற் குமர வேடன்
கேளிரா யுரிய சம்பந் திகளெனக் கிளத்தப் பெற்ற
மீளியர் மேன்மை யம்ம விளம்புதற் கெளிய தேயோ. (சுங)
கண்ணப்ப னெப்ப தோரன் பின்றெனக் கரைந்த மெய்யன்
புண்ணெக்க மணிவாக் கெந்தை யுரைக்கிலக் காய தூய
திண்ணப்பொன் னும வாழ்வின் றிருவவ தார மேன்மை
நண்ணப்பெற் றுளார்கு றிஞ்சி நாயினே னிசைக்கற் பாற்றே. (சுச)

வேறு. பாலை.

புராரி யேமுதற் சுரரெலாம் பூருவ மகிட
c சுராரி யாற்கொளுஞ் சின்த்தழன் முழுமையுஞ் சூழ்ந்த
i பராரி யோருரு வாயவம் பணத்தியென் றுரைக்கும்
l வராரி யூர்தியங் கமர்ந்தருள் வயத்தது பாலை. (சுரு)

---

I தோல்—யானை. * எயினர் வாழ்வார் என்க. c சுராரி—தேவ சத்துரு, மகிடனாகிய சத்துரு என்க. i பரம் அரி எனப் பிரித்துச் சினத்தழல் முழுதுஞ் சூழ்ந்து ஒன்றாய்த் திரண்ட பேரழலே உருவாய என்க. அரி அக்கினி. l வரம் அரிஎனப்பிரித்து மேலானசிங்கம்என்க.

கணமுந் தூங்கருஞ் சினத்தழ லுருவினள் காக்கு
மிணையில் பாலையு நண்பகற் பான்முரம் பிடத்தைப்
புணர்பொ ரோர்பொழு துடற்றுவெங் கதிரினாற் புலனாய்த்
தணவு : மாலைய தல்லதை யுலகெவன் றுங்கும். (௬௬)

இன்ன பாலையி னிறையழல் கமர்வழி யேகி
யன்ன பாதல முழுதுமார்ந் தகிபதி யனந்தன்
சென்னி மீதுநின் றெரிவதை மணியென்பர் தெரியா
ரென்னை நாமினி யிசைப்பதவ் வெரிதழல் விரிவை. (௬௭)

உடலி னோய்முழு தொழித்துய ராற்றன்முற் றுதவுங்
கடமை பாலையங் கிழத்திக்கென் றேதனோர் காட்டுந்
தொடர்ச மூலமு நோயெலாந் தொலைத்துடற் பலன்செய்
திடன வாமுதிர் வேப்பினந் தளிப்புறஞ் செறிந்து. (௬௮)

வாகை யாங்கணுந் ; தருந்திரு விந்தைமா மகளே
யாகை யாலகி லமுமடைந் தருள்பெறு கெனத்தஞ்
காகை யாற்றிகந் தங்கண்மூ லத்திற்பா தலம்விண்
போகை யானசைந் தழைப்பது போல்வது வாகை. (௬௯)

பிரிந்து செல்லுநர் தனிமைதீர்ந் தின்பமுட் பெருகப்
பரிந்து மல்குபூம் பாவையர் பஃறொகை காட்டும்
புரிந்த நாயகி சேடியர் குழாமெனப் புருடர்
தெரிந்து மாதரார் தம்மின மெனத்திகழ் குரவம். (௭௦)

சுரர்நி லத்தமு தரிதுபல் காவலுட் 0 துறுமிச்
சுரநி லஞ்சுவைத் திரளைபல் கோடிமேற் றொகுத்தச்
சுரரு முண்கெளி தென்பபோற் ✱ றாத்திரி துருமஞ்
சுரர்ம ருத்தினுஞ் சுவைமுதிர் பலம்பல சொரிவ. (௭௧)

பொன்னி னூட்டினைந் தருமலர் பொன்னெனு மொன்றே
யன்ன தென்பெறு மலர்மல ராடக மரும்பு
பன்னு மாண்கிளிச் சிறைப்பொனுஞ் சகந்தமும் பரப்புங்
கன்னி காரங்கொப் பணியிள முலையெழில் காட்டும். (௭௨)

மதுர வொண்கனி தாத்திரி யீந்துமுன் வலிய
வதிர நல்கவும் பாலுண வருந்துல கபோத
மதமு டற்குறு மெவ்வுணு வழங்கினு மறுத்து ?
சிதமென் றுங்கட காதியுண் மாதவர் சிவண. (௭௩)

---

: மாலையது—முற்று. ? தரும் இலக்குமி வீர இலக்குமியே என்க.
0 துறும்—முற்று. இ—சுட்டு. ✱ தாத்திரி துருமம்—நெல்லிமரம்.
? மறுத்து உசிதம் எனப் பிரிக்க.

### வேறு முல்லை.

முன்னம் பதினா றாயிரமேன் 0 முல்லை யலைத்துந் துவரையினி
லென்னும் புவனப் பழிசுமப்ப தெற்றுக் கினித்தூச் சோழமுதற்
பன்னுந் தேத்து முல்லையெலாம் பல்கப் புரந்தப் பழிதூரந்துங்
குன்னும் பயன்மிக்குறுதுமென * வுவண கேதோம்புறுமுல்லை. (எச)

கீர வீரை பிரிவாற்றாக் கிளர்பே ரன்பி னுடையானைச்
சார வடுத்தாங் கானிரைக டாமே பொழி " பால் குடத்தியர்கை
யார நிறைபல் குடத்தியர் பாலடுத்து மடுத்தெங் கணும்பரம்பி
யேர வளர்க்கு முல்லைமுத லிறையுட் குறிப்போர்ந் தொழுகுநர்போல்.

கடியோர் சிறிதில் பொற்பூக்கள் களுல்கற் பகமுந் தலைவணங்கும்
படியோங் கார விதசகித பஞ்சாக் கரங்காட் டிதழியெனும்
வடிவோங் கியகற் பகங்கள்பல 0 மல்குந் தூத்தோ ததியிதற்கந்
நெடியோ னாழி நிகர்கொலென நிறைபால் வெள்ளம் பரந்தொழுகும்.

d ஆயர் மதிக்கு மண்டர்பல ரங்க லாரிந் திரைபல்லோர்
பாய விதழி செருந்திபல்கற் பகமான் றேனு மத்தொலிகண்
மேய பூவைக் குலமரிகள் வெண்ணெய்க் குடம்பால் வெள்ளமடுத்
தேயும் புறவைப் பாற்கடலொன் றென்னு மிதுவோ விதன்பெருமை.

வேலி கடவாப் பிறர்தொட்ட விரைப்பூங் குளத்து நீருண்ணாச்
சீலமுடன யாசகமாச் செறிபுல் லுண்டு குறுமுயலுஞ்
சால விரத நெறியுறுமேற் சாற்றும் புறவந் தனிபுரக்கு
ஞால மகிண னருளினல நவிற்ற லெவனா மினிப்பிறநாம். (எஅ)

வழிபா றருமான் கன்றினமு மான்கன் றினமு முடன்விளையாட்
டொழியா துகைப்ப மகாரினுமிக் குறமார் பணைத்து மடியிருத்திக்
கழியா வுவகைக் கடறிளைப்பர் கனிவாய்ச் சியரவ் வாய்ச்சியர்க
ளிழியா நீத்தோர் களும்வாஞ்சித் திடுப வெனிற்பி னிசைப்பானேன்.

---

0 முல்லை—கற்பு. * உவணகேது—கருடக் கொடியாகியவிஷ்ணு. " பால் முல்லை முதல் ஏரவளர்க்கும் என்க. ஏர்தல் எழுதுதல். 0 இவை யெல்லாம் மல்குகின்றதுத்த உத்தியாகிய இங்கிலத்துக்கு நெடியோனுடைய பாலாழிநிகர்க்கொல் என்க. துத்தம் பால். d ஆயராகிய அண்டர் பலரும், அங்கலாராகிய இலக்குமிகள் பலரும், இதழிகள் செருந்திகளாகிய பல கற்பகங்களும், பசுக்களாகிய பல காமதேனுக்களும், மதத்தொலிகளும், பூவைக்கூட்டமாகிய பலவிஷ்ணுகளும், பல வெண்ணைக்குடங்களும், பால் வெள்ளமுமடுத்துள்ள புறவை என்க, புறவுடமுல்லை நிலம். பூவை-காயா. அது நிறத்தால் விஷ்ணுவை ஒத்தது.

எவரு மின்சொ னிகராவ தென்றுட் கொத்தாய்ச் சியரான்பா
0 றவரா ரழலிற் காச்சியுமேற் * றோயா மத்திட் டதுதிரளு
நவநீ தங்கண் டிச்சார நலத்தா லன்றோ நினைப்பு கழ்த
லிலனோர் குருமப் பெருமையுமென் றெரியிட் டுருக்கி யின்புறுவார்.

அட்டு மிடரார் புரிந்தாலு மாகூழ் வலத்தார்க் கபிவிருத்தித்
தொடர்பே யாமென் றிடலோர்ந்தாந் தொறுவி மார்காய்ச்சான்கோ
முடனே ததியாய்நனிசுவையுற்றுடைமத்தினில்வெண்ணெய்ச்சுவையா
யிடர வுருக்க நெய்ச்சுவையா யின்றி யமையாச் சிறப்பமைந்த.

அர்க்க னுதவிக் கிதுகைம்மா றெனக்கொண் i டண்ட ரவண்விளக்கு
c முர்க்க மாட மாட்கமுன் முதிர்பச் சைகணீ லம்பொன்முதல்
வர்க்க மிரவி யிளப்பாற வதிபல் l லிரவி யெனக்குவிப்பார்
சொர்க்க மிணையோ பொன்னென்றே சோம்பே றிகட்கேயிடமாமால்.

உல்கம் புரப்போன் றனைப்பொதுநீத் தொருதன் றனக்கே சிறப்பாக
நிலவ வகித்துக் கொண்டொளிரு நிலனென்றோ வைந்திணைத்துறையுட்
குலவு மிருத்த லகப்பொருணூல் கூறிற் றிதனுக் கென்றுபெரும்
புலவ ரிசைக்கும் பெருஞ்சிறப்பிற் பொலிவ தனைய பூம்புறவம். (௬௩)

மல்லும் புறவத் தண்டர்கடம் மாபின் மூல ரானுய
ரலகி றவத்தாற் போந்தனரே லவர்வாழ் புறவின் றவமெனிதோ
குலவும் பெருஞ்சீ ரானுயர் குழலி ஞேசை கேட்டருளி
நிலவொண் சடையோன் விடையிவர்ந்து நேரே வரும்பேற் றினதம்ம.

வேறு. மருதம்.

பொன்னுலகைந் தருச்சுதன்மை புரியமரா ரமகளிர் போற்றுஞ் சீர்த்தி
வன்னமுலைச் சிசிந்தா மணிமுதற்பன் னிதிபோக வகைய வாழ்க்கை
தன்னினுமிக் கார்வமுறத் தடமலர்க்கண் குளிர்காட்சி தாவா தென்று
மன்னுவளத் தெனச்சுரர்கோ வதிதேவாய் வழாநிலைத்து மருதமாதோ.

ஊடுதல்கா மக்கின்பமெனுஞ்சுருதி யிலக்கணமீதுண்மையேயென்
றீடுபெற நிதரிசன விலக்கியத்தாற் றேற்றுதலி னிதுவே யூட
லாடுதிணை யாயுலகி னபிவிருத்தி நிபவள்ங்க ளனைத்து மென்றுங்
கூடுதிணை யிம்மருதக் குளிர்திணையே யிதன்பெருமை கூறற்பாற்றோ.

---

0 துவர்-விறகு. * தோயா-செய்யாவென்னும்வினையெச்சம். தோய்தல்-பிரையிடுதல். i அண்டர்—இடையர். c முர்க்கம்—பயறு-மாடம்-உழுந்து-ஆடகம்-துவரை. l இரவி—மலை.

பொன்னிநதி யெனும்பெருஞ்சீர்ப் பூங்கொடியொன் றரிகொளதி முத
லாப்போதும், பன்னதிய பெருங்கிளைகள் பற்பலகாற் சிறுகிளைகள் பர
ம்ப நீட்டித், தன்னிகர்பல் வயறழைத்துத் தகுபைங்கூழ் நிரைபூத்துத்
தானியாதி, மன்னியபற் பலவகைய வளம்பழுத்தே யெஞ்ஞான்று மல்
[காநிற்கும்.

இன்னமுதம் பருக்கிவளர்த் தெடுத்தினிதுபாராட்டியினியவூட்டித்
தென்னருணற்றாயென்வேசென்னிறைகாவிரிமூலத்தாய்செவிலிகைத்
தாய், மன்னியபாராட் டுறுதாயூட்டுறுதா யையவருந்தாய் வழிச்சென்மா
போற், றன்னிடையை யாறுகடாந்தனித்தனியேகிளைத்தொழுகத்தா
[வாதோங்கும்.

வேறு.

உலகெலா மளித்திடற் குரிய பேரரு
ணிலவுமா வெள்ளமே நிகர்செல் காவிரி
யலனியிர் தருபிர வாகந் தாயினை
யிலகநேர் கண்டசே யெனக்கண் டார்ப்பரால். (௮௯)

கண்டிடு முழவுரக் கவேரன் மாமக
ளொண்டொடி நிறைபய முணச்செல் சேயென
மண்டொலிக் கிணையெழ மருவிச் சூழ்ந்துசென்
றெண்டரு கால்களி னினிதி யக்குவார். (௯௦)

அருள்புக நெகிழுமெ யன்ப ருள்ளெனத்
தருபுனன் மடுத்தலு மள்ளர் தண்வயல்
வருகமர் விரணந்தீர் மருத்தொ ழுக்கலு
மொருவியாங் கொழிந்துசா லுறக்கு ழைந்தன. (௯௧)

பாவனை யுறைப்பவுட் பயிலு மைந்தெழுத்
தாவபன் முறையெழு தன்பர் போன்மெனக்
காவுபல் பகடவ நுகத்தின் காற்பினைத்
தோவறு களமராங் குழுவர் பன்முறை. (௯௨)

ஐந்தெழுத் திடையறா தமையுந் தூமனத்
துந்தொளி யெழுதலி னுழுத சால்வழி
யுந்தெழு மணிகளும் வரம்பின் மாழையு
மிந்துறழ் வளைகளு மிமைக்கு மெங்கணும். (௯௩)

கமமொழித் திதம்புரி காலு மேலலத்
தமாகி தத்தினு மபேத நெஞ்செனக்
0 கமையெனும் பெயர்ப்பொருள் காட்டு மாண்பினைப்
புமைசெயன் முறையெனப் பரம்பு கைப்பரால். (௯௪)

---

0 க்ஷமை எனும் வடமொழி கமை என்று தற்பவமாயிற்று. க்ஷமை-பொறை. அது பூமியின் பேர்.

இளகியைந் தெழுத்தமைந் திலங்கு நெஞ்சினிற்
பளகிலன் பசைவற நிறுவும் பான்மையின்
வளநிறை பற்பல சாலி வாலிய
முளையெழ விதைத்தனர் மூசு மள்ளர்கள். (௯௫)
அன்பினில் வேறலா தவிரு மொண்சிவ
மின்புற வெழுதலி னெழுந்த வெண்முளை
பின்புருத் திரன்முனோர் பிறக்க மேவலின்
முன்பித ழொன்றிரண் டாக மொய்த்தன. (௯௬)
பருவமுற் றன்பெடுத் தமல பாதம்வைத்
தருமையின் வளர்த்தலி னனைய நாற்றினை
வருபுனற் கழனியின் மள்ளர் மாதர்கள்
பெருகிய வாழ்த்தொலி பிறங்க வூன்றுவார். (௯௭)
அருட்புன லிடைவள ரன்பின் றோற்றம்போற்
றெருட்புன லிடைவளர் திகழ்பைங் கூழினை
யிருட்பழ வாதனை யெய்ப்பச் சூழ்ந்தன
பொருட்படா திரிதரப் புணரும் பல்களை. (௯௮)
அருண்முறை நவிலுமைந் தெழுத்தென் வாளினு
லிருண்மல வாதனை யரித்தல் போன்மென
மருண்மது நுகர்தரு மள்ளர் மாதரத்
தெருண்மலர் வயற்களை சிதைத்த லாற்றுவார். (௯௯)
ஈசனா ரருள்வசத் தியைந்திட் டேபழ
வாசனா மலந்தெறு வாரின் மாந்திய
நேசநா றியமது வசத்தி னின்றெழு
தேசநாண் மலர்க்களை சிதைப்பர் யாங்கணும். (௧00)
பளகொருங் கொழிதலும் பரவு மொண்சிவ
விளையனு பவமுளை விரவி நிற்றல்போல்
வளர்பசுஞ் சாலிகண் மள்ள ரோம்புறக்
கிளரும்வெண் கருவகங் கிடைத்தெ ழுந்தன. (௧0௧)
கருமுதிர்ந் தெழுந்தநெற் கதிர்கள் வெண்மைமுன்
மருவியொண் பசுமைபின் செம்மை வாய்த்தெழு
தருமொளிர் சத்துவந் தமசு ராசதத்
தானரி யயன்முறை யவிருந் தோற்றம்போல். (௧0௨)
தனிநுக ரனுபவந் தாவில் யாவர்க்கு
மினிதுற விரிந்தரு ளியல்பி னுட்கரு
கனியெழீஇ நெற்கதிர் நலக்க முற்றிய
பின ரரிந் தரிக்குவால் பிறங்கு போர்செய்வார். (௧0௩)

௦ அரிதனக் கரியெனு மசலஞ் சாய்த்திட்டோர்
கருமுகிற் படைஞர்புக் குழக்குங் காட்சிபோல்
விரவுநெற் போர்கள்பார் வீழ்த்த மள்ளர்சூழ்
நிரைசெறிந் துழக்குவ மேதி நீள்குலம். (௧0௪)

அழுக்கினை யழுக்கினா லகற்றல் போன்மல
வழுக்கினை மாயையா லகற்றல் காட்டுவ
வொழுக்கிய மேதிக ளுழக்கி யோய்ந்தபின்
குழுக்கொளும் பலாலமுற் கோது நீக்குதல். (௧0௫)

தொழில்பல கருவிக ளோடு தோய்ந்திழைத்
தொழிபிளைப் பாறியா ருயிர்க ளுற்றெனக்
கழியலா லம்முதற் கடித கற்றிய
வழியொளிர் நெற்குவால் வயங்கும் யாங்கணும். (௧0௬)

ஈடிலா ருடனுறி னிரியுந் தம்பெரும்
பீடெனச் சிற்றினம் பிரிந்து நல்லினங்
கூடுநர் போற்பதர் நீத்துக் கோதொரீஇ
நீடுநெற் குவால்கள்பன் னிலையிற் சார்வன. (௧0௭)

ஆறினொன் றரசர்நன் னீதி யான் மழை
யாறினொன் றறனிறைத் தனைத்து மோம்புமிவ்
வாறினொன் றியநன்றி யயர்ந்தி டாமன்மு
றாறினொன் றரசருக் களப்ப ராங்குளார். (௧0௮)

ஐம்பெரும் பாகநெல் லனைத்துங் கொண்டுசென்
றைம்பெரும் பாகமா யவைமுற் றுய்ப்பாற்
றம்பொருள் பாத்துணத் தகுமெ னூற்பொரு
டம்பொரு ளாகவே தலைக்கொள் வாழ்வினோர். (௧0௯)

கன்னல்கண் மஞ்சள்பல் கதலி யாதிய
துன்னுமே னிலமுதற் றொகுபஃ றுனிய
மின்னிலம் விளைவன வெல்லை யில்லன
வன்னமுற் றுறவிரித் தறைத லாவதோ. (௧௧0)

அனைத்துல குயிர்நிலை யாக மல்கியே
யினத்துயர்ந் தொளிருமிவ் வினிய தண்பணை
யுனற்கருந் திணையெனி லோத லெங்ஙன
மனக்கொள நிறைபெரு வளனெ லாமரோ. (௧௧௧)

---

௦ அரிக்கு அரி—இந்திரனுக்குப்பகை.

வேறு செய்தல்.

உதக வேந்தரென் றெமையுல குரைப்பமுற் றலகுக்
குதக மீவதிவ் வுததியே யாதலி னுதைச்சா
ருதக மோம்பினப் பெயர்நிலத் துறுமென வருண
* னுதக் நோக்கிவீற் றிருப்பது நெய்தனீ ० ளுதகம். (ககஉ)

பூதி கண்டிகை முதற்சிவ சம்பந்தப் பொருளி
ளுதி பூசையாற் றன்பர்போற் பாதரவ் வருண
னூர்தி முட்புனே நிழற்றளி யூன்றியவ் வும்பற்
கோது சீர்விழா வெடுத்துவேண் டுவனபெற் றுவப்பார்.(ககங)

இரங்கு துன்பத்தி னிறுதியே யின்பெனப் பிரிந்தா
ரிரங்கு ரித்திணை யெய்திநா நோற்றிருந் திரங்கி
னிரங்கி மேற்கொளு மீசனென் றெண்ணிமுண் டகங்க
ளிரங்கு வண்டெழிற் கண்டிகை நீறுபூத் திலங்கும். (ககச)

புன்னை நீழலிற் 1 கெடவரற்சிறுமியர் புரிந்த
மன்னு சிற்றிலச் சிதைப்பவுள் வருந்தித்தம் மார
மன்ன வேலைமேல் வீசலுங் கொடுசெலு மகன்ற
தன்னதொண்பொருளுறிற்கொளத்தாழ்க்குமோசலதி (ககரு)

வகி யாய்முழு துயிர்க்கருளிறைவனே வலைஞ
ருகி மீன்கவர்ந் திடினெமக் கடாகொலென் றலைமேற்
சோகின் மீதுறீஇப் பரதவர் துதையுமீன் சால
* மாகி னீள்பல சாலங்கள் வீசுபு வலிப்பார். (கககூ)

விழியை யொப்பெனப் படுகட லுடன்விரா யாற்றல்
கெழுமி நிற்றிராற் காண்டுமென் றலைஞர்மேற் கிளர்ந்து
முழுது கன்கரைக் குவித்தபன் மீனெலா முதங்கூர்ந்
தெழுதுளைச்சிய ருணக்குவர் மேலு i மவ் வினைய. (ககஎ)

துறைக டோறும்பன் மரக்கலத் தொகையினுட் டுதையு
நிறைபொ ருட்குவால் கொணர்ந்துகைத் தோணிக ணிகழ
வறைக டற்கலா யளிப்பமா ணவர்குலக் காழ்ந்த
பொறைக விப்பொரு ளெடுத்தரு ளாரியர் போல. (ககஅ)

உருவ நிட்களத் திற்கய லன்றென வுணர்த்துங்
கிருத காடினி யத்துட னெண்ணிய கிளையாய்

(ககஉ) உது அகம் எனப் பிரிக்க. ० உதகம் நிலம். 1 கெடவரல்-சிறுமியர் விளையாட்டு. * மாகு-வலைமணி. i அவ் இனைய-அம்மீன்கள் வருந்த.

மருவு கென்றுகொ லுமணராங் குவரிநீர் வரக்கிப்
பெருக வாற்றுமுப் போங்கலெப் பரங்கரும் பிறங்கும். (கக௯)

என்ன தேத்தருப் பொருளெலா மியலும்பல் கலத்தாற்
றுன்ன கன்கரைக் குவித்தெலா நிலங்களுந் துதைந்து
முன்னி யேற்பநா டொறுந்துறை வறத்தரு முதன்மைத்
தின்னி லத்தியல் பென்னிலா ரிதற்கிணை யிசைப்பார். (கஉ0)

எம்மை யாளரு ணம்பிபோற் றதிபத்த ரெனுஞ்சீர்ச்
செம்மை மாமணி யுலகெலா மொளியுறத் திகழ்ந்து
தம்மி யற்குலத் தவதரித் திட்டமா தவஞ்சார்
நன்மை யாளரிந் நிலத்தவர் பெருமையார் நவில்வார். (கஉக)

திணைமயக்கம்.

குன்றி னந்திணைக் கதிர்நுகர் குரங்கங்கொற் றவைதன்
மனற ளிக்கலை யூர்தியை யினமெனு மருவுந்
துன்று திண்பர லுண்புற வமையினஞ் சொரியா
நின்ற வெண்மணி பரலெனச் சென்றுணு நிற்கும். (கஉஉ)

வளையி னஞ்சிறு மறியுகைத் தான்முலை மடுக்கும்
வளையு ழைப்பொலி முலையுணும் வனநிரை மழவு
வளைமி சைந்துசென் றும்பல்கண் டுயில்வன மருதம்
வளைய கின்னிழ லுறங்கு 0 மிக் குணுவரு மும்பல். (கஉங)

அமைவெ டித்தெறி மணிவிளாங் துணங்குமீ னருங்
கமைகொ டிக்குலத் துதைப்பவிண் பறந்துறுங் கழைமே
லிமிர்பொற் கோங்கிடைச் சியர்க்கொளிர் காதணி யீவ[த்தும்
நிமிர்பொற் கொன்றையம் பணத்தியர்ச் சனைத்தொழி னிகழ்

உழும்ப கட்டினை யோட்டுவ நெல்லியொண் கனிகள்
வழங்கும் பூகதந் துவர்க்கனி மறவருண் மகிழ
வொழுங்கு மீந்திருங் கனிதரும் பரத்திய ருவப்ப
முழங்கு வாரிமீ னெறிவன மறத்தியர் முகப்ப. (கஉரு)

முல்லை யான்பொழி பால்புகு முளரியந் தடத்து
னொல்லை வாளைதாய்ச் செருந்திவீ யுகுப்பவல் வுழுபால்
வல்லை யத்தட நிரப்பிவா ரிகிப்புலான் மாற்றும்
வில்லை மாவெனக் காசைமே லலைவளை வீசும். (கஉசு)

தாழை யின்கனி தகர்ப்பவீழ் மாங்கனிச் சாறு
வாழை யின்கனிச் சாறுமுன் றுறுற வளர்முட்

0 இக்கு உணுவரும் உம்பல்-கரும்புதின்று கொண்டுவரும் எருமை.

டாழை தாதுகுத் தாங்குநோக் குகமெலாந் தவள
வாழை யாதியென் றோதிய விம்மிதம் வழங்கும். (கஉஎ)

வேறு.

எண்ணாப்பொன்கொடுத்தா ளிசைபழிச்சப்புகும்புலவ னியம்புவாக்கிற்
றுண்ணீருங் காவிரியே தார்வேந்த னுஞ்சோழன் றானேயென்று
மண்ணுவ துஞ்சோழ மண்டலமே யென்றுமுறை வருமே லெந்த
விண்ணுடும்பாவுமிந்த மேனாட்டின்பெருமை யெம்மால்விளம்பலாமோ.

திருநாட்டுச் சிறப்பு முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் (கஅ0.)

# திருநகரச் சிறப்பு.

வேத மூன்றிடை விளங்கெசுர் வேதமூ வேந்தர்
சோதி நாட்டினுட் சோழநா டிதனிடைத் துலங்குஞ்
சூத கானன மதனிடைக் காண்டமே தனையு
மோது ருத்திரஞ் சிவாலய மைந்தெழுத் துமைகோன். (க)
உலகெ லாநிறைந் தொளிர்முனி வரரொலா மொருங்கே
கலனெ லாமெளி தருள்வதிந் நகரென நணுகி
நிலவ லாலன வரதசா ருவமுனி நிவாச
தலமெ னுமமும் பெறுவது திருவுசாத் தானம். (உ)
அகில லோகத்து மவிர்சிவ தீர்த்தங்க ளனைத்து
மகில மாமுனி வரும்புகுந் தழைப்பவந் தாங்கே
சகல போகமோக் கங்களுந் தந்துவாழ் தலினாற்
சகல தீர்த்தவா சிரயமித் திருவுசாத் தானம். (ங.)
சகமெ லாம்வழி பாட்டின்மெ யின்புறீஇத் தழைப்பச்
சகள நிட்கள சதாசிவ னிமகிரி தனையை
சகன மர்ந்துவாழ் தலமெலாஞ் சார்ந்துவாழ்த் தலினாற்
சகல க்ஷேத்திரா தாரமித் திருவுசாத் தானம். (ச)
உருவ காலரு நாலென வுரைதரு முபய
மருவ காப்பணின் றொன்பது வகைமையும் வயக்கும்
பொருவின் மூர்த்திமூற் ௦ற முதிறை தனைத்தொழப் புகலாற்
சருவ மூர்த்திக ணிலயமித் திருவுசாத் தானம். (ரு)

௦ உம்மை தொக்கது.

கோயி லூரொனும் பெயரிடு குறியெனக் குலவும்
வாய்மை யேயமு தேசஞ லயப்பெரு மாண்புந்
தூய்மை கூர்தன துயர்ச்சியும் விளக்கியா துலக்குந்
தாய்மை யாரரு ணிறைதரு திருவுசாத் தானம். (௬)
விண்டு வாதிவா னவரெலா நாடொறு மிடைந்து
தொண்டு ஞற்றுபு குறையொரீஇத் துதைதலிற் றனேநோர்
கண்டு ளார்க்கும்வான் பதமெலா மெளிதுறல் காட்சி
கொண்டு தேற்றியாங் கிலகுமக் குலவுசாத் தானம். (௭)
அகில லோககமுந் தனையடுத் திறைஞ்சவாங் கறங்க
ணகில முங்கொடுத் தெங்கணும் விரித்தரு ணிலையாற்
றகுதி சாலிதே தருமகோ சம்மெனச் சான்றோர்
திகழ வோதிய பொலிதருந் திருவுசாத் தானம். (௮)
உலகெ லாமுமெப் பொருள்விழைந் துறினுமவ் வுடன்முற்
றிலக நல்கியு மெட்டுணை யெனுங்குறை வெய்தா
நிலைய பல்வளத் தருத்தபண் டாரமாய் நிலவித்
தலைமை சான்றொளிர் தருவது திருவுசாத் தானம். (௯)
நாம நீருல காதிய வுலகெலா நயப்பத்
தோமி லைம்பொறி நுகர்ச்சிமுன் னவனைலாந் துதைமத்
தாம மிக்கன வரதமுந் தருதலிற் சகல
காம தாயக நிலயமிக் கவினுசாத் தானம். (௰)
மாய ஞதியர் * பதத்தழி ௦ மாலைய தாகாத்
தூய நித்திய சுத்தவத் துவிதவா னந்த
நேய மாண்சிவ மோக்கமென் றுன்றவர் நிகழ்த்துஞ்
சேய மூலபண்டாரமித் திருவுசாத் தானம். (௧௧)

வேறு.

வார்கொண் டருமை காட்டியவா வளர்க்குஞ் சுபயோ தரக்குடைந்து
வார்கொண் டிடாமுப் புடையிளநிர் மல்கப் பொறையாற் றிலாங்கவிகள்
வார்கொண் டோடி நெடுவானின் மவிநா ணச்ச முடனடுங்க
வார்கொண்டளிக்கும் பயோதரநீல் வார்கொண்டெனச்சூழ்ந்துடனுதவும்
மண்ணின் மடவார் முலைக்கொவ்வா மாயி னைமைத்தாழ்த் துநரெவரோ
யெண்ணின் மடவார் தமுட்டேவ வியல்பிற் பெருமை யெழின்மாதர்
விண்ணின்மடவார்முலையொத்தேதம்விழுப்பமுடையேமெனக்களித்தாங்
குண்ணின் மடவா ரிளநீர்த்தெங் குலவை முழுதுஞ் செறிந்தாடும்.

உண்ணத்தக்க இனிய இளமையாகிய நீண்ட இளநீர்த்தெங்கு.

---

* பதத்து—பதவிகள் போல். ௦ மாலை—தன்மை.

தேவ வழிபா டாதியபல் செயல்கட் கெமையின் றமையாமை
மேவு மெமக்கோர் சிறிதொவ்வா விண்கற் பகங்க ளெமக்குமே
லாவ தறிது மெனமேற்சென் றதனைத் தாழ்த்தி மடல்சிறிதாங்
கோவு பாளை நிரையினகு மூவணை மேலு மிலாங்கலிகள். (௧௪)

மும்மைப் பயனுந் தருநிசமிம் மூதூர்ச் செறியு மிலாங்கலிக
ளம்மைப் பயன்வீ டறத்தளிக்கு மதனுற் றெருட்டு நூலவை
யும்மைப் பயனி னளப்பிலகாய்த் தோம்பு வார்க்குப் பெரும்பொருடந்
திம்மைப் பயன்கூட் டுதெருட்டு மென்றுங் காட்சி யளவ்வயரோ.

இனத்தா லைந்தென் றுரைக்குமளவெய்தும் வான்கற் பகமென்னுங்
* கனத்தாலுரிஞியதிமதுரக்கவினீர்ச்சூல்பெற்றிலமென்னு
மனத்தா லச்சூற் றறல்பெயச்செய் வளஞ்சால் புவிக்கற் பகநிரையின்
வனத்தா ரளவோ தரிதெனுமா மல்கிப் பொலியு மிலாங்கலிகள். (௧௬)

ஆற்று நீரை யும்முவராக் காழி நீருண் டதைமாற்றிப்
போற்று நீராக் கெம்மின்மிகும் புனிதச் சுவைத்தாக் கிலாங்கலியென்
றேற்று நீர் ० மை யப்பொழில்சூழ்ந் திலங்கு மெவர்தீ யினமுவர்த்தாற்
றேற்று நீர்மை நல்லினத்தைச் சேர்ந்து வயங்குந் திறம்புரியார். (௧௭)

அறன்மிக் களிப்போ னெமக்குவணை யாச னவனு லூதவிபெறு
நிறைபொற் றருக்க ளவற்கோவா நீழல் பரப்ப வானாநாந்
தறையுற் றெழனன் றலவென்னுத் தாழை நிரைகண் மேலோடிப்
பொறையுற் றலர்பூந் தருமேலும் பொலியப் பரப்பு நறுநீழல். [௧௮]

ஆய துணர்ந்தாங் கலர்பூக மரம்பை கரும்பு முதலாவ
பாய விழியா யிரத்தவன்வான் பதியம் பகங்கட் கிதஞ்செய்வ
வாய பசிய தண்ணியவே மற்றவ் வுடையேம் யாமென்ன
மேயங்கிழற்கீழ் வெளியெல்லாமிடைந்து நிரைந்தாங் கணிசெய்வ. [௧௯

மருதத் தலைவி தனைப்புரக்கும் வானிற் றலைவற் குண்கலத்தி
னருமைத் தவள நறுஞ்சாலி யன்னம் படைத்தாங் ககல்வானில்
விரவிப் பொலிபைங் கதலியின விரிமெல் லிளநெட் டிலையினிடை
யுருமுற்றியவெண் முழுத்திங்க ளொளிகான் றமர்ந்து திகழ்தருமால்.

அனைய ० மதிமேற் செந்தாதிட் டலராம் பிரந்தே னொழுக்கிமுதிர்
கனியும் வருக்கைச் சுளைகதலிக் கனியோ டுகுப்பத் திகழ்காட்சி
பினையத் தலைவி பருப்பொடுநெய் பேணுஞ் சுவைய முக்கனிக
ளினிதத் தலைவற் கன்னமுட னிலங்கப் படைத்தா லெனப்பொலியும்.

---

* கனத்தால்—மேகத்தை. ० மை-மேகம்.

குளிர்பூ கதமேற் † றிரையளா றுங் கொடிகள் படர்ந்து தவன் றியிளந்
துளிர்க ளடுக்கிற் றெனத்துளைதயத் தாவில் பழுக்காய்க் குலையுடுப்ப
மிளிர்பூ முகையோர் மெல்லிலையின் மீது பொருந்து நிலைநோக்கி
னுளிர்தாம் பூலம்வெண்சுண்ணத் துடனுங் குதவிற் றெனவொளிரும்

வேறு.

சூர்முழு தாண்புக்கீண்டுத் துதைதலால் வெறிதா மன்னோர்
o புரமுழு தவற்றை யெல்லாம் புரப்பதெங் கடனன் றேவென்
றூமுழு தருளிக் கோயி லூர்முழு துடுத்து மேற்சென்
மரமுழு தீண்டு சோலை வான்முழு தணிற் சூழும். [உ௩]

சந்திர காந்த மாடந் தருசுவை யமுத ரூப
மந்திர நாத னீற்று வயங்கொளி மேனி மானு
மிந்திர நீல மாட மிடையின்மா ணிக்க மாடந்
தந்திர மயமா தேவி * சாமிமா மேனி மானும். [உச]

பொன் மணி மாடம் வானிற் பொலியவம் புதங்கீழ்ச் சார்த
லன் மணி நிறத்தன் றன்மாட் ளயனெழு தோற்றங் காட்டும்
பின் மணி முகின்மே லாகப் பிறங்குமம் மாட மன்ன
மன் மணி மலரோன் றன்பான் மாலெழு தோற்றங் காட்டும். [உ௫]

நாகமீப் பொலிவி லோத னங்களாஞ் செங்கை நீட்டி
மாகமிப் பொலிவா னோரை வருகென வழைப்ப வன்னோர்
தாகமீப் பொலிய வேள்விச் சாலைபுக் கீண்டி நாளும்
யாகமீப் பொலியு ணக்கொண் டின்பமீப் பொலிவர் யாண்டும். [உ௬]

அரிவைய ரல்கு லாக மரைக்குடிப் பதும்பொன் ? னாகந்
தெரிவையர் மருங்கு l னாகந் திதலைமென் முலையு ; நாகம்
வரிவிழி களுமை நாக மறைந்துறை i கடலி னாகம்
புரிகுழன் மிசைப்புன் னாகம் போதுமென் னடை * பெண் ணாகம்.

கதிர்கிரி மைந்தர் வாகங் கரிபரி முதல வாகங்
கதிர்மிகு மணிய வாகங் காமனுஞ் சமழ்ப்ப வாக
மதில்கண்மே லெழுவ வேக மறைமுழு துணர்வி வேக
மதிமனத் தொளிரு மேக மாளிகை யிவரு மேகம். [உ௮]

---

† திரையல்-வெற்றிலை. o புரமுழுதும் வெறிதாம் என்க. உம்மை தொக்கது. * சாமி முருகன். ? நாகம்-வஸ்திரம். l நாகம் ஆகாசம். ; நாகம்-மலை. i கடலின் ஆகம். * பெண் யானை.

மைந்தர்-வாகம்கிரிபோலுமென்க.வாகம்-புயம்.முதலவாகம்-முதலி ய வாகனம். ஆகம்அணிய என்க.ஆகம்-மார்பு, ஆகம்-உடம்பு. எழுவவே கம் எனப்பிரிக்க.கம்-மேகம்-மனத்தில்ஏகம் ஒளிரும்என்க.ஏகம்-சிவம்.

மாடமும் வாவி தாமும் வயங்கர விந்த நேரு
மாடவிர் முகங்கா ரோதி வயங்கர விந்த நேரு
மாடவர் கற்பாய் மார்ப மணிநறுஞ் சாந்த நேரு
மாடவர் கற்பாய் ௦மார்ப மணிநறுஞ் சாந்த நேரும். [௨௯]

மாடம்-வயம் கரம் விந்தம் எனப்பிரிக்க. கரம்-ஒளி. மாடு அவிர் முகமும் அதன்மேற்சேர்ந்த ஓதியும் வயங்கு அரவுபற்றிய இந்தின் அம் நேரும்.ஆடவரது கல்போலும் பரந்த மார்பம் அணியப்படும் மண முள்ள சந்தனம் பொருந்தும். ஆளுகின்றதவர்களின் கற்பு ஆய்கின்ற மார்பம் (உள்ளம்) அழகிய நல்ல சாந்தம் பொருந்தும்.மார்பம் ஆகுபேர்.

மாதர்வா னரம்பை யென்ப வணகவா னரம்பை யென்ப
மாதர்கூ ரியலுந் தோகை மனங்களி னியலுந் தோகை
மாதர்செய் விழியுந் தேனே வழங்குமென் மொழியுந் தேனே
மாதரம் பொருவ கொங்கை மலர்க்குழ றருவ கொங்கை. [௩௦]

அழகுமிக்க சாயல் தோகை.மனங்களினியற்கைஉந்து ஒகை. வி ருப்பஞ்செய் விழி வண்டு. மா தரம்-பெருமலை.

கிளைதழூஉங் குடியெ லாங்கைக் கிளைவழூஉம் யாண்டு மாதர்க்
கிளைதழூஉங் காரம்பு யங்கள் கிளைதழூஉம் * வராம்பு யங்கள்
வளைதழூஉ மடவார் கண்டம் வளைதழூஉஞ் செவிக ளாண்கான்
முளைதழூஉ மனையெ லாஞ்சொன் முளையெழூஉங் கழனி யெல்லாம்.

குடியெலாம்யாண்டும் கைக்கிளை வழூவி இருதலைக்காமத்தின்புற்று வாழும். மாதர்க்கிளை-அழகிய கிளி.கிளை-மூங்கில். வர அம்புயங்கள். வ ராம்புயம் வடமொழிச் சந்திபோல் நின்றது. முருகேசன் போல, சொல்-நெல்.

கள்ளளிப் பனவாங் கென்றுங் கடிமல ரினங்க ளேயக்
கள்ளக றெப்பெ ருக்கிக் களிமயக் குறுவ வுண்டே
௦கள்ளகம் பயில்வ மின்னார் கண்களே யவைக ளாற்றுங்
கள்ளகப் படுவ வன்னோர் காளையர் மனங்க ளேயாம் [௩௨]

நிறைமலர்ப் பொழில்க ளேகண் ணீர்பொழி நிலையவென்றுஞ்
நிறையுளி யியங்க ளாதி நிறங்களே யிரங்கு நீர

௦ கள்-முதனிலை. கள்ளத்தனம் என்க.

நறைமலர்த் தருக்கண் மாட நிரைகளே கொடிய நண்பூழும்
பொறையின் வாய்ந் தலர்கடேற்றிப் பொலிவபூ ழூதல்க ளேயாம். (௧௩)

வெறியன மலர்க ளேயாம் விளியிய லுருபி னென்றே
யறிவில சடங்க ளேயா மமர்த்தலா டவா ௦க டாவே
முறிதால் விருக்க மாதி மூடஞ்சோ திடநூற் கூற்றே
பிறிவதீ வினைக்கு ழூமே பிணிமுக மஞ்ஞை யேயாம். (௧௪)

செல்வமிக் குடையார் மாடச் சிறப்பெலா நோக்கி யென்னு
மொல்வது புரிது மென்பா ருஞற்றுபொன் மணிமா டங்கள்
செல்வமே லுலகே ழப்பாற் சென்றவோ நின்ற வோமற்
றொல்வதெங் கெம்மா லம்மா வுரைப்பதொண் பொருட்பெ ருக்கம்.

இன்னன வலகி லாத வியல்வளந் துவன்று மிந்த
நன்னகர்ப் பொதுமை யாய நலன்முழு திசைப்பர் யாரே
மன்னகத் திடைப்பு றத்த வகைச்சிறப் பாம்வ ளத்துட்
கொன்னுமென் னறிவோ வில்லிக் குட *மெனிற் கூறலென்னும்.

வேறு. புறநகர். யானை.

விண்ணி யங்கினுஞ் சிறையினு லரிந்தனன் வேந்த
னெண்ணி யங் ?கவை நோற்றெனுங் கால்கள்பெற் றினிநாம்
மண்ணி யங்குது மெனக்குல மலையெலா மொருங்கே
யுண்ணி யங்குறல் போன்றன வவிர்மணி யிபங்கள். (௧௭)

உலக மெட்டினீற் றும்பல்க ளும்பர்செ லும்பன்
மலைமு னுவன தாங்குமா நிலத்தைமென் மலர்த்தார்
மலைய வோர்புயத் தாற்றுமன் னவனைமேல் வகித்தாங்
குலவி யெப்பகை யுந்தெறு மும்பர்வா *ழும்பர். (௧௮)

உலகம்-திசை உம்பல்களையும் மேற்செல்லும் பல்மலை முதலிய வற்றையுந் தாங்கும் பூமியை மலர்மாலைபோல் மிக லெகுவாய்த் தாங்கும் புயம். உம்பர் வாழ்-உவ்விடத்து வாழ். உம்பர் ஈறு போலி.

கண்ணி னேக்குவ திகந்தமே முடிவிடங் காணு
விண்ணி னேக்கினு மன்னதே யெண்ணிலார் விரிப்பா
ரொண்ணி னோக்கியந் நீட்சியு முயர்ச்சியு மென்ப
மண்ணி னேக்குகா ளனத்தகு மிபக்கள மாண்பு. (௧௯)

௦ கடா-ஆடவர்கள் போர்செய்விக்கின்ற ஆட்டுக்கடா. *எனில் என்பது தேற்றப்பொருட்டு "ஆலவாய் சிவனுலகானல்" என்றதிற் போல. ?அவை அரிந்தனன் என்றியையும்.

முத்தி றத்திப நிலைக்கள மிசைக்கொண்மின் முகிலோ
டத்த வெற்புத யாசலத் திருசுட ரவிர்கால்
மத்தி நிற்றல்சங் காழிகை மருமமொண் டிருவை
வைத்த மால்கரிக் கருளமுன் வந்தமை வயக்கும். [சo]

களம்இருசுடர்அவிர்கால்மத்திநிற்றல்-யானைக்கூடமானதுசூரியசந்திரர் உதிக்கும்சமயம்மத்தியில்நிற்றல் மால்வந்தமை வயக்கும்.

உவமை யாகுபே ரென்பசிந் தூரநுத லொழுகுற்
றவிர்மருப்புவிற் றிலகமின் னதிர்முழக் கசனி
திவள்க டாமழை யாதிய வியலுறு திறத்தா
லெவன தாருமண் ணியங்குகா ரெனுந்திற லிபங்கள். [சக]

இரும ருப்பிரு பால்வளைந் திடைக்கர மூலந்
தெரியி பங்கறை மதிமிசைத் திகழ்முகி லெனப்பார்
மருவு காரினைப் பிடியெனப் பிடித்தனர் வாய்விட்
டொருவி லுட்பயத் தோடுமுட் பயமெலா முகுப்ப. (சஉ)

இபத்தை கறைமதி தன்மீது திகழ்முகிலென நினைத்துப் பூமியில் வரும் முகிலைப் பிடித்தனர். பயமெலாம்-நீர்முழுதும்.

வளைந்தி யைந்தவெண் மருப்பினைக் கீழுற மண்மேற்
றுளைந்த சுண்டநேர் கண்டவர் செய்மையிற் றூய்மை
யளைந்த சீருப ராகநா ளின்றென்ப ரயிர்ப்பார்
விளைந்த வங்கமைந் துணர்த்தில தென்னென வியப்பார். (சங)

சுண்டத்துக்கு நேராக மருப்பினைக் கண்டவர் என்க. சுண்டம்-துதிக்கை. உபராகம்-கிரகணகாலம். அங்கம் ஐந்து-பஞ்சாங்கம்.

சுண்ட மேனியிர் தரநிமிர் மதமழை சொரியுங்
கொண்டல் பற்பல வம்மத வெள்ளத்துக் குழுமுற்
றெண்ட ராதுநீண் டகன்றுள விபநிலைக் களங்கண்
மண்டு பற்பல சிதைக்கல வாரிதி மானும். (சச)

சிதைக்கலம்-பாய்மரம் மேல் நிமிர்ந்த கப்பல்.

வேறு. குதிரை.

அரங்கமல் கரிவலி யடர்க்கு மாற்றல
குரங்கம வுளைசிறு மிதப்பிற் கொண்டன
தரங்கமன் னிரையெனச் சாற்று சால்பின
துரங்கமந் துரைநிரை துதைவ பற்பல. (சரு)

மல்கு அரி அரங்க அடர்க்கும். அரி-சிங்கம். குரங்குதல்-வளைதல். அமல்-பொருந்திய.

குலமகண் முகமெனக் கவிழ்ந்த கொள்கைய
நிலவுற வகன்மெறழி னிமிர்ந்த நெற்றிய
வலவனைப் படைப்பவ னமைத்தவச்செனை
விலகுறு நாசிய வெண்ணில் கந்துகம். (௪௬)

பளிங்கினிற் கருமணி பதித்து வைத்தென
விளங்கிரு விழிகரு நெய்தல் வீழ்வன
வளங்கனி யரம்பைய மலரி னீண்மட
லளங்கனி செவியின வளப்பில் கோடகம். (௪௭)

அள் அம் கனி-அள்ளிக்கொள்ளத்தக்க அழகு முதிர்ந்த.

மாந்தளிர் நாவின மார்புங் கணடமும்
பாந்தளொண் படமெனப் பகரும் பண்பின
போந்தெதிர் பகையுரங் குருதி போகப்பாய்ந்
தேந்தெழிற் குரத்தின வெண்ணில் பாடலம். (௪௮)

வீதிமண் டலமுதல் விரியு மீரொன்பா
னேதரு சாரிமுற் றியைந்த வைங்கதி
யாதிய கதிகள்பற் பலவு மார்ந்தன
கோதறு குணத்தன வெண்ணில் குந்தமே. (௪௯)

எட்டிடம் வெளுத்துமுற் றிலக்க ணம்பெறு
மட்டமங் கலமிட மைந்தில் வெண்மைவாய்ந்
திட்டுள பஞ்சகல் யாண மென்பன
கட்டழ கமைந்தன கந்து கம்பல. (௫0)

வெரிநிமிர் பல்லண மிதவை யும்விழி
யிருகடை மறையத.ளனுஞ்சிற் றுமையும்
புரையில்வால் வரால்களும் * புரோத ஞெண்டுமப்
பரிநிரை தரங்கமென் பான்மை தேற்றுமால். (௫௧)

தெய்வத மணிமுத லாகச் செப்பிரண்
டைவ்விதச் சுழிகளு மவ்வவ வெல்லையுற்
றெவ்வகை நலங்களு மினித ளிப்பன
வவ்வகைப் பரித்திற னறைவ தென்னினி. (௫௨)

தேர்.

ஒருருட் டேரினை யோட்டி யும்பரி
னேவொனும் பிறர்செலி னிறுத்தி மேருவை

* புரோதம்-நாசி.

யோரியற் புலமையோ ரொப்பின் றென்னுமா
சீரிய தேரினுஞ் சிவனு மெண்ணில. (ருங)

இங்குள்ள சீரிய தேரினங்கள் தமக்கு ஒப்பாகாத சூரியன் தேரை உம்பரின் ஓட்டி, பிறர் மேருவை நேரெனும் சொல்லினால் அதனை அசையாமல் நிறுத்தி, சொல்லளவி னிறுத்தி எனினுமாம். தக்க புலவர் ஒப்பின் றென்னுமாறே எண்ணில்லாதன சிவனும் என்க. சிவனும்-தமக்குத்தாமே ஒப்பாகும். பொருந்து மெனினுமாம்.

மிசையுலா வமரரும் வேறு ளார்களு
நசையுலாந் தம்பதி ரதங்க ளேயெனத்
திசையெலாம் பரந்துமேற் கடந்து சேணெலா
மிசையெலாம் விரிந்ததே ரெல்லை யில்லன. (ருச)

ஒத்தன மெனக்களித் துலாய வெற்பெலாங்
கொத்துறு சிறையரீஇ வீழ்த்த கோனகர்க்
கொத்தெழுந் தணிசெய்வ நன்றி யோர்ந்தபோற்
கொத்துறு மணிநிரை குலாய தேரெலாம். (ருரு)

ஒய்வற மறுகெலா முருளிற் செம்பொனே
தோய்வுறப் புரிந்திம்பர்ச் சுவர்க்க மாக்குமான்
மீயெழு தூளிபொன் னுலக மேவுவித்
தாயதை வையமே யாக்கும் வையமே. (ருசு)

இங்ஙகரி ரிரதநோக் கினர்மற் றேனைய
வெண்ணவு மருவருத் திதயத் தோர்பொரு
ளெண்ணமுன் வையமென் றிசைப்ப வப்பெய
ரன்னவைக் காகிப்பின் பொதுமை யாய்த்தென்ப. (ருஎ)

விதிரத மரிரத மாதி வெட்குறு
மதிரத மாரத வுகைக ளேயவண்
வதிரதஞ் சமரத மருத்த மன்பெயர்
பொதிரத மாங்கணைப் புறத்து மின்றரோ. (ருஅ)

வளையுறு நேமியங் கையின் வாய்ப்பத்த
னுளையொரு நிறத்தின்மா வுவந்து மேற்கொளக்
கிளர்தர வானமீக் கெழுவு தேரின
மளவிலர் நெடியவ ரென்ன வாங்குறும். (ருஅ)

வளையுறும் நேமி-வளைந்த தேருருள். சங்கும் மிக்க சக்கரமும். அங்கு ஐயின். அம் கையின். நிறத்தின்மா-ஒரே நிறமுள்ள குதிரை. மார்பில் இலக்குமி என்க.

பொன்னினு மணியினும் புனைந்த தேரின
மின்னினுங் கதிரினு மமைத்த வெய்யின
வென்னினு மியைவதன் றென்மி னுரெனின்
முன்னினு மொழியினு முற்று நீரவோ. (௬0)

வீரர்கள்.

வீரமே யுருவினர் மேற்கொள் போர்க்கவி
னாரமே புயத்தின ரசைவற் றென்றும்வாழ்
தீரமே யுளத்தாதெவ் வினத்தை வீட்டுகெம்
பீரமே யுரையினர் பெருக்க மேயவே. (௬௧)

எத்திசை வீரரே யெனினும் போர்க்குறி
னத்திசை தமதிசை யாக்கி யன்னவ
ரித்திசை யெமதிசை யெனத்தெ னாதல
கத்திசை யுறுத்திசை காண்ப ராங்குளார். (௬௨)

தைத்திட விடுகணை தவறிற் றம்முடி
தத்தியண் வீழ்ந்தெனத் தரிப்பின் மானத்து
ருய்த்திடு கணைகளே ழுலகுமூடுரு
வத்தநெஞ் சுன்னுமுன் கடக்கு மற்றவை. (௬௩)

ஞ்சு உன்னுமுன் எழுலகும் ஊடுருவக் கடக்குமென்க.

விடுத்திடு மனுவுமக் கணைகண் மீண்டுகை
யடுத்திடு மனுவுமுன் னாம்பல் பேதமுந்
தொடுத்திடு மொவ்வொரு தொடைப்பல் கோடிக
ளெடுத்திடு விகற்பமு மெளிதி னோர்ந்துளார். (௬௪)

முன்னருய்ப் பனவிரு பான்மு டுக்குவ
பின்னருய்ப் பனமனு டுருவும் பெற்றிவா
னன்னருய்ப் பனமுத னன்கு ணர்ந்துளா
ரன்னருய்ப் பனவுநே ரின்றென் சீர்த்தியார். (௬௫)

வாளமர் வில்லமர் மருவு மல்லமர்
தோளமர் வலியினிற் றொடங்கும் பற்பல
கோளமர் வகையெலாங் குறிக்கு மாணியென்
றாளமர் வீரர்முற் றடுக்கு மாற்றலார். (௬௬)

இயற்கையே யிமைத்திடா ருயர்ச்சி யென்னவா
முயற்கருஞ் சமரிலவ் வும்ப ரும்புகழ்
செயற்கையி னிமைத்திடாத் தீர மேபுரிந்
தயற்கரி தாயதென் றதைவிளக்குவார். (௬௭)

தெவ்வுரத் துருவுகோல் செலுத்தல் போலநட்
பொவ்வுரச் சுந்தனத் தாங்கு ணர்த்துகோல்

கைவிலிற் கோல்விடுத் தெழுதிக் காட்டிமீண்
டவ்வுரை யொடுவர விஞ்சை யாற்றுவார். (௬௮)

மறுவிழுப் புண்படா வகைக ருமெலாம்
வெறுவிய வென்னவே துணியு மேன்மையாற்
றெறுபகை யின்மையிற் றம்முட் டெவ்வினின்
றுறுசமர் விகற்பமுற் றுவப்பி னாற்றுவார். (௬௯)

வடவையா ரழலுமா மறலி யாற்றலுங்
கடல்வயி றழலமுன் கதித்த நஞ்சமு
முடனிரை யிடியுமோ ருருக்கொண் டென்னவே
மிடலுறப் பொலிவராங் கோரொர் வீரரும். (௭௦)

மழுப்படை யுடம்பிடி நேமி வச்சிரங்
கழுப்படை குந்தம்வில் வாளி கப்பண
மெழுப்படை தோமர மேதி யாதிய
விழுப்படை நிறைபல சாலை வீறுவ. (௭௧)

விற்றொழி லிரதமா வேழ மூர்தொழின்
மற்றொழில் வாட்டொழி லாதி வான்றொழி
னிற்றலுங் கற்குநர்க் கியைந்த நீள்வெளி
நற்றலம் பற்பல நயப்ப மல்குமால். (௭௨)

கசைகுசை கல்லணை * கச்ச மாதிபு
ரசை யில கடநிக ளங்க ளங்குச
நசைதரு கிம்புரி முதன விற்றியாங்
கிசைமிகு கைவலா ரிடங்கள பற்பல. (௭௩)

அச்சுருள் பார்நுகங் கால்க ளாங்குய
ருச்சிமேற் கோப்பொடு மொளிர்வி தானங்கள்
குச்சமேற் போர்வைபல் கொடிக ளாதிசெய்
தச்சர்முற் றொழில்வலார் தகையி டம்பல. (௭௪)

மெய்ச்செறி தருபல விதகுப் பாயம்வில்
கைச்செறி யாதிய கணைக ளாதிய
தைச்செறி படைக்கிடு தடறு முற்பர
விச்செறி தரப்புரி வியலி டம்பல. (௭௫)

இன்னன பற்பல வெல்லை யில்லன
வென்னிலிப் புறநக ரிசைக்கற் பாலதோ
பன்னரு மிடைநகர்ப் பரப்பின் பல்வளந்
தன்னிலுஞ் சிறிதொரா மரபிற் சாற்றுதும். (௭௬)

---

* கச்சம்—குதிரை அங்கவடி. இலகடம்—யானைமேற் றவிசு.

வேறு இடை நகர்.

பன்மணிச் செய்குன்றம் பாசிள மரத்தண்கா
நன்மணித் திரைவாவி நறுவிரை மலரோடை
வின்மணித் திகழ்மேடை வியன்மணி நீண்மாட
மென்மணிக் காங்கூம்ப வெல்லையில் லனமல்கும். (எஎ)

பளிங்கினிற் புரிகுன்றம் பைஞ்சிறை மயிலும்பர்
விளங்கிய வமர்தோற்றம் விரிநில முழுமதியங்
களங்கற வருள்கென்னுக் கண்ணுத றனையுன்னி
யுளங்களி வுறநோற்றுங் குற்றெனை வொளிர்தருமால் (எஅ)

அன்னதன் புடைவாவி யலையெறி தரளநிரை
மன்னுதம் மிறைபாங்கர் மருவுடு நிரைமானுந்
துன்னுவெண் மணற்குன்றிற் றுதைமல ரிதழிவிடை
யின்னவற் கருளவமு தேசனுற் றெனத்தோன்றும். (எக)

மேணிலை யமர்மின்னார் விரிகுழல் புலர்த்துமகிற்
றூநறும் புகையவர்தூஞ் சுவணவண் பொடியோடும்
வானெழு தருதோற்றம் வார்குழற் குளநாணி
மானிமிர் மினலோடு வல்விரைந் தோடுதல்போன்ம். (அ0)

மடவிய ராடவர்தா மாறுற வெதிர்வீசுஞ்
சுடர்கெழு பலவண்ணச் சுண்ணமங் கவரடிக்கீழ்ப்
புடவியின் வளைந்துறலப் புருவவிற் குடைவானத்
தடனெடுஞ் சிலையன்னார் தாள்பணிந் துறல்போலும். (அக)

நாற்புற மலர்ந்தொளிர்செங் நளினங்க ளிடையடையின்
மேற்படர் வளையொன்று மிளிர்வதம் மடநல்லா
ரேற்புறு முகத்தெழிலெய் தியமதி சனஞப்பட்
பாற்படு கமடம்மேற் பயிறவத் தியல்காட்டும். (அஉ)

மீயுயர் மாடமிசை மெல்லியர் மிகவூடி
நாயகர் பணிதோறு நளினங்க ணணிசிவந்தார்
காயமுன் வருபணிக்கோள் காண்டலுங் கடிதோடி
யாயவர் புயத்திறுக வணைத்தகை நெகிழார்பின். (அங)

○பவனவா ளரியைவெரீஇப் படர்பிடி யனையார்தம்
மெவனவா ளரிமார்பத் திணைமருப் பால்வடுப்பப்
புவனமுற் றொருங்கீன்ற புனிதநா யகி * காஞ்சித்
தவனமார் பெமக்கருள்கே சரிநனி வாழ்கென்பார். (அச)

---

○பவனம்-மேஷமுதலிய ராசிகளின் பொதுப்பேர். * காஞ்சிநாயகி தவன்-காமாக்ஷி நாயகன், தவன்-நாயகன்.

சிறிதுநம் மூலையொவ்வாச் சிறியநின் றலையெடுப்பீண்
டறிதுமென் றடிப்பவெழுந் தம்மூலை மிசைமோத
மறுவலு மடித்தடித்தீத மடந்தையர் பந்தாட
றெறுசம ரிளையாம லிருவர்செய் திறம்போலும். (அ௫)
கைம்மண மலரொன்னுக் கடுகுபன் னிறவண்ட
ரம்மல ரெறியவுமே லலமரு செயனும்பா
லெம்மவர் செயல்போன்மென் றிளையவர் சொலமடவார்
தம்முக நகையாடத் தாங்கழங் காடுவரால். (அ௬)
எம்மன ஆசனும தெழில்வளர் கயிரூர்த்திட்
டம்மவொர் கணநீங்கா தாடல்கண் கூடாக
வெம்மவர் தெரிதற்கோ விதுசெய லெனக்கொண்கர்
தம்முடி நனியாட வாடுவர் தடங்கண்ணார். (அ௭)
இளமரத் தண்காவுக் கீர்ம்புன றரும்வினைஞர்
விளைபுனல் பாய்ச்சிலமிவ் வீரமென் னெனவியப்ப
வளமதிச் சிலையால வாலங்கண் மதியெதிர்கால்
பளகறு புனல்பெருகிப் பாய்வன நாடோறும். (அ௮)
இனவளிக் குணுநல்கா விவறன்மை நனிநோக்கிச்
சினமிக நம்பொழிலைச் செறவிவண் வருகின்ற
தெனமக பதிதானு ரெழிலியை யுய்த்திடவக்
கனமிசை தடுத்தாங்குக் கவிவன பொழிலெங்கும். (அ௯)
மலர்செறி வாவியினின் வாவிவிண் ணெழுவாளை
பலமுறை மோதமிசைப் படிந்தமை பெய்துவெரிஇ
விலகலு மப்பொழிலவ் வியநலக் கெதிர்செய்தாங்
கலர்மது கனியாதி யட்டுவ பட்டமெலாம். (௯௦)
தம்முரு நிறங்கவருந் தபனியந் தனைவெகுண்டாங்
கிம்மெனத் தகர்ப்பார்போன் றிடித்திடு பொறசுண்ணத்
தம்மகி பொன்னுலகா யவர்குழற் புகைசூழ்வால்
விம்மித முறவிருள்சூழ் வியலிட மெனத்தோன்றும் (௯௧)

வேறு

ஒண்டொடி மகளிர் மைந்த ரோடுநீ ராடு காலை
மண்டுபல் சேல்வரால்க மடங்குளிர் தடங்கம் பாதி
கண்டிரிந் தொளிப்பவம்மா கதித்தெழு பகைநே ராற்றல்
விண்டிடு மெளியர் செய்யும் விதமிதன் மேல்வே றென்னே ()
பங்கயம் வலயம் *வீசிபாசிபைங் குவளை யாம்பல்
செங்கிடை வளைய னேகஞ் செறிதல்கண் டிளையா ரென்னே

* வீசி—திரை.

யெங்களிற் சிலரீண் டுற்றே மெண்ணிலர் செறிகின் றாரொன்
சங்கைகொண் மனத்தர் தத்தந் தலைவரோ டூடு நிற்பார். (கங)

அங்கிளை வரவேற் குங்கா லறிஞர்செய் செயலே போலப்
பங்கய முகம லர்ந்து பணிலவின் முறுவல் காட்டித்
தங்கடை மரக தத்தா சனமளித் துடற்பொ டிப்பிற்
பொங்குபுற் புதஞ்செ றிந்து பொலிவன குடைத டங்கள். (கச)

உயிரனார் கொங்கை நேரிங் குறுகிர்கொ லென்ன மைந்த
ரயன்மினார் கொங்கை யம்புயத்தரும் பென்று பற்றிக்
கயிலுறா மையின்மே லீர்ப்பக் கனன்றிரு வோருஞ் சீறச்
செயலறக் கவன்று நாணித் திருத்துவ ரிருவர் தம்மை. (கரு)

நனைந்தநுண் டுகிலிற் றோன்ற வுறுப்பெலா நாணி மீண்டுட்
கனைந்தெழு திரைதூ சென்று நனைந்ததைக் களைந்திட் டந்தோ
வனைந்தது மலைகொண் டோட மடவியர் வாட மைந்தர்
புனைந்ததொன் றுடுத்தின் பாரப் புயந்தழீஇக் கரையிற் செல்வார்.

தளரிடை வளர்மென் கொங்கைத் தையலார் தங்கட் கெல்லாம்
பளகறு தெய்வந் தத்தம் பதிகளே யெனவோர்ந் தன்பி
னுளமுறப் பூசித் தாங்கவ் வுரியர்மேன் மடவார் தங்கை
யளகமொண் டிறைத்துப் பல்பூப் பறித்தெறிந் தாடு வார்கள்.(கஎ)

வாவியின் மைந்த ரோடு மாதர்தோய்ந் ததன்கை மாறாத்
தூவிலா கமழ்சந் தாதித் தொன்மைய வளித்து மீண்டு
மேவிய வுடைபூண் வேறு வேறணிந் தலர்கொய் வான்பூங்
காவினி லுறுவர் மாரன் கவின்படை யினஞ்சேர்ந் தென்ன. (கஅ)

புரிசன மிடைமின் னார்தம் பூம்பட மொதுங்கத் தோன்றுங்
கரிசன நகிலங் காணுங் காளையர் பாவை யாகத்
தெரிசனப் பெரும்பி ணிப்புட் செல்குவா ரொன்றா லன்னோர்
பரிசன முற்றுஞ் செய்யும் பரிசெனோ வம்ம வம்ம. (கக)

கொம்பரொன் பெயரொப் பாலிக் கொம்பர்யாந் தீண்டற் பாற்றன்
றெம்புயத் தமர்ந்து கொய்மி னென்றுகொண் டங்க லார்கா
லம்புயங் கண்டன் னோவெம் மகலவெற் புதைத்து தைத்தே
செம் ○பத மாய்த்தென் றங்கை தீண்டியுட் குழைப்பர் மைந்தர். ( )

மைந்தரா லுட்கு ழைந்த மங்கையர் செங்கை நீட்டி
யந்திநீள் வளார்கு ழைத்தாங் கலர்பலர் சிலகொய் போது
சிந்துபோ துடனக் கொம்பர் தெவ்வலேம் விடுமினென்று
தந்திடு பாத காணிக் கையெனத் தயங்கு மெங்கும். (கOக)

---

○ பதம்—ஒளி.

தளவநம் மூர னோரத் தருங்கொலென் றெதிர்நகைப்ப
வளவறத் தழைத்த ரும்பி யலர்ந் தெதிர் நகைத்தல் கண்டத்
தள்வெழீஇப் படர் சோகந் தனைவெகுண் டுதைப்ப வன்ன
தளவில மதன்கோ லந்த வாயிழை யார்மேற் றூவும். (௧௦௨)

மலர்செறி குராநேர் நோக்கு மகளிர்தம் மினமென் றுள்ள
மலர்தர வணைப்ப வன்ன தலகிலா மகளிர் பூத்து
நலமிகு மடவர் ருள்ள நயப்புற வணைக்குங் கூட்டத்
தலகில்சந் ததிவி ருத்தி யாமெனல் கண்கூ டாக்கும். (௧௦௩)

நாசியை நேர்த ருக்கு நாமினிக் காண்டு மென்று
மூசினர் கொய்யச் செல்லு மொய்யிழை யவர்க ணீழன்
மீசிவ ணுறலு மிக்கு வீபல மிடையப் பூத்துக்
காய்சினந் தணியச் சண்ப கம்மல ரடியிற் றூவும். (௧௦௪)

புவிதரு பிரம ணூரிற் பொலிபுற நகரின் மேலு
மவிர்தரு முகுந்த ணூரே யாமெனு மிடைந கர்ச்சீர்
நவிலுதற் கெளிதோ விந்த நகரொரு விதங்க டந்தாஞ்
சிவநக ரதுவே யாமுண் ணகரினிச் செப்பு கின்றாம். (௧௦௫)

அகநகர். வேறு.

அண்டமெலாம்படைத்திடற்காங்கயனை முனம்படைத்தருளுமமுதநாத
னண்டமதி லதுசூழ்பே ராழியைநீ யிவ்வளவிற் றாக நாளுங் [யென்றே
கண்டனைசெய் கென்றமைத்துக் காட்டிவைத்த மாதிரிகைக் கருவி
கண்டவர்சொல்வாரொளிணிக்கவினகர்மாமதிலகழ்நாங்கழறற்பாற்றே. ()

உயர்வகலந் திண்மையெவ ருக்குமுறற் கருமைமுத லுடைய தாமிச்
செயலரிய தனிமதிலுற் றிசைவாயி ற்றுறுங்களிறு திண்டே ராதி
யியலுதல்போன் மேனிலைவாயில்களின்வெண் கரிபரிவானிரவிதேர்முன்
வியன்மறுகிற் செலுமனைய மிளிர்மணிக்கோ புரச்சீர்த்தி விளம்பற்
[பாற்றோ. (௧௦௭)

வகைவகையா விரிந்துவளர் வளமெனுநித் தியவாயு வரனோர் நம்பி
யகனிலவிந் நகர்நங்கை யாம்வதுவை மணம்புணர்ந்த வாதி நாளின்
முகிலென்டுநீல் விதானமிசை முதுவான மணப்பந்தர் முழுதுந் தாங்குந்
தகையபல கால்களெனத் தகைதுசங்க ளம்மதிலிற் றயங்கா நிற்கும். ()

எவராலு மெஞ்ஞான்று மெவ்வழியு மேற்றுறலின் றெனினு மிந்தச்
சிவராச தானியெனுந் திருநகர மயற்கிறைமா திரிகை யாச்செய்
புவிராச நகராகப் பொலிதலினம் மதில்மிசைப்பல் பொறிக்கு ழாங்க
டவிராது நிறைதருமித் தகைமுழுதும் பகர்வரிதெத் தரத்தி னோர்க்கும்.

முடியிடைவெண் டிங்களும்வான் முதுநதியுங் கோளரவு முயங்கா நிற்ப வடியினைகழ்ப் புனலுமொரா தமைதலின்மா தமைகோனம் மானைக் கா வெண், பொடியணிதா னுவைப்போலும் பொன்மதிலின் றன்மையெ வர் புகல்வ ரம்மா, வடிவுசெயல் சொலினிளைஞர் * வபுபொனுயிர் கவர் மடவார் வளமை சொல்வாம். (௧௧0)

பரத்தையர் வீதி. வேறு.

ஐயவென் சோறும் யாது மையமின் றுள்ளந் தேர்ந்த
மெய்யிரு மோர்கா ணுக்கின் மெய்மறந் தவச மாகிச்
? செய்யகால் விழவுன் னாற்றுங் கலவியின் றிறங்க டட்டும்
பொய்யசித் திரம்பு றத்தே பொய்சொலார் போற்செ றிப்பார். ()

புருடராங் கரும்பின் மல்கும் பொருளுடற் சாறு முற்றும்
வருமள வுறுஞ்சிக் கோது மறுகவாய் மறுக யாரும்
பரிகசித் திடவே வீசும் பரத்தையர்க் கன்ன கன்ன
லிரதம்வே றுக்க லொன்றே யியற்றுமெந் திரமே ராமே. (௧௧௨)

தம்பொரு டம்பா லாகத் தருணர்க்கு விலைசெய் தன்னார்
தம்பொருண் முற்றும் வேண்டித் தாப்பெறு விலைமின் னார்க்குத்
தம்பொருள் கொடுத்து முன்னி டவணையின் விலையோ மீட்டுந்
தம்பொரு ளோகொள் வாணி கரையுநேர் சாற்றற் பாற்றே. (௧௧௩)

அருத்திக ரிவர்ப ரத்தை யளிப்பரென் பதுநி ரிந்து
பரத்தைய ரொன்று நாமம் பரித்தவ ரொருவீட் டின்பிற்
குரைத்திடு மெடுத்துக் காட்டிங் குவர்ப்புண ரின்பே யென்னுந்.
தெரித்தநூல் வாய்மை யென்று சொல்லிய றெரிப்பர் மைந்தர்.

வஞ்சகஞ் சூது பொய்மை மதுநுகர் வாதி யாவு
மெஞ்சலில் வணகா டோறு மினிதுகொள் கலனு மின்னோர்
விஞ்சகா ரிகைக்கு டைந்தோ வேறெனோ கப்ப மேபோற்
கஞ்சமின் றிருவெ லாமிச் கணிகைய ருழைக்கு விக்கும். (௧௧௪)

சாதனம் வரைந்த ளித்துந் தருபொரு ளுளும் பெற்றும்
வேதன மாந்த ரேவற் றிடையீடு மிகவுண் டந்தோ
சாதன மிலாது மைந்தர் பொருளெலாந் தரீஇக்குற் றேவல்
வேதன மின்றி யாற்றி னிவர்செயல் விளம்பற் பாற்றே. (௧௧௫)

ஆவண வீதி.

இன்னது கொடுமின் கொண்மி னென்றுரை யேவ லல்லா
லின்ன ० துண் டெனுங்க டாவு மெதிர்தரு விடையு மென்றுந்

* வபு—சரீரம். ? தமது செய்யபாதத்தில் விழ என்க.
० உண்டோ வெனும் வினாவிடைச் சொல்லு மொழிந்தது.

தன்னகத் தியாண்டு மில்லாத் தகையவா வணச்சி ரம்மா
தன்னமோ வுரைப்ப வெம்மாற் சிற்சில சாற்று கிற்பாம். (கக௭)

* விலைநனி விரிக்குஞ் சொன்ன விலைபகர் வோர்கள் சொன்ன
விலைநிலை யேகொள் வார்முன் மேவிநேர் செய்த ராசிற்
!! கலையொரு தட்டிட் டாட கம்மொரு தட்டிட் டிவார்
கலைதெளி ஞான மிக்கோர் சமரசங் காட்டு வார்போல். (கக௮)

! செம்மணிப் பதக்கஞ் சங்கந் திகழ்கவுத் துவம்பொன் வாச
மம்மபல் கோடி மல்கு மாவரா மண்ட கோடிக்
கெம்மிறை யேவுங் கோடி யிந்திரை கேள்வர்க் கீவான்
சொம்மணி யாழி யாதி தொகுத்தபண் டாரம் போலும். (கக௯)

மணிகளொன் பானுஞ் சொன்ன மாபினேர் வைத்து வைகும்
வணிகர் ○ முன் னுலவ வாமெம் வள்ளன்முன் வழுதி ? காத
லணியது போலு மென்ன வரசிளங் குமரர் செல்லக்
குணிவிலை பகரா தள்ளிக் கொடுத்திளி துவப்பர் வாழ்த்தி. (க௨0)

பலவகைத் துகில்லிற் போரிற் படர்ந்துளா ரொன்று காட்டிக்
குலவுமீ தளித்தி ரென்னக் கோடியென் றளிப்ப வம்மா
விலகிதொன் றளித்துக் கோடி யென்றசெட் டழகி தென்ன
வலமிது பெயர்க்கு மேவன் முற்றுமா மமைக வென்பார். (க௨க)

நென்மலை கொள்ளத் தூர நிலையினின் றுறுவோ ராங்குப்
பன்மலை செறிகு றிஞ்சிப் பரப்பென மீள நேர்ந்தோர்
சொன்மலைக் குலமென் றேறுதச் சொன்மலை வுறநேர் கிட்டி
நன்மலை யிவைநாம் வேட்ட சாலியென் றுளாநயப்பார். (க௨௨)

அடுகரி துரகம் வைய மத்திர சத்தி ரங்கண்
மிடைநிரை நிரையா மல்க விற்குநர் கொள்வோர் பல்கத்
தொடர்களம் பாடி வீட்டிற் றேன்றுகா ரணத்தாற் போலும்
படர்பகை யவ்வூர் மேற்செல் பயன்றுணிக் துரமை யம்ம. ()

கைக்குடத் தொடுசென் மின்னார் கடைமறு குறச்சென் றிந்தப்
பொற்குடம் விலையா தென்னப் பூங்கொடி தளரக் கொண்டீர்
முக்குட மேலுங் கொள்ளின் முறிகுட மென்பீ ரென்ன
நக்குடன் சென்ற ரன்ன நலக்குடன் முகிழ்த்தார் மைந்தர். (க௨௪)

பூவிலை பகர்வார் முன்போய்ப் பூவையர் பொருளை நீட்டி
மாவினஞ் செறிந்து தூங்கு மல்லிகைத் தார்நேர் காட்டி

---

* விலை-ஒளியை. !! கலை-நிறுக்கும்படிக்கல்லை. ! செம்மணிப்பதக்கம் வட்டவடிவாலும்ஒளியாலும்ஆழிபோலுமென்க. ○ முன் குமரர் செல்ல என்றியையும். ? காதல்-மகன்.

யீவிரின் னீலத் தாஸா யென்ன நுந் நீலத் தானை
யேவினும்புண்ணிற்கோங்*கொத்திடின்முழுதளித்துமென்பார். ()
கலனுலாம் வாரி வெற்பு கானநா டென்னு நான்கு
நிலனுலாம் பொருள்க ளெல்லா நிறையக்கொண் டளிக்கு நீரா
லுலகெலா நுகர்பல் போக வொண்பொரு டன்பா லல்கும்
வலனுலா மாயை போலு மாவணம் வழுத்தற் பாற்றே. (௧௨௬)

வேளாளர் வீதி. வேறு.

தருமுகிலான் மணிமுதல தாவி ⁰ லெழு வோர்முதலோ
ரருள்கொடைமை தவாதமர்ந்து மடைவரிய தனிநாம
மொருதமக்கே யிடுகுறியா யுறப்பெறு ? வே ளாளர்குல
மருவிவளர் பெருமாட மணிமறுகி னணிபகர்வாம். (௧௨௭)

எத்தொழில்செய் வார்க்குமுண வினிதளித்து நிலைநிறுத்தி
யத்தொழில்கட் காருயிரா மருந்தொழிறந் தொழிலாக்கொண்
டெத்தொழில்க ளினுமுழவே தலையெனநூ லிசைவாய்மை
கைத்தலநெல் லியிற்றேற்றுங் காராள ரிவரம்மா. (௧௨௮)

நிலமலைநீள் கடல்வினவு நேரியர்க்கீங் தமைச்சாகி
யுலகமுதல் கொடுபெருநூ லுலகமெலா முயவளித்த
மலர்புகழ்சேர் சேக்கிழார் மாமணியிம் முதலியார்
குலமணியே யெனிலினிநாங் கூறுதிறன் வேறெவனோ. (௧௨௯)

இன்னதிரு மணிவாயி னிடைநேச நடராசன்
றன்னருளால் விரிந்தெழுந்த தனிமணிக ளேழொன்பா
னன்னவற்று ளொருபதின்மூன் றருமணிக ளவதரிப்ப.
முன்னமருந் தவம்புரிந்த மூதகுசீர்க் குலமிதுவே. (௧௩௦)

என்னினிநா முரைக்குதுஞ்சீ ரிம்மட்டோ வீராண்டிற்
பொன்னகர்நாண வெண்ணெயமர் பொல்லார்பே ரருட்கடலுண்
டங்கிரில் சித்தாந்த வமுதுபொழி மெய்கண்ட
னன்னர்முகி லவதரித்த நற்குலமு மிதுவன்றே. (௧௩௧)

உழுதொழிலே தலையெனக்கொண் டுறலொன்றே வுமாபதிதா
டழுவியமெய் யன்புறுபூ சனைத்தொழிலும் வழித்தொண்டர்
விழுமியபூ சனைத்தொழிலும் விருந்துபுறந் தான்முதலாங்
கெழுதொழிலும் வழாதுபுரீஇக் கிளர்நிதிமேல் வளர்தருவார். ()

முத்தொழிலி னயத்தொழிலா முழுதுலக மளித்தருளு
மத்தொழிலோ னமிசத்த ராமரசர்க் காதியிலொன்

* ஒத்து-ஒத்தனம். ⁰ எழுவோர்-எழுவள்ளல்கள். ? வேளாண்மை-கொடை.

றுய்த்தவர்கோல் கோடாமை யுலகளித்தற் குயிர்த்துணையா
மித்தகையோர் பெருஞ்சீர்த்தி யிசைப்பரிதே யெவராலும். (கரு௩)

## வணிகர் வீதி.

குலத்தாலு நலத்தாலுங் கொடையாலு நடையாலும்
புலத்தாலுஞ் சிவநியமப் பொறையாலு நிறைகல்வி
வலத்தாலும் வளர்செல்வ மாண்பாலுஞ் சிரேட்டிகளென்
* றலத்தாலு முற்றுரைப்பே ரணிவணிகர் மறுகுரைப்பாம். (கரு௪)
இருநிதியாற் றனதர்பல ரென்பரஃ திவர்க்கியையுமோ
வொருவருமுண் ணுதவுவ ருதநியே யுவணிதியம்
பெருகுசுவை யூருணிபோற் பிறங்குவதிங் கிவர்நிதிய
மிருதலைவேற் றுமையணுவு மண்டமுமென் னினுமேலா. (கரு௫)
ஈட்டுறுகா லணுவெனும்பொன் னிரவியென வேயீட்டி
மீட்டதனுக் கெதிர்மறையா விழுமியபல் லறநெறியி
னீட்டுவரென் றொன்றுநடு நிலைதிறம்பா நிலைதுலைக்கோல்
காட்டுமிவர் கையினுறீஇ யென்னினியாங் கழறுவதே. (கரு௬)
அம்மையே யெனவெல்லா மளித்தபரா னழைத்தருளு
மம்மையா ரியற்பகையா ரமர்நீதி கலிக்கம்பர்
மும்மையா லுலகாண்ட மூர்த்தியா னாவர்செக
மும்மைவாழ்த் திவர்குலஞ்செய் முதுதவத்தா லவதரித்தோர். ()
பயன்மரமுள் ளூர்ப்பழுத்த பான்மைத்தே பகர்செல்வ
நயனுடையான் கட்படினென் னன்னூலி னிலக்கணமிவ்
வியல்பினர்நீ ணிதியறத்தா றேகுமிலக் கியங்கண்டே
யுயவுலக முணர்த்தநெனி னுவர்மகிமை யெவருரைப்பார். (கரு௮)

## அரசர் வீதி.

உலகமெலா மோம்புதொழிற் கொருமுகுந்த னுருவினரோ
குலவரச ரெனநூல்சொல் கூற்றுநேர் தேற்றுதல்போன்
மலர்தலைய நிலமகளை மணிப்புயத்து மணந்தளிக்கு
நிலவுமணி முடியரசர் ௦ நியமமொரு சிறிதுரைப்பாம். (கரு௯)
அமைச்சுமுன றஞ்சாமை யாதியவே ழியற்றன்முதற்
கமைத்தொழிலுன் குளர்காட்சிக் கெளியர்கடுஞ் சொற்கடிந்தோ
ரமைத்தவறன் சிறிதிழுக்கா ரளிகொடைகோல் குடியோம்ப
லிமைப்பளவுந் தவறுதல் லவைநீக்கி யினிதளிப்போர். (கசo)

---

* அலம்-நிறைவு. ௦ நியமம்-வீதி.

இறைகொடுசா ரயலரசர் திரளொருபா லனையநிதிப்
பொறையொருபான் முரசொருபாற் போற்றுறுபல் லறனொருபா
லிறையொருபான் மறையொருபாலின்னனமுற்றுவ்வொருபா
னிறைதருமக் குலவேந்தர் நிரம்பிவளர் திருக்கோயில். (கசக)

புகழ்தருசெங் கட்சோழர் புகழ்ச்சோழ ரிடங்கழியார்
நிகரிலருண் மானியார் நெடுமாறர் சேரனெனத்
தகுமிவரோ ரிருமூவர் தம்பிரான் றோழர்தரு
தொல்கையிலுளா ரவதரித்த தூயதவத் திவர்குலமே. (கசஉ)

வேறு.

உலகெலாமரசர்குலமெலாமேற்கொண்டோர்ந்துசெய்நீதிநூலுரைத்த
குலமனு வேந்து திருமுறை கண்ட கோவொரு செய்மிசைத் தேரூ
ரலகில்சீ ரரசு பொதுவெழுதனிச்சொலருந்திறையவர்குலத்தவரான்
மலருமூ வேந்தர் தமிழுயர் சோழர் மகிமைநாம் வழுத்துதற் கெளிதோ.

அந்தணர்வீதி.

முற்றுலகொருங்குபடைத்திடுபிரமன்முகோற்பனமுனிவரசந்ததியோர்
முற்றுலகொருங்குவாழ்வுறவேள்விமுதுமறைமுறைபுரீஇமுகில்கண்
முற்றுலகொருங்குநிறைபயிரோங்கமும்மழைபெய்ம்முறைமுயல்வார்
முற்றுலகொருங்குவாழ்த்துவேதியர்வாழ்முழுமணிமறுகினிமொழிவாம்.

ஒருவரு மிருமை மும்மையு மின்பே யுறப்பெறு நிலையர்நா லொழுக்க
மருவினின் றியல்வா ரைம்பெரு வேள்வி வயக்குந ராறுதொழி லாளர்
பெருகுசீ ருலகே ழெட்டுறு மேனும் பின்னரு நவமுறப் புரிவார்
திருநிறை தருவார் ஞானசம் பந்தே தேடருஞ் செல்வமா வளர்ப்பார்.

ஒருபதுபுராணமுழுவதுமோர்ந்தோரொன்பதாயெண்குணமுடைத்தா
யருமையேழ் பவந்தீர்த் தருள்பெரும் பொருளை யாறரு ளைந்தெழுத்
துண்மைப், பொருளென நான்கு மறையினுட் டெளிந்து பூசனை முப்
பொழுதுமாற்றி, யிருபதத் தொன்று மன்பினு லின்பே யெய்துவார்
திறனெவ ரிசைப்பார். (கசசு)

திருவளர் வாத வூரர்சம் பந்தர் சிறுத்தொண்டர் நீலநக் கடிகள்
முருகர்சோ மாசி கலயரப் பூதி நமிநந்தி மொழிகண நாதர்
தெருள்பசு பதிசண் டேசர்வண் பூசல் சிறப்புலி தில்லையந் தணர்கள்
குருமறை ஞான சம்பந்தர் கொற்றங் குடியடி களுமிவர் குலத்தோர்.

---

0 இறை-குடிகள் தரும் கடமைப்பொருள்.

## ஆதிசைவர் வீதி.

உலகெலாமுய்யுமுபாயமேசெய்யுமொருபெருந்தொழிற்சதாசிவன்றற்
புலனுற முப்போ துந்திரு மேனி தீண்டுமோ பரார்த்தபூ சனைதா
னிலகுதன் சாதி வேதிய ரேசெய் திடன்மர பெனவிதித் தைந்து
மலர்முகத்துதிப்பித்திட்டவைந்திருடிமரபினர்மணிமறுகுறைப்பாம். ()

நிலவரு வுருவ சதாசிவ சிருட்டி நிமலவே தியர்களா மிவரை
யலர்வரு பிரம சிருட்டிவே தியரே யாதிநாற் சாதிய ரெவர்க்கு
மலர்சிவ தீக்கை முதற்சமக் கார வகையெலாம் புரியதி கார
நலனினா லன்றே குருக்களென் றுலக நயந்திடு குறியென நவில்ப. ()

அரிபிர மாதி யருமிவர் பரார்த்த மாப்புவி யதில்வழி பாடு
புரிசிவ லிங்க தெரிசனா திகளாற் புன்மைதீர்ந் துய்வரே னிலையில்
சுரருலகொன்றேதருமறைவேள்விதுணிவரோசிவாக்கினித்தொகையே
வருசிவாகமஞ்சொன்மரபினெஞ்ஞான்றுமல்குறநியதியின்வளர்ப்பார். ()

வேதவிக் கிரய மாதியாற் றேவ லகத்துவ விளைவினர் முதலோர்
தீத்த லாதிக் கியற்றுறு பிராயச் சித்தமே நித்திய மாதி
யோதுபூசனைகள்பிறர்பொருட்டுஞ்செய்துலகெலாமுய்விக்குங்கருணை
யேதகுமுருக்கொண்டுற்றவரிவரென்றெவ்வுலகுந்தொழுமியல்போர். ()

நம்புகழ்த் துணையா ரூரர்சீர்ச் சடைய னாரிசை ஞானியார் நாளை
நம்பியாண் டார்மன் னருணந்தி யிவரிந் நற்குலத் தவரென லொன்றோ
நம்பியொன்பதின்மராத்தொகைதொகுத்தநாயன்மார்தம்மின்முப்போது
நம்பிரான் மேனி தீண்டுவா ரிவரே னும்பிற நவிற்றிற னெவனோ. ()

மறைமொழிப்படியேவைசியப்பிரமன்வதனத்திற்றோன்றியான்மார்த்த
முறையல துலக முயச்செயும் பரார்த்த முறைக்குரித் தூராவர் புகழே
யறைவரிதெனிலம்மறைபிராமணனென்றருள்சதாசிவன்முகத்துதித்து
கிறையினவ் விரண்டும் புரிசிவத் துவிசர் நீதிநா மோதுதற் கெளிதோ.

## திருக்கோயில்.

இத்தகு சிறப்பிற் பெருந்தவத் துவிச ரிருந்துவாழ் மணிநெடு மாடப்
பத்திவான் சமழ்ப்ப வொளிர்திரு வீதி பாங்கினி லண்மிமன் சூழ
மத்தியெம் பெருமான் மந்திர நாதன் வாழ்மணிச் சினகர மன்னு
மத்திருக்கோயினலனெலாம்வகுத்தலம்மவோவெம்மனோர்க்காமோ. ()

## தல விருக்ஷம்.

பற்பல கோடி யண்டமும் விரிந்து பரந்துவாழ் பல்லுயிர்த் தொகைக்கும்
வெப்பறு கவிகை யாமலர்த் துணைத்தாள் விரிநிழ றருமமு தேசற்

கொப்பிலா மரக தம்மணிக் குடையா யுலகெலாம் விரிந்துயர்ந் தோங்கு
மற்புத சூத பூருக மம்மா வாங்கொரு பாங்குநின் றவிரும். (கஙு)

நந்தன வனங்க டடங்களபல் கழக நன்மணி மேடையா டரங்க
மூந்தன சாலை யனபர்வாழ் மடங்கண் முதற்பல வுறுப்பெல்லா நிறையு
மிந்தநன் னகரே விராட்டெழிற் கோயி லேயித யாம்புய மென்றே
சந்தத மமுத நாயகன் தருணை தந்துவீற் றிருந்தர சியற்றும். (கஙசு)

இத்தலத்தின் தேவார விளக்கம்,

தீயவல்விடமுண்டமுதருள்சிவனென்பொதுத்தனக்கேசிறப்பென்று
தூயமு தேச நாமமே தேற்ற றுணிவுறக் காழிவாழ் மணியிங்
கேயருள்பதிகமுதலிலச்செயலிவ்விறைசெயலெனுஞ்சரித்திரஞ்சேர்த்
தாயகா ருடைநஞ் சுண்டுகாத் தருள்செய் தவனென வருளிய தம்மா.

செறிபொழிலணிசெய்திருவுசாத்தானந்தெண்டிரைக்கழனிசூழ்தான
மிறைதிட மெனவே யுறைவிடஞ் சேணி னெழுந்துலா மாளிகைத்தான
நிறைமதி யந்தோய் மதிலணி தான மென்பன வாதியா நிகழ்தென்
மறையருண்மொழியாலனையசெய்வழுத்துமாண்பதித்திருவுசாத்தானம்.

ஆயவிந் நகரத் தரும்பெருஞ் சிறப்பிவ் வறிவிலா வேழையே னுரைக்கு
ளாயதோ வம்மா வத்தனிக் காழி யருமணி குருமணி யயில்வேற்
சேய்மணி யமுத வாய்மணி கமலச் சேவடி சென்னிசேர்த் தெளியேன்
வாயில்வந்தனசிற்சிலபொறுத்தருள்வீர்மாசறத்தெளிந்தமாண்புலவீர்.

திருநகரச்சிறப்பு முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் ௩௩௬.

---

# புராணவரலாறு.

சித்தி யெட்டுநின் றேவல் செயும்வனம்
பத்தி வேலி யருட்புனல் பாய்வன
முத்தி வான்பயி ரோங்கு முதல்வன
நத்தி மாதவர் வாழ்நை மிசவனம். (க)

வேறு.

இன்ன விப்பரு வத்துற மெனும்வாம் பின்றிப்
பன்னு மூவிரு பருவத்தும் பனிமல ராதி
யென்ன பற்பல பொருள்களுங் குறைவுறா தென்று
மன்னி மல்குபு விளைவது நைமிச வனமே. (உ)

காட்ட மாவன மேதருப் பாதிய கலப்பை
† யீட்ட மாவன மேதமி னியமங்கட் கிசையக்
கூட்ட மாவன மேதரு மௌனமுனிக் குழாங்கள்
வேட்ட மாவன மேதகு நைமிச விபினம். (௩)

நேய மாதவ நேத்திர னிமாசலை நிமிர்வேற்
சேய மாதவழ் கடக்களிற் றூனனன் றிருத்தாட்
கேய * மாதவப் பொறிநெறி தொலைத்துநின் றிறைஞ்சுந்
தூய மாதவர் வாழ்வது நைமிசத் தடவை. (௪)

எங்கள் வானுல கென்பெறுந் துன்பமே யேற்கு
மிங்கு ளார்கள்பே ரின்பமே வேறறி யாரென்
றங்கு மான்முதற் சுரரெலா மவியமு தாசை
பொங்க மேவலி னுலகபண் டாரமப் பொங்கர். (௫)

சரியை யாதிநாற் பாதமுஞ் சாற்றுநூ லபரம்
பரம தாமிரு கோடிமைம் முகனையோர் முகப்பண்
பொருவி லாதுணர் வாலொன்று முறுவராங் குறவர்
வரன ○ கோபுரம் போலுமவ் வில்லையார் ? வல்லை. (௬)

வன்னி வேதியின் வயக்குவ வன்னிமுன் னுவ
வன்னி யோதுநான் மறைமுழு தோதுவ வன்னி
யன்ன நூலயந் தீர்ந்துயு மயன்விடு மன்ன
மன்ன மாதியெண் டிருநிறை யங்கது மடவி. (௭)

வேதியில் வன்னியை வயக்குவன வன்னிமுதலிய சமித்துக்கள். பிரமசாரி ஓதும் மறைமுழுதுங் கிளிகள் ஓதுவ. வேதி-குண்டம்.

அங்கி மூன்றவ ணந்தண ரோம்புவா ரவர்த
மங்கை மாரவற் றூடுதம் வாயகற் பாய
துங்க வங்கியு மேற்கொடு ரான்கெனத் துலங்கத்
தங்க ளுவளர்த் தொழுகுறத் திகழ்வதத் X தலமே. (௮)

இன்ன பல்வளஞ் சொல்வளத் தியம்பொணு தென்று
மன்னு மப்பெருங் ÷ ககனபூ வாசமு னீசர்
பன்னு மாசவு னகமுனி முகமெனப் படைத்தாங்
குன்னு மோர்வடி வமைந்தென வொன்றிவாழ் மனத்தோர், ()

---

† ஈட்டம் ஆவ நம் ஏதம் இல் நியமங்கட்கு எனப்பிரிக்குக.
* மா தவ-ஆணவமலவிருள்கெட. ○ கோ புரம்-கோக்களினுலகம். ? வல்லை-காடு. X தவம்-காடு. ÷ ககன பூ-வனமாகிய பூமி.

இத்தவப்பெரும் பண்ணவ ரித்தவத் தென்று
முத்த மப்பர ஞானநிட் காமியத் துடனாய்
முத்த முற்பல வேள்விக டொடங்குபு முடிப்பார்
நித்த மக்குள மாபுல குணருமா தரத்தால். (௧௦)

இனைய மாதவ ரிமாசல மாதம ரிடத்தான்
வினைக ழற்றியற் கனைகழற் றிகழ்மனம் விழையும்
புனித தத்தம நித்திய நியமங்கள் போற்றி
யினிய சத்திர யாகமங் கியற்றின ரிருந்தார். (௧௧)

அன்ன காலையிற் சூதமா முனிவர்கோ னங்கே
துன்னி னனது காண்டலுந் துண்ணென வெழுந்தார்
சென்னி கூப்பிரு கரத்தினர் வரத்தெதிர் சென்றார்
முன்னி றைஞ்சின ரின்னுரை முகமன்முன மொழிந்தார்.()

அழைத்து வந்தன ராதனத் திருத்தின ரன்பாற்
றழைத்த தூமலர் பாத்தியா சமனமர்க் கியமுன்
விழுத்த கைகொடு வழுத்துபூ சனைமுறை விளைத்தார்
முழுத்த வன்பினு ளின்புற முன்பிவை மொழிவார். (௧௩)

ஐய மெய்ச்சிவ புராணநூற் போதமுற் றளித்தே
யுய்ய வெம்மனோர்க் கருளிய மேனிகொண் டுற்ற
மெய்ய வேழையேங் குடிசைசீ விழைந்துபோந் தருளிச்
செய்ய முற்றவ நற்றவம் பெற்றவென் சிறியேம். (௧௪)

கருணை மாநிதே முற்றுணர் கற்றவ ரேறே
பொருணை யந்தனின் வாக்கட லுக்கடை புராணத்
தெருணை யந்தவா ரமுதுண வுண்டுண்டு தெவிட்டா
தருணை யந்தி லார்வமீக் கூர்வதா லண்ணல. (௧௫)

நின் வாக்காகிய கடலினின்றுங் கடைந்தெடுக்கப்பட்ட புராணமாகிய அமுதுணவு என்க.

முன்ன ரொண்சிவ க்ஷேத்திர விசிட்டமுற் றியற்சீர்
சொன்ன லம்பெற விரித்தனை சுருக்கினை சொலுங்கா
ணன்ன ராம்பிர வணமநு நாதனற் றலமொன்
றென்ன மாதலத் தினும்பெருஞ் சிறப்பின திதன்கண். (௧௬)

இனிது வீற்றிருந் தருளுமா தேவனெம் மீசன்
புனித மான்மிய மளப்பரி தெனப்புகன் றுரைத்தா
யனைய மாண்விரி வுணர்விழை வதிவிரி வென்று
வினைய வாய்மையின் வேட்டனர் கேட்டனர் மேலோர். (௧௭)

அன்ன வாய்மையின் வாய்மைகேட் டருணிறை சூத
னென்னு மாதவன் னென்னுமா தவன்மறை யாவும்
பன்னு மந்திரேச் சுரன்பத பங்கயம் பரிவாற்
சென்னி வைத்தரு ணிலத்துலாய் நின்றிது செப்பும். (கஅ)

முனிவிர் கேண்மினும் வினவுல கினுமொழி முதலா
மெனது நெஞ்சக முஞ்சக முஞ்சக மிரித்து
வனிதை பாகனு ரருள்பெறற் காகநார் மலிந்த
தினித ளிக்குமிச் சிரவணம் பரவண மெவர்க்கும். (கக)

நெஞ்சகமும் சகம் உஞ்சு அகம் இரித்து அருள்பெறற்காக என்க.

நீவி ரிங்குரை தாவிரி மாவிரி நிழற்காத்
தேவி ளங்குமான் மியமபக் குவர்க்குரை செய்யாத்
தூவி ளங்கதி குய்யமித் துய்யமான் மியத்தை
நாவி ளங்குசீர் நந்திதே முந்திசை நவின்றான். (உ0)

விரிநிழல் மா கா என்க. மா கா-சூதவனம்.

போதனே தகு புத்திர சிகாமணி பொருவின்
மாத போதனர் வழுத்துசிந் தாமணி வரந்த
வாத சீர்ச்சனற் குமாரமா மணிமுனிக் கவ்வா
றோது வாமினி துணர்மினென் றுறுவர்கோ னுரைக்கும். ()

சனற்குமாரமுனிமணிக்கு நவின்றான் என்க.

கண்ணகன்புவ னங்களாங் காங்குயர் கருமங்
கண்ண கன்புறச் செய்பயன் கைபெறீஇக் களித்தே
கண்ண கன்புரிந் தமர்களா கண்ணுதற் கண்ணங்
கண்ண கன்புடைத் தருடிருக் கைலையஞ் சைலம். (உஉ)

நுதற்கண்-அன்மொழித்தொகை. நுதற்கண்ணனாகிய பரமசிவன் அங்கண்பாவத்தை புடைத்து அருள்கின்ற கைலை,புவனத்தவர் களித்துக் கருதுகின்ற மனம் விரும்பி அமர்கின்ற களைகண் ஆகும் என்க. களை கண்-புகலிடம்.

காள கண்டனை மொழியிமா சலைபிடங் கவின்செய்
காள கண்டனை மண்டனை விண்டனைக் கலந்த
தாள கண்டனை யண்டருந் தொண்டருந் தழுவத்
தாள கண்டனை யருள்வது கைலையஞ் சைலம். (உங)

காளகண்டம்-குயில். அதனை வைக்கின்ற மொழி. கலந்த தாளை யுடைய கண்டனைத் தழுவும்படி தாள கண் தனை அருள்வது சைலம் என்க. தாள்-முயற்சி வலி. கண்டன்-தலைவன். தாளகண்-திருவடி ஞானம். அதன் சரியைகள்.

சுருதி யானளப் பரிதெனும் பரமனிற் றூயோர்
வருதி யானத்தி னாற்பது கோடியோ சனைமாண்
கருதி யானதிற் பாதிய கலமெனப் பரவித்
தருதி யானம வெனப்பெறுங் கைலைமா தரமே. (௨௪)

பரமனைப்போல அளப்பரிதாயினும் தூயோர் தியானத்தால் சது கோடி யோசனை உயரமும் ஆன அதிற்பாதி அகலமும் என மாண்கருதிப் பரவி வேட்டன தருதி நம எனப்பெறும். ஆல்-அசை. தரம்-மலை.

விண்டு வாதிய விபுதர்வாழ் பதமெலாம் விளிகாற்
கண்டு மேனகுங் காட்சியிற் கவின்செய்வெண் கதிர்தா
னண்ட மெங்கணு மகண்டனுந் தன்னகத் தான்போற்
றண்டு றூதொளி பயில்வது கைலையஞ் சைலம். (௨௫)

ஆற்றல் சாலசு ராதியர்க் கஞ்சுமா லாதி
சாற்று வானவர் சாருமா தாரமா தாரம்
போற்று மொண்கன கங்களைப் புவனத்துள் ளனவுந்
தேற்று மாண்புயர் திருக்கயி லாயநீள் சிலம்பு. (௨௬)

சிலம்பு சாரும் ஆதாரமாகும். மா தாரம்-உயர்ந்த வெள்ளி. ஒண்கல் நகங்களெனப் பிரிக்க.

பன்னு மூவுல கத்துள பறம்பெலா முகாந்தத்
தின்ன நீர்தரச் சரண்புகு மினியகோ வென்ப
சொன்ன மேருவு மேருவந் தின்னும்பஃ றுதிகள்
சொன்னன் மான்மியத் திருக்கயி லாயநீள் சுரும்பு. (௨௭)

பறம்பு-மலை. கோ-மலையுமாம். சுரும்பு-மலை.

வேறு.

இன்னன பலவே றாய வியல்வளத் தொகுதி யார்க்கு
முன்னரும் பெருஞ்சி றப்பி னொளிர்திருக் கயிலா யத்திற்
பன்னருட் சோதி லிங்க பரமன்சீ கண்ட நாமத்
தென்னையா ளிறைவன் யாவு மீன்றரு ளன்னை யோடும். (௨௮)

வியனுல கெல்லா முய்வான் மேதகு குடிலை யாதி
வயநிறை தத்து வத்திண் மணியரித் தவிசின் மன்னிப்
பயனுற வமர்பொற் கோயிற் பான்றிருச் சந்நி தானத்
தியலருள் வெள்ள மாமீ தென்றுல கெல்லா மேத்த. (௨௯)

உடலிடர்க் கடலோ யாரு முட்கொள நீண்டல் காண்ட
விடனுயின் மடமென லாமு மிரித்துயி ரிடர்மூற் றோட்டித்

திடனரு ளமுத தோயந் திகழ்சிவ தீர்த்த மொன்றேத்
தடமுமன் புடன்சென் றேத்துந் தனியா சாக மன்னும். (௩0)

பேசுமித் தடாகஞ் செம்பொற் பித்திகை நாப்பட் டேனுந்
தேசுறு பரிசத் தன்றிச் சென்றுமே னின்றுங் காணார்
மாசறச் சென்றார் சில்லோர் மதிலலான் மற்றொன் றில்லை?
வாசறு தளியொன் றுண்டோ வண்ணறன் கைலைக் கென்பார். ()

வயிரத்தொண் சோபானஞ்செம் மாணிக்க மிழைத்த சந்து
பயிலத்திண் பளிக்க கஞ்செய் பாவுமவ் வாவி தீரத்
துயர்பத்து நூறு பைம்பொ ணொண்மணித் தமபத் தும்பர்
நயனுற்ற விந்து காந்த நகுமணிப் பரப்பு வாய்ந்த. (௩௨)

மண்டப மொன்றி லங்கும் வித்தியா மயமீ தென்றே
யெண்டரு முனிவ ராதி யிறைசிவ ஞான வேட்கை
கொண்டெழு மன்பர் கூட்டங் குறைவற நிறைவு தாங்கே
பண்டரு மறைநான் காதி பலகலைத் துழனி மல்கும். (௩௩)

வழுத்துமம் மண்ட பத்தின் மத்தியிற் புண்ட ரீக
முழுச்சரு மாத னத்தின் முற்றுல கெல்லாம் வந்து
தொழத்தகு மம்பு சாதத் துணையடி சிவப்பப் போந்து
விழுத்தக வீற்றி ருந்தான் விழைதிரு நந்தி தேவன். (௩௪)

வேறு.

சிவமுணர்பன் முனிவர்குழாந் திவியர்பிர மதகணங்கள் செறிந்து சூழச்
சிவதரும மகாத்தியட் சன் சிவனந்தப் புரபாலன் சிவமெய்ஞ் ஞான
சிவகுரவ னருளபா சிவனுகும் பிரபுதிரு நந்தி தேவன்
சிவமுதவுந் திருவுளமே திகழ்தாவீற் றிருந்தருளுந் திருமுன் னுங்கே.

மலமகன்ற குலவிரதன் மாதவர்தம் போதநிதி மலர்ந்த செங்க
மலமகன்றன் மகன்சிவமே மருவுமக னொருவுமகன் மறைசொல் ௦ சீர
மலமகன்றம்மனம்விழையும்வனமுனிவர்வனம்போற்றுவரனன்பான
மலமகன்ற சனற்குமர மாமுனிவன் றேமுனிவன் மயன்வந் தானுவ், ( /

வந்தசனற் குமாரமுனி மாமேரு வாமேனி வள்ள லாய
நந்திதிரு வடிமலர்க்கீழ் நலனுறுதண் டெனவீழ்ந்து நமந்து போற்றிக்
* கந்தமலர் கமலமலர் காவின்மலர் கலப்பமலர் கருத்த னுகிப்
பந்தமலர் படத்தெறுமப் பாதமலர் மீதமலம் படப்பூ சித்தான். (௩எ)

---

௦ சீர் அமல் அம் மகம் எனப் பிரிக்க. மகம்-மகன் எனப் போலியாயிற்று. * கந்தமலர்கள் கமலம்போல் அலர்ந்த காமாகிய வில் மலரிற் கலப்ப மலர்ந்த கருத்தனுகிப் பூசித்தான் என்க.

பின்னுமடி பணிந்தெழுந்தெம் பெருமானே யருளாழி பிறரெவர்க்கும்
பன்னரிய வேதாந்த பாரகனே பரியாய சிவனே பன்னூ
லின்னுரைமா சிவதருமமெல்லாமெம் மவர்க்குணர்த்து மினிய போதா
வென்னுரியகுருநாதாவெளியேன்விண்ணப்பமுளமிரங்கிக்கேண்மோ.

புத்திமுத்தி யருளகில புனிதசிவ தலங்களினுட் பொருவி லிட்ட
சித்திமுத்தி தருமேரு ஸ்ரீசைல மாசைலத் திரள்சென் றேத்து
முத்தமப்பொற் றிருக்கைலை யொண்சைல மந்தரமு னுலப்பில் சீர்த்தி
வித்தகப்பஞ் சிருத்தலத்தின் விசிட்டமுரைத்தருள்காலைவிளம்பவற்றுள்.

ஒப்பரிதா யெப்பரிசு முரைப்பரிதாய் வரைப்பரிதா யுண்மைத் தாகித்
திப்பியமா யனவரத சிவசாநித் தியவிளக்கச் சிறப்ப தாகித்
தப்பரியகாரணப்பேர்தான்பலபெற்றுளதாகித்தரையின்சேம[முன்னுன்.
வைப்பெனலாய்த்திகழ்குதவனப்பெருமாண்புகன்றுரைத்தாய்வள்ளான்

சொன்னதலந் தீர்த்தமருட் சுயம்பிலிங்க மூர்த்திவரன் சொல்வித் தார்த்
தின்னமியம்புறக்கேட்பானிதயமிசைத்துதையார்வமீர்ப்பப்போந்துன்
பொன்னடிப்பூந் துணைபணிந்து பூசித்தே னேசித்தென் புந்திவேட்கை
மன்னருளாற் கைகூட வழங்குகெனப் பணிந்தெழுந்துமலர்க்கைகூப்பி,

திருமுனமப் பெருமுனிவர் சிகாமணிநின் றேத்தவருள் செய்துநோக்கி
வருதியயன் பொருட்குமரமற்றெமக்கோரருட்குமரவையமுய்யத்[டோ
தருபதினாற் றெருட்குமரசனற்குமரநினக்குரைப்பத்தடையொன் றுண்
வருகிருத்தி யெனவிருத்தி யம்முனியைத் தெம்முனிபோருணந்தீசன்

கனியருள்கூர்ந் தினிதருளு நற்குமர பாக்கியமே ஞான நேசா
மணியசிவ முகாம்புயநூன் மகரந்த பானமது கரமாய் வாய்ந்த
தனியயில்வேற் கரதார காரியருட் சண்முகன்மா தாமடிக்க [மென்னு.
ணினிதமர்புதாதையனைக்கியம்புதல்கேட்டெனக்கிசைத்தாங் கிசைத்து

அய்யனையு மன்னையையு மாறிருமா மலர்வதனத் தாறி ரண்டு
கையனையுமொருகோட்டுக்களிற்றினையுமுளத்திருத்திக்கனிவாயோதும்
பையணிவெம் பணியணிகள் படர்நதிவெண் சுடர்மதியம் பரவு சீர்த்திச்
செய்யமதி யிதழிமுடிச் சிவபாதாம் புயார்ச்சகமெய்ச் சீல கேண்மோ.

பரவியலவ் வியாசகிரு பாகரமா தேவனருள் பவனமெல்லாம்
வரமுறநல் கியவென்று மன்னுபுவீற் றிருந்தருளம் மாமன் கானப்
பரமதல மத்தியந்த பாவனமா யாமினிய பாரா வாரத்
திரமுறுமால் புரிராம சேதுவினீ சானதிசை திகழ மன்னும். (௪௫)

இப்பரம சிவதலமே யிப்புவிக்கா ரருட்டுணையா யிலங்கு முத்தி
கைப்பொருளாக் கிடுஞ் சகல காமியமுந் தரும்பாவங் கழிக்கு மிந்தத்

திப்பியமாதலப்பெருமைசெப்பரிதெவ்வெவர்க்கெனினுஞ்சிறிதுநீகோ
ளப்பெரிய நசைமறுக்க லாற்றாது சொலத்துணிந்தா மருமை மைந்த.

இன்னதிருத் தலந்தீர்த்த மிலங்கமுத சுயம்பிலிங்க மூர்த்தியென்று [று
மன்னருளித்தலஞ்சூதவனமெனும்பேர்பெறுநிபஞ்சொல்வாய்மையென்
பின்னகிகோன்பாற்கடலிற்பிறங்குபதேசம்மால்பாற்பெறுசீரொன்று
பன்னனையகுரவனிடைச்சிவலிங்கம்பணிபதிகொள்பான்மையென்று.

வரநிறையவ் வகியரசம் மாவனத்திற் பாவனத்தின் வருசீ ரொன்று
பாவுதிருப் பணியாங்கப் பணிவேந்த னெணியாய்ந்து பயிற்ற லென்று
காவில்சிவ பூசனையக் கட்செவிவேந் தாங்கியற்று காட்சியென்று
நாலையார சுறுசாப நடலையொழித் தாருளே நண்ணிற் றென்று. (௪௮)

தூய்றன்மார்க் கண்டமுனி தோய்ந்துடன்மா சிரித்தருள்சார் தூய்மை
யென்று, சேயாகு குலபதியா ரருட்பேற்றிற் பகைதொலைத்தின் புறுசீ
ரென்று, மேயவமு தங்கொணர்ந்து விண்டுசிவ நிவேதனஞ்செய் மேன்
மை யென்று, வாயதிரு விழாச்சிறப்பு வானவர்கோன் புரிந்தருள்சார்
வாய்மை யென்று. (௪௯)

இவ்வகையோர் மூன்றுதலை யிட்டபதி ஞேர்காதை யியல்பு முற்று
மவ்வகையேமைந்தநினக்கறிந்தவகை விரித்துரைத்துமமையக்கேளென்
றுய்வகைசெய் நந்தீச னுரைத்தனனென் றுடன்சூத வுறுவர் கோமான்
செய்வகைமா தவர்க்கனைய திருநந்தி மொழிப்படியே தேற்று கின்றான்.

புராணவரலாறு முற்றிற்று.
ஆகத்திருவிருத்தம் ௱௮௯.

---

# தலவிசேடச்சருக்கம்.

மறைமகன் மைந்த கேணின் மனம்விழை கின்ற வாறு
நிருமல மந்தி ரேச னிலயுத லங்கொண் மேன்மை
யுரையில டங்கி டாத தொருசிறி தன்பு நீட
வருளுது மென்று வாய்மை யறைதரு நந்தி நாதன். (௧)

வேறு.

மலரவன் றனையருள் வயங்கு மாதவர்
திலகனென் றுலகுரை செம்மல் கேண்மியா
நிலவுல கலைவற நிறுவு * சந்திர
வலநிரை யிரவியி ○ னவாசி வம்பலில்.

---

* சந்திர இரவி-பொன்மலை. ○ அவாசி வம்பல்-தென்றிசை.

திருநிறை நாவலந் தீவின் மேவிய
பாவிய வானுறு பரத கண்டத்திற்
பொருவறு திராவிட பூமி மங்கைதன்
திருமுக மெனப்பொலி சென்னி நாட்டினில். (ரு)

தண்ணெனத் திகழ்தரு சூத கானனம்
புண்ணிய மாநிதிப் பொன்னி மாநதிக்
கண்ணிய தெனுதுமூன் றுய யோசனை
பண்ணிறை மறைவனக் குடாது பாங்கரின். (சா)

ஓரிரு யோசனை யோங்கு தென்கடற்
சேரியல் வடாதுமா திரங்கு ரோசமைந்
தேரிய வெல்லையி னிலங்கு மிவ்வனத்
தோரிய லகலமுக் குரோச மோதுப. (ரு)

தெவ்வனத் தஞ்செய்மால் சென்று சாவலாற்
செவ்வன சத்திரு வாதி சேர்தலா
லெவ்வன நித்திய வின்ப மீதரு
மிவ்வனந் திருவுசாத் தான மென்பவே. (சா)

புத்திகள் வேண்டினும் பொருவி னலிரு
சித்திகள வேண்டினுஞ் சித்த சுத்திமா
முத்திமுன் வேண்டினு முற்றும் பெற்றுளா
ரித்திருத் தலம்புகி னெண்ணி யாங்கரோ. (எ)

இத்தல மெத்தலத் திருந்து மெத்தகு
சுத்தமா முனிவருஞ் சூழ்ந்து போந்துமை
யத்தனை வழிபடூஉ வமரும் பூதல
தத்துவ மெனத்தகுஞ் சனற்கு மாரனே. (அ)

ஆதரத் தடைந்தம ரகில சீவர்தம்
பாதகக் குழுத்துகட் பருப்ப தங்களைப்
பேதுறக் கரைத்துயர் பேரின் பேதரு
சீதத் துவமெனச் சிறக்கு மித்தலம். (கூ)

எத்துணை மூடரு மெய்தி னீண்டவர்
* கத்திசெய் ० சூதவனக்க ணக்கிலாக்
கொத்தெலாந் தகித்தருள் கூட்டு மாரழற்
றத்துவஞ் சூதவ னத்தண் மாதலம். (கo)

* கத்தி—துன்பம். ० சூதவனம்—பிறவிக்கூட்டம்.

சேகதி மனத்தவ ரெனினுஞ் சென்றவ
ணீகதியெனப்புகி னிகரில் பாவநீண்
மாகதி ரட்குல மலைகள் சாடுஞ்ச
தாகதி தத்துவஞ் சாற்று மித்தலம் (கக)

அம்பர வான்புவி யாதி போற்றுதோ
லம்பர சிவனிரண் டற்ற வன்பருக்
கம்பர வின்பளித் தமருஞ் சிற்கன
வம்பர தத்துவ மாகு மித்தலம். (கஉ)

கண்டவ ரித்தல நிரயங் கண்டிடார்
தொண்டெவ ராற்றுந ரனையர் சூழ்ந்துவா
னண்டர்தொண் டாற்றிய வமர்ந்து பேரரு
ளண்டகு புவனம்வீற் றிருப்பர் வேந்தராய். (கங)

இத்தலத் துற்றவ ரினித்த லத்தினுற்
பத்தியுற் றருட்சிவ பத்தி யுற்றுயர்
முத்திபெற் றுய்வரான் முனிசிகாமணீ
சத்தியஞ் சத்தியஞ் சத்தி யம்மிதே. (கச)

மன்றலெண் டிசைகம ழமிர்த மாவன
மென்றொரு முறைதிரு நாம மேவர்வாய்
நின்றெழ லுறினுமந் நிமல நாமமே
யன்றவர் தம்மையு மமிர்த ராக்குமே. (கரு)

மாதகு திருவுசாத் தான மாண்பெய
ரோதுநர் புகழ்த்திரு வுரைசெ யெண்டிரு
மேதகு பரசிவ ஞான மெய்த்திரு
வாதிய ? திருவுசாத் தான மாவரே. (கசு)

ஏனைய தலங்களி னியற்றும் வேள்விகண்
ஞானமா தவமநு நவிற்றல் பல்லறந்
தானமா தியவெலாஞ் சாற்று மாம்பிர
கானனத் தியற்றிஞென் றனந்தங் காண்பரே. (கஎ)

ஏனைய தலங்களி லெண்ணில் கற்பகா
லீனமின் மாதவத் தெய்தும் பேறெலா
மானதன் னேணியா ருறினு மக்கணந்
தானுவந் தருள்வது சூத மாதவம். (கஅ)

? திருக்கள் தம்மிடத்து வந்து உசாவுகின்ற - தானமாவர் என்க.

தன்னுழைப் போந்தறன் மூழ்கிச் சம்புவை
முன்னுநர்க் கன்ன || மாமுளரி யீபல
னென்னுரை யளவுகொ லெண்ணிலீ மேலையோ
ருன்னுரை யுட்டொகைச் சிகையு முட்படா. (௧௯)

இன்னினி யெண்ணிசைத் தின்ன மாவன
முன்னியன் னையமனு முதலே யென்றும்போற்
றின்னிய தியர்முனே ரெய்தும் பேறெலா
முன்னுகை முதிகத்தா *னுறழ்வு முற்றிடா. (௨௦)

என்றருணந்திதா னிறைஞ்சி வேதன்சேய்
பின்றற னீருணர் பெற்றி வேண்டிமு
னின்றன னென்றுபி னிகழ்த்து வான்றனே
முன்றொழு முனிவர்க்குச் சூத மாமுனி. (௨௧)

வேறு.

ஆத ரத்தினி மாவன
மீத லத்தினின் மேன்மையை
யோத லுற்றவா கேள்வியர்
தீதொ ழித்தருள் சேர்வரே. (௨௨)

தலவிசேடச் சருக்க முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் ௬௧௧.

௨

# தீர்த்த விசேடச் சருக்கம்.

ஈர்த்த மாவன மின்புற வோதினுஞ்
சீர்த்த மாதவ சிந்தைய கேண்மியா
தீர்த்த மான்மிய சிந்தென வோதுமா
னார்த்த மாவன நந்திபி ரானரோ. (௧)

வேறு.

இத்தலமூன்றுகுரோசவெல்லையினுளெண்ணிலாப்புவனங்களிடைநின்
றுத்தம தீர்த்த முற்றும்வந் திலகு முறைப்பதெங் கிவையெலா முவற்றி
னத்தகு காம நிகரமே யளவின் றுதலா லாருயிர்க் கருண்மா
துத்தமே யனைய சிற்சில தீர்த்தஞ் சோறுமாற் றேறுமா தோன்றல்.

|| மாமுளரி-சூதவனம். * உறழ்வு ஈண்டு எண்ணின் பெருக்கல்.

ஆருயிர்க் கருளு மந்திர நாத னுலயத் தங்கியம் பரத்திற்
சாருமோர்சாசுநிருமலமளிக்குந்தன்மையினிருமலதடமென் [பெரிதுஞ்
பேருமெம்பெருமான் பிறைமுடிப் பிறங்கும்பெரும்புனற்பெருமையிற்
சீருடைமையினுன்மணிகருணிகையென் றிருப்பெயரும்பெறீஇத்திகழும்.

அத்துணை நாமத் தால்வள ரேல்லை யாமுரு வாயினு மடைந்து
பத்தியிற்படியும்பண்புடையவர்தம்பவப்பொருந்தவப்பெரும்பரப்பைத்
துய்த்திர ளாகத் துய்த்திடுந் தூமந் தோயுருத் தீயெனத் துலங்கு
மித்திர மிதுசேர் மாதிரத்தாலு மிலக்குமா லெனைவர்க்கு மின்றும். (௪)

இம்மணி கன்னி கைப்புன றினந்தோய்ந் திடக்கிடைப் பரிதருந்தவங்க
ளும்மையாற்றினர்க்கேவாய்ப்பதாமெனினுமுதண்மதி மதிநிறைபருவத்
தம்மணிநீரிலாண்டொருதினம்வந்தன்பினுன் மாபினிலாடுஞ் [திண்ணம்
செம்மையர்மூந்நூற்றறுபத்தைந்தினமுஞ்சென்றுதோய்பயன்பெற

இறைதிருத்தளிநேர்மறுகின்கீழ்பாலினிலகுறுமலந்தையொன்றிதன்பே
ரறைகுபவனுமகுண்டமென்றவன்முன்னரிற்படிந்தெண்ணியாங்கடைந்
தா, னிறையுமவ் வுறையிற் பௌமவா ரந்தா னிகழ்திர வாரமிவ் விரண்
டின், முறைபுரி நான முக்கிய மென்ப மூதுணர் மேதகு முனிவ. (௬

சொன்னவாரத்தின்வாரத்தின்மூழ்குந்தூயர்பன்னோயெலாந்தொலைத்து
மின்னிகழ் திடகாத் திரதயி ரியமா வீரிய மாதியெவ் விழைவு
முன்னியாங்கொருங்கேயுறுவரெந்நலமுமுதவுமிவ்வுதகத்தின்கீழ்பாற்
பன்னருஞ்சிறப்பெண்டிகையினுந்தகையாப்பயிலுமோரியலெழிற்படுகர்

திவளுறு மனைய வுவளக மாதி சேடன்மா தீர்த்தமென் றுமத்
தவிருமவ்வாழி யாழிய சூழி யன்புமிக் கின்புற வடுத்து
நவிலுறு மாக மதியிலங் காளி னுனநூன் முறைமையின் மூழ்குந்
திவியரெண் போக மாதிபல் போகச் செறிவெலாம் பிறிவறச் சேர்வார்.

நிலவுபோ கீச தீர்த்தமென் பெயரே நிச்சய மென்றதை நிறுத்து
மலகிலாப் போக நுகர்ச்சியீ தொன்றே வருமறை யாகம மாதி
கலையெலாமுள்ள படியுணர் தெளிவுங் கைவர வுண்மைஞா னத்தாற்
செலவரும் வீடுங் கூடுமச் சேட தீர்த்தமாண் பெயரிது தேற்றும். (௯)

வளர்திருக் கோயிற் புறம்பிர தீசி வம்பலி னும்பரும் வழுத்து
களினியொன் றுளது மார்க்கண்ட தீர்த்த நாமமவ் விலஞ்சியை நவில்ப
பளகெல்லாம் பாற்றும் பவமெலாம் படுக்கும் பாவனம் பவித்திரம் பரமம்
புனகமிக் கருவிவ் வளகம்பல் கோடி புவனமும் போற்றுமா ० புவனம்

० புவனம்-நீர்.

சாதவெப் *பாற்றிச் சீதள ! காண்டந் தைம்மதி தருகுரு பூசத்
தேதறுவிதியின்மூழ்குநர்பேற்றையார்கொலோவிசைப்பரிப்பெரிய
மேதகையாளர் விழிசெலு ?முலகின் மேவிய*வாவிமெய் விதிர்க்கும்
கோதற வுலக மெவற்றினு மாவிக் குவால்கவர் தவாத்திறற் i கூற்றும்.

இன்னினியிதன்சீரிசைப்பதையெற்றுக்கிவ்வொருதிறத்தினாலேனை
நன்னல நிகர மென்னவு மின்ன நாரமே தோமே னவிற்று
முன்னிய வளிக்கும் வகையவிந் நீர முதவிடாப் பலன்களொன் றில்லை
யென்னலாம் பொதுவாற் சிறப்புற வகுத்தல் யாவர்க்கு மரிதரி தம்ம.

யாமிய கருபத் திலங்குமோ ரலந்தை யிதன்பெயர் கௌதம தீர்த்த
மாமிதிற் ii றோணி பவாம்புதி கடத்து மரும்பெறற் றோணியா மனைய
தேமிகு பாணி நினைப்பெலா மளிக்குந் திறத்தினிற் பாணியா முதமாந்
தோமிலிக் கமல நிமலமிக் கருளுந் தோயமாந் தோயவந் தவர்க்கே.

இன்னனவென்னவின்னமாவனத்திலெண்ணிலாவெண்ணிலாவேல்லை
மன்னுமத் தொகையே பகர்வரி தெனிலவ் வாழிய சூழிகள் வழங்கு
நன்னலன் முழுது மாயிரத் திரட்டி நாவுளா ரேவுளா னவிற்றற்
கென்னிலாருரைப்பர்தாலிபுலாகத்திருமொழியொருவகையிலக்கும். ()

அறந்தரு மருத்த மாதிய திருத்த மருத்துமித் திருத்தங்க ளருத்தி
சிறந்துமூழ்கியமுன்னுரைத்தநாளலதெத்தினமுழுகுறினுமச்செல்வர்
நிறைந்துள விட்ட காமிய சித்தி நிகரகோ டிகளொலா நினைவின்
விறந்தொளிர்தரப்பெற்றிம்பர்வாழ்ந்தீற்றின்வீடுபேறடைகுவர்மெய்ம்மை.

என்றெமை யளிக்கு நந்திவாய் மலர்ந்த வின்னுரை தன்னுளத் திருத்தி
முன்றொழுதெந்தாய்நின்றனிவாக்கமுதந்தெவிட்டுதலிலையெனமுன்
னின்றுபே ரன்பு நிமிர்சனற் குமர நிறைதவற் கறைதரு நிமல
நன்றிசெய் நந்தி நாதன்மே லென்று நற்றவச் சூதன்பி னவிற்றும்.

வேறு.

தீர்த்த மான்மிய மீதுரை சீரினோ
ரார்த்தி தீரவி ஞவின ராதியோர்
கார்த்த மாமல வாதனை காதுறீ இ
யோர்த்த பேரருள் வாழ்வினி லேறுவார். (கஎ)

தீர்த்த விசேடச் சருக்க முற்றிற்று.

ஆகத் திரு விருத்தம் சஉ அ.

---

* ஆற்று இ எனப்பிரிக்க. ! காண்டம்-நீர். ? உலகு-திசை. i கூற்றும் உயிரும் மெய்யும் நடுங்கும் என்க. ii தோணி-நீர்.

# மூர்த்தி விசேடச் சருக்கம்.

மலர்தலை யுலகருண் மணிமக னுதவிய வைந்த தீர்த்தமேல்
விலகரு மகிமையி னெளிர்சில வுணரநவின்று மேற்சொல்வா
மலகிரி வரனிறை மனுவிறை யருள்குறி யந்தண் மூர்த்திசீர்
நலனிடை யொருசிறி துளமுற வினவென நந்தி சாற்றுமால். (க)

வேறு.

நிருமலமாய் நிர்க்குணமாய் நிர்த்தொந்த நிராலம்ப நேய மாகி
நிருவிகற்ப நிராதார நிர்த்தோட நிட்களங்க நிருவி கார
வருண்மயமா யகண்டைகசுயம்பிரகா சப்பொருளா யனக மாகி
யருவுருவா யருவுருவுக் கதீதமா யத்துவித வனந்தமாகி. (உ)

நித்தியமாய் நிறைவதுவாய் நிராமயமாய் நிரஞ்சனமாய் நீளமாகிச்
சத்தியமாய்த் தத்துவமாய்த் தத்துவா தீதமாய்ச் சாந்த மாகிப்
பத்தியமா யத்தமுமாய்ப் பராபரமாய்ப் பாவனமாய்ப் பரம மாகித்
துத்தியமாய்ச் சோபனமாய்ச் சுமங்கலமாய்ச் சூக்குமமாய்த் தூலமாகி.

சேதனமாய்ச் சிற்பரமாய்ச் சிற்சுகமாய்த் திவ்வியமாய்த் திருத்த மாகிச்
சாதனமாய்ச் சாத்தியமாய்த் தாயகமாய்ச் சமயமுமாய்ச் சமயா தீத
மாதனமாய் வளரமுதாய் மலிசுவையாய் வருமணுவாய் மகத்து வாகி
நூதனமாய்ப் புராதனமாய் நுந்தாத வொண்சுடராய் நொதும லாகி. (ச)

சமரசமாய்த் தனிமுதலாய்ச் சராசரமாய்த் தருமமுமாய்த் தருமியாகித்
○ தமரசமாய்த் தமரமுமாய்ச் சதாகதியாய்த் தருபரிசந் தானாய் ரூப
நிமிரனலா யிரதமுமாய் நீராகிக் கந்தமதாய் நிலனு மாகித்
திமிரமொழித் திமைபரஞ் சிவமபெருக்கும் பரஞானத் தெளிவு மாகி.

சகலமதாய்க் கேவலமாய்ச் சுத்தமுமா யவத்தையதீ தந்தா னாகி
யகலமதாய் விகலமுமா யாதிநடு வந்தமுமா யனாதியாகி
யிகலரிதாய்ப் புகலரிதா யெண்ணரிதாய் நண்ணரிதா யெவ்வாற் றானும்
பகலரிதாய்ப் பின்முன்சூழ் பக்கமேல் கீழ்நாசோற் பவமின் றாகி. (சு)

எல்லாமா யல்லதுமா யெவ்வுயிர்க்கு முள்ளுயிரா யெவைக்கும் வித்தாய்ச்
சொல்லாரும் வித்தின்றித் தோன்றுவதாய்ச் சமீபமாய்த் தூரமாகி
வில்லாரு மணிமார்பன் விரிஞ்சனரி முதலாய விபுத ராதிப்
புல்லாரும் பல்புவனம் பல்கோடி யகிலாண்டப் பகுதியாவும். (எ)

---

○ தமரம்-ஒலி. சம்-பிறப்பு. ஒலியைப் பிறப்பிக்கும் ஆகாசம் என்க.

அலரிமுனஞ் சலசமெனத் தன்முனஞ்சேட் டிக்கவம ரசல மாகிக்
குலமறைகடனித்தனியேகோடிகுழாங்கோடியெனக்கூறிக்கூறிப் [துச்
பலமுறையும்பலநெறியிற்படர்ந்துபடர்ந்தெட்டியெட்டிப்பார்த்துப்பார்த்
செலமுடியாதிளைத்திளைத்துத்தியங்குறநீண்டொளித்தெங்குந்திகழ்வதாகி.

ஒன்றாகிப் பலவாகி யொப்பிலதா யெப்பொழுது மோரேப டித்தாய்
நன்றாகி யெவராலு மெவ்விதமு மெவ்விடையு நவிற்றொ ணாதாய்
நின்றாரும் பிரமமென நிகழ்த்துபா சிவஞ்சிவ நிகாம் யாவுந்
தன்றுவி லருளொளிநிற் சார்ந்துய்வான் றிருவுளத்திற் றதும்பி யோங்கி,

பெருகுதிரு வருளாலிப் பிறங்கமுத சூதவனப் பிரம தேசத்
தருண்மயமாயொளிப்பிழம்பாயமுதசுயம்பிலிங்கவடிவாகிவான்றோய்
தேருண்மலியாம்பிரவிருக்கத்திருவடியின்மூலைத்தெழுந்துதிகழ்ந்தெஞ்ஞான்
மருமலிகூவிளமிதழிமாலதிமுன்புடைமலர்தூய்வளைப்பமன்னும். [றும்

தன்னருளாற்சுவேச்சையினூற்றனிமுதலாயெவ்வுலகுந்தழைப்பப்பேர்ந்து
தோன்னிலையவன்னவருட்சுயம்பிலிங்கமூர்த்திபதஞ்சூழ்ந்துபோற்றி
யின்னருள்பெற்றவர்புயங்கவிறைவருணன்மார்க்கண்டனிந்திரேசன்
முன்னரிவர் தொகைதானு மொழிவரிதா லிவ்விலிங்க மூர்த்திநாமம்.

வானிறைமார்க் கண்டேசன் வருணேச னனந்தேசன் மந்திரேசன்
மருமலா முதசூத வனநாத னுசாத்தான மாத லேசன்
முருகுமல ரமுதலிங்க மூர்த்தியிவை முதலனந்த மொழியு மிந்தத்
திருவருணா மங்கனிதேன் றெள்ளமுதா தியவெனத்தித் திப்பமாதோ.

இன்னவரு ணாமங்க ளெழுகோடி மகாமனுக்க ளெவற்று மேலாம் [றை
பன்னுமுறைபண்பினுரைப்பவர்முறையேபகிர்மதிவெண்பல்வாய்க்கூற்
வென்னலமேமலரோகவெப்பொழிந்துதட்பநிறைவிழுத்தவின்ப
மன்னலமே சகலகலா வல்லபமா வித்தைநலம் வாழி மாதோ. (௧௫)

பூதமகா வேதாளம் பொல்லாத பேய்முதல புரிபல் கோடி
யேதமெலாந் தெறுநலமே யின்னருளாங் குளிர்நிழலூ டிருந்து வாழு
மோதநலந் தனிப்பரம முத்திமுதற் றிருக்களெலா முன்னு சாவி
யாதரமீ தருநலமே யமிர்தநல முதல்யாவு மடைந்து வாழ்வார். (௧௬)

இத்தகுமந் திரநாதற் கின்னுமள வின்றும மிசைப்ப விந்தச்
சத்தியவா னமுதலிங்கத் தனிமுதலித் தலமொன்றிற் சமட்டியாகும்
வித்துருவா யுலகமெலாம் விரிந்துமுளைத் தாங்காங்கு வியட்டி யாகு
முத்தமமா வருட்குறியா முதுபுவிகீண் டேகினுமே ரொளிரு மீன்றும்.

திருவமுதலிங்கமெனுந்திறனடைந்தார்க்கருள்செயலாற்றேற்றலன்றி
யுருவமும்வெண் ணிறனேயா யொருவாம மெஞ்ஞான்று முலகர் யாரும்

தெருளியதேற் றுறுமிந்தச் சிவலிங்க மூர்த்தியைப்போற் சிறந்த மூர்த்தி
யிருநிலத்துந்தருநிலத்துமெந்நிலத்துமில்லையெனவெரிகையேற்பாம்.()

கவிலருமிச் சூதவன நாதனடிப் போதிதய நளினப் போதி
லவிர்தரமெய் யன்பொடுமெவ் வாலயநற் காலையினி லடைந்து சூழ்ந்து
பவியமுறத்திருமுன்புபணிந்தேத்தும்பண்பினர்பாற்பதி நூன்முற்றுந்
திவளறம்பல்கோடிகளுஞ்செறிந்துளகுற்றேவலெலாஞ்செய்துசூழும்.

பணகமணி மறுவிறைவன் பதப்போது பகற்போது பரவிப் போது
மென்வருமெய்யன்பொடுசென்றேத்துநரேத்தேத்துமுலகேழுஞ்சூழும்
வனநிதிசொன்னவநிதிபொன்மணிநிதிமுற்பொருள்சுகுணவளநீடாயுள்
புனைபொருள்கண் முதலாய பொருள்களெலாந் தமைச்சூழ்ந்து போற்ற
[வாழ்வார்

மதியிதழி மலருமுடி மறுவிறைபொன் மலரடிகண் மாலைக் காலை
யதிகவித துதிபணிமெய் யன்பர்பல வின்பவகை யனைத்துஞ் சூழப்
புதிதுபுதி தாமிறைபல் *போத்திருவா குவாருத்த யாமப் போதில்
விதிமுறைபோற் றுநரமல மெய்வீட்டிற் பேரின்ப மேவி வாழ்வார்.

மகரமதி குருபூச மதிநிறைநாள் வானுணர்ந்தம் மந்திரேசன்
பகாரிய பதமுறையிற் பணிந்தேத்தும் பண்பினரெப் பாவ தாவ
நிகாமும்போய் நிகாரிய நின்மலராய் நினைத்தவெலா நீங்கா தோங்கச்
சிகாமலி தீபமெனத் தேசமெலாஞ் சீர்பரவச் சிறந்து வாழ்வார். (௨0)

வேறு.

இந்தமா மந்தி ரேச னிம்பரோ டும்பர்க் கின்பந்
தந்தெழுந் தருள்வி ழாக்கொள் சைத்திரோ ற்சவநாண் முற்றும்
வந்தவந் திறைஞ்சு மன்பர் மணமகார் செல்வ மாதி
சௌந்திரு விழாமுற் றெய்திச் சிவகதிச் செல்வ ராவர். (௨௧)

திருவளர் சூத கானஞ் சென்றுநா மந்தி ரேசன்
மருவள ரம்பு சாத மலரடி பணிது மென்று
வருவளர் நெறிச்சென் றுரும் வந்தினி திறைஞ்சி னாராய்க்
கருவளர் பௌவ நீந்திக் கதிக்கரை சேர்வர் திண்ணம். (௨௨)

கண்டவ ரலக்கண் யாதுங் கண்டிலர் பணிந்தார் தம்மை
யண்டங்க ளெல்லாம் போற்ற வமர்வரா னினைந்து ளாரிம்
மண்டனி லின்று மோர்கால் வருநினை வடையார் வாய்மை
யுண்டரு சூத கான மந்திர நாதன் பாதம். (௨௩)

---

* போத்திரு-போக றுகர்த்தா.

இன்னவர்க் கெந்தை யீயு மின்னரு ளின்ன வென்னின்
முன்னவ னமுத கூத முளரிவாழ் மந்தி ரேசன்
றன்னடி யம்பு சாதந் தளிபுகுந் தளிமீ தூர
மன்னுநன் னியதி வாய்ப்ப வழிபடே வழுத்துஞ் சிலர். (உ௪)

அலகிடன் மெழுகல் பூக்கொய் தலகிடா வலங்க லாற்ற
னலகிறை காலந் தோறு நல்குத னல்கு வித்தன்
மலர்நறுந் தூப தீபம் வயக்கலப் பாசனம் பொற்
கலசமுற் கலமி னோசைக் கண்ணடைமுன் னுதவு கிற்போர். (உ௫)

மறைமுத லிறைசி வாக மம்முறை வழாநி பந்தங்
குறையற வளித்து நாளுங் குலவிய நடாத்து மேலோர்
நிறைமணிப் பொற்றே ரூர்ந்து நிமலனெவ் வுலகு முய்வான்
முறைபுரி திருவி ழாவம் முறைபுரி திறமை யாளர். (உ௬)

மந்திர நாத னென்று மகிழ்ந்துவீற் றிருந்து வாழு
மந்திரத் திடைக்கி லங்கண்மருவினுங் குடனூர் வஞ்சு
டந்திரங் குளம்ப வைப்ப மணிபொ னாதிகளி னாலே
மந்திர மாக மூல மந்திர மெனவ யங்க. (உ௭)

புதுக்கியெவ் வுலகும் போற்றப் பொருவில்பே ரறத்தி னீண்டு
நிதிக்குவை மனைம கார்மு னிறையத்தா மொன்றை வேண்டா
மதிக்குளிர் நிட்கா மத்தான் மலர்திருப் பணிமெய் யன்பான்
முதுக்குறைந் தருணூ லாற்றின் முதமிசப் புரிமே தக்கோர். (உ௮)

அணிமணி * சாத கும்பத் தணிகள்பற் பலவ ளிப்போர்
தணிவிலா னிரைவ ளர்த்துத் தக்கபா றருவோர் நந்த
மணிவனம் பெருக வைத்து வளர்ப்பவ ரிவைமுன் னும்பல்
பணிபுரி பவர்தம் பேறு பகரவோ ரளவிற் றாமோ. (உ௯)

முரிவிலா வளியோ டேனை மூர்த்திகண் முன்ன ராற்றுஞ்
சரியையே கிரியை யாதி சாற்று பல் றிருத்தொண் டெல்லா
முரிமையிற் றருபல் பேறு மொப்பிலா வமுத லிங்க
தெரிசன மொன்றே நல்குஞ் செப்பிய தன்மை மன்னோ. (௩௦)

மந்திர மெவையு நூலின் வருமுறை பகர்பே றெல்லா
மந்திர வேள்வி யாவு மசபினிற் புரிபே றெல்லா
மந்திர நிரைக ளேவன் மலியுமெண் சித்தி யெல்லா
மந்திர நாதன் பாத வணக்கமே யருளு மாதோ. (௩௧)

---

* சாதகும்பம்—பொன்.

இம்பர் வாழ் வனைத்தும் வானத் திந்திர னயன்மா லேனை
யும்பர் வாழ் வனைத்து மேலை யுருத்திரா தியர்பு ரக்கு
மம்பர் வாழ் வனைத்து மப்பா லமலவாழ் வனைத்து மெல்லா
நம்பர் வாழ் மந்திரேசர் நியமபூ சனையே நல்கும். (௩௨)

இன்னருண் மந்தி ரேச னீண்டுசெ யருள்வி லாச
நன்னிலை யுள்ளத் தாலு நாடரி தணுவு மேனு
மென்னி லென் னளவோ முற்று மிசைப்பதிங் கிசைத்த வெல்லை
பன்னலு மொன்றிற் கோடி பங்கிலொன் றேனு மின்றால் (௩௩)

என்னவாய் மலர்ந்த நந்தி யெந்தை தாள் சனற்கு மாரன்
முன்னமந் தின்ப வாரி மூழ்கிநீ டார்வங் கூர
துன்னுபு பின்னு நந்தி யோதுமென் றேதில் சூத
மன்னருண் முனிவர் கோமான் மாதவர் கேட்ப வோதும். (௩௪)

வேறு.

இந்தவருண் மூர்த்திவா னின்பினளி யாற்சொலுநர்
முந்துசெவி வாய்க்கொளுநர் முன்செய்வினை பாற்றிநிறை
யுந்துலக வாழ்க்கைமுழு துண்டருளி னீற்றினர
னந்தண்மலர் தாட்கமல வங்கணிழன் மேற்பொலிவர். (௩௫)

மூர்த்தி விசேடச் சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் ௪௬௩.

# சூதவன நாமகாரணச் சருக்கம்.

எந்தை தூயமு தங்கொண் மேனியி லிங்க மேன்மையி சைத்தன
மிந்த மாதல மந்தண் மாவன மென்று நாமமி சைக்கமுன்
வந்த காரண முந்து காதைவ ழங்கு வாமென நற்றிரு
நந்தி நாயக னன்பி னேடுந யந்த வர்வின விற்றுமால். (௧)

வேறு.

இனிது கேண்மதி முனிவரர் மாசிதி யெனுஞ்சீர்ப்
புனித மாண்சனற் குமரனே பூருவத் தலரோன்
றனைய னுஞ்சிய காசிப முனிவரற் றழுவு
மனையர் கத்துரு வினதையென் வனிதைய ரிருவர். (௨)

மனன மர்ந்தன ரோர்வயி னிருந்துழி மகவான்
றனது வானிற வுச்சயிச் சிரவமென் றகுபேர்

வனைதா ரங்கமஞ் சேய்மை கண் டனையமங் கையருண்
முனைய் ளாகிய கத்துரு வினதைநேர் மொழியும். (௩)

எங்கை யொப்பரிப் பரியின * திலாங் கூலம்
பொங்கு வான்மைகொ ளின்மைகொல் புகல்கென வவடன்
றங்கை வான்மைய தென்னவத் தகையின்மூத் தவடா
ளங்கை நின்சொலொல் வாமணி நிறத்தென நவின்றாள். (௪)

இன்ன வாறவர் மூரணு ழி யெம்மிலார் தோற்று
ரன்னோர் வென்றவர்க் கடிமையா குகவெனா வவண்சூள்
பன்னி னாரவர் தம்மிலக் கத்துரு பரந்து
துன்ன னந்தன்மூற் பணிச்சிறார்ப் பார்த்திது சொல்லும். (௫)

வருக நம்பணி மறுப்பணி மைந்தர்காள் வானப்
புரவி வானிற வானிறய் கரிதெனப் புரிதற்
குரிய தெவ்வழி யவ்வழி புரிகென வுரைத்தா
ளரவ மைந்தராங் கடாதென மறுத்தன ரவருள். (௬)

அனைமு னிந்துரை சாபமெம் மொழியினை யஞ்சுந்
தனைய ரையகார்க் கோடகன் றாயடி பணிந்து
முனிய லன்னைநின் கருத்தினை முடிப்பலென் றதன்வாற்
றுனைபு சென்றிறு குறத்தழீஇக் கரிதெனச் சூழ்ந்தான். (௭)

பினை முன்னையள் பின்னைநேர் பின்னைய ளுடனே
யன்ன வான்பரி யுலவுபா லாழியின் புறம்போந்
தின்ன வாலதி யெங்கிறத் தெனத்தெரிந் திளையாள்
சொன்ன தீன்மைய தேயுனக் கடிமையான் றோகாய். (௮)

என்று கூறிமுன் னவள்பணி பணிகடா னியற்று
கின்ற நாளவ டனையன்வான் கிளர்சிறைக் கலுழன்
றன்ற னிப்புறத் தருணனுந் தன்முனைத் தாங்கி
யொன்று மெய்ம்மொழிக் கனதையாம் வினதைபாங் குற்றான் (௯)

உடன்பி றந்தவச் சத்துரு கத்துரு வுதுகண்
டடங்க லாச்செருக் ககங்கொளீஇ யிளையளை யழைத்தே
தடம்ப ணித்தலம் புகுதநம் முளத்தவாத் தழைத்த
தொடர்ந்தன் மைந்தனுஞ் சிறார்ச்சுமந் தேகுறத் துனிந்தே. (௧௦)

நம்மை நீசுமந் தேகுதி யென்னவன் னணமே
யம்ம பின்னவ டன்னிள மகற்பணித் தவளை

---

* இலாங்கூலம்—வால்

யிம்மெ னச்சுவன் மிசைச்சுமந் தரம்புகுந் திறப்ப
வெம்மை மக்களோ டக்கொடி யவள்விரைந் திழிந்தாள். (௧௧)

ஆங்க ணிக்கையி னுலாவுறு மப்பணிச் சிறார்தம்
பாங்க ழைத்தனர் கலுழனை நாமிவண் பலவா
யோங்கு தீவங்கள் காண்விருப் புற்றன மெமைநீ
தாங்கி யேகுதி நம்பணித் தாதிதன் றனைய. (௧௨)

என்ன வோதின ரப்பணி யிழிபுரை யெனுந்தீக்
கன்ன பாகத்தைச் சுட்டிடப் பொறுமையக் கலுழ
னன்னை பாலுறீஇ யென்னையிவ் வறிவிலாப் பணிக
ணின்னை யீண்டுதந் தாதியென் றேதிய நிமித்தம். (௧௩)

உள்ள வாறருள் கென்றடி பணிந்துநின் றுரைப்பக்
ᴼகள்ள வாமதுப் பொழிமலர்க் கருங்குழற் கனதை
வள்ள வார்மணி மலைமுலை வழுக்கிலா மனதை
வெள்ள வான்மலர் மதிமிக மதிமுக வினதை. (௧௪)

அருமை மைந்தகே ளென்முறு ளெனைமுறு ளகநேர்
திரிய வஞ்சகத் தடிமையாக் கொண்டவச் செயலா
லுரிய மைந்தனுந் தாயுமா மிருவரு மொருவர்
புரிய லாவிழி தொழில்புரீஇப் புன்மையே பூண்டேம். (௧௫)

என்ன வாய்மொழி தாய்மொழி கேட்டிகற் கலுழ
னன்னை முன்னையள் கத்துரு சத்துரு வாகி
நின்னை யேவல்கொள் கொடுமையா மடிமையி னீங்கற்
கென்னை செய்தொழில் சொல்லுதி வல்லையென் றிசைத்தான். ()

தனையன் வாசகந் தனைவுணுய்த் †தனையிலா வுவகை
யினைய டைந்தனை மைந்தவப் பணிச்சிறா ரிடையென்
னனைய டைந்தவிவ் வடிமைநீங் கியநுமக் காற்றும்
வினையு ரைத்திரற் றுவவென வினவென விடுத்தாள். (௧௭)

அன்ன பன்னக மைந்தரை வினவின னவ்வா
றுன்னி யன்னரக் ககபதி முகமதித் துரைப்பா
ரின்ன லந்தரு வானமு தெமக்கிவ ணீதி
யென்னி னின்னனை யடிமையை நீக்குது மென்றார். (௧௮)

வியனு லாம்பொறைக் கனதையார் மனதையார் வினதை
வயரி லாவுசெய் வந்தவட் பணிந்தனுய் வானத்

---

ᴼ கள்—வண்டு. † தனை—அளவு.

தியலு மாரமு தங்கொணர் வான்வழி யிளைப்பின்
றயவு றுவிலொன் றுதவுதி யாலென வுரைத்தான். (௧௯)

X உதவி னாளவற் குரைக்குமென் * னிம்பலே யும்பர்
பதவி நீபுக வாற்றுறு விழைவுறிற் படுநீ
ருதவி வைகுநர் வேட்டுவ ருண்டிநீ யுணுங்கான்
மதர்நெ டுங்கண்வேட் டுவர்மனை வேட்டொரு மறையோன். (௨௦)

ஆங்கு வைகுமா லவனைநீ யெடுத்துரை தைய
வோர்க்கு வான்புகுந் தமுதுகொண் டுறுதியிங் குறுதி
தேங்கு நின்சிறை முன்னுறுப் பியாவையுஞ் சிறப்பப்
பாங்கு வாயுமுற் சுரர்புரந் தருள்கெனப் பகர்ந்தான். (௨௧)

அன்னை பேசிய வாசிய னுர்கலி யணுகித்
துன்னு *சில்லரை யுண்டனன் கண்டமீச் சுடுதீ
யென்ன வேதியன் கனன்றிடக் கான்றன னெழுந்தம்
மன்னர் முன்னனென் பன்னியும் வழங்கருள் வள்ளால். (௨௨)

(வேறு).

என்னலுங் கிராத மாதை விகங்கவேந் தினிது கான்றிம்
மின்னெடுங் கிராது சேறி வேதிய வெனுவி டுத்துப்
பன்னுதன் றுதை காசி பன்னிடம் புகக்கண் டன்றே
னென்னிவட் சேறி மைந்த வென்னமுன் னிகழ்வி சைத்தான். ()

சொல்லுவான் மேலு மெந்தாய் சுடுபசிக் காற்று தாற்றி
னெல்லையில் சில்லர் பல்ல ரென்வயிற் றெல்லை யிட்டும்
வில்வழல் கொளுத்த நொந்து மெலிந்தனன் சிறைக ரிந்த
வொல்லைநல் லுணவொன் றைய வுதவென வுதவு தாதை. (௨௪)

பன்னுவான் விபாவ சுப்பேர்ப் பனவனு மிளவ லான
வுன்னுசுப் பிரதீ கன்று னும்பொருள் குறித்துப் பூச
றுன்னிய விளைத்துத் தம்மிற் சொற்றனர் சாப மற்றுன்
முன்னவன் கமட மாகுன் முரணிப மாகுன் பின்னோன். (௨௫)

புகலுமிக் கமடம் வேழம் பூருவ வயிரந் தீரா
திகலியித் தடத்தி னுற்ற விக்கரி யுச்ச மாறு
தகுமுடற் பருஉவி மட்டி யோசனை காற்றுங் கூர்மத்
தகலமோர் பத்தா முச்சத் தளவையோ சனைமூன் றுமால். (௨௬)

எகியிங் கிவற்றை யுண்டாங் கெரியழற் பசிதீர்ந் தப்பாற்
போகிநீ போகில் வேந்த போகியூ ரமரி கொண்டு

---

X உதவினள் — தாய். * இம்பல் — மகன். * சில்லர் — வேடர்.

வேகியாய் மீளு கென்றான் விரைந்தவண் விகங்க ராசன்
றாகியா யவ்வி ரண்டுந் தாளுகி ரிடையே கவ்வி. (உஎ)

விசைகொடு கிளம்பி நூறி யோசனை மேக்கு யர்ந்த
பசையுரோ கிணிநா மத்தொண் பாதவ விடபத் தூற்றா
னசையுமக் கோட ரந்தா ளூற்றொறு திறவப் போதத்
திசைகொண்மா தவத்தின் வால கில்லிய விருடி கூட்டம். (உஅ)

வாவலி னப்ப ணைக்கண் மன்னுபு தூங்கக் கண்டா
னாவிவர் வீழ்வர் கீழென் றகநடுக் குற்றக் கோடு
மேவுற வுடன்ற மீஇவிண் மீச்செலக் காசி பன்கண்
டோவிலிவ் விடப மெல்ல வுத்0தரத் தமைய வைத்தி. (உகூ)

ஐயநீ யென்றா னவ்வா றத்தரத் தினிது வைத்து
மையிகல் வேழ மாவுங் கமடமோ தகமும் வாய்ப்பெய்
தொய்யென வுவணை மேலவ் வுவணவேந் துறுங்கா லன்ன
தெய்வநாட் டுற்பா தங்க டிகழமுன் கண்டான் வேந்தன். (ங0)

அச்சமிக் கண்ணு லென்னீ தவம்பல காட்டுற்பாத
நிச்சயித் தருள்மகன் றசா னேர்பணிந் தியம்ப வன்னோன்
முச்சகம் பரவு வேந்த முந்துகா சிபன்ற னூற்று
மெச்சநற் பண்டங் கொண்டாங் கெய்துவா னேவச் சென்றார். ()

வாலகில் லியர்க ளங்கைப் பெருவிரன் மானு மெய்யர்
சாலமன் சுமைசி ரத்திற் றாங்குபு சரிசெல் காலான்
காலுறுங் குரநீர் மூழ்கு காத்திரர் கரையே றிச்செல்
வேலை நீ யசித்தல் கண்டார் விழியெரி கதுவ நோக்கி. (ஙஉ)

இவற்கொரு விரோதி தோன்று கென்றவி சொரிந்து நோற்றார்
சிவத்தவர் கறுப்ப நீசெய் தீமையாற் காசி பன்பாற்
றவப்பெருங் குமரன் போந்தான் றன்சிறை யிரண்டி லொன்றாற்
புவிப்பரப் படங்க மூடும் புள்ளர சனைய மைந்தன். (ஙங)

அமரிகொண் டேக லிங்ங னணையுமவ் விகங்க நாத
னிமிருமுற் பாத மிற்றா னிகழ்ந்தவென் றுரைப்ப வேந்தன்
கமையொலி யழலோ னூதிக் கடவுளர்க் கூவிக் காமி
னமுதல கமுது புள்ளி னூதன்வேட் டுறுமிங் கென்றான். (ஙச)

அதுவினு யமரர் யாரு மமர்விழை யணிகஞ் சூழ
முதுகய வரவு நீப்பான் முயலுபு முயல்சூழ்ந் தாங்குக்

---

0 தரம்—மலை. * பம்—விண்மீன்.

கதுமெனச் சுதையைச் சூழ்ந்து காத்தனர் வருப தங்க
பதிமுதிர் வரைகள் சாயப் * பங்கனே பலத்தின் வீழ. (கூ௫)

அண்டமுங் கிடுகி டென்ன வரிப்பிர ளயமே யென்ன
மண்டொலிச் சிறக ரீற்றின் வளரொலி கிளர வீசிக்
கொண்டுறல் கண்ட ரண்டர் கூறுமாத் திரையொன் 0 றப்பேர்க்
கண்டக ரத்திற் கூடக் கைகுலைத் தோடி யெய்த்தார் (கூ௬)

நின்றவர் சிலரந் தோவென் னீள்விழி முகிழ்ப்பி லாவூழ்
நன்றல முகிழ்க்கு மேலிந் நடுவற்கு நடுங்கா துள்ள
மென்றினி யோடினுலு மிவன்விடா னென்று நின்றார்
வென்றியி னமர்வா ரென்ன வெரிமுனும் விபுத ராங்கே. (கூ௭)

ஆற்றல்சால் சகுன வேந்த னவர்க்கப சகுன மென்ன
வேற்றனன் செஞ்ச ரந்தாம் பஞ்சா மெனவி லேகர்
தூற்றின ரவைதன் பக்கத் துணையினு லுக்க பின்னர்ச்
சீற்றமேல் கொடுப தங்கச் செம்மறன் சிறகர் வீசி. (கூ௮)

வலனுறக் குவிப்ப வோர்கான் மாதிரத் தளவும் போத
னலிவுற வருதல் பல்கா னண்ணின ரமர ரப்பேர்த்
தலையெழுத் திரித லன்னோர் தலையெழுத் தாக வப்போ
தலகுன துண்ட மொன்று லலகிலாத் துண்டஞ் செய்தான். (கூ௯)

உம்பர்சூ ழும்ப ரெல்லா மொழிதலு மங்கி நாளுல்
வெம்புனந் தூரப்பத் தூண்டி வெம்படை யேபப் புள்வேந்
தெம்பர்மா நதிந தங்கள் யாவுமுண் டுமிழ்ந்தா னங்கி
யம்பர்மெய் கரிந்தி ருந்தை யாய்ச்செய லற்று நின்றான். (௪0)

துணிவினே*ரிமையில்வென்றானிமையிலவ்விமையோர்தோற்றார்
கணிதரு மிதற்கு நானே கரியென் பான் போற்க ரிந்து
? பிணிமுகத் திறையால் வன்னி பிணிமுக னுய பின்னர்த்
தணிவிலா ரமுத மன்னுந் தகுமிடம் புகுங்கா லாங்கே. (௪௧)

பன்னக நிரைக ளங்கி படுவிடங் காரி ரும்பா
லன்னவா ரமுதைச் சூழு மரணங்க டிரண மாகத்
தன்னல காற்று ணித்துத் தனியுட லொடுங்கித் தீகான்
றென்னலர்த் திசைத கிக்கு நேமிகண் டுண்ணு ழைந்தான். (௪௨)

---

0 அண்டர் என்ற அப்பேர்க்கண் உள்ள டகரத்தில் ஒரு மாத்திரை கூட என்க. * இமையில் கருடன். ? பிணிமுகம்—பறவைப்பொது

தருப்பைகு ழமுத பூரி தக்கண கடங்கைக் கொண்டு
பொருப்புவேர் பறியச் செல்காற் போந்துமா தவனே ரண்ணல்
விருப்பமீக் கூர்ந்தீர மீண்டுன் விறெறீஇ வேண்டிற் றென்கொ
லொருப்பட வளித்து யிற்றென் றுரைத்தியா லுவண வென்றான்.

மாதவர் நமைச்சுமக்கும் வரந்தருகென் றதுபெற்றச்
சீதரனை நினக்களித்துஞ் செப்புதிநின் வேட்கையென
வோதினனக் ககபதிமா லுதுகேட்டாங் கூர்தியெனக்
காதியென வமுதிதுசென் றளித்தபின ராதியெனு. (௪௪)

தருவரமால் கொண்டுறப்பொற் றருவரமால் வெருவரநெஞ்
சருவரவா னமுதிழத்தற் காற்றுமைத் துணிந்தொருவ
ரொருவரும்போர் நனிபுரிந்தங் கொருவகையு முய்வின்றி
வருவயிரப் படையாலி வாங்குகென வெறிந்தார்த்தான். (௪௫)

வருகுலிசந் தெரிகலுழன் மகபதிநீ தகவதிகன்
மருவுநின துயிர்க்குலிசம் வறிதுறன்மாண் பன்றெனது
பொருசிறையி னிறகொன்று தருதுமெனப் புகன்றுதிர்த்தான்
பெருகொளி யெண்டிசை நிரம்பப் பிறங்கியதா லிறகாங்கே. (௪௬)

ஊழ்த்தவிற கொளிப் பெருமை யுள்ளபடி யுணர்ந்தெவரும்
வாழ்த்தினராற் சுபன்னனென மகபதியக் ககபதியைப்
போழ்த்தவல கிலகுபடைப் புள்ளரசே தெள்ளமுதங்
காழ்த்தமனத் தினர்க்களிப்பக் கைக்கொடுசெல் கின்றனையால்.

அன்னவருண் டமையடர்ப்பா னதிகரித்தா லுனக்கந்தோ
வென்னவருஞ் சுதையிதையிங் கீதியென விரந்துரைத்தான்
பன்னவருந் திறற்கலுழன் பரிந்துரைக்கும் புரந்தரனே
நின்னவருத் தந்தணத்தி நிறையமுத கடமிதனை. (௪௮)

யாயடிமைத் தொழிலொழிய யான்கொடுபோய் வைக்குமிடத்
தேயுடனீ கோடியென விசைந்தரிபி னசைந்துவரப்
பாயவகன் காயநெறி படர்புதிற லடல்வயின
தேயன்மகி தலமுடுத்த தென்கடன்மீச் செல்கின்றான். (௪௯)

அப்பெரிய திறற்கலுழ னகல்வானத் துறுகாலை
யொப்பருமந் திரநாத னுலவுதிரு வருள்பொழித
லிப்பரிசே யெனவுணர்த்த விருசிறைக்கால் விசைகெலவாற்
றுப்புறுமக் கடத்தமுதத் துளிசிதறி நிலம்வீழ்ந்து. (௫௦)

அத்திவலைக் குலவிரிவீழ்ந் தமரிடமுக் குரோசமதா
மெத்திவலை யம்புறுமல் லியலிடர்தான் கேட்டிசையி

ணத்திவலை யொத்தமுலை நகமகள்பா கன்றெண்டர்
பத்திவலைப் படுபரமன் பயிலுமிடம் பாவனமே. (௰௪)

ஆதியருள் கடிக்குளம்வே தாரணிய மமர்ந்திலங்க
* வீதிகோத் திர i கருப மிசைக்கோடிக் குழகர்தளி
யோதகத்தி யான்பள்ளி யுற்றிலங்க o யாமினிய
மாதிரத்திற் றாளநகர் மறிதிரைவா ரிதிதிகழ. (௰௫)

வருகிருதி ? யம்பரத்தின் மறைபரவுந் தனிச்சேதுத்
திருவிரா மேசதலந் திகழ்தரப் ! பச்சிமவுலகி
லருள்பொழியுங் கொடுங்குன்ற மமர்ந்திலங்க ] வரியரிதம்
பரிதிகிய மம்பூவ ணூர்பயிலக் குபேரதிசை. (௰௬)

பன்னரிய பொன்னிநதி பாதாளீச் சுரந்திகழ
மன்னுதிற லீசான வம்பலிடைச் சிற்றேமந்
தன்னிகர்சி தளகந்த தரபாரி சாதவன
மென்னவளர் திருக்களரென் றியம்புதல மினிதிலங்க. (௰௭)

முத்திதரு திருவருட்பா மொழிதலமெண் டிசைசூழ
மத்தியநா யகமாகி வயங்கருண்மா தலமாமா
லத்தனரு ளெனவானின் றுங்குபரம் புறவீழ்ந்த
புத்தமுதத் துளிநின்றும் பொலிசூத முளைத்தெழுந்த. (௰௮)

வாகீசத் திருவடிகள் வாய்மலர்ந்த தமிழ்ச்சுருதி
மீகாண விச்சின்றி நாறுசெய்வா னெனவிதந்த
மாகாசின் மொழிப்பயனோர் வயக்கியவெம் பிரானருளா
லேகாணத் தோற்றினன்கொ லெனவெழுந்த சூதநிரை. (௰௯)

அண்ணலுயிர்க் களிப்பதரு ளனுவெனினு மகண்டமதா
யெண்ணரும்பல் பயனளித்தாங் கிணையிரிய விரிந்திடல்போற்
றண்ணமுதச் சிறுதுளியிற் றழைத்தெழுமாம் பிரகிகாம்
விண்ணரித முற்றனந்து விரிந்தபலன் புரிந்தபல. (௨௰)

எண்ணியவா கலுழனடந் தின்சுதைப்பொற் கடநாகர்
கண்ணெதிர்வைத் தனையடிமை கடிந்தளித்த கடனளித்தான்
விண்ணவர்கோ னன்னவன்சொல் விரகினு லக்கடங்கொண்
டெண்ணிறையு மகிழ்சிறப்ப வுவணபுகுந் தினிதமர்ந்தான். (௨௧)

அணுவுதவி செயினுமலை யளவுதவி யவர்க்கருணற்
குணநிதிகள் செயல்காட்டுங் குளிரமுதத் துளியுதவிக்

* வீதிகோத்திரம்—அக்கினி. i கருபம்—திசை. o யாமினி—தெற்கு. அம்பரம்—திசை. ! பச்சிமவுலகு—மேற்றிசை. ] அரி—வாயு. அரிதம்—திசை.

இணையிறல மிதுதிரட்டி யின்னமுதும் பருக்களித்தாங்
கணையுநிறை மதிசிகரத் தணிதரு ○சேகரநிகரம். (௫௯)

கமதமுதத் துளிபரந்த நறுந்தலமந் திரநாதர்
தமதருளிங் கெளிதெமக்குச் சார்மெனவந் துடற்கண்ணர்
கமமுறல்போன்ம் விரவு ?சுவா கதமாதி பாதிநுகர்ந்
திமைதருபல் வடுக்கணிறை []யிரதமகீ ருகநிகரம். (௬௦)

வித்தின்றி முளைத்தெழுந்த வீறுபிர தாபநிறைந்
தெத்திசையும் பரந்ததென விளந்தளிர்கான் றொளிர்மாழை
யத்தனலோ திமமுச்சி யலவன்மறை யோதிமமே
யொத்தவடிக் குடாவடி *விண் ணேச்சுமடிக் கடாக்கிடியே. (௬௧)

திசைக்கரிய முகக்கவளத் திரள்கொடுக்கும் பாகரென
விசைக்கரிய சுவைக்கனிதூங் கிருஞ்சாகை திசையுரிஞ்சு
மிசைக்கரியன் சுதன்மைமுனம் விரவுகுளிர் நிழல்பரப்பு
நசைக்கரிய முசுக்கலைபன் னலநுகர்தே மாந்துருமம். (௬௨)

1சேதார முகந்தெறிபஃ றிரைத்தடநீர் பருகுபல
2சேதார முகந்துதிர்பஃ றீங்கனியா தியநுகர்வ
3சேதார முகமுடிவுஞ் சேராத தீர்க்காயுட்
4சேதார முகந்துருமிச் சீர்த்துருமஞ் செப்பரிதால். (௬௩)

புன்னைநற வங்குரபம் பூகமிலாங் கலிகுடசம்
முன்னை வழை வில்லம்விளா முண்டகமா ரஞ்செருந்தி
வன்னிகளா விதழிபலா வகுளநரந் தஞ்சாளம்
பன்னிலகு சங்கோங்கு பாடலமுன் னீடலவண். (௬௪)

மாதவிதண் மௌவன்மன மாலதிக மாலதிகள்
போதவிர்வண் சாதிமணம் பொலிமயிலை சண்பகமே
யாதியபைந் தாதவிழு மல்லிமலர் வல்லியெலாம்
பாதவமீப் பிரிவின்றிப் படர்ந்தொளிரு மடந்தையர்போல். (௬௫)

குருகுலகோ கிலங்காளங் குயிற்றமிரு தங்க ○மரி
மதுகரம்யா ழிசைப்பமுசு மலர்காதா ளம்மசைப்பச்
சதிமுறைமை வழாமையயற் றடமஞ்ஞை நடம்புரிய
முதுகனிப்பொற் றிரளையருண் முதலமுத !சேகரங்கள். (௬௬)

---

○சேகரம்—மாமரம். ?சுவாகதம்—கிளி. []இரதமகீருகம்—மாமரம். *விண்ணேச்சு மடிக் கடாக்கிடி விஷ்ணுவாகிய நிகரிலா வராகம். 1சேது—அணை. 2சேக்களும் தாரங்களும் உகந்து நுகர்வ. 3சேதாரம்—அழிவு. 4சேதாரம்—மாமரம். ○அரி மிருதங்கமும் கோகிலம் காளமும் குயிற்ற. !சேகரங்கள் அருணம் என்க.

மாதவர்கை யிளநரும்புன் மடிநுகரு மானிளங்* கன்
றோதுட்ச மலகிடுவ யுழுவைநிரை வாலதியாற்
போதகநீர் தெளிப்பவரி பூக்கொய்பணி தருஞ்சாபந்
தீதிலிணைச் சிறைச்சிவிறித் திருத்தொண்டு செயுமாங்கே. (சுஎ)

கிளையமர்பைங் கிளைபுணர்தன் கிளைநுகரக் கிளைவானின்
விளைமலர்தூய் விளைதருவின் விரைக்கனிகொ ணுத்தாவஃ
துளையெறிந்தன் றுளைவுறவேம் புணக்கொடுத்தாங் கூடன்மிரு
மளையினுமிக் களைதருமா விலைச்சுவையு மிலையதனால். (சுஅ)

வேறு.

இன்னதனிச் சூதநிரை யின்சுவையா ரமுதமய மிதுமந்த் ரேசன்
றன்னருளா தலின்வானந் தருமமுதி னுடற்குறுதி தருதலன்றி
மன்னுமுயிர்க்குறுதியையும்வளர்ப்பதெனுமுளப்பொலிவுமருவுவாஞ்சை
துன்னுதபோ தனர்மலத்தின் றொகைமுனியுந் தகைமுனிவர் சூழ்ந்தா
[ரங்கே. (சுகு)

காசிபர்மார்க் கண்டர்கௌ தமர்பிருகு கடயோனி கர்க்க ரேவி
யாசர்சுக ரத்திரிகுற் சகர்புலகர் யஞ்ஞபா லகர்பா ரத்து
வாசர்சனத் தனர்சனகர் வருணர்சனந் தனர்சத்தி வாம தேவர்
கோசிகர்ப ராசரர்க கோளர்புலத் தியர்வசிட்டர் குற்ச ராதி. (எ0)

சிவமுணர்மா தவமுனிவர் திருவமுத சூதவனந் திகழச் சேர்ந்தே
யுவமனிலா வுவகையரா யொருபோது மொருவாத வுளத்த ராகி
யவணுறைபல் லாச்சிரம மாமுடச மாக்கியினி தமர்ந்தா ரந்தத்
திவியமுனி சிகாமணிகள் சீலகுணச் சிறப்பெவர்வாய் திறக்கவல்லார்.

அன்னவர்தா முன்னமர்சீ ரருட்கைலை மந்தரமே ருவைமுன் னாய
வென்னசிவ தலங்களினு மிலங்குசிவ தீர்த்தமெலா மிவண்வந் தென்று
மன்னுகவென் றுன்னினரம் மாண்புணர்ந்தாங் கனைத்துலகும் வயங்கு
[மந்தப்
பன்னரியதீர்த்தமெலாம்படர்ந்தவண்பஃறடங்களெனப்பரம்பிநின்ற.

களியளியுண்டுவெட்டெடுப்பக்கமழ்பிரசப்பெருவெள்ளங்கான்றுநாளும்
வளர்கமலத் துணைகுமுத மலர்த்துணைகு வளைத்துணைசை வலத்தை யுள்
[தென்றும் [அிட்
டுளபொருள்கட் குறையுளென வொளிர்தருமவ் வுயர்தடங்க ளுலவா
பளகறவிப் படியிலெவர் படியினுஞ்சூழ் பாவமறப் பலன்க ணல்கும்.

* கன்று மாதவர் மடியிலிருந்துகொண்டு அவருட்டும் புல்லை நுக
ரும் உடசம் என்க.

மாதர்வன சம்மனையின் மாளமணம் புரியவன மலிவெண் சங்க
நாதமிசைப் பனகுமுத நற்சுடரோங் குவகித நறுந்தேன் பாடுஞ்
சீதமா கதக்கலநித் திலகீராஞ் சனந்துவரிகள் செறியு மம்பு
சர்ததமா லம்வளைப்பத் தக்கமுர சொலிப்பனபோ தகங்க ளாங்கே.(எச)

வாளைகள் * வான்றவரெனவவ்வாவியினும்வாவியெழில்வளர்சூதத்தின்
றுளதிர மோதுதலுந் தகுஞ்சுவைமாண் கனிகளபல தருவதாமே [ண்டு
கோளுறுநெஞ்சினர்தீமை குயிற்றிடினும் பொறுத்தவனைக் குணமாக்கொ
மீளவுநற் பலனுடனே மிக்களிக்குந் தக்கவர்செய் மேன்மை காட்டும்.

வாவிதட மாநிரைசெவ் வனசநிரை மீதயல்வெண் மலர்தண் பூகந்
தூவியதம் மடைதுதியாற் சுரும்பாற்றக் கனிகனிதேன் றூவா நிற்றன்
மேவியவும் முனிவார்நூல் விதிமறுவோ டொண்பொரிதூய் விளங்கு
[செம்பொற்
றுவிரிவட் டகைநறுநெய் தகச்சொரிந்தா குதிசெய்மகத் தகுதிகாட்டும்.

இத்தகைய பற்பலமா ணெழிற்றடங்க ளிடையுலக மெனைத்து முள்ள
வுத்தமமா தீர்த்தமெலா முவந்தினிய பாவனமா யுற்றெஞ் ஞான்றுஞ்
சித்திபுத்தி பத்திமுத்திச் சிறப்பவையு மொருங்கருளுந் திறத்தினாலு
மெய்த்தகையபுண்ணியமாவிருக்கமெலாம்பெருக்கநிலாம்வியப்பினாலும்

திருவமுத சூதவனத் திருநாமத் தொருவாத சிறப்பினாலுந்
தெருளமுத மீட்டியருட் டெள்ளமுத மூட்டிவளர் சிவப்பே றுய
பொருளமுதசிவானந்தபோகமடுத்தடுத்தவர்க்கோர்புறத்தின்வெற்பின்
வருபெரிய நாயகிசேர் மந்திரநா யகனருளு மாண்பி னாலும். (எஅ)

கத்துதிரைக் கடலாடைக் காசியினிற் கண்ணுதலோன் கலந்து வாழு
முத்தமமா தலமெவற்று முத்தமோத் தமதாமென றலகு போற்று
நித்தியமா தலமிதுவேநிசஞ்சொன்னேன்முகமனென நினையேலென்று
வத்தகைய திருநந்தி யடிகள்சனற் குமாரமுனிக் கருளி மேலும். (எகூ)

இவ்வருமை பெருமைதிக ழிருங்காதை யதிகுய்ய மேனோர் தம்பா
லெவ்வவைய வேதுவினு மியம்பேலன் பொழியாத விதய சீல
மெய்வருபக் குவம்பழுத்த வித்தகசங் கமங்களுக்கே விளம்பு கென்று
தெவ்வடுவேற் பணிகொண்ட செவ்வேளிங் கெனக்கருளிச் செய்தான்
[மன்னோ. (அ0)

துனித்துணர்வித்தகநினக்குநுவல்வானேன்விரித்திதெனநுதற்க!ணந்தி
யினித்ததிரு மான்மியமீ திசைத்தனைகேட் டளவாத வின்புற் றெனப்
பணித்தவள மதிவேணிப் பானருள்பெற் றுய்ந்தவர்சேர்ப் பண்பி னோடித்
தனித்தவன மாண்பினுக்கே தனித்தவன முளனின்னுஞ் சாற்றுகென்றாய்.

---

* வான்றவர்—வானவில். ! நந்தி என என்றியையும்.

என்றுசனற் குமாரமுனி யெழுந்திறைஞ்சி நின்றானென் றிசைத்து சூத
வென்றிபுனை மாதவனை விரைக்கமலத் தாள்பணிந்து மேலு மெந்தா
யன்றருணந் திசனவற் கருளியவா றெமக்கின்னு மருளு கென்னு
னன்றுணர்ச வுனகாதி நற்றவர்போற் றியசூதனிவ்வா னுமன்றே.

வேறு.

நூது சவுனக ராதி முனிவர ரோகை நனிபெற மூதுணர்
சூத முனிமுன மோதி யருளின சூத வனநிய மான்மிய
மீது கனிமன மாத ரவின்மிக யாவர் வினவின ரோதினர்
மேத கவர்புவி வாழ்வு முழுவது மேவி யுறுவதொர் வீடரோ (அக)

சூதவன நாமகாரணச் சருக்கம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் ருசுக.

# ஆதிசேடனுபதேசம் பெற்றசருக்கம்.

தேமிகு மாமனு நாயகன் மேவிய சிவமாதல
மாமிர கானன மாகிய மோதின மகிநாயக
னேமுப தேசமு னேபெற லீதென ரசிதாசல
நாமிகு காவல ஞானசி காமணி நவில்வானரோ. (க)

வேறு.

இந்திரை இந்தி ராணி யிரிரு கோட்டு வால
சிந்துர நினைத்தாங் கீயுஞ் செம்மணி காம தேனு
மூந்துமைந் தருக்கள் வான முதமுதற் பொருளெல் லாமும்
வந்தவா காமாங் கீர சாகரம் வழுத்தற் பாற்றே. (உ)

தொக்கமு துணம திதார் மதித்தடி தொழாமைக் காவி
நக்கமுன் னுலங் காட்டி நயந்தடி பணிந்த பின்றைத்
தக்கபே ரமுத மீந்து தண்ணருள் புரிந்த நீரா
விக்கட லிபமு கத்தெ மிறைதிரு வருட்செங் கோலே. (ங)

இத்திருப் பாற்க டற்க ணிடைமணித் தீவ மொன்று
புத்திதழ்த் தவள மாவம் புயப்பொகுட் டெனத்து லங்கு
மெய்த்தகத் தீவி னிற்சு வேதமா புரம்பொ குட்டின்
மத்தகத் தமர்வெள் ளோதி மத்தெழில் காட்டு மாதோ. (ச)

வழுத்துறு மச்சு வேத மாபுரச் செம்பொற் கோயின்
முழுத்தவம் மாளா வேந்து மூதுகம ரம்பொன் மேனி
பழுத்தநாப் பயிலால் வேதப் பண்ணவ னென்ன மேவும்
விழுத்தகு மனைய செம்பொன் வியன்மணிக் கோயி லுப்பண். (ரு)

உருவளர் தவள மேனி யுரகவேந் தடல்வ ளைத்து
மருவுமெல் லணையவ் வேதன் வயங்கு வெண் ணீறு பூத்த
திருமுக மதிய மென்னத் திகழுமா லிதன்பா லன்றோ
ளிருவிழி மணியின் சோதி யெழுந்தொருங் கிலங்கு மாபோல் (௬)

மாலிசை மாலின் மேனி மாலினி தமரு மாலிக்
காலயில் கால கல்பூங் காவொளிப் பரியங் கத்தின்
மேலறி துயில்கொள் வேலை விண்ணுயர் விமான கத்தின்
பாலொரு பால பானுப் பான்மையிற் படர்ந்து பல்கி. . (௭)

மின்னொளி யுலகம் போர்ப்ப மிளிர்மணிச் செம்பொன் மௌலி
சென்னிசேர்ந் திலங்க நீற்றுத் திருநுதல் பரிதி யோடு
துன்னுவெண் பிறையை மானத் தூமணி குண்ட லங்கள்
மன்னுமவ் வென்றா ழின்பால் வருமிரு குழவி மான. (௮)

இருவிழி யப்பதங்க னெதிரரு ணறவெஞ் ஞான்றும்
பெருகுசெங் கமல மானப் பிறைமுன மலர்செவ் வாம்பல்
பொருவிய திருவா யென்றும பொலிந்திரு மதகிற் பாய்ந்துங்
கருணைநீ ரனுவுங் குன்றாக் கவின்றிரு வதனங் காட்ட. (௯)

மைம்மலைக் கிளைத்த நான்கு மாமணிச் சிகரமென்ன
விம்முதிண் டோளி லங்க வெங்கதிர் தன்கி ழத்தி
யம்மலை மணந்தாங் கோர்கை யாத்தவெம் பரிதி தோன்றச்
செம்மரை மராளத் தாங்கோர் செங்கையிற் சங்கி லங்க. (௧௦)

வரதநல் லபயம் வாம வலத்திரு வண்கை காட்ட
வரதநு முதல மைந்த வங்கத கங்க ளாதி
யுரதந வைசயந்தி யுயர்மணி யார மாதி
சரதநு வொளியெங் கெங்குந் தனித்தனி கான்றி மைப்ப. (௧௧)

கவினிறை மணிவேந் தாகுங் கவுத்துவ மணிமா தீப
மவிர்தர வனவ னத்தண் ணணிநிழல்பரப்பு மார்பாந்
திவியவா தனத்தி னீல மணிமிசைச் செம்பொன் சேர்த்தாங்
குவமனே யுலகெ லாந்தேற் றொருபெருந் திருவிளங்க. (௧௨)

மறுவெனப் படுவ யாவும் வர்ச்சித மெவர்க ளாலு
முறுமிடத் துயர்வா லன்றே வுலகெலா முணர்ச்சி மேன்மை
பெறுபெருங் கவிக ளெல்லாம் பேணுமா பெறுமி தென்னத்
திறமெழின் மறுவொன் றம்ம தூயவம் மார்பி லங்க. (௧௩)

உலகெலா மாபி னேங்க வுற்பவிப் பிக்கு மூல
குலமகப் பசும்பொன் றேசு கூர்மல ருந்தி யோடு
தலமெலாம் போற்று தாமோ தரபதப் பொருளின் வாய்மை
மலர்வட தளிர்மே லாந்தன் மல்கெழி லுதரங் காட்ட. (கச)

மாற்றுயர் சுவண நாக மருங்கொளிர் தாச்செங் கேழ்ப்பன்
னூற்றிதழ்க் கமல நீரி னூற்றிதற் கொப்பான் பன்னாட்
சேற்றிரீஇப் பங்கத் தோற்றஞ் சிவணிய வுலகமெல்லாம்
போற்றிய வெழின்மென் பாதப் போதருட் டென்ற தும்ப. (கரு)

பரிபுர மாதி யம்பொற் பன்மணிப் பணிய ணிந்தார்க்
கருள்செயல் பலமுன் கூறி யழைத்தென வொலிப்ப நீலத்
திருவுறு நிறனு மேற்கொ டிருவெண்ணீற் றொளியுந் தன்னை
மருவியற் குணனுங் காப்பின் வரைவரை குணனுங் காட்ட. (கசு)

* கடிமல ராசா ரத்தின் கதிரொளி படைப்புந் தானே
கடிமலர் மகற்கொண் டாற்றல் காட்டிரா சதம்வி ளக்க
கடிமலத் தவர்பல் லோர்முன் கணணருள் விழைந்து போற்றக்
! கடிமல விகங்க ராசன் கைகுவித் தெதிர்நின் றேத்த. (கஎ)

தேனல ரம்பு சாதச் செம்மல ரயன் ο மா லாதி
வானவர் சென்னி தாழ்த்த மாதவர் சூழ்ந்து வாழ்த்த
வானவர் பன்னி மாரங் காங்குபல் லாண்டு கூறக்
? கானவர் வைவ ளத்தின் கைவளத் திசைக ளேற. (கஅ)

இன்னிய முள்ள வெல்லா மெழுந்திசை யெடுப்ப விண்ணிற்
கன்னியர் மரபி னடைக் கதைவசி சார்ங்க மாதி
பன்னியற் படைக்க லம்பற் பலகுழீஇப் பணியி னிற்பக்
கொன்னியற் சேனைக்கோன் பொற்கோல்கொடு நெருக்கொதுக்க. (கக)

மாமறைத் துழனி மல்க மற்றுள கலைகள் பல்க
தேமலர்ச் சுழற்பூ தேவி தேற்றெழி னீளா தேவி
மாமலர்ப் பூம்ப தங்கள் வருடியாங் கிருபா லோகை
யாமல ருததி மூழ்க வமர்ந்தரு டிருவோ லக்கம். (உ0)

வேறு.

தன்னுளங் கவர்ந்த கண்ணிறை காட்சித் தக்கபே ருவகைநேர் தரக்கண்
டென்னுடை நாதா விருஞ்செகந் நாதா விந்திரை வந்தித நாதா

---

*கடிமலர் ஆசாரம்—விளக்கம் விரிந்த ஆடை. அது பீதாம்பரம். !கடி—விரைவு. மலவளப்பமுடைய. ο மால்—இந்திரன். ? கானவர்—கானம் பாடுவோர். வைவளம்—வீணை.

மன்னரு ணிதியே வைகுண்டபதியே மாசிலார் பெறுபெருங் கதியே
யின்னருட்டிதியேயியற்றுதண்மதியேயாவையுமுணர்ந்தமாறதியே. ()

என்றினிதனந்தனனந்தமாண்டுதிகளிசைத்தினிதெந்தையேயென்றும்
பொன்றுறா நித்தியா னந்த புட்பு போகமேம் புரிவதாய் விரிவதாய்ப் போத
நன்றிலாச் சனன சாகரங் கடத்து நலத்ததாய் வுலத்தவே தாந்த
முன்றிகழ்சகலாகமங்கள்சம்மதமாய்மொழியிமெய்வழியினைமுறையே.

அறிவிலாச்சிறியேற்கருள்கெனவிரப்பவன்னதுதன்னிருசெவியேற்
றிறைவனு மனைய முகுந்தநா யகன்போ லீசசற் குணநிதே யிதுகேண்
முறையினின் வினவுக் கிறையென வருளு முற்றுணர் பராபர முதலாய்
நிறைசமு சார வுததி தா ரகமாய் நித்தியா னந்தநின் மலமாய். (உக)

ஆதிமத் தியாந்த ரகிதமா யனாதி யாய்நிரு விகற்பமா யளவாச்
சோதியாய்ச் சமயா தீதமாய்ச் சிவதத் துவமுப சாந்தமுன் னுய
நீதியாய் வேத முடிவினிற் பிரம நேயமாய் நிறைசதா சிவத்தை
யோதியா லுள்ள படியணர்ந் துபாசித் துறுநிலை பெறுமவ ரெவரோ.

அவர்கணீ வினவு ரகசிய நெறிமுற் றறிவரீ தறிந்திலா ரெவர்மற்
றவரொரு சிறிது மன்பிலார் நாரு ளதமாங் கவர்களே யாவர்
தவமிகு மனந்த வாதலா லனைய சதாசிவ மூர்த்திபூ சனையே
தவநின வேட்கை தருமலால் வேறு சாதன மிலையிது சரதம். (உ௩)

யாவரே தீரத் தவம்பெறீஇ யோரைந் திந்திய * புபுட்சுக்க ளாகா
ரோவியே நிராசை யொடுபயன் கருதா துத்தம பத்திபெற் றுய்வோ
ராவரே யரிய முமூட்சுக்க ளென்றுங் கருமறை பெருமுறை யறையும்
வாவுறும் விடய நுகர்ச்சிமுன் னுவ மாற்றுதற் கசத்தரே லவர்தாம். ()

விதிவழி வழாமன் மதிநதி வேணி விமலனை யமலமா விழைவாற்
றுதிவழி பாட்டிற் பதிமன மாட்டித் தரிசறப் பூசித்த லதுவே
கதிவழியாமா லிதுதுணிந் தென்றுங் கைவிடா துய்வுறக் காணூஉ
மதிவழி யுடலுள் ளளவிரு வினையின் வருபயம் னொருவற நுகர்ந்து.

நியதிசெய் பூசோ பாசனு பெலத்தா னிமலமெஞ் ஞானமுன் னிகழு
முயர்விலா வாய்மை மலர்சிவ ஞான வலியினுன் மருவுதே காந்தத்
துயர்விலா தென்று மழிவிலா தமரு மத்துவி தானந்த போக
வெனிறை மோக்க நண்ணுப தின்ண நன்குண ரங்கத நாத. (உ௬)

ஆதலாற் சமுசா ரோததி கடந்தே யருளினு னித்தியா னந்த
போதவீ டுறுதற் கேதுவச் சிவனைப் புலமொரீஇ நலமரீஇப் புனித
பாதமெய்ச் சிவஞா னம்பெறீஇ யுள்ள படியுணர்ந் திரண்டறப் பயிற்று
மோர்ந்பூ சனையே யன்றிவே றிலையான் முடிபிதென் றுணரதி மூதவ.

* புபுட்சுக்கள்—புசிக்கும் இச்சையுடையார்.

செப்பியாங் கினைய தத்துவ முணர்ந்து சிவத்துவம் பெறற்கிடை யூரு
யொப்பரும் பசுத்து வம்முயி ரொவற்று மொழிவுரு வழிவிரிந் துளதா
லிப்பசுத் துவந்தா னெத்தவத் தாலு மிரிந்திடா திரித்திடு மிவனே
யப்பர மோக்க விருப்பனிட் களங்க னகமிலா னெனுமறை யந்தம் (௩௦)

வேறு.

இத்தகைய பசுத்துவத்தை யிரிப்பதுவே பாசுபத தீக்கை யாகு
முத்தமமா மிதுவிரசர் வோமமுட னிகழ்வுறச்செ யுண்மைத் தாமாற்
பத்திமையால் விரதநெறி பன்னிருநா ளியமமுறப் பயிற்றல் வேண்டும்
வித்தகவம் மகதீக்கை விதியினைநா முள்ளபடி விளம்பக் கேணீ. (௩௧)

இன்னவிர சாமகத்துக் கிடுஞ்சமித்துக் கோமயமன் னிதுகொள் காலம்
பன்னுமுவா விருநான்கு பதினன்காந் தினநான்கு பரம மிந்த
மன்னுதினத் தீன்றணிமை வருபிணியி னுக்கன்னி மலடு மூப்பே
யுன்னுறுகன் றிறப்புமல முண்பதிவை யுறுநிரைநன் குணர்ந்து சார்ந்து.

அனையநறுங் கோமயத்தை யளிக்குங்காற் றமனைமெல் லடையிற்
சாத, மனுநவில்பேற் றம்மயமேல் வழும்பகற்றிக் கோசலம்வா மத்தாற்
பெய்து, பினைநவிலு மகோரத்தாற் பிசைந்துருட்டி யுலர்த்திமுனம் பே
ணிக்கொண்டே, முனநவிலோ மந்தொடங்கன் முறையாமம் முறையுமே
ன்மொழியக் கேட்டி. (௩௩)

அக்கினிகோத் திரமுளரி யரணி *சுசி ?தரணிசிலை யழலிம் மூன்றிற்
புக்கதொரு ||வசுவெழுப்பிப் புருடத்தான் மப†சுட்கம் பொலியமூட்டிச்
0சொக்கிர கியமாகுஞ் சூத்திரத்திற்சொன் முறையித் தூவேள் விக்குத்
§தக்கமனு நாலொன்பான் றத்துவா தியசுத்தி தயங்கக் கூறி.. (௩௪)

சொல்லியவான் கிருதத்தாற் சொல்லியவா றுருதிக டலங்க வாற்றி
யில்லியலுஞ் iiசயாதியோ மச்செயலு மீற்றின்முறை விளங்க வாற்றி
நல்லியன்முற் றமைந்துபிரதிட்டையிலா வோரிலிங்கநாடிக்கொண்டாங்
கெல்லியனூல்விதிப்படியேபிரதிட்டைபுரிந்தருச்சித்தினிதுபோற்றி.

மேவுபசுத் துவநீக்க விருப்பொருநன் னெறியொழுகும் வேதியர்க்குத்
தாவருநால் வகையுண்டிதக்கிணைதாம் பூலாதி தகமு னல்கிச்
சேவுடையான் பாசுபத தீக்கைமுறை யங்கிசிநாற் றிணியா மத்துந்
தேவியலவ் வருட்குறியைத் தியானமிடை யறாதன்பு திகழப் போற்றி.

---

* சுசி—அக்கினி. ? தரணி—சூரியன். || வசு—அக்கினி. † சுட்கம்—உலர்த்தப்பட்டது. 0 ஆறு சூத்திரங்களுள்ளே தத்தம் பரம்பரையிற் சொந்தமாகக் கிரகிக்கப்பட்ட சூத்திரத்திலென்க. § மனுவை முப்பத்தாறு தத்துவ சுத்தி தயங்கக்கூறி என்க. ii ஜய என்னும் மனுமுதலிய மனுக்களால் யாக முடிவில் பூரணாகுதிக்குமுன் செய்யும் ஓமம்.

வேண்டுருபட காரணமெலாம் விருப்பமிக வணியிட்டி விளங்கப் பூசித்
தேண்டருமெம்பெருமானையிந்துசேகரனையெம்மிறையையமன்றிற்
றுண்டவருஞ் சிதபாதா தன்கிரிசை மகிழ்நாதா தமியே னிங்காட்
பூண்டவிர தம்முடித்துப் புணர்பசுத்து வம்முழுதும் போக்கி மேலும்.
உள்ளபடி சிவத்துவப்பேற் றுண்மைதிகழ் தாவருளே யுதவு கெந்தாய்
கள்ளமனத் தேனெனினுங்கைவிட னின்னடிமையெனக்கரைந்திவ்வாறு
தெள்ளுமுளத் தீராறு தினங்களும்பூ சனையோமச் செயலோ டாற்றி
கின்னருளாற் பதின்மூன்று நாளுதய நித்தியமு நடாத்திப் பின்னர். ()
நேசனையாப் பூசனையா னிலவியவக் குலவிலிங்க நிமலன் றன்னை
மாசனைவ ருந்தெறவே மதித்தமைந்துசிவானுபவ மனஞ்சேர்த்தென்று
மீசனையே பசுத்துவநீக் கிடுதிறமை யொடுதிகழு மெழிலா சாற்கு
பாசனையாற் றக்கிணைதாம் பூலமொடு பரிந்தளித்துப் பணிந்து போற்றி.
பின்பனைய குரவனைநாற் பெருமறையோர் மரபினரைப் பேதி யாமெய்
யன்புறுமா கேசுரரை யறுசுவைநால் வகையுண்டி யயில்வித் தன்போ
டின்புறுதக் கிணையாதி யினிதளித்தி யகிந்திரநீ யிவ்வாறுக
முன்புரிய பாசுபத தீக்கையிடை யூறின்றி முடித்தி யாலோ. (௪0)

வேறு.

முறைமையினித் தீக்கையினை முடித்தியெனிற் பசுத்துவம்போய்
நிறைவிரசா யோமத்தா னிருமலகாத் திரனுதி
யறைதருமிச் செயன்முடிவி லாசமண மிருமுறைசெய்
திறைவிரசா வோமாந்தத் தெடுத்தொளிர்வெண் ணீறுதல். (௪௧)
அங்கிகோத் திரமௌபா சனவிதி கோத்திரமத்
தங்கசிவாக் கினியிவற்றின் றாயதிரு நீறுதல்
செங்கையில்வைத் தங்கிரிதி பற்பமெனத் திருமறையிற்
றங்குபத முதலமைந்த தக்கமநு வோரேழால். (௪௨)
வலத்தனிக்கை மேன்மூடி மனனுறமும் முறைசெபித்து
வலத்தொடபி மந்திரித்தோ மாபோவென் மனுவாலு
நலத்தகைய * வாபோவா மனுவாலு நறுநீரைச்
செலத்ததிதே வினைநினைந்து தெளித்தனைய திருநீற்றை. (௪௩)
ஒப்பவெரு முப்பாக முறப்பகுத்தோர் பாகத்தைச்
செப்பருமீ சானத்தாற் சென்னியிற்றற் புருடத்தாற்
றப்பின்முகத் தகோரத்தாற் சாற்றிதய மகதேதா
டிப்பியவா மத்துந்தி சாதத்தாற் றிரன் சானு. (௪௪)

---

○ சனையே என்றும் மனஞ் சேர்த்து என்க. * வகரம்-உடம்படு மெய்.

இருகரங்க ளாமுறுப்பி னெழிலுறலே பனமாகப்
பெருகுறப்பூ சுபுபின்னர்ப் பிரித்துளமற் றொருபாகத்
திருவருள்காட் டிடுநீற்றைச் சென்னிமுதற் பாதம்வரை
யொருவறமெய்ப் பூசுபுபின் புடனிருகா லாசமித்தே. (௪௬)

அனந்தரமற் றொருபாகத் தணிநீற்றைச் சென்னிமுத
லினந்தருமைந் திடத்தாத லெண்ணிரண்டெண் ணுன்காதல்
வனந்தருதத் தவ்வகையின் மருவாறு றிடனுதல்
மனந்தரமுன் மனுமுறையின் மலிதிரிபுண் டரமாக. (௪௭)

தரித்திடுதன் மாபாமித் தகுநீறு தரித்தவரே
யரித்திடுவர் பசுத்துவமிவ் விரும்பாசு பததீக்கை
யுரைத்தவிதி வழாதன்பி னுஞற்றினுமுன் னுயிர்போல
வரத்தருமாண் புளதொன்று வழங்குவயற் றதுகேட்டி. (௪௮)

செபமூலம் யாகாதி செயன்மூல மருமுனிவோர்
தபமூல ஞானசா தனமூலஞ் சிதம்பரமா
மபமூல மறைக்குயிரா நன்மூலஞ் சின்மூல
மூபமான மிலாதென்று முயர்பஞ்சாக் கரமூலம். [௪௯]

கலிலிஃதேழ் கோடிமநு ராசாதி ராசமனு
திவியமனுப் பாசுபத தீக்கையினும் பலனளித்தற்
கவிர்தருமுக் கியநிபமா மதிகார மிதன்பாலே
கவிதருமிவ் வருட்பஞ்சாக் கரமுறைநீ பெறல்வேண்டும். [௫௦]

பரமசிவப் பிரசாதம் பரிந்தருளிம் மனுவேந்து
வரமிகுமா றக்கரமா மருவுதொகை வகைமலரு
மானதிக னேயெனைமுன் னுஞ்சாரு னெனின்மனுவு
டானதிக மிதுவென்று செப்புவதென் றெளிமனத்தோய். [௫௦]

வேறு.

வேத முடிசொல் கைவலிய விமல மோக்க நாயகமிப்
போத மயமக் கிரமேயாம் புனித முனிவர் கனிமனத்திற்
பேத மறவீற் றிருக்குமிதிற்பிறங்கோரெழுத்தின்பெருமையெவ்
வோத லரிதே யுன்னரிதே யும்ப ரவர்க்கு மயற்கெனக்கும். (௫௧)

சகல வேத கோடிகளுஞ் சாற்று சிரங்க ளெல்லாமுஞ்
சகல கலையு மெய்பொருளுந் தன்னு ளமைந்து தனிவிளங்க
வகல மனிக்கு மாதார மாகு மவற்று ளெஞ்ஞான்று
மகல வரிய வாருயிரா யவிரு மகரமக் கிரமிதுவே. (௫௨)

சுத்த சித்தா னந்தவுப சாந்த பரிபூ ரணவிமல
சுத்த முத்த நித்தபா சுத்தாத் துவித பரப்பிரம

வத்து தானென் றுபநிடஞ்சொல் வாத பரம சிவனென்று
முத்தி முதலாய் வீற்றிருக்கு மூல மகாமந் திரமிதுவே. (௫௭)

ஏனை மனுக்கள் குடிலையுஞ்சேர்த் தெண்ணப் படுவ தத்தமெழுத்
தான வளவை சிற்சிலதம் மந்த மருவா தளப்பனவா
யான மநுவீ தக்குடிலை மருவா தந்தம் வரையெண்ணு
மேனதிருவைந்தெழுத்தெனவேவிளக்கு மியற்சீர் பெறுமனுவாம்.

இதனை விதுதா ரகஞ்சேர்ந்தா றெழுத்தா யெண்ணப்பெறினுமிதை
முதனூ லாதி கலையெல்லா மொழிவ திருவைந் தெழுத்தென்றே
சிதமா முனிவரிதுபேணிச் சிவாபி வியத்திப் பேறுற்றார்
புதர்பற் பலரு மிதுகொண்டே பொருவில் பதங்கள் பலபெற்றார்.

இன்ன மநுவே தத்திரயத் திடைநின் றிலங்கு மெசுர்மறையிற்
றுன்னு நடுக்காண் டத்திடைமீத் துலங்கு சீருத் திர நாப்பண்
மன்னு நமசி வாயவென வழுத்திம் மநுவை திகமுதலா
மின்ன லொழிந்துய் வுறவுயிர்கட் கீசன் பொதுவி னிசைமனுவாம்.

யாவ ரிதயத் திம்மனுவீற் றிருக்கு மவருக் குபநிடதத்
தாவில் பொருளா லருந்தவத்தாற் றருதீர்த் தாதி யாகாதி
யோவி லறனாற் றமக்காக வேண்டும் பயனவே றொன்றிலையான்
மேவிம் மனுவோர் முறையேனு மெய்யன் புறவோ தாவிடிலோ.

கணிப்பி லபார துக்கபயங் கரசங் குலவா கரமாய
கணிப்பில் சமுசா ரப்பெருஞ்சா கரநீந் துறவே றுபாயமிலை
தணிப்பில் சகல வுபநிடபூ டணமிம் மனுவே சகலசுகந்
தணிப்பில் பரம சிவஞானோ தயமுக் கியகா ரணமாகும். (௫௮)

தருகை வலிய சிற்சொருபந் தன்னை விளக்கு மணிவிளக்குத்
தருபல் குரூர பஞ்சபா தகதா வாங்கி யென்றுரைக்கத்
தகுமிப் பிரண வஞ்சார்பஞ் சாக்க ரம்மே மோக்கம்விழை
தருநால் வருணர் சங்கருஞ் சாற்றும் வரோப காரமநு. (௫௯)

தாமந் திரமீ தெப்போதுஞ் சுத்த மயமேயர்தலினு
லோம முதல பூர்வாங்க முசித கால முதல்வேண்டா
தேமமலியக்கொடுத்தல்கொளலிசைத்தலெலவைக்கும்பொருத்தமுள
தாம மிதுமா சுயம்பிரகாசத்து மகாமந் திரமிதுவே. (௬௦)

வேறு.

இம்மாமனு விற்சிவ லென்னுமிரண் டெழுத்தின்றொகை லசைவிரி
யிற்றிகழு, மம்மாபொருளுண்மைய ளப்பவரா *ரயனுன்முத னன்மன்ற

* அயன் நான் என்று பிரிக்க.

யாதியெலாஞ், சும்மாவென லல்லதென் சொல்லுவதித் துவிதாக்கா
மீதரு தூயபல, னெம்மானவி லத்தரு மோவிடார்முற் றிரித்தின்
பொருங் கீமென லாமொரு சொல். (௬௧)

மானந்தருமிம்மனுசற்குருவால்வழங்கப்பெறலன் றியெம்மாதலத்தின்
பானந்தனவிற்றினுமெண்ணியவெப்பலனும்பெறுகிற்றிலசாதலினுற்
சானந்தரு சற்குரு வாலுபதே சம்பெற்றுயர் சைவத லத்தினடைந்
தீனந்தவிரச்செபமாற்றினுடனெல்லாமெளிதிற்பெறலுண்மையதே. (௬)

எல்லாவுயிர் கட்குமு ளத்திலுந்தன் பெண்ணார்கள்க ளங்கமுன் னோர்
சிறிது, மில்லாதவர் காமமுன் னையதுரி சிரித்தோர்பய னின்மொழி
பொய்ம்மொழிமுன், புல்லாதவர் நூலுரை சீலர்களெம் புலனீத்தவர்
போற்றுறு சீடர்கள்பா. னல்லாதர.வாற்புரி தீக்கையினு னலைநீக்கு
மெய்ஞ் ஞானந லத்தகையோர். (௬௩)

இவ்வாய்மைக ளாதிய மைந்தவரே யிதவாய்மைய சற்குர வோரிவர்பாற்
செவ்வேபெறுமந்திரமேவிழையுந்திறனெண்ணியவாறுடனல்குமெவி
தவ்வாய்மனு வோதிட னோதி நல் லருண் மாதல னுகிடி ல்லாங்கலைதா
மிவ்வாழ்கட னீள்புவி வாழ்வுறவே யெழுதாரக மானதி ருக்கையிலே (௬௪)

தனிமேருவி மாசல மந்தரங்கே தாரந்திரு வாரண வாசியரு
ளினிதார்பிர யாகைதி ருச்சயில மிசைபுட்கர மல்லிகை யர்ச்சுனமே
முனிமேவார்பணி நைமிசங் கோகனமே. முதுகுன் றரு ணைசலந்தில்லையரு
ணணிசேர்திருக்காளத்திகாஞ்சிபுரநவில்பஞ்சநதம்மிடைமாமருதூர் (௬௫)

புலிவாழ்சிவ லோகமெ னும்மதுரா புரிவேதவ னம்புகல் சேதுமுத
லவிர்மாமதி வேணிசு யம்பிலிங்க மமர்மாதல மாவன கூவிளமா
சிவ*ராசவி ருக்கமு தற்பலவாஞ் செப்பும்மிலை கைப்பொருளாக்குமுன
நவின்மாமனுவின்செபமெய்ப்பயனைநவின் றும்மிதுநிற்குலகின்புறவே.

எனநாரண னோதிய வாய்மையமு திருகட்செவி வாய்நுகர்ந் தேயமுத
நனிகூரகி நாயக னோதுறுமென் னுதாதிரு நாதவெ னக்குயிரி
னினியாரினி யாருனை யல்லதையிங் கெளியேனுயு மாறிரங் காருளாற்
றனியோதியயாவுநின்பாற்பெறவேதமியேற்குளமார்வமிக்கூர்வதரோ.

அண்ணலெலனை யென் றுகொண் டின்னருளே யளித்தாயகி லம்முமை
ளித்தருளங், கண்ணுவருள் கென் றுப ணிந்தடியிற் கைகூப்பிய சென்
னியன் வீழ்ந்துபணிந், தெண்ணார்தர வேண்டலு நீண்டவனுங் °இரும்
பைப்பதி யெண்ணமு டித்துமென, நண்ணுநிதி பெற்றென முற்றுவ
கை நயவாரிதி மூழ்கின னுகபதி. (௬௮)

---

* ராச விருக்கம்—கொன்றை மரம். ° இரும்பை—பாம்பு.

பின்னையமொ டன்னப ணீந்திரனைப் பெருமான்றிருச் சந்நிதி முன்
னுறமோர், மன்னேர்மிகு புண்ணிய தீர்த்தமலர் வாவிப்புன லும்படிந்
தாசமியாத், தன்னேர்திரு நீறணிந் தெல்லைபெறுத் தண்மாமணி மெல்
லிலை கோலமுடன், கன்னேர்கவி கைத்திரு மாலடிக்கீழ்ச் காணிக்கைய
தாகமுன் வைத்தனல். (௬௯)

மேலுந்துதி விண்டமு னின்றனனவ் வியாளேசனுக் கத்திரு மாதவ
னைக், நாலுந்துதி செய்விர சானலமார் நுவல்பாசுப தச்சிவ தீக்கை
மறை, காலுந்துதி மந்திர மாதியெலா நயப்பப்புரிந் தத்திரு நீறளித்தெக்,
காலுந்துதி செய்திரு வைந்தெழுத்தைக் கருதிப்பொருள் வாய்மை
கனிந்தமனம். (௭௦)

வேறு.

ஏகச்சிவ மாகத்தனைப் பாவித்திரு கண்ணுற்
பாகத்துற நோக்கித்தகு பார்வைத்திரு வமுதாற்
சேகற்றுப வாசத்தனி விரதச்செயல் கோளங்
காகர்க்கிறை தேகத்தினை ஞானம்புரி விததே. (௭௧)

தன்னேர்முகங் கிழக்காகவுங் கதக்கோவினை யிருத்தி
யன்னோன்சிர மிசையங்கைவைத் தருண்மாசிவ ரூப
மென்னுவரு திருவைந்தெழுத் துபதேசமு னியற்றி
மன்னேர்சிவ மயமாக்கினன் மகிழேந்தகி வேந்தை. (௭௨)

உரையாதிக ளாலும்மன வுணராவொளிர் மனுவேர்
துரையாலொரு செவிவாயினு மொருவாத்திரு வமுதாய்
○வையாமுன மெனமாதவம் வாய்த்தோமென மகிழா
வரையர்தமெ யறிவானந்த மயவாரிதி படிந்தான். (௭௩)

நாவென்றொரு சிவமென்றிரு வேறின்றெழு தருமெய்
யானந்தமம் மானந்தம ரங்கைப்பெரு மான்றன்
பானன்றருள் காமத்தக பரிசாதிய பயன்றன்
மானந்தர வெல்லாஞ்சிவ மயமாய்வயங் கினனல். (௭௪)

அதிநாயக னலர்நாயகி யணிநாயக னடியிற்
றகுமாதர மிகவீழ்ந்தடிக் கடிதாழ்ந்துபஃ றுதிகண்
மிகவோதியல் வரிதாட்பணி விடையிக்குளம் விழைந்தா
ணிகவாழ்வயன் முதலோர்பத மெல்லாந்துரும் பெனவே.

மதியாநதி மதிவேணியன் பதவம்புய மலரோ
கதியாமனம் பதியாவொரு கணமும்மற வாதப்

○ வையாம் எனப் பிரிக்க.

பதிபோற்றருட் குறியாஞ்சுயம் பலிங்கேசுரபொற் பதமே
விதியோடருச் சனையேபுரி விழைவேமிக வமர்ந்தான். (௭௬)

என்றோதிய நந்தீசனை யிருதாள்சனற் குமர
னன்றாதர விறைஞ்சாகவில் கதைமேலுர யந்தே
நின்றோனென வருள்கூர்தனை நேயம்மிகு முனிவோர்
பின்றானா விறைகாதையென் னெனவாங்கவன் பேசும்(௭௭)

வேறு.

திருவைப்புணர் மாதவ னற்புமிகு திறனுற்றெழு சேட னுளக்களிகூர்
தரமுற்றுபதேசமுரைத்தகதைதனையற்பின்வினவினர்செப்பினர்தாங்
குருவைப்பெறுவார்கள்பசுத்துவமில்குலமெய்ச்சிவஞானமுறப்பெறுவார்
பருநூற்றிகவாழ்வுகண்முற்றுமொருபரமுத்தியுமேவுவர்நிச்சயமே. (௭௮)

ஆதிசேடனுபதேசம்பெற்ற சருக்கம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் (௬௨௪)

# ஆதிசேடன் சிவலிங்கம்பெற்ற சருக்கம்.

நிலமுழு வதுமுடி யின்கண் வாழ்தர நிறுவிய பணிபதி யன்பு கூர்தர மலர்மக டழுவுறு கொண்க னாருள் வருமொழி குருமொழி கொண்ட தோதினங், குலவுறு மனையன விண்டு பாலொளிர் குளிர்மா கதசிவ லிங்க மேலுற, நலநிறை செயன்முறை யின்ப மேதக நவிலுது மென வரு ணந்தி கூறுமால். (௧)

வேறு.

அருத்திமிகுசனற்குமரவருந்தவகேண்முகுந்தனடியடைவின்பேற்றாற்
றிருத்தகுபாக் கியன்விரசா தீக்கையினைந் தெழுத்தினுப தேசசிலன்
கருத்தொருமைச்சிவஞானக்கடற்படிந்தானந்தமுதங்களித்துண்டன்பு
பெருத்தெழநின் றனந்தனரிபிரசமலர்த்தாள்பணிந்துபேசுகின்றான். (௨)

குவலையமுந் தளித்தருளென் குருநாதா திருநாதா கோதெலாம்போய்ப்
பவலையமா கியபாசு பததீக்கை யிதமேற்கொள் பரிவி னன்போர்
திவலையளவிலனெனினுஞ்சிறியனமையலதகதிதேறனென்றென்
கவலையற வினிதளித்த கடமையின்மே லருளனுநின் கடமையன்றே,

ஆதலினு லெளியனெழுத் தைந்துபதே சப்பேற்றிற் கமைய வீசன்
காதலினாலனவரதங்கலந்துறையுஞ்சிவலிங்கங்கைக்கொண் டென்றுந்
காதலினுத்துடைத்தருள்பூசனைபுரிதற்கேவேட்கைதழைத்தேனுனை
யீதலினு னுளங்குளிர்வித் தென்னையருள் பின்னையமர்ந் திலங்குமார்ப.

னைவகைவேந்திறைஞ்சப் பின்றினிதிசைத்தவேத்தனைகேட்டிந்திரேசன்
கனியடியரெணைமுடிக்குங் கருத்தவகை நனிபூப்பக் கருணை கூர்ந்தப்
பனைகபதிக் கருள்புரிந்திப் பரிசுரைக்கு மனந்தகேள் பாரிற் சோணாட்
டினிலிறைவனருட்பெருக்கேயெனப்பொலியுங்காவிரியாற்றினுக்கவாசி
ஆசையினில் யோசனைமூன் றலர்பாரி சாதவன மதற்குத் தென்மேற்
றோசனையொன் றெனப்பெறுமோ ருழியமுதாம் பிரகுலங்க ளுலவா [தென்றுந்
தேசவிரி தரப்பொலிந்து திகழ்சூத வனமெனும்பேர் சிறப்ப வாய்ந்தாங்
கீசனருண் முழுதடைந்தார்க் கினிதளிப்பித் தமலமதா யிலங்கா நிற்கும்.

வேறு.

○ககுபமர் தாரங் கன்னி காரம்பா டலஞ்செ ருந்தி
வகுளகூ விளங்க டுக்கை மராகுரா நாரங் கஞ்சண்
பக||நிப நறவ ஞாழல் பன்னிதா தகிப லாச
மகில்வழை லிகுசம் வன்னி யாரமா விலிங்கை புன்னை. (எ)

சாலமா சினியி லந்தை தாத்திரி பாரி சாத
மாலமா துளைய சோக மரசுகர்ச் சூர மாத
மாலமஞ் சாடி நாவன் மதூகஞ்சே வோமை வெள்ளி
லேலமி லவங்கஞ் சாதி யிலாங்கலி பூச நாகம். (அ)

ஆதிய நிரைக ளந்த வாம்பிரா டலிச்செ றிந்து
சாதிதா டிமஞ்சம் பங்கி சண்பக மயிலை சிந்தின்
மாதவி மல்லி முல்லை மதூரமுன் வல்லி தத்த
மீதழீஇப் படர்ந்து பல்க விண்ணெலா மளந்து மல்கும். (கூ)

வேரிகை திமிர மாந்தி மிழற்றிசைச் சுரும்ப ராதி
சாரிகை காள கண்டந் தத்தைசா தகஞ்ச கோரங்
காரிகை யோதி மஞ்சி காவளஞ் சிவல்க போதம்
*வாரிகை யிசைமுற் றத்த மாண்செயல் வழங்க மல்கும். (க0)

வாவிபல் வலத்த டாக மடுச்சர சேரி கேணி
யாவியு வளக மேல்லை யலந்தைமுன் னுய வென்றுங்
காவிபங் கயங்கல் லாரங் கைரவ மாதி தாநீர்ப்
பூவிரித் துளங்க வர்ந்து பொலிவினெங் கெங்கு மல்கும். (கக)

மிருகண்டு சூனு வாதி விழுத்தவ முனிகு ழாங்க
ளருள்கண்டத் துவித போகத் தமர்ந்துவா ழுடசந் தோறும்
பொருசண்ட வேழஞ் சீயம் புண்டரீ காதி யாங்கே
வருதொண்டு பலவுஞ் செய்வதே மனெரூஇத் தமர்ந்து சூழ்வ.

○ ககுபம்-மருத மரம். || நிபம்-நீபம். * வாரி-இசைக்குழல்.

இன்னன பலவு ளங்க ளெல்லையின் றென்றும் பல்கு
மன்னமா வனத்தி லெங்கு மமுதமுன் னடுத்த தூய்மை
யுன்னியோ வுலகெலா மும்ந் துறத்திரு வுளங்கொண் டோகின்
மன்னுபுண் ணியவி சிட்ட மலபரி பாகத் தாலோ. (கங)

தானருண் மறைக ளாலுஞ் சாற்றுமற் றளவை யாலு
ஞானமா முனிவ ராலு மெனைமுன்வா னவர்க ளாலு
மேனவின் மனம்வாக் காதி வேறெவற் றாலு மெட்டா
மானமெய்ச் சிவமே லிங்க வடிவமாய்ச் சுயம்பு வாகி. (கச)

அவ்வன நாப்பட் டோன்றி யாரமு தெனச்சு வேத
மெய்வள ரொளியி னீடி விளங்குமவ் விலிங்க மூர்த்தி
திவ்விய சரண பூசை சிவாகம விதியாற் செய்தி
யிவ்வருட் செயனீ வேட்ட தின்றுறு புதுமைத் தன்றால். (கரு)

பதஞ்சலி யாகி முன்னாட் பரமனார் முன்ன ரங்கை
முதஞ்சலி கூம்பச் சென்று முறைமுறை யிறைஞ்சிப் பூசை
நிதஞ்சலி யாம லாற்றி நிருத்தநேர் காணப் பெற்றாங்
கிதஞ்சலி லங்கொள் வேணி யிறையருள் செயப்பெற் றாயால். (கசு)

வேறு.

இப்பகலு மப்படியே யாம்புகலிச் சூதவனத்
தொப்பரிய மெய்ப்பொருளை யுமாபதியை யெமாதருமை
வைப்பினைநூல் செப்புநெறி வழாமலருச் சனைபுரிதி
யப்பரம னெப்பொழுது மமர முத வருட்குறியில். (கஎ)

பணியரசே சிவார்ச்சனையாம் பணிபுரியப் பணிவொடுநீ
யெணியனைய சூதவன மெய்துமுன மெய்தகுபன்
மணிகனக நிதிவகைகள் வரம்பிலகொண் டருமறைக
டுணிபுணர்த்து சிவாகமமுற் றுரிசறத்தேர்ந் துளந்தெளிந்த. (கஅ)

நீதறுபோ தகராதி சிவமறையோர் வைதிகரை
மூதகுசீர்க் காசியப முதலாய முழுதுணர்ந்த
நோதகுபல் விமானாதி நிருமிதசா தகசதுர
ரோதுறுமெலா கிகம்வல்லா ருடன்றேவ கம்மியனை. (ககூ)

உடனழைத்துக் கொடுவிரைந்தவ் வுத்தமமா வனஞ்சேர்ந்தங்
கடைதினத்திற் கேத்திரபிண் டாதியுப வாசாதி
கடனமைத்து மடனகற்றிக் கதிபுகுத்து மான்மார்த்தத்
திடனிலைத்த சிவலிங்க சிவார்ச்சனைசெய் குதிவிதியால். (உ0)

சகலதல சிவலிங்க வியட்டிபூ சனைப்பயன்முற்
றகலமுற வளித்திடுமோன் மார்த்தபூ சனையதனு
லிகலரிய மரகதமா விலிங்கமுனக் களிக்கின்றோம்
புகலருமன் பாலென்றும்பூசைவழா தியற்றுதியால். (உக)

என்றருளி முகுந்தனா விறையிறைஞ்சி யெதிர்நிற்ப
மன்றன்மல ராதிகொடு மாபின்மா கதவிலிங்கத்
தொன்றியபூ சனைபுரிந்தீற் றோமாங்கி வினைநிரப்பித்
தன்றிருமென் கரத்தாலச் சாலிங்கந் தனையளித்தான். (உஉ)

அகியாச னடிவணங்கி யங்கையிணை விரித்தேந்தித்
தகுமலரா தியகொண்டா சானெதிரா னையின்விதியான்
மிகுகிரியா தியதெரிப்ப விழைதகுபூ சனைமுடித்து
நெகுமனத்தாற் குருபூசை நேரியற்றிப் பணிந்தெழுந்தான். (உ௩)

குரவெதிர்நின் றாவிறைபின் கூறுகின்ற னுன்மார்த்த
சாவிலிங்க பூசனையே சகலதல சிவலிங்க
பாமனபூ சனைப்பயனைப் பாலிக்கு மென்றனையாம்
பிரவணநா யகன்பூசை பேணுகெனப் பணித்ததையென். (உ௪)

அடிகளடி யேனுளத்தி னையமொழித் தருளுகென
முடிவணங்கி யெதிர்நின்றான் முகநோக்கி மொழிகின்றா
னெடியவனங் கதவேந்த நீகேட்டி நிபந்தெரிப்பாங்
கடிவருமான் மார்த்தநெறிக் காசறுமா பூசனைதான். (உ௫)

சுருதிசிவா கமமாதி துதிசருவ சம்மதமே
கருதுமது கைக்கொண்டோர் கனிவுறுதா வரலிங்க
பாமசிவ வழிபாடும் பரிவுமிகக் கொளல்வேண்டும்
வரமிகுதா வரலிங்க வகைபலவா மவைகேட்டி. (உ௬)

வேறு.

மனுட தாபித லிங்கமே மானுட லிங்க
முனிவர் தானவர் நிருதரான் முனைத்ததா ரிடமே
யெனைமு னுஞ்சுர தாபிதந் தைவிக விலிங்கங்
கனிக ணேசகு காதிதா பிதங்கண லிங்கம். (உ௭)

உலகெ லாமுய வருளிற்ற னுதித்ததே சுயம்பு
விலகு மிவ்விய லைவகை யொன்றுக்கொன் றேறு
குலவு மாயிர மயுதமி லக்கமே கோடி
நிலவு நந்தமா மடங்குயர்க் தரும்பய னிகழ்த்தும். (உ௮)

வழுத்து மிவ்வகை யன்றியே றொருவகை வயங்குங்
குழைத்த மண்சுடு மண்டருச் சிலைகொள்சீ ருணமு
னிழைத்த ரத்தின மொண்மணி வாணமே யிரதம்
பழுத்த மெய்ச்சுயம் பெனவிரண் டைந்தொரு பகுப்பாம். (௨௯)

இன்ன பத்தினுண் முன்னைநான் கொன்றினொன் றேற்றந்
துன்னு மொவ்வொரு பதின்மடங் கனையதூச் சைலந்
தன்னி னூறுபங் குலோகமாங் கநினிரத் தினந்தான்
மன்னு மாயிர மதின்மணி யிலக்கமே வாணம். (௩௰)

அன்ன தற்கொரு கோடிமே லிரதமாங் கனைத்தே
யின்ன ருட்சுயம் பிலிங்கமாங் கதனிலு மேற்ற
மென்ன லாமலா வளவுகண் டிசைப்பரி தெவர்க்கும்
மன்னு பூசையிற் றினில்வீடு மிலிங்கமோர் வகைகேள். (௩௧)

மண்ணு தண்டுல மன்னமாற் றுமணல்கோ மயமே
வெண்ணெய் கண்மணி சந்தனம் கூர்ச்சம்பூ விரைத்தார்
நண்ணு சர்க்கரை மாவென நவில்பவா றிரண்டு
ளெண்ணி யாதொன்றிற் புரியினு மிலிங்கபூ சனையே. (௩௨)

போத ருத்திர ராதிய புனிதராற் பூவில்
வேத னாதிய வளப்பிலா விபுதரா லென்னுன்
மாத போதனர் தானவர் நிருதர்மற் றவராற்
கோத றப்புரி யிலிங்கங்கள் கோடிமா கோடி. (௩௩)

ஆய வெவ்வகை யிலிங்கத்துஞ் சுயம்புமிக் கதிகந்
தூய மெய்வகைப் பயனெலா மெளிதுடன் றுறுத்து
மேய விவ்வியன் மெய்ம்மையா லமுதமா யினைந்
தேய முய்வுறத் திவ்விய வமுதலிங் கேசன். (௩௪)

அருளி னிற்கள வில்பலுப் பிரதனே யாகத்
தெருள்சு யம்புவாய் வீற்றிருந் தருள்பெருஞ் சிறப்பா
லிருளி ரிக்குமச் சேகர வனம்புகு கென்று
மருடு ரத்தகி வேந்தவம் மந்திர நாதன். (௩௫)

அவ்வ னத்தன வரதசா நித்திய னாகித்
திவ்வி யத்தனி யமுதலிங் கத்தினிற் றிகழ்வுற்
றெவ்வு கத்துநீங் குறுதிருந் தருளுமிவ் விறைக்குச்
செவ்வி முற்றநீ முன்புரி திருப்பணித் திறங்கேள் (௩௬)

வேறு.

வரப்புனித தருப்பணம்போற் கருப்பதல மருத்த மண்டபமாமண்டபஞ்
சோபனமண்ட பாதி, புரப்பகைவிற் பொருப்பெனவிண் பரப்புயர்பற்
பலகோபுரவகையா வரணவகை பொன்னெயில்கண் முன்னு, தரப்புக
ணூல் பற்பலதேர் சிற்பர்முடி வணக்கந் தருமயனு னிருமிதஞ்செய்
வித்தியனை யசின, கரப்பவனத் தமரமுத மூலலிங்கத் தட்ட கனந்தருபந்
தனம்புரிதி காசறுநூல் விதியால். (௩௭)

கணநாதர் குறப்பிடிதன் மணநாதர் கபால கரநாதர் பரநாதன் கடை
காவ லுதர், தணவாத துசம்பீடஞ் சௌராதி சண்ட சாந்தபரி வாரசுரர்
தமைநிருமித் தாங்காங், கணவாநிள ருவரிப்பத் தாவனஞ்செய் தரியூ
ரையமர்ந் வெள்ளிபமூ ரையனிவ ரவ்வூர், மணவாநின் றனவரதம் புர
ப்பநிற்இ யிமய மலையருணின் மலையுலக மலையறவின் றருள்வாள்.

உம்மையினு மிம்மையினு மம்மையினு மெம்மை யுண்மையுற வண்மையு
ற வொண்மையுறத் திண்மை, செம்மைசிவத் தன்மையெனு நன்மையரு
ள்வின்மைச் சிவைகௌவுரி பவைகுமரி பிரகந்நா யகியெம், மம்மைதிரு
வுருவிதியி னிருமிதஞ்செய் தவட்கெம் மையனமர் துய்யசின காவிரி
போற் செய்ய,கொம்மைதிகழ் கருப்பதல விமானுதி பலவுங் குலவுநி
கே தனமெழுப்பிப் பதிட்டைமுறை குயிற்றி. (௩௯)

பரவுசிவா கமநெறியிற் சிவத்துவிச விசிட்ட பாவனரைக் கொண்டேமுற்
பகர்பதிட்டை யாதி, புரிபுசப தினத்துலகு புகழுமகா சாந்தி புனித
வினை யனுஞ்ஞைமுதற் கும்பா பிடேகம், வரைகிரியை மந்திரம்பாவனை
திரவி யாதி மறந்துமொரு குறைமருவா வகைவயங்கப் புரிவித், தரவி
னை றநீ யும்மனைய மனுவிறைவற் பூசித் தந்தணருண் முதலாய வினைத்து
மியற் றுதியால். (௪0)

அனந்தரமக் கனந்தரமா கந்தரர்க்குப் பன்னீ ராயிரநிட் கம்பொருளொவ்
வொருவருடந் தோறு, மினந்தரவந் திடத்தகுபல் வகையவிளை நிலங்க ளி
லங்குமா வணத்துடனீந் திதன்மேலு முவகை, மனந்தரமா மணியணிக
ள்சுவணரசி தாதி மலிதருபா சனவகைமற் றுள்ளவெலாம் வயக்கிக், க
னந்தரநித் தியமுதன்மூன் றுஞுற்றுசிவத் துவிசர் கனிதரநெஞ் சினிதள
வில்கனகாதி மனைகள். (௪௧)

வளநிறைபல் விளைநிலங்கண் மற்றவெலாஞ் சாசு வதானுபவ சாதனத்தா
ன்மறுத்திடினு மருத்தி, கொளவினிது புகன்றுதவி யாங்கவரெஞ் ஞான்
றுங் குலவியவாழ் தரப்பதிட்டை குயிற்றியொரு வாதே, பனகொழியு நீ
யுமவ ணமர்ந்தனையான் மார்த்த பரார்த்தமா கதவமுத இலிங்க மூர்த்தி,
தனை நிதமு மனவிலுப கரணவகை யெல்லாங் கவினியபூ சனைகள்சிவா
கமவி தியாற் புரிதி. (௪௨)

இவ்வியல்பிற் பூசனைசெய் புரியமுத லிங்கத் தின்னினிமா தவப்பெருஞ்சீ ரிருடிகணீர்க் கிறைமுற், றிவ்வியபூ சனையாற்றி யிட்டமெலாம் பெறுவர் சென்றினிநா மிரவிகுலோற் பவராம நாமத், தவ்விறையாய்த் தெவ்விறச்செய் மெய்வலிபெற் றய்வா னவ்வமுத லிங்கவிவார்ச் சனைபுரிந் தின் படைவே, மெவ்வமிலொன் பதுகோளு மெவ்வுலகும் பூசித் தின்பமுழுதும்பெறுவ ரென்புகல்வ தினிநாம். (சங)

ஆதலினாற் பணிராச குணிசிகா மணிகேளத் தகுமா வனத்தமுதலிங்கேச சரணங், காதலினு முறைத்தவிதி கருத்துறவெண் ணீறு கண்மணிமுற் சிவசின்ன காத்திரனு யார்த்தி * யோதலினு வரைந்தருளு மனுராசராச வுத்தமோத் தமசீவ ரத்தினமாய் வேதத், தீதலினார் வம்பெருகைந் தெழுத்தைமுறை யோதி யினிதுதினம் தினம் பூசித் தின்பினமர்ந் திருத்தி. (சச)

இத்தகுதி யோபெரி சுத்தசன்மார்க் கத்தி னியைந்துமமா கதலிங்க வான்மார்த்த மெனுமவ், வுத்தமபூ சனையும்வழா தருணற்றிவரு குதியே லுலவாதவினையொப்பு மலபாக மேலுஞ், சத்திநிபா தத்துயர்சுத் தாத்துவிதா னந்தசாந்தபர சிவமாவை பாந்தள்குல வேந்த, துத்தியமன் றிதுவாய்மையெனமாத வாசான் சூதவனத் துய்த்தனன்கா கோதரேந் திரனை.

வேறு.

என்ன வோதிய நந்தி நாதனை யெண்ணி லாமுறை வந்தி யாவய [லி
னுன்னு கான்முனை பின்பு சேடன வொண்மை மாவனம் வந்து மேன
னன்னர் கேள்வியி னுங்கு மாதர நண்ணி னனெதிர் நந்தி நாயகன்
சொன்ன வாறுவி ளம்பு வான்விழை தொன்மை மாதவர் முன்பு சூதனே

அமரர் வானமு தன்று சீவர்க ளமிர்த ராய்முழு வின்ப வாழ்வினி
லமர மேவமு தென்று மாதவ ரளியி னீடிய விந்த மான்மிய
மமர வோதின ரொன்று கேள்விய ரகில போகமு முண்டு மாமல
மமர ஞானமெய் கண்ட போதர்பி னழிவில் வீடுற வொன்றி வாழ்வரே.

---

* ஓது அல் இன்னு எனப் பிரிக்க.

ஆதிசேடன் சிவலிங்கம் பெற்ற சருக்கம் முற்றிற்று.

ஆகத்திரு விருத்தம் கூஎக.

———0———

# ஆதிசேடன் சூதவனஞ்சென்ற சருக்கம்.

மதியி லங்கு வேணி முக்க ணிரலை யங்கி சூரல் கட்க மருவு செங்
கை நீண்மி டற்றன் முதுவானவர், துதிவ ழங்க நாதன் முற்செ லருள்பு
ரிந்து காதன் முற்று துணைசெய் நந்தி கேச னற்பி னகிசோன்மர, கத
லி லிங்க மீது பெற்ற கதைபு கன்று மாலு ரைத்த கவினி லங்கு சே
காதன் மலர்கானன், மதைவி ழைந்து நேய மிக்க மனனின் முந்து போ
ய டுத்த வருமை யன்பி னோது கிற்ப மெனவோதுமால். (க)

வேறு.

வினவுதி சனற் குமார வித்தக முனிவ ரேறே
வனைசகோன் புகன்ற வெல்லா மகிழ்மிக வினவு சேடன்
பணியுறு தவனி மாந்தர் பதஞ்சலி யுருவந் தாங்கி
நனிமகிழ்ந் தரிபொற் பாத நளிநம்பன் முறையி றைஞ்சி. (உ)

விடைபெறீஇச் சென்று வேத வித்தகர் சிவாக மாதி
தடையறத் துணிந்து நான்குஞ் சமைந்தபோ தகர்முன் னோர்நு
னடைதரு மயனுள் ளிட்டோர் நவிலுமற் றுள்ள தொல்லாம்
புடைவா விலைகட் கெட்டாப் புனிதவண் மணிக்கு வால்கள். (ங)

வகைபல வளக்க வொண்ணு மாநிதிப் பொருப்பு மற்று
மிகையெனக் கைகொண் டச்சு வேதமா புரத்தி னின்று
வகைமிகப் புறப்பட் டோங்கல் வகையெலாம் பணியு மோங்கற்
சிகைநிரை நிரைபல் கோடித் திருக்கயி லாயம் புக்கான். (ச)

கண்டமர் மொழியோர் பால கண்டனை யெண்டோள் கொண்ட
கண்டனிப் பால நீல கண்டனை முண்டத் திந்து
கண்டசீ கண்ட நாம*கண்டனை மண்டு தொண்டர்
கண்டரு மங்க ளைலாக †கண்டனை கழலி றைஞ்சி. [ரு]

அருள்வலி யெண்ணி யெண்ணி யாங்குற வேண்டு கோடற்
பொருண்மலி அதிபு கன்று போந்தவி முத்தஞ் சார்ந்து
தெருள்பொலி கங்கை தோய்ந்து சிவந்திகழ் விசுவ நாதன்
மருணவி யுகள பாத வாரிசந் தொழுது வாழ்ந்தான். (சு)

ஆங்குநின் றரிதி னீங்கி யருட்பருப் பதங்கி ராதர்
தேங்கம லாம்ப கங்கோ டிருப்பதி பொருப்பி லன்னை
சோங்குவண் டினில்வ டுத்த குளிர்பதி யிருவர் நாப்ப
ணோங்கன லோங்க றாய வொண்மணி முத்தாற் றேதி. [எ]

---

பணி-அடக்கம். *கண்டன்-தலைவன். †கண்டு அல் கை கழல் எனப்பிரிக்க.

புலிபதஞ் சலியா னித்தம் பொலிபதஞ் சலியா நித்தங்
கலிசிலம் பொலியா நிற்பக் கனியருள் வலியா நிற்ப
மலிசிவ காமி யுள்ளம் வரம்பிலா னந்த வெள்ளம்
பொலிதர வமன்ற மன்றம் புரிந்தருள் கின்ற மன்றம். [அ]

ஆமுத்த மாங்கத் தேந்தி யருச்சனைத் தவத்தின் பேற்றாற்
கோமுத்தி யீயப்ப வந்நாட் கொடுத்தரு டருத்த லம்மா
னேமித்தின் படைக்கி டந்த நேத்திராற் பணபு ரஞ்சேர்க்
காமித்த வாஞ்சை யன்பர் கைக்கொள்சீ வாஞ்சி யந்தான். [கூ]

அரியுரத் துச்சு வாச நிச்சுவா சத்தி னுங்கே
புரிதரு மசபா நித்தம் புரிமுசு குந்த வேந்துட்
பரிவெனும் வலையி னீர்க்கப் படுஉப்படி மூலா தாரத்
துரிமையி னொருவா தும்ப ருத்தம னுஞற்றி வாழூர். [கo]

ஆதிபங் றலங்க டோறு மடுத்தடுத் தாங்காங் கன்பி
னோதுகேத் திரபின் டாதி யுஞற்றிமா மணிமி டற்று
மாதுபா தியனை வாழ்த்தி வழிக்கொளீஇ மறைக ணன்கு
நீதியி னருச் சித் தேத்தி நிலவுமா ரணியம் புக்கு. [கக]

வேதநா யகனைப் போற்றி விளம்புமவ் வனத்தின் மேல்பா
லோதிரு யோச னைத்தா யொப்பிலாத் தனது முன்னை
மாதவாங் குரமே சாகை வகைவிரிந் துயர்ந்து விண்ணின்
மீதெழுந் தனைய சூத விபினமே நோக்கிச் செல்வான். (கஉ)

செல்லுழி யகிகு லேசன் றிருக்குநேர் திருக்கி லாத
நல்லன சுபநி மித்த நற்சகு னங்கள் பல்வே
றொல்லையங் குறுவ கண்டா னுலப்பிலா வுவகை வெள்ளத்
தெல்லைகாண் கில்லான் றற்கு மெனையரோ டேகு கின்றான். (கூ)

நவங்கடத் துவன்செல் சூத நறுங்கடற் றினிலு மேதப்
பவங்கடத் துறுநா வாயென் பாக்கியன் மார்க்கண் டாதி
தவங்கடத் துவமோர்ந் தாற்று சற்சனர் முன்ன ராங்கே
சிவங்கடத் துறநி மித்தத் திறம்பல திகழ்ந்த மன்னோ. (கச)

தனித்தனி நிமித்தங் கண்ட தருமகிழ் வலதுந் தம்மு
ளினித்தெழு மின்பந் தேங்க மிருகணீ ரருவி தூங்கப்
பனித்துடல் பூரித் தோங்கப் பாவிய புளகந் தாங்க
வுனித்தவர் மார்க்கண் டாசா னுடசம்வந் தொருங்கு சூழ்ந்தார், (கரு)

---

௯ கடம்-வழி.

வேறு.

அன்ன மாதவர் யாவரு மும்முட லகத்தினும் புறத்து
முன்னு நன்னிமித் தம்பல வேககா லத்திலிம் முளரித்
துன்னு நம்மவ ரொவ்வொரு வருக்குமிக் கின்புறத் தோன்றத்
தென்னை யோகிய மென்னையோ சனைபுரிந் திருந்திடு மெல்லை. [௧௬]

வான துந்துபி யோவென வழங்குசெப் பீரவான் வாணி
யான தங்கெழுந் தரியருள் சேடனுஞ் சேடன்மெய் யன்பாற்
கான் மின்னதில் வாழுநம் புண்ணிய கவுரவ கனத்தான்
மேனி மிர்ந்தெழு சூதமூ லத்தொளி மிளிர்சுயம் பிலிங்கம். (௧௭]

அமிர்த ரூபமாய் மல்லிமுன் வல்லிகள் செறிந்துசூழ்ந் தடர்பு
நிமிர்த ருங்கிரு காந்தாத் திலக்குமந் நிமலமா விலிங்கத்
துமைம ணாளனைத் திருமணா ளன்றனி யருள்பெறீஇ யுவந்திங்
கமய நேர்தொழற் காதர மீதரப் போதரு மகிகோன். [௧௮]

அன்ன சேடனிங் குறுதனு மருந்தவப் பயனென வறிமி
னின்ன காரண மேநிமித் தம்பல நிகழ்ந்ததும் மெதிரோ
யென்ன வோதிய வுடலிலாத் திடமொழி யமுதமுண் டிலங்கு
நன்னர் மாதவர் வேறினி யாதுகொ லின்பென நயந்தார். [௧௯]

அனையர் சூழன்முன் னனந்தா மனந்தனு மனந்தனல் விளந்தன்
றனைய ளாவிய வெதிர்வா முதிர்வா முனிவரர் தாஞ்சென்
றினைய தென்பதி லின்பமெ யன்புற முன்புறீஇ யிம்பர்
வினையை யோவிய மேவிய காவிய நாவியல் வேந்த. [௨௦]

இந்த மாவனத் தெல்லையில் வாத்திரோ வினிதுவீற் றிருக்கு
மந்தி ரேசன தருட்பெருந் தாத்திரோ மருதமர்ந் தீண்டு
வந்தி யாம்புரி யருந்தவ வுரத்திரோ மற்றறோ வமையு
மெந்த வாய்மையு மின்னநின் வாத்துயர் விசைப்பதை யெவனும்.

என்ன வின்னன வின்னுரை முன்னுரைத் ததிர்தழீஇ நமந்தா
ரன்னர் யாரையு முன்னமந் தடிக்கடி யருந்தவப் பெரியீர்
பொன்னை நாதனைப் பல்லுகம் வெரிந்மிசைப் பொறுத்தபுண் ணியமோ
பின்ன ராங்கவ னருள்பொழி கருவொழி குருமொழிப் பேறோ. [௨௨]

எத்த லங்களும் பத்தியான் மிக்கிறைஞ் சிடத்தகு மிருஞ்சி
ரித்த லத்தலை புகப்பெறீஇ யெளிதுட னித்தவப் பேற்றால்
வித்த கத்திரு *மும்மையா லருளுல காட்சிசெய் விமல
வத்த மத்தவ குல்தரி சனத்தனிப் பேறுபெற் றுவந்தேன். (௨௩)

*மும்மை-விபூதி ருத்திராக்ஷம் சடை.

இனிப்பெ றற்கரும் பேறுமற் றுண்டுகொ. லெனக்கென வினைத்தான்
இனிப்பு றக்கலந் தழைத்துறு குலந்தழைத் தெழுமுனி வார்தாக்
தனிப்ப ரன்கரு ணைகான் மிருகண்டு தனையனுக் கிரங்க
தனிற்பு கப்புகுந் தருந்தவ விருத்திக டமில்வினு யமர்கால். (உச)

கான மாதிகட் கெவருமிக் கன்புற வயப்பது நலமிக்
கான மார்க்கண்ட தீர்த்தமென் றவர்சொல வினவியவ் வதீசன்
ஞான மாதவ ரோடுநீ இயங்குமா சங்கற்ப நவின்றவ்
வான நீர்குடைந் தவட்புரி நியதிகண் மாபினுல் வயக்கி. (உரு)

வேறு.

கோதாக முதலாய குலதானம் பலதானங் குளிர்வ தான
மேதாக முனிவோர்கள் வெறுக்கையுறு வகைவேண்டி வெறுக்கையோடு
மீதாகத் தருவாதி விருதாகத் தானமெனு வெள்க நல்கி
பயாதாகம் புரிந்தால்வேட் டருந்தானந் தம்முனிவர்க் கார்வஞ் செய்தான்.

இவ்வாறு செவ்வாறந் றியன்முனிவர் பயன்முனிவந் தேற்ப நல்கு
மவ்வாதி சேடன்மதித் தமுதாதி நாளளித்த வாசான் சொன்ன
மைவாழுங் களத்தமுத மயலிலிங்க தரிசனத்தின் வாஞ்சை கூர்ந்திங்
கெவ்வாயின் னமுதசயம் பிலிங்கம்வீற் றிருந்தருளு மியம்பீ ரென்றான்.

அகியாச புகலுறுமவ் வாசைமொழி நேசமொழி வறவி னுய
தகுமுனிவ ரகமகிழ்பு சாற்றுகின்றார் மூன்காகோ தாகு லேச
முகமுருவங் காண்மோவ முதலிங்க தரிசனமிம் முளரி யிற்பல்
லுகமுறினு மெமக்கெவனு முற்றெமது கண்ணுக வுணர்த்தி லாயேல்.

இங்குநினைக் கொண்டினிய விலிங்கதரி சனப்பெரும்பே றெய்த லாலே
எங்கவிரு கண்ணீமெய் யேமுகம னன்றுகரி யினிவே றென்னே
தங்கியும்மன் னெடுநாளித் தலச்சிறப்புகின தருமைத்தவாங்குரம்மே, யொ
ங்கியெழுந் தனவிலிங்கத் துயர்வேதமுணர்ந்திடும்பே றுற்றி லேமால்.

என்றனைய முனிவருவந் தினிதிசைப்ப வவரோடு மெனைய ரோடு
மன்றினிய குருவனத் தமுதமய சுயம்பிலிங்க வரும ருந்தை, நன்றுது
ரீஇ யெங்கெங்கு நடந்தறுங்கான் மார்க்கண்ட னினிதீரத், தென்றுதய
திசையணித்தாயிசைப்பரும்பல் வளஞ்செறிந்தோ ரிடந்தோன்றிற்றால்.

ஆங்கதுகண் டிறும்பொழுதா ரமுதினினித் துளங்கனிவித் தருள் வந்
தீர்த்தான், கோங்கியெழு மினனிசைகேட் டெவ்விடமோ வெவ்விடமுன்
டெம்ப ராவீ, தாங்குளத் தமலனமர் தானமவ னமுதவுருத் தவரு தெ
ன்றுந், தேங்கமுதம் பொழிதிறனு* சிரிதவென் றுளங்களிப்பச் செ
ல்லா நின்றான். (கூக)

[1] ஆதானம்-தாபனம். *சீர்—ஒலி.

வாவாவங் வொலியெழுத்தின் வடிவாக மாதேவா மணிகண் டாசங்
காவாவு மார்காத்தா கைலாச கைலேசா கங்கா தேசா
பாவாத பூதேசா பாசுபதே சாசுவதா பரமே சாபூ
தாவசபூ டணசாம்ப சதாசிவமக் திரகாதா நாணு சம்போ. (கஉ)

சந்திரசே காவாம தாண்டவமுற் றுண்டவபஞ் சாக்க ரேசா
சந்திரகாத் திரவிலோ சனத்திரைய வினத்துயர்மா சரும வேசா
சந்திரனம் புயதரகோ சராசனபல் சுராதிபனே சருவே சாநெஞ்
சந்திரமா மன்பருளத் தனிக்கோவி றனக்கோவில் சாந்த வாழ்வே.

என்பனவா தியநாமத் திலங்கொலியா யெழீஇச்சுகமாயினித்த லான்மெ
யன்புநிறைசுகவொலியீதாமெனவுட் காமுறவாங் கனுகுங்காலவ் [கன்
வின்பவொலி பன்னிறத்தவிருஞ்சிறைப்பைஞ் சுகவொலியாயினிதமல்
மூன்புதெரீஇயிங்கிமித்தமுன்னியதுமுடிக்குமெனமுடிந்துகொண்டான்

அனந்தரமா தவர்சூழ வாங்கணுகி மாங்குயில்க ளழைக்கு மோசை
கனந்தருகா ரிகைசுவா கதங்கிலவென்பனவாதி கழறு மோசை [காட்ட
நினைந்தருகி மயினடமுன் னிலைநினைப்பித் தலைமெழுகி னெகிழ்ச்சி
வினந்தருவண் டிசையாதி யேத்துறமங்கடங்களுமென முன்கண்டான்.

சாதிமா லதிமயிலை தளவுமுத லவில்கொடி தழைந்து மல்கி
மீதுபடர்ந் தலர்துறும்பல் விருக்கமுன முருக்கமுத விமல லிங்க
பாததரி சனநிமித்தம் பகிரண்ட நிரைகளினும் பயிலா நின்ற [டான்.
வாதிதிருக் கயிலைகிரை யடைந்தவண்சூழ்ந் தனவெனுமா றமையக்கண்

சேகரபூ ருகநிகரஞ் செறிதளிரீன் றிருவர்முனர் தேட நீடுஞ், சேகர
வெற்பொன் றலபஃம் றிரன்கொலென நின்றொளிரச் செய்மைகண்டான்
சேகரவா திவர்பரமன் றிருவருளிற் பெருகருவித்தெளிதேங் கண்டான்
சேகரண மிறக்குனித்த செம்மலைக ளெனவிதழிச் செறிவுகண்டான். ()

இத்தலத்தோ ரணுவளவா கினுமீகை மலையளவா மிரும்ப யன்க
டத்தமகை யுறனிதரி சனமெனவே யிலாங்கலிக டமக்குச் சின்னீர்
அய்த்திடமுன்னல்லியலச்சுநாசியமர்சு தன்மைமுனர் துலங்கப் போந்து
புத்தியினல் வினரீர்கள் பற்பலதந் தலங்கரிக்கும் பரிசு கண்டான்.

உத்தமர்தாற் கவிசுலபத் தவ்வரிதாய் வெற்றொன்று தானதாகி
மெய்த்திகுசொற் றொடருடைத்தாய் விழுப்பொருளாழ்ந் தினிப்பறவுள்
விளங்கல் போற்க, வித்தமிதற் கெதிர்மறையா விளைசாவல் பலத்தோடு
மெதிர்வ கண்டான், மொய்த்தெழுமுக் கனித்தொகைகண் மூவுகைது
த்திறத்திலகு முறைமை கண்டான். (கக)

மகோ—மலை. !முடிதல்—சண்டேமன் றுனையின் முடிதல்.

சம்பீர மிலிருச்மென் றன்பெயர்க்கேற் றிடக்கனித் தையலார்தஞ்
சம்பீர மிலிருசமாத் தனிகாட்டுங் கனிகாட்டித் தான்மோ திக்குஞ்
சம்பீர நிரைகளைச்சா மீகரப்பஃ றிரளைகளைத் தன்கை நீட்டிச்
சம்பீர வடியருக்கி தாவெதிர்பார்த் துறுங்கொடைஞர் தாமரக்கண்டான்.

நீடுபலபொருள்களெலா நிறைந்திருந்துந் தாழ்ந்தடங்குநிலைமை வாய்ந்து
பீடுபெறுமணித்தொகையாய்ப் பெருமுடிப்பா யருள்கொடைஞர்பெற்றி
காட்டுந், தாடிமமும்பெயரா லுந்தானிறிந்துறுனைபீசந்தனைமுன்காட்டியீடி
விடம் பசைப்போன்றங் கிலங்குறுமுந்திரி வீறுக்கத்தியல்புங்கண்டான்.

இவ்வகையின் மற்றுமவ ணிலங்குபல நலங்களெலா மிதயானந்தச்
செவ்விமிகக்கண்டுகண்டு செலுஞ்சேட னெதிரவண்வி சேடமேன்மைத்
திவ்வியதேத் துயர்விருக்க சேகரமாய்த் தோன்றிடவோர் சேக ரந்தா
னவ்வியன்மா வணித்திதழி யருண்மலிகூ விளம்பாரி சாத மாதி. [சஉ]

சூழ்புவா னிவந்துநவத் தருமங்கண் மீப்படர்ந்து துவன்றி யெங்கும்
வாழியன்மா லதியாதி வல்லிகள்பே ரில்லிதெனு மாண்பிற் சூழ
வேழிசைய பிரமாங்க ளிருஞ்சாம கீதமினி திசைப்ப மல்குந் [ந்தான்.
கேழிசைய வொருசூழல் கெழுமுதல்கண் டுழுவலன்பின் கிழமைகூர்

அளிகிளா வாங்குறுங்கா லச்சூழ லுட்சார்ந்தங் கரிது நீங்கி
யொளிகிளரு மடிமடைவின் டுறுகாலின் மறுகாலி னுயர்பால் வெள்ளங்
களிகிளரப் பிரவகிப்பக் கற்றினங்க ளுடன்பல்வலங் *கண்டு தாழ்ந்து
தளிகிளரப் புறம்போந்து தன்னெதிரே பன்னிரைகள் சார்வகண்டான்.

பாற்கடலின் மேற்படப்பெய் பசுக்கடம் 0வசுக்களுடன் பாவிமுன்செல்
காற்கடவு ளருள்வெள்ளங் கைம்மேல்வந் தய்மேன்மைக் கனம்பெற்
றுங்கு, நாற்கடனீத் திலகனந்த னுவலரிய சிவானந்தா னுபவி லாச
மேற்கடவச் சென்றுங்கு விதப்பருமற் புதப்பரம விளைவுகண்டான். ( )

தோற்றுறமச் சூழலிற்சார்த் தாலகுலம் வாலதியாற் சோத னித்தொண்
டாற்றிழைய விரலகுடா வடிவிசைசூழ்ந் திறைஞ்சபுயோ காதி தொண்டு
போற்றியதா மும்பணிந்து புரியோகத் தனிதமாப் புழைக்கை நீர்து
யேற்றபணி கயஞ்செயக்கண் டீரவம்பாங் குபகாந்தத் திறைஞ்சிச் சூழ.

இன்னபல் விலங்கினமு மிருங்கமுற் குலங்களுமங் வெல்லையாற்று
முன்னருமற் புதச்செயல்கண் டிலவாத வானந்த வுததி மூழ்கி
யுன்னியுடை யானமுத விலிங்கேச னெழுந்தருளி யினிது வாழுந்
தன்னிகர்மா தலமிதுவோ தகும்பணிசெ யிவரெம்மா தவர்க னேயோ

* கண்டு-செய்து. 0வசு-பசுக்கன்று.

என்றுவினர்தன்புறம்போகியெதிரடிக்கடிவீழ்ந் திறைஞ்சி யெம்மான்
முன்றிலரும்பணிகாணுமுயல்வின் றீர்திருத்தொண்டர் முன்னுமொன்று
லின்றுநுமதரிசனப்பேற்றினுக்கியன்மாதவமென்றோவெளியனேனை
க்கொன்றைமுடியானென்றுகோடலுநுஞ்சங்கமத்தின்குணமேயென்று.

அன்புரைபற்பலபுகன்றுங் கருளீர்ப்ப வுட்புகுந்தா னமுத மாண்பே
ரின்பமய சுயம்பிலிங்க வின்னருண்மர் திரநாத னெழிற்கோ லந்தன்
முன்பிலகு முறைகண்டான் முதமகோ ததிமூழ்கி முன்ன மாதி
தன்பழைய கரணமெலாந் தணந்தொழிய மணந்தசிவந் தானே யானான்.

சீவகுண சேட்டிதமோர்சிறிதுமிலான்றிருமுனந்தான் செய்த *லோதல்
யாவதுமோர் வரிதாய்ப்பற் றிலாததொரு தம்பமென வெதிரிற் றாழ்ந்தா
னேவரியசிவானந்த வுததியினுங் கரையிவரா தொன்றி வாழ்ந்தான்
றேவர்பிரா னருளெடுப்பத் திரையூடு கரையேறித் திருமு னின்றான்.

அருண்மேனியமுதவொளியழகெறிப்ப வணித்ததுகண் டண்ணலிந்தத்
திருமேனி திகழ்தாவிச் செகமுழுதும் புகழ்தரு திவிய லிங்க
வுருவாகி வுதித்தெழுந்திங் கொருவாம லுலகமெலா முலவா வின்பப்
பெருவாழ்வு பெறவமர்ந்த பேரருளிப் பேதையுணர் பெற்றித்தேயோ.

உரையாலு முளத்தாலு முணர்வாலு மொருநான்கி னுச்சி யாலும்
வரையாநின் னருட்பெருக்கெவ் வகையாலு மணுத்துணையும் வழுத்தொ
ணாதேபுரையோடு தரையோடு புன்றொழிலே துன்றியவிப் புழுத்த நா
யேன், கரையாவன் மனத்தெளியேன் கருதுவதோ லிதிர்விதிர்க்குங்
கடையேனுள்ளம். (௬௨)

அகிலேசா சயம்புலிங்க வழுதேசா முழுதருளம் பரமே சாவிவ்
வகிலேசா யினுமளியு றுத்தென தெனையுமளித் தருள்சு ரேசா
முகிலேசா முடித்துசா மூதேசா பூதேசா முன்னு னன்னை
யகிலேசாத் தியவடுக்கொ ணடநேசா படனேசா நானுால் வாசா.

என்றினைய துதிகள்பலவெடுத்திசைக்குந்தொடுத்திசைக்கு மிடையே
யின்பந், துன்றிருக ணீர்மாரி சொரிந்திடுநாத் தழுதழுப்பச் சொற்கள்
சோரு, முன்றிலடிக் கடியிறைஞ்சு மொழிகுழறும் பினுந்துதிக்கு மூக
மாகு, மன்றகிவேக் குற்றுளவாரமைமெயவாளக்குாமூற் றரிதேயம்மா.

இவன்செயலிங் கிதுவாக வினிதுடன்சா ரிருடிகுழாமெல்லாங் கண்டாங்
குவந்தனர்பன் முறையிறைஞ்சி யுரைகினரிவ் வழுதேச னுருவந்தானுஞ்
சிவந்தரவந் தருளியவிச் சேடனே விசேடமுல தெய்வ மென்பார்
பவந்தெறுநங் குருவென்பார் பரகதிக்கு வித்தென்பார் பரமனென்பார்.

* ஏதல் - நீங்கல்.

பன்னுளிங்கமீர்ந்துளநாம் பரிந்துபுரி யருந்தவமெய்ப் பலனே வென்பா
ரன்னேவிப் பணியாசுக் காற்றுறுகைம் மாறெம்மா லாமோ வென்பார்
முன்னுளிங் குளதெனிலிம் முளரிமுழு துவாவியவெம் முற்படாதோ
வின்னாகர் கோனன்பே யிவ்விலிங்க வுருவாகி யெழுந்த தென்பார். (௫௬)

அன்றேவென் புகன்றவா ரமுதசுயம் பிலிங்கமிஃ தாதி யேக
முன்னுதற் கென்ன தவ முற்றினமுற் படலெளிதோ முளரி வாழ்க்கை
யின்னுத குரவனருள் வியனுபதே சப்பேற்றின் மெய்மை தேர்ந்த
வின்னேன்வந் திலனேலிவ் விலிங்கமதி தாரமக் கின்னு மென்பார்.

இவ்வகைபற் பலபுகன்றங் கின்புறுமெ யன்பினமு தேச பாத
திவ்வியச ரோருகம்பன் முறையிறைஞ்சிச் சிவானந்தந் திளைத்து வாழ்ந்
தா,ரவ்விருடிகுழாம்பணிவேந்தமுதலிங்க தரிசனம்பெற் றடுத்தவக்காட்
டைவருபூ சக்குருவா ரம்பருவ மாயவழி சயத்தை யோர்ந்தான். (௫௮)

வேறு.

முன்னுந் தில்லை முளரியின் மாநடந்
தன்னை நாந்தரி சிப்பத் தருந்தின
மின்ன மாவனத் தீசனைக் காட்டிற்று
மென்னை யோவிதற் கீயுங்கைம் மாறியாம். [௫௯]

யாது நல்கினு மின்னதற் கோரணு
வாத லொப்பரி தாதலி னித்தகு
மூதி னத்திம் மூளரியி லீசனைப்
பாத சேவை பரிந்து புரிந்தவர். [௬௦]

ஆத ரத்தபி டேக மருச்சனை
மாத ருற்சவ மாதி வயக்கினர்
காதன் முற்றுமுன் பெற்றருள் காட்டுமா
மோத வுத்தம மோக்கமு மேற்கொள்வார். [௬௧]

என்ன மாண்பல வாசக மீதுரைத்
தன்ன வாரமு தேசனை யாசையிற்
பன்னு மாமலர் பைங்கனி யாதிகொண்
டின்னு பூசை முறையி னுஞற்றினன். [௬௨]

என்று நந்தி யியம்ப வெதிர்தொழா
நின்ற வம்புய னும்பலபி னேயமிக்
கொன்றி மேற்பன்ன சேச னுஞற்றிய
வன்றி யெந்தை நவின்றருள் கென்றனன் [௬௩]

சனற்கு மார னுவகை தழைப்பமேன்
மனக்கு லாவுநந் தீசன் வழங்கியாங்
கினக்கு ழாங்கொ விருடிகள் கேண்மினீ
ரெனக்கு ளூசா சூத னியம்புமால். [சுச]

வேறு.

இனைய் காதையி சைத்துளா ரினிது கேள்விம டுத்துளார்
வினைகள் யாவுங்வி டுத்துமேல் வினைபல் போகநு கர்ச்சியார்
புனக சோவின்மு டிக்கணிள் பமயி ளுபுண்டி குத்துவாழ்ந்
தனக பாதநி ழற்கணே யமல யோகினி லைப்பரே. [சுரு]

சூதவனஞ்சென்ற சருக்கம் முற்றிற்று.
ஆகத் திருவிருத்தம்-எகுசு.

---

# ஆதிசேடன் றிருப்பணிச் சருக்கம்.

அன்பேறு சேடன மாவன மன்றேகு காதையி தோதினம்
பின்பாதி †சேதிம மாதிய பின்றூ தீள்பணி பீடியர்
கும்பாபி டேகமு ளுயசெய் கொண்பேச வாய்னி மேலென
கம்பால நாசக போதக நந்தீச ளுதா வோதுறும். (க)

வேறு.

‡தாதை மைந்தனென் றேது தபோநிதே
* போத னந்தன னந்தரம் போற்றுமா
நாத னெந்தை நயந்தமர் கோயில்செய்
காத லுந்து கருத்தனி தாற்றுமால். (உ)

பாங்கி நின்ற சுரா பதியைநீ
யோங்கு சேதிம மோது முறுப்பெலாந்
தாங்கு வானவ ருருஞ் சமழ்ப்புற
வீங்கெ மீசற் றியற்றுகென் றேவினான். (ங)

பின்னு மெச்சை பிரானடி யர்ச்சனை
யுன்னி யாற்றற் குழுவலன் புந்திய
வன்ன பூசைமா சாந்திகட் காம் பொரு
ளென்ன வுங்கொண்ர் மின்னென வேவினான். (ச)

உண்மைய சாங்கவ் வுலாசிரங் கொண்டுசென்
றெழிவி லாவவ் வுபகர ணம்மெலாங்

---

†சேதிமம்—கோயில். ‡தாதை பிரமன். *போது—சென்ற

குழுவின் மல்கக் கொணர்தரு முன்னவட்
செழிய புற்கொடி யாதிய சித்தரோர். (ரு)

பாலு மாய்மருந் தூய தெனும்படி
கோல முற்றுஞ் சுராதிகொள் கோக்கனன்
யால ருந்த வருச்சித் தருத்துபு
சாலு மெய்ப்பயன் பற்பல சார்ந்தனன். [சு]

பளிக்கு மேனிப் பரனமு தேசனுட்
களிக்கு மப்பிர தேசங்கண் ணொடிபோ
லொளிக்கு லாவிய வொப்பச் சமன்செயாத்
தெளிக்கும் போழ்தத் தினகரன் றன்கரம். [எ]

சிறிது மெல்லெனத் தீண்டுறக் காண்டலு
மிறையி லிங்க முடித்த விருகரம்
பொறைசெய் வெண்குடை பொற்ப நிழற்றும்வாழ்
வுறவி னேந்தர கேசன்மு னுற்றனன். (அ)

அதற்கு முன்ன ரமரர் தபதியங்
கிதற்கு நேரிலை யெந்தவண் டத்துமென்
பதற்கி ணங்கொரு பைம்பொன் மணிக்குல
விதத்தொ ளிச்செய் விமான நிறீஇயினன். [கூ]

யாமி யத்தோ ரிலங்குபொன் மேருவிப்
பூமி யுற்றது கொல்லெனும் பொற்பது
தேமி குத்தெழு திண்கயத் தெண்குல
நாமி கப்பொறை யாற்று நலத்தது. [க0]

அனந்தன் கூர்மன்முன் னையவ ரண்மியாங்
கினந்தி கழ்ந்துற வேண்டு மிடந்தோறுங்
கனந்த ரப்பொலிந் தோறு கவின்மிக
மனந்த ருக்கி வகித்துறு மாண்பது. (கக)

பானு வான்செல் பரிசுநேர் பார்த்துமப்
பானு வொள்ளிவட் பற்பல பசுங்கதிர்ப்
பானு நின்றொளிர் பான்மையி தென்னையென்
பானு றும்பொற் கலசம் பரிப்பது. [கஉ]

வானி ராசியு மல்லவிம் மண்ணுலா
மானு மல்லவக் *கோபுரத் தானல
வேனை யாண்டைய வென்னப்பல் லேற்றின
மேனி லைத்தெழில் செய்ய மிளிர்வது. [கந]

*கோபுரம்—கோலோகம்.

இந்தி லிங்கத்தி னொன்றதி தூலமா
முந்தி லிங்க மெனவின் முடிநிறை
யிந்த ணிந்த தெனநித் திலத்தினத்
தந்த மொண்குடை சென்னி யொளிர்வது. [க௪]

அன்ன தற்கிரு பான்முத் தவிர்மணி
யின்னி யற்றிரண் டேழையர் சாமர
முன்னர் வீசுபு நிற்றலம் மொய்திரை
மன்னு கங்கையின் னொன வாய்ந்தது. [க௫]

மாற்று யர்ந்தவட்*டாபத மாமணி
யாற்றி கழ்ந்த சிவாகம யுத்தமாய்த்
தேற்றி யெங்குஞ் சிவனே பரமென
வீற்று வீற்றொளிர் விம்பங்கண் மேயது. [க௬]

கித்தி லத்தொடை சூழ நிரைஇவ
ரத்தி னத்தினு நாற்புறஞ் சித்திர
பத்தி மிக்கெழுச் செம்பது மத்தணி
மத்தி வைத்த விதானமுள் வாய்ப்பது. [க௭]

புத்தி சற்றயில் புன்மைய ரேதத
ரத்த தாங்கொ ணவிற்றரி தோர்ந்தணை
ருத்த மப்புல வோர்க்கு முறப்பெலாஞ்
சுத்த யோகருட் டோன்றவ் விமானமே. [க௮]

இனைய மான விமான மிலிங்கமேற்
புனைக ருப்பக் கிருகம் பொலியுமவ்
வனக னைம்முக னுதலி னூற்றிசை
யினிலுங் கண்ணடி யேநிரைத் தாலென. [க௯]

நாற்பு றத்து கலந்திகழ் பித்திகை
யேற்பு றப்பளிங் காலுறுப் பியாவையு
மேற்ப டுத்தி வியன்மணிச் சாளரம்
யாப்பு றுத்தெழின் மல்க வியற்றினன். [௨௦]

வேறு.

இவ்வகையி னமுதசயம் பில்லிங்கசதாசிவார்ச்சனைக்கவ் விறைவனைந்து
தெய்வமுகோற் பனமுனிக டிருக்குலத்தார் சிவசாதிச் செல்வராதி
சைவசிவ சமக்கார சர்வாதி காரரெனந் தனரே யல்லா
லவ்விடையுட்புகுதும்விதியார்க்குமிலாக்கருவின்முடித்தமைத்தபின்னர்

*அட்டாபதம்—பொன்.

அரனரியம் புயன்மகவா ஞமிவர்நாற் சாதியரென் றாரணஞ்சொன்
மரபினில்லைவ் சிபவயன்றன் வத்திரோற் பவமுனிவர் மரபி லங்க
வருமறையோர் புகுமருத்த மண்டபஞ்சத் திரியமனர் வணிகர் சற்சூத்
திரர்புகுமா மண்டபமுன் றிகழாறு காற்பீடஞ் சேரச் செய்தான்.(உஉ)

அடுக்குமா ளிகைநிரைவிண் ணகடுபோழ்ந் தவணைதா னமைத்த வேணி
கடுக்குமா றெழீஇச்சூழ்ந்து கவின்முதற் பிரகாரங் கண்டான் மேன்மேற்
றொடுக்கும்வானகருமிவட் டென்னறப்பல்லேலணிவைத்ததோற்ற மென்ன
மடுக்குறுமைந்தாவரணமதில்களின்மேன்மேலுயர்கோபுரங்கள்வைத்தான்( )

ஆவரண மைந்தினுமாங் காங்குபரி வாரகுல வமரர் வாழ
மாவரண வுறையுள்பல மணிபொன்னாற் புரீஇப்பளிங்கு மணிச்சி லாதி
யாலிரிபன்னிலங்களுமொப்பமைத்தனைய*குட்டிமஞ்சந்தரும்பொன்னாற்றிச்
சேவினமுஞ் சிவகணமுந் திருமதில்க டொறுந்திகழச் செறிவித் தானால்

முரணிடப நந்தியபி முகவாயி லொருமருவ முதிய செம்பொ
னாதனமா தியதிகழ்மண் டபங்கள்புரீஇ முதல்வாயி லங்கந் தீசா0
பாதலமேற் பொன்னாலம் பாதலமே னிமிர்துசத்தம் பந்தி றீஇமா
திரமிருநான் கிலுமணைய ஞ்சவேறு கொடித்தம்பத் திறந்தா பித்தான். ()

அளகன்விழாக் கொண்டருளு மணிவசந்த மண்டபஞ்சி வாக மாதி
புனிததமிழ் வேதசிவ புராணாதி திருமுறையைப் பூசித் தென்றுங்
கனிதருமன்பருண்மு னூறீஇக்களங்கறமுற்றுணர்ஞானக்கணவேலார்பு
வனமுய்சிவப் பிரசங்கம் வயங்குறச்செய் வித்தியா மண்ட பந்தான். ()

ஆயிரவிற் காணிறுவு மணிமணிமண் டபஞ்சததம் பாதி மேய
மாயிருமண் டபம்யாக மண்டபமா மறைகீத மண்ட பாதி
தூயபல வங்கமெலாந் துலைதந்திலங்க வமுதலிங்க சுயம்பு நாதற்
கேயமகா சிவலோக மிதுவேயென் றெடுத்தோத வியற்றி னானால். ()

இம்முறையேமும்மையினுமெம்மையருண்மெய்ம்மையுலகெல்லாமீன்ற
வம்மையமர் செம்பொன்மணி யாலயமு மாலயன்முன் னமர ராதி
மும்மையுல கும்வியப்ப மூதண்ட பகிரண்ட முழுதும் வாழ்த்தச்
செம்மையபல்லங்கமெலாஞ்சிறந்தோங்கநிறந்தேதங்கச்செய்துமேலும். ()

தூய்மையதாய்த்திண்ணியதாய்த்தொழிற்கினிதாயிழுக்கிலதாய்த்தொன்
னூல்சொல்லும்,வாய்மையதாயொண்மையதாய்வயங்கெழின்மாண்சிலையி
னிபமாமுகத்தோன்,றூய்மயிலூர்பரன்மூவர்சௌராதிசண்டாந்தசபரிவாரச்
சேய்மையா மருமுருவந் திருவுருவோ வெனவியப்பச் செய்துமேலும்,

*குட்டிமம்—கற்படுத்தநிலம். 0 அபாதலம்—பின்புறம்.

அன்னைதனக்காவிடையாவருட்சத்திபீடமுஞ்செய்தாங்குக்கண்டோர்
கண்ணடியோ மரகதமோ கருஞ்சிலையோ வன்றெனவே கழறி முற்று
மெண்ணரிதா யிறுவரையு மீதலவென் றேமறை களிறையை யோதும்
வண்ணமெனத்துணிந்துரைக்கும்வகையெவர்க்குமரிதாகுமாண்பிற்றந்தான்.
திருவிழாக் கொண்டருள்சோ மாக்கந்தர் மதிமௌலி சிற்ச பேசர்
தருவிழா தெமையருளுங் கணேசர்வான் பிடிகுறமின் களிக்கு நேசர்
மருவிழா விதழிமுடி வாங்கினரத் திரதேவர் முதலோர் வஞ்சி
குருவி*ழா விருதசாம் பூநதத்தா னிருமித்தாங் கொளிர்வித் தானால். ()
இருமணியினிருமிதஞ்செயிருவகையிம்மூர்த்திகளுக்கெல்லாஞ்செம்பொ
னருமணியின்வருமணிகளளப்பிலசெய்தமுதேசர்க்கைந்துசென்னிக்
குருமணிய சடிகைதிகழ் கோளராப் படங்கவிக்குங் கோள காதி
திருமணிய வுபவீதத் திருவணிமு னெல்லாமுந் திருந்தச் செய்தான். ()
இப்பரிசெல் லாம்புரிந்தாங் கெதிர்நின்ற மயனுடல மிறுகப் புல்லி
யொப்பரிதாய் நீயிவண்செ யுதவியுரை யளவைகளி னுணர்தொ ணாதா
லெப்பெரியவருக்குமெனில்யான்கொலனுவெனுங்கைம்மாறியற்றவல்லே.
னப்பரம னருள்வீடு மதற்கிணையோ வன்றேமற் றறியே னம்மா. ()
என்றுபல புகன்றிணையொன் றின்றெனினு மாபிஃதங் கீக ரிப்பா
யென்றுபலபலபொருளினிருங்குவைகளரும்பணிமுனெல்லாந்தந்தாங்
கென்றுறழ்மா மணிப்பணிவேந் தின்புறமெ யன்பினமு தேசன் பாதத்
தென்றுணையேதும்பாபிடேகமினிக்கொண்டருள்கென்றிறைஞ்சிப்போந்து.
முனிவர்நிக மாகமநூன் முற்றுணருஞ் சிவத்துவிச மூதக் கோர்மற்
றெனையரொடுஞ் சூழ்ந்தனுஞை யெழுவாய்மா கும்பாபி டேக மீறு
மனியசிவ மகாயாக மகாசாந்தி புரியோரை மாசொன் றின்றாய்ப்
புனிதமதாய்ப் பொன்மதிமுற் புணர்சுபநோக் கணவுநலம் பொலிவதாகி.
திரிகோணங்கேந்திரமாதியநலன்பல்பயன்மலிந்துசிறப்பத்திக்கோண்
மருவாது நுனித்துநிறை மதிநாணிச் சயித்தனைய மாசு ணேசன்
பெருகார்வத் தமுதேசன் பேணுதளிப் பூர்வதிசை பிறங்கப் போந்தாங்
கொருவாதொன் றிலஞ்சிதன்பே ருறப்புரிந்து மயனுலவ் வுயர்த டாகம்.
மேற்றிசைமார்க்கண்டமுனிவியன் றடமிவ்விரண்டினுக்குமிளிர்சோபான
நாற்றிசைமா மதிலாதி நயப்புறுத்தி வியப்புறுமெய்ஞ் ஞானம் வாய்ந்து
போற்றிசையுஞ் சிவத்துவிசர் புந்திமகிழ்ந் தனவாதம் பொலிந்து வாழ
வேற்றிசைவான்றெருதேமியெழின்மணிமாளிகைபலவாங்கியற்றுவித்தான்
நூற்பெறவச் சகுடும்ப முதியசிவ மறையவரை முழுத்த நன்று
னிற்பரவு பற்பல்பொரு ளெல்லாமு நனிநிறைத்தவ் வில்லந் தோறும்

*ளகரம்-எதுகைநோக்கி ழகரமாயிற்று; உழ்கிஎன்றதுபோல்

பொற்புறுமா பிரதிட்டை புரிந்தமைத்தாங் கேனையவும் புரிந்து செய்யு
நற்புமிகு மகிவேந்த னந்நாட்டு மகிவேந்தா மபயர் கோமான். (௩அ)

சாற்றுபுபே ரிராசசூ டாமணியென் பானற்றலையித் தலத்தி னும்போந்
தாற்றுசெய லுரைத்தழைமி னந்தணர்கா ளெனவிடுத்தா னவரங்கேகித்
தேற்றினர்கேட் டன்புவகை திளைப்பவனப் பரியமிதித் திரளினொடும்
போற்றுபரி வாரமெலாம் புடைசூழ மாவனத்துட் பொருக்கென் றுற்றான்.

அத்தகையி னிராசசூ டாமணிபோந் தகிவேந்த னடிதாழ்ந் திந்த
வுத்தமமா தலமிதுவோ வொப்புயர்வில் சிவபுரமென் றுவகை யுள்ளம்
பொத்தநடந் தனந்தனொடும் பொன்மணியா திகடிகழும் புனிதன் கோயி
லெத்தலமுஞ் சிவத்துவிச ரிருக்கைகளுந் தனித்தனிகண் டின்புற் றானல்.

என்னுரைக்கே னின்னருமை யெப்பெரிய புலவோர்க்கு மெடுத்துக் காட்டா
முன்னுரைக்கு மரிதேநீ யுவந்துபுரி திருப்பணியி னுயர்வென் றானின்
முன்னுரைந்த மாநேழை முன்னுகினு முற்றுவதோ மூதக் கோயென்
றின்னுரைக்குஞ்சென்னிதவ யெதிர்தழுவிப்பணியரசோ ரிருக்கையீந்தான்.

வேறு.

அத்தலத் தமர்ந்தா சனந்த னோடவ
ணொத்தகு செயலுங்கண் டிருப்ப வவ்விடை
மொய்த்தபல் பொருளெலா முன்கொண் டேகுவா
னுய்த்துள வேவல ருவைகொண் டுற்றனர். (௪௨)

அரிசனப் பெருங்குவா லாங்கொர் பாங்கரப்
புரியிடி யரிசிமாப் புலர்ந்த தாத்திரி
விரியிடி குங்குமம் வியன்மி டாக்களிற்
றெரியொரு பாங்கரிற் செறித்து வைத்தனர். (௪௩

அலகில்பன் மிடாக்கனெட் டைலு மார்த்தனர்
பொலியும்*வற் சலநிரை வேண்டும் போதெலா
மிலகு0தோ கனமுற யாத்திட் டாரவைக்
குலவில்பல் லுணநிறைந் தொளிர்பல் சாலையில். (௪௪)

அப்பொழு தப்பொழு தாங்கு வேண்டுபால்
பொற்புறு தயிர்மிடா நிரைகள் பூரித்தா
ரொப்பறு சுகந்தமெட் டெலுஞ் சூழ்பசுந்
திப்பிய நெய்க்குட மனேகஞ் சேர்த்தனர். (௪௫)

நெக்கெழ வின்சுவை நிமிருந் தைவிக
முக்கனித் தொகுதிபன் மூரி வெற்பின்வாறன்

* வற்சலம்—இளங்கன் றுப்பசு. 0 தோகனம்—பால்கறத்தல்.

யிக்கெழச் செறித்தன ரேனை மேதகு
மெக்கனிக் குவாலுமங் கெய்த வைத்தனர். (௪௬)

மதுக்குடம் பற்பல மலிபல் லாயிர
முதுக்கழை ரசகண்ட முழுத்த சர்க்கரைப்
பொதிக்குல மனேகமுப் புடையி லாங்கலிக்
கதிர்க்குலை கோடிமேற் கவினச் சேர்த்தனர். (௪௭)

இனியகாழ் நறுங்குற டுரிஞ்சு தேங்கமழ்
தணியபூந் தேய்வைப்பொற் றசும்ப னேகமாங்
கெணியவில் வாதியின் வடித்தி மோதக
மணிகட மளப்பில வாக்கி வைத்தனர். (௪௮)

பன்னிறப் பல்வகைப் பளகில் சாலிக
ளொன்னவு மனேகவெற் பெனக்கு வித்தனர்
தன்னிக ரரியவெண் டூய தண்டுல
மன்னவற் றெண்மடங் கதிக மீட்டினார். (௪௯)

வாடக வொவ்வொரு வகையு மாசுதீர்த்
தாடக மாடமூர்க் கந்தி லாதிய
பீடகத் தானியம் பிறங்கு பற்பல
*நீடக மெனநிரை நிறைத்த மைத்தனர். (௫௦)

வில்லுவம் பாடலம் பலாசம் வேணுமா
சொல்லுதும் பாஞ்சமி யித்தி தூர்வையம்
புல்லர சால்பலாப் போற்று சந்தன
மொல்லைவெள் ளெருக்குநா யுருவி மூவைந்தும். (௫௧)

திகழ்கருங் காலியே தேவ தாருவே
யகருவா மலகஞ்செஞ் சந்த னாதிய
பகர்சமித் தெலாந்தனித் தனிபற் பல்கிரி
வகையெனத் தணித்தவண் மலிவித் தாரரோ. (௫௨)

மலிபசுந் தருப்பைகண் மாபிற் கொய்து கொய்
தலகில்பன் முடிகொணர்ந் தாக்குப் பைம்மணி
மலையென வுயர்த்தினர் வகைபற் பன்0னவ
தலசமுன் னடுக்கினர் கணக்கி லாதன. (௫௩)

அறிவரும் பொன்னினால் வெள்ளி யாதியாற்
சிறியன பெரியபஃ றிறத்த பாசன

---

* அகம்—மலை. 0 நவம்—புதிது.

மின்றசில யாகபூ சாதிக் கேய்வகை
யறிமய னிருமித்தாங் களிப்பச் சேர்த்தனர். (௩௪)

கூவிரம் வாரிசங் குமுதங் கொன்றை*யிக்
கீவரஞ் செங்கழு நீர்முற் சிரிய
பூவின மீனினம் புவன0 கூர்மமூன்
ஞவன பொன்மணி யால மைத்தனர். (௩௫)

சூதபத் திரங்கண்மூம் மூன்றிற் சொல்லுப
வீதபத திகண்முடி விளங்கு கூர்ச்சங்க
!!ளாதபத் திறததேங் காய்க ளாதிய
பூதபத் தியின்மணி பொன்னிற் சேர்த்தனர். (௩௬)

பொன்னினும் பட்டினும் பொருவி லாமணி
தன்னினுங் கவிகைவெண் சாம ராதிகண்
மின்னுமிழ் சுருட்டியா லவட்டம்†வீசன
முன்னிலை யளப்பில முற்றி ஞர்களால். (௩௭)

விலைசெல்0காற் பாசமெல் வாசம் வீற்றுவீற்
றலகில்பன் னிறத்தபட்?டாட காம்பரங்
குலவுமொவ் வோர்வகை கோடி கோடியாக்
கலைகளி னளவுறுக் கலைக ளார்த்தனர். (௩௮)

மதிப்பரும் வின்னவு மணிக்கு வால்பல
கதிர்த்தெழு வனகன கக்கு வால்பல
நிதித்தொகை பற்பல நிமிர்த ரக்கொணு
விதிர்ப்புற வளகையு மிகக்கு வித்தனர். (௩௯)

வேறு.

கற்பமுறை யமைத்துவடித் தெடுத்துத் தூய கமழ்தருசி தளவிரைப்பூங் கலவை சேர்த்துப், பொற்புறவாய் தூத்துகிலி னிறுகச் சூழ்ந்த பூசித வெண் டிருநீற்றுப் புனைபொற் கும்பம், பற்பலசேர்த் தனர்கானங் குங்குமப்பூப் பாளிதங்கோ ரோசனைவெண் பசுங்கர்ப் பூரம், விற்பெறுதண் புழுகுமுத லளப்பிலாத விரைவருக்க நிரைநிரையா விளங்கச் சேர்த்தார். விரைகமழு நறுந்தூபம் விரித சாங்கம் விரவுறுபூம் பொடியேல விருந்தக் கோலம், வரமிகுசா திக்காய்பத் திரில வங்கம் வான்மிளகு முதல்வாச வருக்க மெல்லாம், பெருகநிரைத் தனர்யாகத் திரவி யங்கள் பெட்புற

இந்தீவரம்—கருங்குவளை, 0புவனம்-நீர். !!சூரியகிரணம் போலும் ஒளியைச்செய்யும் பொற்றேங்காய். †வீசனம—விசிறி. 0காற்பாசமெல் வாசம்—பரித்தி நூலாலாகிய மெல்லிய வஸ்திரம். ? ஆடகாம்பரம்—பீதாம்பரம்.

வொவ் வொன்றாகப் பேணி யாராய்ந், தரியவெலா மிகச்சிலப மாகவாங்க
ணனப்பரிதாம் படிநிறைய வமைத்துப் பின்னும். (௬௧)

அரம்பைநெடுங் குருத்தலரும் பருவம் வாய்ப்ப வரிந்துசுமை சுமையாக
வனேகஞ் சேர்த்தார், வரம்பிலகாய் வகைமூல வகைக௦ஞாக வல்லிபழுக்
காய்வகை கண் மற்றுஞ் சேர்த்தார்,விரும்புதளிர் வகைதுவர்ப்?பூ ருகத்த
தொக்கின் விதமிருத்தி கைவகைவா லுகவி தங்க, னிரம்புசிவ தீர்த்த
வகைப் பொற்குடங்க ளிகழ்த்துமிவை முதல்யாவு நிறையச் சேர்த்தார்.

இவ்வகையே வலர்வேண்டும் பொருளெ லாமவ் வெல்லையெலாஞ் செறி
தரச்சேர்த் திடுங்காற் சேட, னவ்வமுத லிங்கேசற் குளநி ரம்ப வருண்
மேனி குளிர்தரமா வபிடே காதி, திவ்வியபூ சனைபுரிந்து மேற்செ
டங்குந் திருத்தகுமா கும்பாபி டேகச் செய்கை, யெவ்வமுறா தியலுறக்
கொண் டருள்க வென்று வேத்திறைஞ்சி வேண்டுபுமே லினைச்செய்யும்
சிவத்துவிசர் முகமாக மயனைக் கொண்டு திருந்திரண்டாம் பிராகாரத்
தீசானத்தி, னவத்தகுமா குண்டங்கள் வேதி காதி நாலிருமங் கலந்தசா
யுதங்கண் ணாடி, நிவத்தகுகோற் றுவாரங்கூர் மாத ளாதி நீடுறு மேல் விமா
னமே நிகழ்வி தான,முவத்தகுபல் லுறுப்பெல்லா மணிபொ னாற்கொண்
டொளிர்யாக சாலைகளாங் குளுற்று விப்பான். (௬௪)

ஒருகோட்டு முதிர்வேழ மலகில் கோட்டு மிருகோட்டு வான்பிடியோ
லொவியாருந், திருகோட்டு மாறுமுகவ் கண்டுட் கோட்டந் திரவருண்
மதவேழம் வேதன் சென்னி, யருகோட்டு வண்கைவடு கேசன் மற்று
மருக்கன்முதற் சண்டீச னந்த மாக, வருகோட்டு பரிவாரர் விமானமாதி
வகைக்கெல்லாந் தனித்தனிமா மகப்பொற் சாலை. (௬௫)

அருண்மலரும் பிரகந்நா யகியெம் மன்னை யமுதேச னிருவருக்கு மரு
மைவாய்ப்பத், திருமலரும் பிரதான யாக சாலை திகழ்தரச்செய் வித்த
ரம்பை கழைதிண் பூக, மருமலரும் பஃறொடை பொன் னரிய மாலை
வளரொளிப்பன் மணிமாலை மணிப்பொற் குச்ச, முருமலருந் தோரண
மூன் னணிகளெல்லா மொப்புயர்வி லாவகையாங் கொளிர்வித் தானால்.

இன்னனபற் பலமுன்ன ரமைய வேண்டு மிருந்தொழில்க டிருந்துயர்
தெல்லாஞ் செய்தாங், குன்னிநிக மாகமமுன் னோதிக் கைவந் துறும
னுப்பாவனைசெயறந் திரமுன் னோர்ந்து, சொன்னமா பங்கதி னுதிருற்
றந் தோயாமு லகம்புறமுந் தூயோ ராகி, மன்னுசபத் தினிகசிவத் துவிசர்
நான்கும் வாய்ந்தவரை யாய்ந்து தெரீஇ மரபிற் போற்றி. (௬௭)

---

௦ காசவல்லி—வெற்றிலை. ? துவர்ப்பூருகத்தொக்கு—துவர்மரங்க
ளின் பட்டை.

சிவமாகும் பெருவாழ்வு பெற்று வாழுஞ் சிவத்துவிச மகத்துவமான் செல்வர் காளிப், பவமாகந் தவமாகும் பாபி டேக பரமமகா சாந்தி செயும் பணிமேற் கொண்டே, னவமாவ தணுவுமுறு வண்ண மன்ன தாற்றியரும் பயனெனக்கு மளிப்ப தம்பா, னவமாவ தின்றிதுமேற் கொண்டு நீரே நடத்திமுடித் தருள்கவென நமந்து பின்னர். (சுஅ)

அத்தகைய சிவத்துவிசர் தமையெம் பெம்மா னமுதேசன் பெரியனா யனிலயங் கையோன், சத்திதரன் முதலானோர் வேள்விக் கெல்லாந் தனித்தனியே நவநவமாச் சாருங் குண்ட, மெத்தொகையத் தொகையமல போதகேச ரிருத்துவொடு சாதகரொன் றெண்ணியின்று, ரித்தகுண்டத்தோமம் புரிக வென்று வெல்லையுற நியமித்தா னிரும்பை வேந்தன்.

அங்கதன்மே லங்கதவேந் துரைக்கி சைந்தாங் கருத்திமிகு குருத்துவப்பேரதிகாரச்சீர்ப்,புங்கவர்கள்செய்விக்கு மிறைவ னுமைப்புயங்கபதி யிடைர்ாசவனுஞ்ஞை பூணுந், துங்கவினைமுறைமையிற் செய் தந்நாண் முன்னுத்தொடங்குபுசென்மானநிதித்தொகைகண்முற்றும்,பங்குபதி [தார். னொன்றுகப்பரப்பித்தூய்மைபனுஞ்செயலாந்தனபூசைபாங்கிற்செய்

பின்னுரிய பிராமணர்த மனுஞ்ஞை பெற்றார் பெருகுநிதி தக்கிணைமுன்பேணி யீந்தா, ரன்னையரு ளமுதேசர் தமைமெ யன்பா லபிடேகா திகணிகழ தருச்சித் தேத்தி, யுன்னுதிரு வருள்வேண்டி யனுஞ்ஞை பெற்றாங் குறுசெயலெல் லாமிடையூ றொன்று மின்றி, மன்னிமுடி வுறவேண்டி விக்கினேசன் மலரடிக்கு மாபூசை வயங்க வாற்றி. (எக)

சேர்ந்துபராய்ப் போந்தமுத நாத னூர்சந் நிதியின்மகா சங்கற்ப நிகழ்த்தி வாத்து, சாந்திபிர வேசபலி கிராமசாந்தி சாற்றிரட்சோக் கனஞ்சிவ தலையமீக் கூறத், தேர்ந்துளபூ சினிக்காய்முன் னுவ கொண்டு செய்தி னம்புன் முதனிலைத்தான் றிரட்கு லங்க, ளார்ந்துதிருக் கோயிலிடமெங்கு மல்கி யமர்தருகோ நிவாசமுறை யாற்றி னூரால். (எஉ)

அனந்தரம்பூ ருவபுண்ணி யாக வாச னஞ்செய்தரு மறையாக மாதி யாய்ந்த, கனந்தருவிப் பிரவுண்டி மாபிற் செய்தார் கவினுறவுத் தரபுண்ணியாகங் கண்டார், தனந்தருமா கிருகமகம் புரிந்தார் சங்கி தாவோமந் திசாவோமஞ் சாந்தியோமம், வனந்தருமா வருணிறைய்யு மூர்த்தி யோமமலிதரவாங்காங் குவிதி வயங்கச் செய்தார். (எ௩)

வேறு.

இருசேய்க ளொருதாயெம் மமுதேசன் விழைசண் டீசனிவ ருற்சவங்கொண் டெழுந்தருண்மூர்த் திகளோ, வருதேச திரிசூல வத்திரமா தேவை

மலியுமபி டேகாதி வயங்குறப்பூ சித்தாங், கொருவாவென் விடையாதி
களிலாரோ கணிப்பித் தொளிவீதி விழவுறச்செய தடன்போந்து வில்
வத், தருமூலத் தெழுந்தருள்வித் துறுமாபி லனைய தருமூல மிருத்தி
கைபொற் றட்டதனிற் கவர்ந்தே. (எச)

மாற்றுயர்பீ தாம்பரமேல் வயங்கவிரித் தனைய மண்கவர்ந்த வண்கனக
பாத்திரத்தை மாபி, னேற்றிவர்பாங் கமர்ந்தருளு மமுதேசா தியரோ
டெழுந்தருள்வித் தாலயம்புக் கெழில்யாக சாலைப், பாற்றிகழச் சோம
கட தாபனமுன் னிகழப் பாலிகைபூ சனைபுரிந்தப் பாவனமிர்த் திகையை
வீற்றுவீ ற்றுளபாலி கையினிற்இ யான்பால் விராயபல தானியங்கண்
மீது தெளித் தமைத்தார். (எரு)

அவிர்தருமிவ் வகைமிருச்சங் கிரகணத்தோ டங்கு ரார்ப்பணஞ்செய்
தனைய சிவத் துவிசரெலா மன்பா, லிவர்தருபொன் ஞாணிரட்சா பந்த
னங்கைக் கொண்டாங் கெமதிறைவ னமுதசயம் பிலிங்கேச னிமய,
நவிரம்வள ரனைசெய்மு னெவர்க்கு முயர் செம்பொன் ஞாண்காப்பு
யாப்புமுறை புரிந்தபிடே காதி, திவியபிர சன்னபூ சனைபுரிந்தாங்
கனைய தேவேசன் முதலானோர் திருத்தகுசந் நிதியில். (எசு)

தூயதுகி லான்வடித்து மணங்கள் பல தொகுத்த தூநீர்பூ ரித்துளபொற்
குடங்கள்பிர தான, மேயவருத் தனியட்ட வித்தியே சாதி விதமுறத்தா
பனம்புரிந்தாங் கமுதேச விபுவை, யேயதனிச் சுயம்பிலிங்க விம்பநின்
றிக்கும்பத் தெந்தையே வந்தருள்கென் றிரந்திரந்து சின்னு. ளாயிதனி
லமர்கெளியே மட்டபந்த னந்தா னமைத்தபின்மீண் டெழுந்தருளி
யமர்ந்தருள்க வண்ணல். (எஎ)

ஒருவாத தனியமுத லிங்கவுரு விதுநா மொருவரிதென் றமர்ந்தருளேல்
பொற்குடமீ தனது, திருமேனி மலர்சிகைபொற் றேங்காய்மா விலை
சூழ் சூதிநூலா தியவேனைத் திருவுறுப்பாத் திகழ்வ, வருணீரிற் குளிர்
ந்துமண நிறைந்துபூ ரிதமா யமர்இருத்தந் திருத்தகுமட் டகத்தினி
லொன் றுமே, பெருமானே திருமானேர் விருமானேர் பாகப் பெம்
மானே யம்மானேந் தியகாத்தெம் பிரானே. (எஅ)

வேண்டுவோர் வேண்டுவதே யருளுமது தொழிலென் விபவமெடுத் திருஞ்
சுருதி விரிப்பதையுன் றனையே, யாண்டருளு மண்ணலோ வண்ண
லோ வெனவே யடுத்தடுத்தாங் கிரப்புமொழி யளப்பில சொற் றழைக்கு
மாண்டருமக் கிரங்கனைத் தோதிநியா சாதி மாபினிற்செய் தனையகு
ட்த் தாவாகித் தேனை, யேண்டருபொற் குடங்களினுங் கலாவர்து
மா யேயிந்தருள வம்முறையா வாகனமுன் னியற்றி. (எகூ)

அருளுருவாயமர்ந்தருளெம் பெருமானை யுருகுமன்புருவாய் நின்றிறைஞ்சு வேண்டியவிர் குடத்தின், வருதன்முனந் தெரிதலெனப் பரிதலினால் வயக்கி மற்றனைய பொற்றசும்பை யருச்சித்தந் தேனை, யொருவில்க டங்களும்பூசித் திடன்யாத்தி ராதி யுயர்தானம் புரிந்ததனித் தனி* யுட்டி ணீட, சிரமேலச் சிவத்துவிச ருயிர்மேலும் வகித்துச் செல்லடி மேலடிதுவன்ற மெல்லநடக் கின்றார். (அ௦)

முத்தாரவிருதமுழுக் குடைகள்சாமரங்கண் மூரிவிடைக் கொடியாதி வரிசையெலா மொய்ப்ப, வித்தார மாகதர்வந் தியர்சூதர்வீர மேதகுமங் கலம்புகழ்கள் விதந்தெடுத்துப் பாடப், புத்தேளிர் கற்பகப்பூ மாரிநனி பொழியப் பூதேவ ரக்கதைதூ யாசிமொழி புகலச், சுத்தோத கம்பனி நீர்௦படீர நறுந் தோயஞ் சுவணமணி சாலிபொரி பூமழைமுன் றூர்ப்ப.

வேதியர்கள் சிலரெதிரட் டாங்கமுற வீழ்ந்து வீழ்ந்திறைஞ்சிப் பின்கா ட்டா விதஞ்செலச்சிற் சிலவர், மாதருதேங் காய்சிதறப் பக்குவஞ்செய் மூர்க்க வர்க்கமது வர்க்கநறும் பானகந்தூ நீர்மோர், மேதகிள நீர்வருக்க வோதனம்பல் கனிகள் விழைபசுப்பால் பாயசந்தாம் பூலமுக வாச, மாதி யன வளப்பிலன வடுத்தடுத்து நிவேதித் தாதிசைவ குலமறையோ ரணி மைவிடா தொழுக. (அக)

இருபாலு?திருமறைக ளெடுத்திசைப்பார் போற்ற வெதிர்நின்று பலம றையோர் சுவத்திகளாங் கிசைப்ப, வொருவாம லெப்பாலுஞ் சிவாகமங் கண் முழங்க வுருத்திரமா நமகசம கங்களினி தோங்கப், பெருவாழ்வு தருபஞ்சாக் கரசடங்க பஞ்சப் பிரமசங்கி தாமனுக்கண் முதலாயபெரு கத், திருவாருஞ் சிவநாம கீர்த்தனங்கள் பொலியத் திருந்திசையா முரு த்திரவீ ணையிசை மலிய. (அஉ)

மாமுனிவர் போற்றெடுப்பப் பன்னியர்கள் வாழ்த்த மனங்கசிந்து நெக் குருகுந் தக்கதிருத் தொண்டர், தாமருவி விழிபொழிந்து சார்ந்தவர வேனைச் சாற்றரிய பற்பலவுந் தழைத்தவா வெல்லா,மேமுறக்கண் டிது வன்றோ யான்செய்தவப் பேறென் றெய்யாத வானந்த மெய்வாழ்வு திளைத்தே, தூமுனிவர் போற்றுபதஞ் சலியாமெய்யனந்தன் றொடர்ந்து வர விராசசூ டாமணியின் றொடர. (அ௩)

கண்டவர்நிற் கின்றவர்க ளென்றுரைப்ப மெல்லக் காத்திரத்தி னசைவு மறி வரிதாகிக் கவின, மண்டுமலர் பரப்புதிருப் பாவாடை மேற்றம் மல ரடிவைத் தொருங்கேகி மகாயாக சாலைத், தண்டருபச் சிமவாயி லபிமுக மாப் போக்தத் தசும்பினங்கள் வீற்றிருப்பத் தனித்தனியாங் கமைத்த,

---

* உஷ்ணீஷம்—சிரோவஸ்திரம். ௦ படீரம்—சந்தனக்குழம்பு.
? இருமறை—ஆரியவேதம், தமிழ்வேதம்.

வெண்டருவே திகைகடமிற் சென்னியினின் றெடுத்தாங் கிருத்திநிவே
தனமுதல வினிதுபுரீஇ மகிழ்ந்தார். (௮௫)

பரிவார கலசமொரோர் மகச்சாலை தோறும் பண்புறவாங் காங்குநிறீஇப்
பூசனையோ மாதி, மரபோடாற் றியதொடங்கி நிகழ்காலந் தொறுமம்
மகச்சாலை யிடைப்புண்ணி யாகவா சனமான், றருசீரைங் கவியபூ சனை
முனஞ்செய் தம்பொற் றசும்புகளி னமர்ந்தருளம் மூர்த்திகளுக் கெல்லா
மருள்கூரு மபிடேகம் பாவனையிற் புரிவா ராணிமத னுங்கிவிதி திகழ
வெடுத் தமைப்பார். (௮௬)

அன்னதனி வன்னியினைப் பிரதான குண்டத் தாமுறைதா பனம்புரிந்தா
ரதினின்று மெடுத்தே, பின்னுளவே னையகுண்டங் களினுந்தா பித்தார்
பிறங்குவரி சைக்கிரமப் படியோமச் செயல்கள், பன்னரிய வித்தாரமாக
மலி சமித்தின் பகுதிகள்சுத் தான்னநிறை யவிசுகோ கிருத, முன்னுபல
கோக்கடரு சுத்தநிறை துத்த முதிர்சுவைய வதியாடைத்தநிசாலிலாசம்.

திலமதுவா னெல்லெலைவீ வாரநிறை சாலித் திரள்வகையக் கதைசாமை
தினைமூங்கி லரிசி, யிலகுமவல் சத்துமா மூர்க்கமாமாட மிராசமா டஞ்சண
கங் கோதுமையா டகமுற், குலவுறு தா னிய்வகைபல் கரும்புசருக் கரை
யின் குளநீலோற்.பலங்கழுநீர் குமுதாதி மூல, நலகருணை பலவள்ளி சகு
டாதி பூலா நறுங்கிழங்கு முதலான கிழங்கின்வகை யெல்லாம். (௮௮)

மாதுளைகாரங்கமரம் பாதியொன்றென் றினும்பல்வகையநறுங் கனிகண்
முதிர் வருக்கைநறுங் கனிகள், சூதநறுங் கனிகள்கொடி முந்திரிகற் சூரஞ்
சுவணலிகுசாதிவகை தூயரச கண்ட, மோதனநற் பாகநூற்புலவர் நுனித்
தோர்ந்தோர்ந் தினுற்றுவபல் வருக்கவகை யுலப்பிலனவெல்லா, மோதகமா
டாபூபஞ் சூபபூ ரணமேமுதிர்சுவைநா னுகோணஞ் சட்குலியே*மூர்க்கம்.

பாயசமென் னுண்டைமனோ கரநொலைய றிரட்டுப் பானிறைசந்திராபூபங்
கனுபூபமுதலா, மேயவள்ப்பரும்வகையபண்ணியங்களெல்லாம் வெட்டி
வே ரிலாமிச்சம்வேர்பனிநீர் புழுகு, தூயசுகோ ரோசனைகுங் குமப்பூக்கத்
தூரிதுநறுங்கர்ப் பூராதி கத்தூரி மஞ்சள், பாயூநறுங் குங்குலியஞ் சடா
மஞ்சி மட்டிப் பால்கோட்ட னெரியரிசிப் பான்முந்நீர்ப் பச்சை. (௯௦)

லைநறுஞ் சாதிக்காய் பத்திரிதக்கோல மிலவங்கம்வான்மிளகு முதல்வாச
மெல்லாஞ், சாலநிறை தாம்பூல முகவாசஞ் சிந்தித்தண்கொடிவெற்றிலைக்
கொடிமுன் னுயநதுங் கொடிக, ணீலமலர் கல்லாரந் துவயபதுமாதிநீர்ப்பூ
மந் தாரம்பா டலங்கன்னி காரங், கோலநறும் புன்னுகம் பாரிசா தம்பூங்
கொன்றைநிபஞ் செருந்திமகிழ் கூவிளஞ்சண் பகமே. (௯௧)

---

* மூர்க்கம்—ஈண்டு நிவேதனருகமாப் பக்குவஞ் செய்யப்பெற்ற பயற்றம் பருப்பு.

பன்னிதா டிழுஞ்சுவே தார்க்கங்கே தகைதண் பலாசுகுரா வடம்புதுனுபல
வலரிநறவம்,வன்னிதாத் திரிவிகுச நாரங்கஞ் செச்சை மாவிலிங்கைகுருந்
துவிளா மாநாவன் மருது,பொன்னிணு விரைகிளுவை சந்துமுதற் கோட்
டுப் பூவகைமென் றளிர்வகைகள் புனிதவலம் புரியே,துனைனுநறுஞ் செங்
வந்தி கொக்கிறகு பச்சை தும்பைமருக் கொழுந்துசிவ கரந்தைகதிர்த்
[துளபம். (கஉ)

முதலாய நிலப்பூமா த்விமைபிலை மல்லி முல்லைநறுஞ் சம்பங்கி சாதிமுதற்
கொடிப்பூ, விதமாதி பற்பலவுஞ்*சண்ணவதி யென்ன விளம்பளவின்
மேலுநனி மிக்கதிர வியமற்,புதமாக மனுமுறையா ருதிசெய்தீற் றினிற்
றூம் பூலமுக வாசமுதிர் புதியநறுந் தேங்காய், பதமாரின் சுவைக்கனிக
டெகூலமுத லாய பட்டினம்பொற் பூலிகுச பலமுதற்பல் பொருள்கள். ()
இனியசுகோ கிருதமுதற் சுருக்கினிறைத்ததன்மேலிருஞ்சுருவ பூடியெ
டுத் தெழுந்துமனு வெடுத்தே,பணிவணிகண் முற்றுமே லெழுந்துவலஞ்
சுழித்தூண் பாரித்த நிறையுணவின் பான்மையுணர்த் தேப்ப, நனிபுரித
லெனவொலிப்பவின்னியங்களொருங்கேநரன்றெழமாபூரணுகுதிசெய்து
நயந்தாங்,கனககட நிவாசவமுதேசர்முதலோரையவரவர்தங்கடங்களிற்பூ
சனையாற்று கிற்பார். (கச)

மணங்கமழுந் தூபநறுநெய்த்தீபங்கோட்டிமலிசுவைப்பால்வருக்கவோ த
னமாதி யூட்டி, வணங்கவைபின் னருந்தீட்டி மாதீப நீட்டி மலிநானுன்
குபசாரம் வயங்குவழி பாட்டின்,குணங்கனிமெ யன்பின்மனுக் கிரியாதி
கூட்டிக் குலமறைசொற்றிரிசுபன்னநகொன்றைமுதற்சூட்டிக்,கணங்கெ
ழுநா மாவளிநாவெடுத்தினிதிருட்டிக்கர்ப்பூரமாதீபங்குடிலைவரைகாட்டி.
அனந்தரமஞ் சலிசிரமேலினந்தரநேர்நின்றுங்காரியமுஞ்செந்தமிழுமாய
பானுவந்த,க்னந்தருமாரியவேதமின்சுவைமாதுரியகவின்றருசீரியவேத
மாசியடுத்தோதி,யினந்தருமா தெரிசனத்தின் பெரும்பேறு பெற்றுங்
கெதிர்நிற்பா ரெவர்க்குமிரும் பூதிபிர சாத, தனந்தருவர் தினந்தொறுமிவ்
வகையிருகாலமுநூல் சாற்றுபூ சனைபுரிந்து போற்றுவருண் மகிழ்வார். ()
இத்தகையின் மகாயாக பூசனைநாடொறுஞ்செய்திடையிடை நூதனவிம்ப
நயனோன்மீ லனமே,சுத்தசல நிகாசநசர்ப்ºபதக்கணந்தானியமேற்றேய்
வாசஞ்சயனரோகணமாதி புரிவார்,பொத்தசலம் புரியட்டபந்தனபூ சனை
மன் புரீஇவிம்ப சூத்திரவீட் சணநேர்வா லுகமே,ரத்தினமா நியாசமே
யந்திரதா பனமே நாலிருபந் தனமேலுஞ் சுவணபந்த னுதி. (கஎ)

நவநீத லேபனமே தைலாப்பி யங்க நவிற்று றுமத் தகசெபமே விம்பால
யாதி, யவிர்தருசஞ் சோதனமே விம்பசுத்தி யாதியவைபுரிவார் புவியுயமு

* சண்ணவதி—தொண்ணூற்றாறு. º பதக்கணம்—பிரதக்கணம்.

னுணர்த்தசப தினத்தி,லுவமனிலா விம்பாட்சா பந்தனஞ்செய் துவப்பா
ருரைபரிசா குதிகியா சார்ச்சனைசெய் தெழுவார்,திவியமகாபூரணாகுதிகள்
பூ சனையாத் திராதான மகாதான மாதிபுரீஇச் சிறப்பார். (௯௮)

பின்புசிவத் துவிசசிவா சாரியர்கடாமேபிறங்குமமுதேசகடமுதற்கடங்க
ளெல்லா,மன்புநிறை தாவுட்டி னீடசிர மேற்கொண் டாலயஞ்சூழ் பதக்
கணந்தம் மடியுரிஞ்ச வடிபெயர்த்,தின்புமலி தாப்புதுப்பூம்பாவாடையிடை
வைத்தியங்கியிணைக்கவிகைநிரைகடங்களின்மேலிலக,முன்புவருங்கானி
கழ்ந்த வுபசாரத் தெண்கான் முதிர்தருபற் பலவகைய வுபசார மொய்ப்ப.

வேறு.

ஆர்வமிக வுடலசையா வழகுமிகத் திருக்கோயிற்
பூர்வதிசை தனிற்றிகழ்கோ புரவாயி னெறிப்புகுந்து
நேர்வருமக் கடங்கடமை நிகழ்த்துமுறை யாங்காங்குத்
தார்வளரவ் விம்பகுல சமீபமுறத் தாபித்தார். (௧00)

அந்திகமார் சாதகும்பத் தவிர்கும்பங் களினமரு
மந்திரமா மயமூர்த்தி மானவிம்பங் களிற்பிரம
ரந்திரமார்க் கத்திதய நளினமுறீஇ வீற்றிருப்பத்
தந்திரமா மனுவினியா சம்புரீஇ யன்புருவாய். (௧0௧)

இரந்திரந்தி யாசகமுத் திரைகாட்டி யினிதேத்தி
நிரந்தரசா நித்தியமா நிலையுறவந் நிறைகும்ப
* தாரந்தமிரு கரந்தனின்மேற் றாக்கியெடுத் தாக்கமொடு
வரந்தருமா கும்பாபி டேகமுறை வயக்கினர். (௧0௨)

பதஞ்சலியா தாங்காங்குப் படர்ந்துபடர்ந் துவகைமிகும்
பதஞ்சலியாம் பணிவேந்து பார்வைகளி கூர்வகையன்
பிதஞ்சலியா நிமிர்ந்துளநின் றிருமதகிற் பெருகியெழ
விதஞ்சலியா யாசகமா வெனக்குவித்து விரித்திருகை. (௧0௩)

எதிர்தொழுதின் புறவபய னிராசகு டாமுனிவேந்
ததிமகிழ்வுற் றுடன்சார வமுதேச னுமையாதி
புதிதொளிர்பல் விம்பாதி புத்தேளிர் தமக்கெல்லாங்
கதிதருகும் பாபிடே கம்முழுதும் புரிந்துவந்தார். (௧0௪)

ஆங்குடனே நவவாச மணிந்தருச்சித் தழகருத்திப்
பாங்குறுபா ளிதநீபம் பணிமாறப் பணியெவர்க்குந்
தேங்கொளிவெண் டிருநீறு திருப்பாதோ தகமளித்தா
ரோங்குறுமித் திருப்பணிமுற் றுஞற்றுவித்த வொருசேடன்.()

* தாரம்—பாரத்தை யென்னும் பொருட்டு.

உடனேயச் சிவமறையோ ருவந்துமகா வபிடேகந்
தொடர்பாய பொருளயுத நியுதமெனுந் தொகைபெருகத்
திடனோடு செயவளித்துச் செய்வித்தாங் கவர்புரியு
மடனோடு மாபூசா வகைகண்டு வகைகூர்ந்தான். (௧௦௬)

அப்பெரிய சிவத்துவிச ரனைவரையு மவர் * வசதி
யிற்பிரிய முறநுகர்வித் திருந்தனியிற் றிருந்தவழைத்
தொப்பரிய பெருவாழ்விங் குவந்தளித்தீ ருமக்கெளியே
னெப்பெரிய வகையெல்லா மீந்தாலு மெதிராமோ. (௧௦௭)

நிகர்வரிய பேருதவி நீர்செய்தீர் நுமக்கேழை
பகர்வரிய தென்னினுநூல் பகர்முறையேற் றருள்கவெனுப்
புகர்வரிய சந்தனதாம் பூலாதி மேலோரு
மிகவரிய கண்டிகைமா ணிழைசுவணும் பரவகைகள். (௧௦௮)

பற்பலமுற் கிரியாசம் பத்தளித்த தன்றியுமே
லற்பமல வாயிரமா யிரமாக வள்ளியள்ளிப்
பொற்புறுதக் கிணைகணனி புனிதமுற வினிதளித்தான்
பிற்பரவி யவர்நிறைந்த பெருந்திருக்கூட் டம்பணிந்தான் (௧௦௯)

மூற்றினமே முதலாக மூதகுசீ ரருணூலோர்ந்
தற்றவருக் கற்றசிவ னருள்பெருகு சிவதீக்கை
பெற்றான்பூ சனை §யினிமை பெறுவேத சிரவணமு
னுற்றமகே சுரபூசை யுத்தமவிப் பிரவுண்டி. (௧௧௦)

முதலியபல் வகைநிதமு முறைமையிற்செய் வித்துவந்து
வதனிலுமும் மடிபெருக வந்நாட்செய் வித்தனையோர்க்
கிதமலிதக் கிணையாதி யினிதளித்தா னேனையபல்
விதமலிபற் பலர்க்குமவர் விழைவினுமே தகவளித்தான். (௧௧௧)

இவ்வகையே கும்பாபி டேகதினத் தெனையவெலா
மெவ்வமறப் புரிந்தன்றே யிபமுகன்சே யிறையிறைவி
யையவருஞ்சண் டேசனோ டவனியுயப் பவனிவருந்
திவ்வியநன் மகோற்சவம்பல் சீர்பெருகச் செய்வித்தான். (௧௧௨)

வழிநாளுங் கலியாண மகோற்சவஞ்செய் வித்தன்பின்
மொழிஞான சிவத்துவிச மோதசிவா சிரியர்குழாஞ்
செழிநீறு கண்டிகைமுஞ் சிவவேட மினிதிலங்க
விழிநேர்கண் டவருருக மிளிர்மணிப்பொற் சிவிகைகளில். ( )

---

* வசதி—வாசஸ்தானம். § இனிமை பெறுவேதம்—தமிழ்வேதம்.

வீற்றிருந்து நகர்வலஞ்செய் மேதகைய வுற்சவமும்
போற்றுமுறை மையிற்புரிந்தப் போதசிவத் துவிசர்தினை
மாற்றியன்மண் டலநியம வபிடேகார்ச் சனையாதிக்
கேற்றபொருள் பலநாளு மினிதளித்து நடத்துகிற்பான். (ககச)

இவ்வியல்பி னுடொறுமவ் விறையமுத சுயம்பிலிங்க
மைவருமா மணிமிடற்றெம் மாதேவன் மாதேவிக்
கெவ்வரிய பொருள்களுங்கொண் டிருமூன்று காலநிகழ்
திவ்வியபூ சனையென்றுந் திகழ்வுறுமா நியமித்தான். (ககரு)

நித்தியமை மித்திககா மியமெனநூ னிகழ்த்துமிய
லுத்தமபூ சனைவகைக ளொருவாது தினம்வாரம்
பத்திநிறை பக்கமதி பரவுவரு டோற்சவமுன்
னைத்துணையுஞ் சிறப்பநடந் தியலுறுமா நியமித்தான். (ககசு)

எல்லாமு மெந்நாளு மிடைதளரா தியலுறுமா
வில்லாரு நிதிகோடி மேலுமமு தேசன்முதற்
புல்லாரு மணிகலன்பற் பலவகையு நிறைத்தெல்லாம்
வல்லான்மந் திரநாதன் மலிபொருளாம் படிவகுத்தான். (ககஎ)

பின்னனைய வமுதேசன் பெரியநா யகிதனிக்குப்
பன்னிரண்டா யிரநிட்கம் பங்குபொரு ளொரோர்வருடந்
தன்னிலுமாங் குறுவினைவாற் றப்பாது தாற்குரிய
நன்னிலமவ் விராசரு டாமணியா நரேந்திரனல். (ககஅ)

ஆவணத்தன் பாலளிப்பித் தானயுத நிறையோடும்
பாவணத்த சிவத்துவிசர் பல்லோர்க்கும் பரம்பரையா
மாவணத்த வனுபவத்தின் வருசருவ மானியமாப்
பூவணத்த நிலம்பலவப் புரவலனு லளிப்பித்தான். (ககக)

இன்னனமற் றென்னைநன் றினிதாய்ந்தத் திருக்கோயிற்
கென்னவுமேன் மேனிறைய வெல்லாமும் வகுத்தமைத்தான்
பின்னனைய சூதவனப் பிரதேச பாலகராத்
தன்னிகரெண் வடுகேசர் சாத்தாசண்டிகையிவரை. (கஉ0)

விதிவழிமுன் றனித்தனியவ் வியனகரி னுங்காங்கு
வதிதருவான் பதிட்டைவினை வயக்கியநாண் முதலனையோர்
மதிதருபூ சனைவகையு மனுநாத னிமாசலைவாழ்
முதிர்மணிப்பொற்கோயில்களின் முறைபுரிபூ சனைவகையும்.()

தன்னூலக் நகரிடைமுன் றுபனஞ்செய் சிவத்துவிசர்
மன்னுநின் றெந்நாளும் வழிவழியா மாபின்வழா

நின்னுமுற் றொழிந்தன்போ டின்போங்க வியற்றிவரு
கென்றுநின் றெதிர்வேண்டி யிவையளித்தானியமித்தான். (கஉஉ)

இப்படியிப் படியுய்வா னியாவுமியற் றிடிசேடன்
மைப்படிவ னளித்தருளான் மார்த்தமா கதவிலிங்கத்
தப்படியர்ச் சனைபுரிந்தெ தமன்னையிடத் தமுதேசன்
அப்படிக டினந்தோறுந் தொழுதுவந்தங் கின்புறுநான். (கஉ௩)

வேறு.

மாபிணி லையொன் பானுண் மண்டல வயிடே காதி
தாமிச முடிப்பித் தோகை தழைத்தன னுடனின் றெல்லா
ஈரபதி தரிசித் தின்ப நாலையுட் படிந்து வாழ்ந்து
பாவியப் பன்ன கேசற் பணிந்தரி தகன்றார் புக்கான். (கஉ௪)

மகியா சிராச சூடா மணியவ ணகன்ற பின்னா
ரகியா சனைய கான மகலரி தாகி யுள்ளம்
பகிர்மதி வேணி யண்ணல் பதமல ரருட்டே னுண்டு
சுகிதரு பமா மாகச் சூழவாங் கமர்ந்தா னென்னு. (கஉ௫)

வேத்திர மலர்க்கை யெம்மான் விளம்பவே தியன்சே யெந்தாய்
நேத்திர சோத்தி ரன்பின் னிகழ்வருள் கெனவன் னேனக்
கேத்திரத் தவன்பின் செய்கை கிளத்தியாங்குரைத்துமென்னுச்
சாத்திர முனிவர்க் கன்பு தவாதவச் சூத னேறும். (கஉ௬)

வேறு.

உரைத்தவர்வினவினர்திருப்பணிபணிபதி யுளுற்றிய சரிதமி தொருவாத
வரத்திரு மனைமக நிதிக்குவை நிறைசுக மடுத்திக நலன்முழுதுறவாழ்பு
பரத்தினு நகருபு முழுச்சுக வகைபல பவத்தொடர் பறவரு பலபோக
விரத்திய ரரனடி மலர்த்துணை நிழன்மரு வியத்துவித நிலைபினுறுவாரே.

ஆதிசேடன் திருப்பணிச் சருக்கம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் அசுங.

# ஆதிசேடன் சிவார்ச்சவனைச் சருக்கம்.

அனந்தனி யற்றிய திருப்பணி யான்கொடி றத்தினை யுரைத்தனம்
பினந்தனு ளற்பெழு தாத்தனி பிறங்கும ருச்சனை நவிற்றிய
கனந்தரு மிக்கதை யினித்துறு கவின்பெறு பொற்புள தெனச்சொனு
மினந்தரு மச்சிவ கணத்திறை யெனந்திம ணத்தனி யிருத்தரோ. (௪)

வேறு.

அனந்தரஞ் சனற்கு மாற வனந்தனுங் கமர்ந்து நாளுந்
தனந்தர காத்தி னோடர்ச் சனைதிகழ் கால மெல்லா
முனந்தா விமலை கோயின முறைபுகுந் திறைஞ்சிப் பின்னா
வனந்தரன் றளியுட்சென்று வழிபடு நியதி பூண்டான். (உ)

போற்றுமிப் படியான் மார்த்த பூசனை பார்த்த சேவை
யேற்றமோ டென்றும் பல்கு மிருந்தவர் திருந்த வங்கட்
டேற்றமிக் கெழுமு ளத்திற் றிகழுமெய் யன்பின் மல்க
வாற்றிவா ழனைய சேடற் கண்டுமுன் றகன்ற வாங்கே. (௩)

சினகர நியமத் தேகித் தெரிசனு னந்த மீக்கூ
ரினகர மணிசெய் கூடத் திரும்பைவேந் தொருநான் முக்கட்
டினகர விமக ராங்கி சிவார்ச்சனை சிவாக மத்தாற்
றனகரத் தியற்று மார்வந் தழைத்துப கரண மெல்லாம் (௪)

பெருகிய வமைப்பித் தாங்குப் பிறங்கிய தன்பேர் வாவிப்
பருகிய னீரி னுற்றிற் படிந்தணித் திருந்த கூலந்
திருகிய வொழிக்கு நீறு திருமணி கண்டி பூண்டு
னுருகிய சைவ சந்தி யுறுமுறை யுஞற்றி யேகி. (௫)

பெரியநா யகிதாள் போற்றிப் பேணினின் றிறைஞ்சி வேண்டிப்
பிரியநா யகன்பொற் கோயில்பெரிதுவந் தடைந்தைங்கையோன்
றரியனு யதீத னுருந் தூயமா முகனைப் பூசித்
துரியனு யிரவி யாதி பூசனை யுஞற்றிப் போந்து. (௬)

வேறு.

திருவமு தேசன் றிருமுனம் வடாது திசைமுக னுகவாங் கமர்ந்தா
னொருவருந் திக்கு பந்தன மவகுண் டனமனு வொடும்புரிந் துவற்றுன்
மருவுபூ சனைசெ யிடத்திட ரொன்றும் வராவகை காவலா வயக்கி
யிருகா நியாசஞ் செய்துமே லிருகா லிருபெரு விரலினின் றெழுந்தே.

வான்றனி மூலா தாரமட் டிரண்டு வடிவதா யுச்சிமட் டொன்றாய்த்
தோன்றுவ தாகி யுட்டுளைத் தாய சுழுமுனு நாடியின் கொடியே
போன்றொளிர்ந்திதயங் கண்டநா வடியே புருநடுப் பிரமரந் திரமைக்
தேன்றிடத் திடையிங் கலையெனு நாடி யிரண்டொடும்பின்னியதாகி.()

கருதுமவ் விருத யாதியைக் திடத்துங் கமலவைக் தரும்பதோ முகமா
யொருவறத் தன்பாற் கொண்டது வாகி யுட்புறம் பமுதநற் றூரை.
தருவதாய்ப் பரம வியோமமா ரூப சத்தியாய்ப் பத்தியாய்த் தியானித்
தருமையிற் சிகாமந் திரத்தணிப் பீச மாயவூங் காரமா மனுவை. (௯)

இருதய கமல நடுவினிற் றீப மெனச்சொலிக் கின்றதாப் பாவித்
தொருமையின் வளியைப் பூரகத் திடமூக்குட்புகவேற்றிக்கும்பகத்தாற்
பிரிவற நிறுத்தி யனையஆங் கார பீசத்தின் மனத்தையைத் துடன்முன்
மருவுகா றுவாத சாந்தமேற் சுழுனை வழியுகைத் தும்படு மனுவை. (க0)

தூரிசற வையங்கா லடுக்கியுச் சரித்துச் சோடிகா மூத்திரை யதனல்
விரிவுறீஇ யதோமு காம்புய முகுள மேனியிற் திலகுறப் புரீஇமுன்
மருவுகா லடங்கிப் பிங்கலை வழியின் வருமிரே சகம்புரிந் ததன்மேற்
பொருவளி பின்னும் பூரகம் புரிந்தப் பூரக வளியினுன் மனமாம். (கக)

தனிவன சத்தி லமர்ந்திருப் பவனைத் * தாரகா காரம்போன் றவனு
யினிதுறு சாந்த பீசமா மயனு யிதயசம் புடிதசே தனனய்
முனிபுரி யட்ட கத்தினின் றெரீஇய முத்தனய்ச் சூக்கும னகிப்
புனிதவாங் கார முடியனய்ப் பிந்து பூதனய்த் தனிநிரா மயனய். (கஉ)

நிலவுமான் மாவைப் பாவனைபுரீஇமுன்னிறுத்துவவ்வளியைமேலேற்றி
யிலகுசங் கார முத்திரை யதனு லிதயநின் றனையசீ வனையக்
குலவுபல் பீச சகிதமந் திரத்தைக் கூறியாங்கெடுத்துமேற்கொடுபோய்ச்
செலுமுறை துவாத சாந்தவம் புயமேற் றிகழ்பரசிவனிடைச்சேர்த்தி.()

அயனிடைச் சத்தம் பரிசமே ரசமா லவனிடை ரூபகந் தங்கள்
வயவுருத் திரன்பாற் புத்தியாங் கார மகேசன்பான் மனமும்விந் துவுமே
யுரைசதா சிவன்பா லொடுக்கியித்தொகைசோந்தோன்றியசூக்குமதேகச்
செயலறு சுத்தி செய்துபின் றூல தேகசுத் தியுமுறை செய்வான். ()

பொன்னிற நிவிர்த்தி கலாமயங் கடினம் புகலுநாற் கோணமுன் னவ
மன்னுறு மியல்பிற் பிருதிவி பூத மயத்ததாத் தன்னுட றனையோர்ந்
துன்னுபூ ரகமும் பகத்தினும் பீசத் துடனிவிர்த் தியின்கலா மனுவைத்
துன்னுமும் படந்தத் தைம்முறை கூறித் துறுவளி துவாதசாந் தம்மேல்.

ஏறிய வையங்கா லேற்றிப்பின் வலமூக் கிரேசகத் தாற்கழித் திதனே
டறில்கந் தாதி பிருதிவிக் குரித்தா யினையுண மைந்தைநீத் தினைய
வீறுமண் ணனில மயமதா யொழிபு மேவின பாவனை புரீஇப்பின்
மாறில்வெண் ணிறமே பிரதிட்டா கலையின் மயநெகிழ்பான் மதிவடிவம்.

ஆதிய வியல்பி னப்புபூ தந்தா னகத்தன் றேகத்தைப் பாவித்
தேதற முன்போ லிடையினல் வளியை யிலங்குநாற் பீசத்தோ டியைய
வோதுறு பிரதிட் டாகலா மனுவை யும்பஉ ரூகநான் முறைசொற்
றூதிவாழ் துவாத சாந்தமட் டேற்றி யதனைப்பின் பிங்கலை நாடி. (கஎ)

* தாரகை ஆகாரம் எனப்பிரித்துப் பொருள் கொள்க.

வழியிரே சகத்தாற் கழிந்திர தாதி மலிகுண நான்குநீத் தனைய
பொழிதரு மப்பு பூதந்தீ மயமாப் புக்கொழிந் தெனநினைந் ததன்பி
னெழில்செந் நிறமே வித்தியா கலையி னுருவமுட் டினந்திரி கோணந்
தழுவிய லங்கி பூதம தாகத் தன்னுட றன்னைப்பா வித்தே. (௧௮)

தேசமுப் பீச வித்தியா கலாமந் திரமும்ப டீற்றுறச் செபித்தே
யேசற முன்போல் வளியைமே லேற்றி யிரேசித்து ரூபமுன் னுமந்
நேசமுக் குணநீத் தவ்வனற் பூத நீர் மயத் தொழிந்ததா நினைந்து
காசறப் பின்பு கருநிறஞ் சாந்தி கலாமயஞ் சலித்தல்சட் கோணம். (௧௯)

முதலியல் வாயு மயமதாத் தனது மூர்த்தியை நினைந்துமுன் போலக்
கதுவிரு பீச சகிதமச் சாந்தி கலாமனு வும்படி ரூக
விதமுற விருகாற் புகன்றுறு காலை யிடையினுற் பூரக மியற்றி
முதுசுழு முனையா லிருமுறை யேற்றி மூதகு துவாதசாந் தத்தில். (௨௦)

பின்னிரே சகஞ்செய் தப்பரி சாதி பேசிரு குணங்களு நீக்கி
யுன்னுமவ் வளியப்பிருதிவி மயமாயொழிந்தெனப்பாவித்தாங்கதன்மேற்
கன்னவில் படிகஞ் சாந்திய தீத கலாமய மிடந்தரல் வட்ட
முன்னிய ணபமாத் தன்னுட றன்னை முன்னிமேற்பீசமொன் றுடனே.

சாந்திய தீத கலாமனு வும்ப டந்தமா வொருமுறை சாற்றித்
தோய்ந்திடு வளியை யிடையிற்பூ ரித்துச் சழுனையா லோர்முறையேற்றி
யேய்ந்தபிங் கலையா லிரேசித்தா காயத் தியைகுண சத்தமொன் றினையுங்
காய்ந்துபின் னனைய காயமேற் பரமாகாயமாம்விந்துவிற்கலந்து. (௨௨)

இத்தகு விந்து மயமதா யொழிந்த தெனநினைந் திவ்வகை தூல
சுத்திசெய் தனைய பிராரத்த தேகத் தொடர்புறு துரிசெலாந்தொலைய
வத்திர மனுவை யும்படி ரூக வறைந்துகால் வலப்பெரு விரலிற்
சித்திர பானு வெழுப்பியவ்வெல்லாந்தீந்துறத்தகித்ததாநினைத்து. (௨௩)

ஆயபின் சிவாய வௌசடென் றோதி யரியநற் றுவாதசாந் தத்தின்
மேயமாண் பரவிந் துவினெழு மமுத வெள்ளிய தாரைக ளாலக்
காயமுட் புறம்பு நனைந்ததா நினைந்து கருதிய விருதய நடுவி
லேயதண் டிலைபொற் கருணிகை முதல வியைதரு சலசமென் மலரை.

ஆதன மாக முக்கலைக் குடிலை யாலமைத் ததன்கரு ணிகையிற்
சேதன கிரியா ரூபசூக் குமமெய் திகழுநாற் கலைப்பிர ணவத்தான்
மேதக வந்த தாநினைந் தனைய மிளிர்தரு சூக்கும வுடலி
லோதுறு துவாத சாந்தத்திற் சிவமா யுடனமர்ந் தொளிருமான் மாவை.

அனையசீ வான்ம மனுவுரைத் தெடுத்தாங் கவிரொளி யுருவுடை யவனு
யினிதுதா பித்தே சத்திமந் திரத்தை யியம்பியாங் கதனினுற் கலக்குண்

டனகமாய்ப் புருவ நடுவினின் ஞெழுகு மமுதவெள் ளத்தபி டேக
நனிபுரிந் தங்க நியாசமே லியற்றி நாடுறு மிவ்வெலா மமைந்த. (உசு)

விரவுமைம் பூத சுத்திமூற் றியபின் விசுத்தனே கத்தனாய் விழைந்து
பரவுமன் பொடுமந் நாபியந் தடத்திற் பதிகிழங் கிடைமுளைத் திருநான்
மருவுமங் குலத்தோர் நாளநீண் டிதய வரையுற வதனிலெட் டிதழோ
டொருதனிச்சுவே தாம்புயமிருதயமேலொளிர்தாவுரைத்திடுமதன்மேல்.

இனியவங் குலநான் கிரண்டுயர் படிக விலிங்கமொன் றிருப்பதாநினைந்து
புனிதபூ சோப கரணங்கண் மனத்தாற் பொலிவுற வமைத்துளக் கமலத்
தனியல ரிடையே விசேடவர்க் கியமுன் றூபன முறையமைத் தனைய
பனிமலர்க் குரிய கந்தநா ளங்கள் பத்திர கருணிகா திகளில். (உஅ)

சாற்றுமா தார சத்திமூற் குடிலா சத்தியீ றுயவா தனமிட்
டேற்றலப் படிக விலிங்கச்சுற் றிடையேயெழிற்சிவமூர்த்தியைநிவேசித்
தாற்றுதண் டபங்கி மூண்டபங் கிரியா சம்புரிந் தவ்விலிங் கத்திற்
றேற்றுறு நெடுமை மூர்த்தியின் வித்யா தேகத்தை நியசித்தாங் குடனே.

நேத்திர நியாசம் புரிந்துபி னந்த நிகரிலாப் படிகமா விலிங்க
மூர்த்திதன் பிரம ரந்திர நெறியின் முதுபர சிவத்தைமேற் கொணர்ந்து
நார்த்தவா வாக னாதியர்க் கியங்க ணவிற்றித யாதிய நியாசம்
பாத்தியா சமனாக் கியமலர்த் தானம் பயிற்றிநின் மாலியங் கழித்தே. ()

நவமல ரணிந்து தைலமுன் னாவ நனிமிக மனுமுறை யாட்டித்
தவளவொற் றுடை சாத்திவெண் ணீறு சாந்தமுன் னணிந்தில யாங்கத்
திவியபோ காங்க பூசனை யாற்றித் திருவமு தாதிய நிவேதித்
தவிர்செப நிவேத னம்புரீஇ முக்கா லஞ்சலி நிறைமல ரளித்தே. (கக)

துதிபுரீஇ நாபி குண்டத்தி லோமந் தொடங்கிமே னின்னெழு கழுதே
புதியகோ கிருத மாமுடித் தனைய புண்ணிய மண்ணல்கைக் கொடுத்தே
*ததியுறு மட்ட புட்பமுஞ் சாத்திச் சத்தியோ சாதமுன் னாகப்
பதியருண் மூல மனுமவர் புனைந்து பராமுகார்க்கியங்கொடுத்ததன்மேல்.

முன்னுமோ காங்க தேவர்க்கு மளித்தம் முதியமந் திரங்களை யெழுப்பித்
தன்னிகர் சிவமூர்த் தியினிலுஞ் சிவாஅ சனமனுக் குலங்களை யெழுப்பி
யுன்னுமவ் விலிங்க பீடத்தும் யோசித் தொண்சிவ மூலமந் திரத்தாற்
பின்னருச் சித்துத் திக்குபந் தனமும் பிறங்கவ குண்டனந் தானும். ()

தேனுமுத் திரையும் புரீஇப்பர சிவனைத் திகழ்புரு நடுவமர்ந் தொளிரும்
வானிமிர் தார காவடி யினனு மன்னுற நினைந்தினிப் புறத்து

---

* ததி—இடைக்குறை.

மீனமில் பூசை புரிதர வருள்கென் றிரந்தனு மதிபெறீஇ யுவர்திம்
மானமார் வகைய வந்தரி யாக மாண்புறப் புரிந்துபின் மாதோ. (௩௪)

அத்திர மனுத்தா ளத்திர யத்தா லாங்குறு விக்கின மகற்றிப்
பத்துள திக்கு பந்தனம் புரிந்துப் பணியிறு லொளிர்தழன் மதினு
முத்தகு மகழ்தர்ச் சனிவலச் சூழ்மும் முறைபுரீஇக் கலசத்தி னுலை
மைத்தறு தேனு முத்திரை சத்தி மனுப்புகன் றுனுற்றியம் மாண்பால்.

தாவிலாச் சத்தி சமூகமேல் கிழிற் சார்ந்துசூழ் சாலமா நினைந்து
மாவருக் கியவட் டகையையத் திரமா மனுவினிற் கழீஇயபி டேக
பாவன செலபூ ரிதமணிக் கலசம் பயில்பரு நடுவரை யுயர்த்தி
யோவிலவ் விந்துத் தானநின் றெழுக்கு மொள்ளமு தக்கல சத்தின். ()

உள்ளுறக் கொண்டு மெல்லெனத் தாழ்த்தவவ் தகத்தை யிதயமந்திரத்தல்
வள்ளவட் டகையிற் பூரித்துச் சாந்த மலராறு கக்கதை விலவ
நன்னுறப் பெய்து சிவாசன மூர்த்தி நவிற்றுறு பிரமபஞ் சகமே
யொள்ளிய வித்யா தேகநேத் திரமே யொண்சிவ மூலநேத திரமில். ()

அங்கபஞ் சகமே மூலமீ தெட்டா லருச்சித்துச் சங்கிதா மனுவாற்
கொங்குற வபிமந் திரித்திரட் சாவ குண்டன மத்திர கவச
முங்குறைத் தியற்றித் தேனுமுத் திரைதந் துறுசிவ மூலத்தவ் வுதகந்
தங்குதன் றலைமேற் புரோட்சித்தந் திரத்தாற் றகுதிர வியசமூ கத்தும்.

அநுபுரீஇக் கலசத் தப்பியுட் சணுஞ்செய்தவற்றையாங்கிருதயமனுவாற்
றிதமுற வபிமந் திரித்தவ குண்ட தேனுமுத் திரைகொடுத் தவைய
முதமய மாக்கி யருக்கிய சலத்தோர் முழுமலர் தோய்த்துமஞ் சனஞ்சா
ரிதகடத் தமைத்துத் தேனுமுத் திரைதந் தின்னமு தாக்கியிவ் வகையே.

திருத்தகு தான சுத்திபின் விசேட சிவார்க்கிய தாபனச் செய்கை
கருத்துற நிறைத்த திரவிய சுத்தி கண்டபி னமுதநா யகனை
யுருத்திரு மேனி தீண்டுபூ சனைதா னுத்தசா தியனுனுற் றுதலே
யருத்திசால் விதியென் றச்சிவ சாதி யாகத்தானுஞ்செயல் புரியும். (௪௦)

நலனுறு தனதா சனத்தினிற் சிவாச னம்மனுப் புகன்றல ரிட்டு
மலாதன திதயந் தனிற்சிவ மூர்த்தி மனுமலா புரிந்துசந் தனத்தின்
றிலகநெற் றியினேத்திரம்புகன் றணிந்துசிரத்தினின் மூலத்தாற்சேர்த்தி
யலர்சிவ சாதி யாகவே நினைக்கண் டதன்பின்மந் திரசுத்தி யாற்றும். ()

காயிரண் டிதயத தஞ்சலி யாக்கிக் கவினுற மௌனியா யிருந்து
வாயிகு மூலா தாரமுற் புருவ மத்தியாம் விந்திடம் வரையும்
பிரமபஞ் சகமேற் பிரமரந் த்ராந்தம் பேசுறு சடங்கமென் றிருபாற்
றமிகு சகி தாமனுப் பிராசா தம்மனு வோடுமுச் சரித்தே. (௪௨)

மந்திர சுத்தி யிம்முறை முடித்து மார்புற வஞ்சலி கரங்கண்
மந்திர நாதா தேவதே வேசா வள்ளலே யெள்ளலே யாதிம்
மந்திரத் தமர்ந்தோ யாசையா லேழை வழிபட லேற்றருள் கெனந
மந்திரந் தன்பி னகநெகிழ்ந் துருகமா பினின் வேண்டுகொண் டதன்மேல்.

அரிபநற் சிவகா யத்திரி மனுவா லட்டபுட் பாதியர்ச் சித்தே
பரவுமைஞ் சிரத்து மருககியங் கொடுத்துப் பரிமள தூபதீ பாதி
புரிபுநின் மாவி யங்களைந் ததனைப் புனிதபாத் திரத்திலீ சானத்
துரியசண் டேசார்த் தம்மிரு தயஞ்சொற் றுவப்புற வைத்தனன் மாதோ.

பன்னுமத் திரமந் திரத்திலிங் கத்தைப் பாசுப தாத்திர மனுவா
லன்னபிண் டிகையை யலம்பியர்க் கியநீ ரத்திரத் தாட்டியட் டகப்பூப்
பின்னரும் புனைந்து தூபதீ பம்முன் பேணிநின் மாலிய நீத்தோர்
துன்னல ருடனே யிலிங்கமீ தணிந்து தூயநீ ராட்டிமூ லத்தால். (௬௫)

தாமிகு சுகந்த தைலமே யெவைநெற் றண்டுல சூரணந் துதைநீ
ரரிசனப் பொடிநீர் தாத்திரி மாநீ ரவிர்தரு பஞ்சகவ் வியமே
யிரதவைந் தமுதம் பலபஞ்சா மிர்தமா னிலருபா னிறைதயிர் புதுநெய்
விரவிள வெந்நீர் தேனசருக் கரைநீர் வியன்கழைச் சாறுசம் பீரம். (௬௬)

பலவகை நரந்தந் தாடிம மாதி பல்கனிச் சாறிள நீரிவ்
வலகில வாக விடையிடைத் தூய வரும்புன லொடுஞ்சுவா காந்த
குலமனு மூலத் தாலபி டேகங் குயிற்றிப்பி னம்மனுத் தூய
சலமிக வாட்டிப் பின்னரச் சங்கி தாமனு வொருமுறை யாட்டி. (௬௭)

பின்னரு மெண்பத் தொருபத மனுவாற் பிறங்கிய வாயிரந் துவாரந்
துன்னுபொற் கலத்தின் றாரைமுன் னுவ துலங்குசீ ருத்திர நமகம்
பன்னுறு சமக மாதிமா மனுவாற் பண்புற வாட்டிமேற் சுகந்த
மன்னுறு சந்த னோதக மிமநீர் மணமலர்ப் புனன்மணி யுதகம். (௬௮)

உவமனில் வில்வோ தகம்விசே டார்க்கி யோதக மேதக வாட்டித்
தவளவண் டிருவொற் றாடைதான் கவசத் தனிமனுய்ப் புகன்றுமென்
[மெல்ல
வவிர்தரத் துடைத்த கணத்தினத் திரத்தா லாமல ரணிந்துவெண் ணீறு
திவியசந் தனமக் கதையறு கரிய திருத்தகு வில்வம்புட் பாதி. (௬௯)

திருத்தகச் சிவமூ லத்தினா லணிந்து சிவாசன பூசனை முறையா
தாரத்தினு தார சத்திமுற் குடிலா சத்தியீ றாகவொவ் வொன்றுங்
கருத்துற வவ்வம் மனுக்களால் யாவுங் கரிசற விரிவுறப் புரிபு
வரத்தபன் மலர்க ணிறைகராஞ் சலியை மருவியி ருதயத் தமைத்து ()

அறிவொளித் தண்டா கிருதியே யுருவா யச்சிவ மூர்த்தியை நினைந்தந்
நறைமலர் நிறையஞ் சலிமெலப் புருவ நடுவரை மூர்த்திமந் திரத்தான்
முறைமையி னுயர்த்தி யஞ்சலி தனிலம் மூர்த்திவந் தெனநினைந் திறக்கி
யிறையிரு தயத்தின் மெல்லென வமுத விலிங்கச்சூழ்வுறநிவே சித்தே.

சிரமுக மிதய நாபிசா னுவெனத் திருத்தகு மைந்துறுப் பமையத்
திரமிகு பஞ்சப் பிரமத்தா னியாசஞ் செய்யுமத் தண்டபங் கியின்மேற்
பரவுமூர்த் தாய நமாந்தமாப் பிரம பஞ்சநி யாசமைஞ் சிரத்தும்
புரிதரு முண்ட பங்கியைம் முகத்தப் புகன்மனு வத்திர பங்கி. (௫௨)

விதிபுரீஇப் புட்பாஞ் சலியிரு தயத்தின் விரவவைத் திதழியிந்தாதி [த்த
பொதிசடா முடியைந்திலங்கெழிற்பளிங்குபொன்கரிதருணவெண்ணிற
வதனமைந் தைம்மூன் றம்பக மொருபான் மலர்க்கர மாதிய மருவுங்
கதிர்பளிக் குருவாண் டெண்ணிரு வயச்சுகாசன மாதியகவினும். (௫௩)

வித்தியா தேகந் தனைநினைந் தனைய மெய்மனு நமாந்தமா விளம்பி
யத்தகஞ் சலியை யுச்சிமட் டுயர்த்தி யதனுளாங் கத்தனு மின்றே
சொத்துவந் தெனவோர்ந் திலிங்கவா கார முன்னுரு தஞ்சலிப் புகுந்த
வித்தகு முருவே நினைந்திலிங் கத்தி னியைபுற நியாசஞ்செய் தாங்கே ()

வதனமைந் தினிலு நேத்திர நியாசம் வயக்கிமேற் புட்பவஞ் சலியை
யிதயமே னிறுத்தி மூலமந் திரத்தை யிசைத்துமேற் றுவாதசாந் தத்தும்
முதுமனுப் பொருளே யாம்பர சிவனை மோதமெய் போதநிட் களம்*வ
நிதவியா பகனுத் தியானித்தஞ் சலியைநீட்டிமேற்றுவாதசாந்தத்தில். ()

ஊங்குநின் றனைய பரசிவ னிரவி யொளியனுய்ப் புருநடு வரையுற்
றுங்குமென் மெலநின் றிரக்கிவந் திதயத் தமைத்தபுட் பாட்சலியதனுட்
டேங்குபல்கோடி யிந்தொளி யினனுய்த் திகழுமப் புருநடு நின்றும்
பூங்குமிழ் வலமூக் கிரேசக வழியாற் புறத்துறீஇப் புகுந்ததா நினைந்தே.

அகளநின் மலவிவ் விலிங்க மூர்த்தியின்வந் தமர்ந்தருள் கென்று வேண்ட
திகழ்புவிமுதலுன் மனைவரைவியாப்த சிவபரிபூரணவியல்பை[மைப்புத்
நகவிரி யறிவி லழுத்துமா வாகனம்மித யம்மனு நவின்றே
தகுமுறையாவா கனியிலச் சினையாற் சாற்றுமச் சதாசிவ மூர்த்தி. (௫௭)

பிரமமந் திரத்தா லுட்புகுந் திதயப் பிரசவம் புயத்துவீற் றிருப்பப்
புரிபுதா பனிமுத் திரையின்முன் னமைந்த புனிதனை யிருத்துதலாகி
மரபின்முன் னழுத்து மதுநிலை பெறுத்தல் வயக்குதா பனமுமப்பரனை
வரமுறத் தனக்கு நேர்முக மாக்கு மாண்பதாய்ப்பரன்வியாபகத்தில் ()

* அநிதம்—அளவின்மை.

னதுபே றறிவு மதில்வியா பகமுந் தங்கியொன் றென்றையாசரிக்கும்
புனிதமாய்ச் சந்நிதான முத் திரையாற் புரிதரு சந்நிதா னமுமே
லணகவர்ச் சனைமுற் றளவுவேறகலா தமர்கென வேண்டுபு தகையும்
வினையதாய்த் தன்பால் வியாபக போதம் விலகுறு த்தகைவிளக்குவதாய்.

சாற்றுநிட் டூர முத்திரை யாற்செய் சந்நிரோ தனமுமென் றிவையு
மேற்றிரு தயமா மனுப்புகன் றியற்றி யிமாசலை யுமாபதே யாவுந்
தேற்றுமா தேவ சுவாகதங் கிலவென் றிருந்துவிண் ணப்பமுன் புரிந்து
போற்றரு மைந்த நன்குவந் தனமென் பொன்மொழிபுகன் றதாநினைந்து.

வேறு.

நமசு வாமிந் சர்வசெகந் நாதா நீதா போதாவிவ்
வமுத விலிங்கத் தேழைபுரி யர்ச்சனுவ சானவரை
நிமல பிரீதி மிகவெளியே னேர்நின்றருளு கெனமீட்டும்
விமல னெதிர்விண் ணப்பமுறை விளங்கப் புரிந்துகளங்கமற. ()

மொழியைஞ் சிரத்துஞ் சுவாகாந்த மூல மனுவா லருக்கியமும்
வழுவில் காள கன்னிலிங்க மருவஞ் சலிமுத் திரைதந்து
தழுவு மிதயா தியநியாஅ சங்க ளவ்வம் மனுவாற்செய்
தொழிவி லைக்கி யம்மூலத் தனுற்றி யிரட்சை யத்திரத்தால். ()

அவகுண் டனம்பின் கவசத்தா லாற்றித் தேனு முத்திரையுந்
திவளு மகாமுத் திரையுமுடன் சிவமூலத்தாற் றந்துநம
சுவத சுவாகாந் தம்மூலத் தூய மனுவாற் பதங்கண்முக
மவிர்சென் னியினு முறைபாத்தி யாச மனுர்க்கி யம்புரிந்தே. ()

விரைசெய் மலரக்கதைதூர்வைமிளிர்கூவிளமென்னிலையிருகை
தாமு ணிறைத்தாங் கருள்புட்ப தானம் புரிந்து கண்டையிடக்
கானின் றொலிப்ப நறுந்தூபங் கதிர்நெய்த் தீப மூலத்தால்
வரதன் முகங்க ளுசிகள மார்பு பதநேர் தனிசுழற்றி. (௯௪)

தொகுத்துப் பிரண வாகார தூல மிதுவோ வெனமுக்கால்
வகுத்துக் கோட்டி மலவலியை மடித்து ஞானப் பிரகாச
மிகுத்து விளங்க வருளுகென வேண்டு குறியா முறைவிளக்கி
முகத்துஞ்சிரத்து முன்போல மொழியா சமனுர்க் கியமளித்தே.

பாவ னுபி டேகமுறை பயில மீட்டுந் தைலாதி
தாவில் சந்த னுந்தமுறத் தக்க வரிசை யாலாட்டித்
தூவி சேடார்க் கியமனுமா தோயமாட்டித் தூயநிறத்
தேவில் விலகு மெல்லியவண் டிருவொற் றுடை கவசமனு. ()

புகன்று சாத்தி மூலத்தாற் புனித நீறு விரைக்கலவைச்
சுகந்த படீர மக்கதைபைந் தூர்வை வில்வம் புட்பாதி
யுகந்து சாத்திப் பொன்னரைஞா ணொண்கிருஞ் சுவண கௌபீனந்
திகழ்தமிலகு விசித்திரவத் திரம்பொற் பூணூன் மணிக்குழைகள்.

ஆதி புனை இப்புட் பாஞ்சலிமுன் றளிந்து மூலத் திண்டைமுதற்
கோதை புனைந்து புகைசுடர்முன் கோட்டி யாச மனார்க்கியந்தந்
தோது மனோர தங்காட்டி யுயர்சங் கிதையா லிலயாங்கங்
காதல் வேண்டல் போகாங்கங் கவினப் பூசித் தருக்கியங்கள். ()

செறிய வனைய போகாங்க தேவர் பலர்க்குந் திகழவளித்
திறைபீ சான முதன்முகமைந் தினிலு முறைதே னுப்பதுமந்
திறன்முச் சூலந் திகழ்மகரஞ் சிருக்கென் னுரைமுத்திரைகாட்டி
முறையஞ் சலிக டனித்தனியம் முகாங்க தேவர்க்கவர்மனுவால்.

இதயத் தமையப் புரீஇமூலத் தினிது புட்பாஞ் சலிசாத்தி
யெதிரின் மகாமுத் திரைகாட்டி யினைய சுராதி யரெல்லாம்
விதியி னிமல சதாசிவன்பான் மேவு மேக பாவனைசெய்
ததன்மேற் றூப தீபமளித் தாச மனார்க்கி யங்கொடுத்தே. (எ0)

ஆங்கு நிரைத்த நிவேதனங்க ளனைத்தும் புரோக்கித் தத்திரத்தா
லோங்கு சமக்கா ராட்டகங்க ளுஞற்றி மிருத்திஞ் சயமனுவாற்
பாங்கி னபிமந் திரித்தாசு பாற்றி யமுத மயமாக்கித்
தேங்கு சபரி வாராய சிவாய நைவேத் தியஞ்* சுவகா. (எக)

எனவவ்வவற்றின்பெயரிடைவைத்தியம்பிநிவேதித்திம்மனுவாற்
புனித பானீ யங்கொடுத்துப் புகலா சமன மாத்திரந்தந்
தனகன் கரங்கள் சந்தனத்து ளாலே கவசத் தாற்றுவட்டி
யினமெல் லிலைகாய் முகவாச மினிதீந் தருக்கி யம்மளித்தே.()

பூசித் தொருகான் மூலத்தாற் புகையுஞ் சுடரும் பினுங்கோட்டி
நேசித் தாச மனார்க்கியுமு நேர்ந்து மலருக் கதை தூர்வை
தேசிற் சிறந்த வில்வாதி திகழ்கைந் நிறைத்தஞ் சலியாவு.
பாசித் தகில தத்வாதி பதயே சிவாய நமவென்று. (எங)

புகன்று பவித்தி ரஞ்சாத்திப் பொருவின் மாதீ பாதியெலாந்
திகழ்ந்து பரம சிவஞான தேசு நிறைக வெனக்கோட்டிச்
சுகந்த நீறு சாத்திமுறை தூய தருப்ப ணங்கவிகை
தொகுந்த கவரி சிவிறிமுதற் சோட சோப சாரமெலாம். (எச)

* சுவாகா எனற்பாலது இசைநோக்கிக் குறுகி நின்றது.

மாசிற் புரிந்து சிவத்துவமே வயங்க வேண்டற் கறிகுறியாப்
பாவு பளித மாதிபம் பகரும் விதியிற் பணிமாறப்
புரியா சமனார்க் கியமளித்துப் புட்பாஞ்சலிதூய்ப் பினர்மாமுத்
திரைபஞ் சமுகி முத்திரைக டிருந்த வளித்தா யிரநாமம். (எ௰)

சாற்றி யளியா னிறைவில்வார்ச் சனைசெய் தருத்தி ராக்கவடம்
போற்றி யெடுத்து வலக்கரத்தாற் புட்ப மமைத்து வாமகரத்
தாற்று செபநூற் றெட்டுருச்செய் தருக்கி யோத கம்வலக்கை
யேற்றம் மலரு முடன்வாங்கி யினிதுற் பவமுத் திரையாலே.()

அனைய செபமே கன்மமே யான்மா வேயென் றிம்மூன் றும்
புனிதன் வரத கரத்தின்மனுப் புகன்று நிவேதித் துறதத்த
வினைசெய் தனைய மலர்சாத்தி மீட்டுஞ் சங்கி தாமனுவை
நினைபோர்பதின்காற்செபித்தளித்தந்நிமலவிலிங்கத்தென்கீழ்பால்.

அனக சிவாச னதியமைந் தருச்சித் தேத்தித் தன்குருவைப்
பினர்மேற் றிசையிற் சிவயோக பீட மேல்வித் தியாபீடந்
தனையர்ச் சித்தே சிவாகமமேற் றயங்கப் பூசித் திவையாதி
வினைகண் மனுப்பா வனைமுதல விதியோர் சிறிதும் வழுவாமே.

அருமை பெருமை பாராட்டி யன்புபெருகி நம்பெருமான்
கருணைப் பயோத திநதியாய்க் கலந்தாங் கிருகண் ணருவியெழ
வுருக வுளமு மிருகரங்களொளிர்சென்னியின்மேற்குவிந்தேறத்
திருமுனமுத சுயம்பிலிங்கதேவோத்தமன்பொற்றிருக்கோலம்.

கண்கள் குளிர மெய்குளிரக் கருத்துங் குளிரக் கண்டிமையா
தெண்கள் குளிர்சீ ருத்திரமு னெல்லாங் குளிரு மிருந்துதிகள்
பண்கள் குளிர வெடுத்தோதிப் பணிந்து பணிந்து பலமுறையு
மண்கள் குளிர வாய்குளிர வழுத்தி மீட்டும் பெருகன்பால். ()

வேறு.

திருமுனம் பணிந்தெ ழுந்து திருவருட் சலதி மூழ்கி
யொருவரி தாகி நின்று னுடனமு தேச னந்த
வருவுருச் சுயம்பு லிங்கத் தருளுரு வாயெழுந்து
பொருவில்சுந் தரப்பொற் கோலம்புயங்கர்கோன்காணநின்றான்.

மலவிரு ணிக்குந் தேசு மலிதிரு வேணி கண்டா
னிலவுதா ரகசொ ரூபி நிமலனீ யொருவ னேபின்
பலரிலை யென்று தேற்றும் பைங்கொன்றை மாலை கண்டான்
குலவுயஞ் சாக்க ரத்தின் குறியுமத் தாரிற் கண்டான். (அஉ)

கங்கையு மதியுந் தானே கணக்கிலாச் சீவர்க் கெல்லாம்
வெங்கொடும் பிறவி வெப்பம்வீட்டிமெய்யருஞ் ஞான நல்குந்
துங்கமிங் கெவருங் காணத் துலங்குமக் கவினோர்கண்டா
னங்கதம் பலவு மிந்தோ டளாவுநண் பருமை கண்டான். ()

பிறைமதி யொன்ற லாலெம் பிரானரை மதியு மென்று
நிறைமதி யமும்பூண் டாங்கு நிகழ்நுதன் முகமுங் கண்டான்
முறையின்மும் மலமுக் குற்ற முக்குண முப்பு ராதி
பறையநன் றருள றேற்று பாலபுண் டரநேர் கண்டான். (அச)

உலகெலா நிறைவி யட்டி யொளிக்கெலா மொளிதந் தென்று
நிலவுறு சுசிச்ச மட்டி நேத்திரத் திரயங் கண்டான்
குலமறை சிவாக மாதி குழாங்கள்வீற் றிருந்தெஞ் ஞான்றும்
விலகுறு தமர்ந்து வாழும் விமலமென் றிருவாய் கண்டான்.

பொதுமறை யாரிமுன் னோர்க்கும் புகல்பாத் துவங்க ளேனோ
ரதிகரி யாமைக் கெம்மா னருளுப சாரமேயப்
புதர்பிறந் திறும்ப சுக்கள் புகல்பசு பதியே யீச
னிதுமுடி யென்று தேற்று மெழின்மணி கண்டங் கண்டான்.

மிடற்றெழு மோசை மூன்று விதமெனுங் குறிப்போ சீறும்
விடத்தினும் புறந்த தோர்மூன் றுலகெனுங் குறிப்போ வீயா
துடற்றுமும் மலவி ருட்டை யொறுத்திடுங் குறிப்போ வென்ன
விடத்தறு மிரேகை மூன்றவ் விருங்களத் திலங்கக் கண்டான். ()

அருளுதும் வருக வென்றுங் கழைத்தவி னெலியா நிற்கு
மிருகமு நிசமென் றேந்து மிளிர்தழன் மழுவு முற்றோர்
வெருவுறு வபய மும்பின் வினைகவர்ந் தளிக்கு மாண்பு
மருவுறு மம்பு சாத மலர்க்கர சதுர்த்தங் கண்டான். (அஅ)

உலகெலா முறையிற் றன்பா லொடுங்குறத் தனையொ டுக்கி
நிலவுமேற் பொருளொன் றில்லா நித்தியன் றத்வா தீதன்
மலர்பர சிவனே யென்ன மறைமுடி யறையும் வாய்மை
யிலகநேர் காட்டும் வெண்ணீ றிலங்கெழின் மார்புகண்டான். (அகூ)

அண்டகோ டிகளெ லாமாங் கமர்புவ னேச ரெல்லா
மண்டுபல் பொருளெ லாந்தன் மகைசுவ ரியலே சம்மென்
றெண்டகு மறையெ லாஞ்சொ லீசனே யெவற்றும் வாஞ்சை
விண்டமர் திருத்த னென்ன விளங்குபல் * லணிகள் கண்டான். (கூ0)

---

* அணிகள் - அஸ்தியாதி.

புரத்தலின் ஒருமுத்தா லொன்றும் போதுமென் றுபநி டஞ்சொல்
கருத்தினை யேனக் கொம்பு கமடவோ டிலகு மீன்கண்
ணரத்தனி மடங்க லந்தோ ணகைதரு கபால மாதி
திருத்தகு முறுப்பிற் றுங்குந் திறமினி துணர்த்தக் கண்டான். (௬௧)

தானலா துலகமில்லை சகமலா தடிமை யின்றென்
றேநவில் சுருதி வாய்மை யிலங்குற வகில மெங்கு
மேனிமிர் தாவி யாபித் தவைவியாப் பியத்தின் மேவுந்
தேனிமிர் கமலத் தண்பூந் திருவடித் துணைகள் கண்டான். (௬௨)

தன்னில்வே றற்ற மர்ந்துந் தானுரு முருவிற் கேற்பப்
பின்னையா யொருங்கு சாரும் பெரியநா யகிமா தேவி
யன்னையா யகில மீன்ற வமலையாங் கமர்ந்து மேவு
மென்னையா ளமுத நாத னிடத்திருக் கோலங் கண்டான். (௬௩)

வலமிடம் பொலிந்து தோன்றி வளரருட் கோலங் கண்டான்
மலர்தரு மந்த காசம் வழங்கருள் வெள்ளங் கண்டா
னலகிலா னந்த வெள்ளத் தாழ்ந்தனன் கரையின் காணான்
றலனில்வீழ் தண்ட மாகத் தாழ்ந்தனன் றனையுங் காணான். (௬௪)

பரவச னானான் சீவப் பண்பொரு சிறிதுங் காணான்
வரனரு டரமுன் போந்த வள்ளறன் குறிப்பு முற்ற
வுரனளித் தனன்கொ லென்ன வுணர்ந்தெழுந் தாங்கெம் பெம்மான்
பிரசமென் மலர்த்தாள் போற்றிப் பேணியித் துதிகள்கூறும். (௬௫)

ஒருவனு யுலக மெல்லா மொழிவற நிறைந்தாய் போற்றி
யருமறை யுபநி டம்போற் றத்துவி தீய போற்றி
வருபரா பரமெய்ஞ் ஞான வள்ளலே மாவ னத்தின்
மருவிவா ழாதி சேட வரதநா யகனே போற்றி. (௬௬)

நாயக மறைசெரீன் ஞான ஞாதுரு ஞேய ரூபி
யாயவற் றதீத தூய வகிலமும் விரிந்து நின்றுஞ்
சேயவ வணிய சர்வா சிரயவாம் பிரவ னத்தின்
வாயம ராதி சேட வரதநா யகனே போற்றி. (௬௭)

மூதுணர் விப்பி ரேசர் முறைபுரி துாங்க மேத
மாதியால் வழிபட் டேத்து மூண்ணலே யனைய வேள்வித்
தீதறு பலன்க ணல்கு தேவசே கரவ னத்து
மாதவ வாதி சேட வரதநா யகனே போற்றி. (௬௮)

விரிகலை யாவு ¦மோர்ந்த வித்தக னொவன்றி யானத்
தொருவுபு கன்ம டந்த * முறுவர்தா முத்தி யன்ன
துரியனீ யென்னு வேதந் துதித்திலைறஞ் சதீத சூத
மருவனத் தாதி சேட வாசநா யகனே போற்றி. (௯௯)

மிருகண்டு சூனு வொன்றி விதியினர்ச் சிப்ப வன்றே
னருகண்டு 2 மறலை வீட்டி யாசினித் தியபா வின்பந்
தருகண்ட காள வொண்சே தாரமா விபினத் தென்று
மரு 0 கண்ட வாதி சேட வாதநா யகனே போற்றி. (௧௦௦)

0 வனசமா தவன்றன் ளேக்கம் வனசமாப் பூசிக் கும் i பா
வனசமா ராத னத்தான் மகிழ்வுறீ இத் திகிரி தந்தோய்
|| வனசமா னங்க டந்த வள்ளலே மாமை சூழும்
வன X சமா வாதிசேட வாதநா யகனே போற்றி. (௧௦௧)

தொழில்களைந் துனையன் றின்றத் தொகைவகை விரியளப்பின்
ஞெழிவில வசல னீயிவ் வுளவறி வரிதென் றுன்றோர்
மொழியுமெய்ஞ் ஞான னந்த மூர்த்தியாம் பிரவ னத்தின்
வழியரு ளாதி சேட வாதநா யகனே போற்றி. (௧௦௨)

தன்னில்வே றுயர்ந்த தொன்றுஞ் சசாதிக துவிதமாகத்
தன்னில்வே றொன்று மில்லாச் சர்வபூ தேச நேச
மன்னிய வமுத சூத வனத்தன வாத வாச
மன்னிய வாதி சேட வாதநா யகனே போற்றி. (௧௦௩)

போதரு மெவர்க்கு மோர்காற் புரிநம மாத்தி ரத்திற்
காதர ௩ பவார்ண வத்தைக் கடப்பிக்குங் கருணை வள்ளால்
பேதறு சர்வ சித்திப் பிரதனே ௪ யிரதக் கானின்
மாதவ வாதி சேட வாதநா யகனே போற்றி. (௧௦௪)

நித்திய நிர்வி கார நிராலம்ப நிராம யேச
சத்திய ஞான னந்த தற்பர சாதுர் வேத
துத்திய நிமல சர்வ சோபன சூத கான
மத்திய வாதி சேட வாதநா யகனே போற்றி. (௧௦௫)

---

* பந்தம் ஒருவுபுமுத்தி உறுவர் என்க. 2 மறல்-மறலி.
0 கண்டன்-தலைவன். 0 வனீம்-துளசி. சம்-சுகம்.
i பாவனம்-சுத்தம். || வனம்-அழகு. X சமா-சாந்தனே.
௩ பவார்ணவம்-பிறவிக்கடல். ௪ இரதம்-மாமரம்.

அ*னந்தர வமுத நாத வட்டமங் களசொ ரூப
கனந்தர கந்த ராதி காருணி யாம்பு நீச
சனந்தர சனக ஞான தாயக சூத கான
வனந்தர வாதி சேட வரதநா யகனே போற்றி. (க0சு)

சங்கர நீல கண்ட சந்திர சடில சாரங்
கங்கர மந்தி ரேச காரண பெரிய நங்கை
பங்கர சூத கான பரவா பவஞ்ச மீதார்
வங்கர வாதி சேட வரதநா யகனே போற்றி. (க0எ)

வேறு.

என்றகிகோன் றுதித்திறைஞ்சி யெந்தைதனை யாதுணர்ந்திங் கேத்துகிற் [பே
னன்றிமகத் தெனிலணுவு மண்டமென நணுகின்று யணுவே யாதி
யென்றிடிலோ வண்டமணு வெனத்தூலித் தெழுகின்றா யேகனென்னில்
வென்றியுற வநேகனாய் விரிகின்றா யென்றிவைக்கும் வேத நான்கும்.

காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக்கா லென்றனைய கலக்கந் தீர்த்து
மாண்பார வச்சுருதி சாரமெடுத் திசைப்பதெவர் மறுக்க வல்லா
ரேண்பாவு சூதவனத் தெந்தாயென் றினையடிக்கீ ழிறைஞ்சிக் கண்ணீர்
சேண்பாயப் பரவசனாய்த் திருமுனமந் தாங்கருளிற் றினைத் தான்மன்னோ.

அங்கிராசன் செயனோக்கி யமுதேசன் மிகமகிழ்வுற் றனந்த னேநின்
சுகதாய மாதுரிய துவாதசமஞ் சரியாமித் துதியி னோர்வ [யாவும்
மிகுமோகை யுற்றனமிவ் விழுத்துதிசொற் றனர்கேட்டோர் விழைந்த
தொகமேவி யொருவீடுந் துன்னுகநீ வேட்டவாஞ் சொல்லு கென்றான்.

அனையதிரு வாக்கமுத மனந்தனிரு கட்செவிவா யார மாந்தி
யெனையுடையா யிமகிரிசை யிடத்துடையா யமுதேச வேழையேனி
னினைவரிய திருக்கோல நேர்காணும் பெறும்பேறு நிரம்பப் பெற்றே
னினியிதனிற் பெறுபெறும்பே றென்பகர்வ தமுதசுயம் பிலிங்க நாத.

ஆனாலுஞ் சேடநா யகவருளால் வேண்டுவதொன் றளியே னெஞ்சாந்
தேனூது நினதுபதச் செம்பதுமத் திருவருளா னந்தத் தேனுண்
டேனைஞ் சலியாம லியணமரும் பெருவாழ்வீ கென்று தாழ்ந்தான்
பானூறு மொழிபாகப் பரமேச னகியீச பகர்தல் கேட்டி. (கக௨)

அன்புடையா ரெவரினுமிக் கன்புடையா னாகின்ற யானு னுங்கே
ணின்புடையே நம்பத்தி னிறையன்பு குறைவின்றி நீடிமல்க
முன்புசிதம் பரநிருத்த முதமளித்தோ நினக்கிம்மா முனரி வைப்பி
லின்பமுத சுயம்பிலிங்கத் தெழுந்தருணத் தரிசனப்பே றினிது தந்தோம்.

---

* அனந்தரன்-பிரிவிலாதவன். அல் நந்து அர என்னினுமாம்.

அனகநினைக் கென்றுநம தருஞ்சொரூப சிவஞான வாக்க மோங்க
பனகபதி நீயீண்டுப் படர்ந்தமுத னமைக்கண்டு பணிந்து போற்றி
நினைகநெகிழ் தைமதியி னிறைமதியிற் குருவார நிலவு நாளெம்
முனைகமுரு கியவிரிவின் முறைபூசா திரவியங்கண் முழுது மீட்டி:
வழிபடுவோ ரிகபோகம் வழுவாது முழுதார்ந்து மாபின் வாழ்ந்து
நழுவரிய தனிவீடு நண்ணுகநீ மேலுமினி ராச சூட [கென்று
முழுமணிவேந் தனைக்கொண்டு முறைசைத்தி ரோற்சவமிம் மூதூர்க்
மெழில்வளர்பூ ரணைமுடிவா யியல்விப்பா யென்றுபினு மியம்பு மாதோ.

நமதருளா லுலகபூ டணமாக யோகசூத் திர நவின்று
சமைவுறநின் பெயரினிற்பா தஞ்சலமென் றதற்கியற்பேர் சாற்றிமேலுங்
கமைதருமா தேற்றுவியா கரணமகா பாடியமுங் கவினச் செய்தே
யமைவுறுமா சாசுவத மாயகிலப் பிரசித்தி யாக வைப்பாய். (௧௧௬)

நம்முரிய சொரூபவிய னன்குணர்ந்தோ ராணனே நவின்ற துண்மை
யெம்மிலவன் பேதமென வெண்ணுதியா னினக்கவனே யெம்மைநல்கும்
மும்மலமோ சனகுருவா முன்னுபதே சாதியருண் முதிய ஞான
னம்முறையா லும்மவன்பாங் கமர்ந்துவழி படலேநிற் கமைதி யாகும்.

ஆதலினு லவனையடைந் தனையகுரு பத்திவழா தமைந்து வாழ்த்திக்
கோதறவீற் றினிமைமது குளிர்கமல பதநீழல் கூடு கிற்பாய்
போதுகென வருள்புரிந்தப் புனிதசுயம் பிலிங்கநடுப் புகுந்து வெற்பின்
மாதொர்மெங் கிரநாதன் மறைந்துவீற் றிருந்தனனிவ் வையம் வாழ.

பின்னருளா லகிபதிசெம் பியற்கூவி யமுதேசன் பெரிய வன்னைக்
கன்னமுகோற் சவம்விதியி னூற்றுவித்தாங் ககல்பிரிவிற் காற்று றாகிப்
பன்னருளா னையுமறுக்கும் பான்மையதோ வென்றிரண்டு பாங்குமுள்ள
மன்னவொருவாறமுதவள்ளலைத்தாழ்ந்துள்ளமெலாம் வைத்திட்டாங்கே.

வெற்றுடல்கொண் டேகுபுபால்வீரையிற்றன் குரவனடிவீழ்ந்து முற்றுஞ்
சொற்றனையன் பணியாற்றித் துன்னினனென் றருணந்திசொலக்கேட்டி
முற்றசனற் குமரமுனி யுழுவலன்பா லடிகளினி யுதக வேந்தன் [ன்ப
றுற்றவண்முன் பெற்றபயன் சொற்றருள்கென் றிறைஞ்சிடவத் தூயநந்தி

வேறு.

மேலினி தருளின னென்று சூதன்முன் மேவிய முனிவர ரன்புகூர்தர
மாலறு கதைபினு மங்க ணேதுறு மாசிரி சரிதமி துந்து மாதர
மேலுற வினவினர் நன்று கூறின ரேவரு மிகசுக மென்ப யாவையும்
வாலிதி னுகருபு பின்பு மாபதி வார்கழ லடிநிழ லொன்றி வாழ்வரே.

ஆதிசேடன் சிவார்ச்சனைச் சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் ௯௮௪.

# வருணன் சாபமோசனச் சருக்கம்.

அரபதி சென்றமு தேசனை யனியொடு முன்புரி பூசனை
மரபுரை தந்தன மேலினி வருணனை யன்றுடல் சாபமு
னொருவிய நன்கதை கேளென வுணர்தர வன்பினொ டோதுறுங்
குருபர னென்றுல கோர்தொழு குலவரு ணந்திபி ரானரோ. (௧)

விதிதரு மைந்தமுன் னாளலை விரிகடற் கரசொரு வேள்விசெய்
மதிகொடு பாதலத் துற்றவண் மறையவ ரின்மையிற் சிற்சில
கதிபடர் 2 தௌத்தியர் தமைவிளீஇக காசினி மறையவர் தமையழைஇ
யதிவிரை வருகென வவணிபுக் கவர்மறை முழுதுண ரந்தணர். [௨]

தங்களை யுறுசெய றெரித்தாஞ் சார்கென வழைத்தன ரம்மறைப்
புங்கவர் நிடேதமப் பாதலம் புகுசெய லென்றெதிர் மறுத்தன
ரங்கது தூதுவர் பாதலத் தம்புதி கோன்முனி யம்பின
ரிங்கினி யென்செய லென்றற லிறையுள முடைந்திஃ தெண்ணுமால்.

கருதிய வேள்வியெப் படியுநாங் கவினுற முடிப்பது கருமமென்
றொருவரு முபாயத்தின் வேதிய ருங்குறப் புரிதுமென் றுன்னுபு
வெருவரல் பின்னுற னோக்கிலான் வினவரு முன்மதி வீயுமென்
னொருபழமொழிபழுதுறாதுதன்னுழியுணர்தரும்வகையுஞற்றுவான்,

தன்னுழை வதியுமோர் விற்பனன் றருகலை பற்பல கற்றுள
மன்னுறு புலவனோ டவணியில் வந்தொரு மகிபதி வாயிலின்
முன்னமர் கெனப்புல வனைநிறீஇ முதுபொருள் குறித்திவண் வருகுவார்
துன்னுபு விப்பிரர் பற்பலர் தொகுமவர் தமையெதிர் கூவிநீ. [௫]

இசைதரு சாத்திர வாதத்தி லென்னைவென் றிடினுமக் கீகுவ
னசைமிகு பொருள்பல வென்றுள நயப்புற மொழிந்தவர் தமையெலா
மசைவற வென்றலை கடலிடை யாழ்வுறத் தள்ளுதி யென்றுரைஇ
வசைநிறு வுதலினப் புலவனை மற்றவ ணிறுத்தின னேகினான். [௬]

புனலிறை பாதலம் புக்கபின் புலவனு நினைப்பரு மச்செய
லினிதென வாங்குறு ககோளர்மு னிருடிக ளெதிருரைப் போர்புரிந்
தினிவரு துயர்க்கட லிடைப்புன லிறைவிழு திறனனி தெரிப்பவ
னெனவலை யெறிகட லிடைத்தளி யேகின னத்துணை * குடாதிறை.

---

2 தௌத்தியர்-தூது செல்வோர்.

* குடாது இறை-மேற்றிசைத் தலைவனாகிய வருணன்.

அழலினை மடிதனின் முடிதலீ தலதிலை யெனநிறை யார்கலி
விழலுறு மவர்களை யறிவெலாம் விழலுற வொற்றுவ ராற்பில
வழியவ னுறப்புரிந் துன்னிய மகமவர் மனங்கொதித் தெழுதலி
னெழவழ லாகுதி யாதிசெய் தெண்ணிய செயன்முடித் தனமெனா.
சூறுசினின் றெழுசெருக் கறிவினை மூடவம் மூடபுத் தியினிலவ்
வுறுவர்க டமையுரை யமர்பினு முஞற்றுபு நீரெமை வெல்லுநா
ளறுதியிங் கமர்தனுங் கடனெனா வவர்தகை யறிவிலி தகைஇயினா
0 னுறுவது தவிர்வதெவ் வருந்தவ வுறுவரு முறுவரான் றென்பதால்.
பின்பவ ணமர்தரு கசோளர்தம் பெருந்தவ மோருரு வாயினோ
னின்பமிக் கருமறை யாதிய யாவையு முணர்ந்துமெய் தேர்ந்துளான்
றன்பெய ரட்டவக் கிரனெனுந் தாபத னாபதுத் தாரண
மென்பஃ தேனையர்க் காற்றுவா னின்றவற் குறுதுயர் பொறுக்குமோ.
தாதைபா தலத்தினை செயறெரீஇத் தரிப்பற வுளமிகு பதைப்பொடு
மோதுமக் கணமவ னுற்றெதி ரொருசொலி னச்சமர் வெற்றிகொண்
டேதறு தாதைமு னாகவங் கிருந்தவ ரிருந்தவர் யாரையு
மேதினி புகுந்துதங் கியதிகண் மேவிய வமர்கென விடுத்துமேல் [௧௧]
குடபதி கேண்மதி பாழ்மதி கோண்மதி யாதுகொண் டேமதி
மடமைய ரெனவதி பாதக மலிவினை புரிந்தனை யாதலி
னுடன்றி விழுந்தனை பித்தனா யுடலழி குருபமுற் றுலைதரக்
கடவையென் றினைதரு சாபமுன் கழறின னேகினன் றாதைபின்.
வருணனவ் வழியறி வழிந்துடன் மலினமுற் றலைநிலை மனைமுனோர்
* தெரிபழி மனத்தரிப் பாதகந் தீர்வதென் றென்றுநைந் தினைந்தன
னொருவிலிப் பழிதெற நீடுநா ளுழலுமவ் வருணன்முற் புண்ணிய
மூருவினுற் றெனவிருபாக்கனென் றொருபெருமுனியவனுற்றுளான்.
எதிர்தொழன் முதலுப சாரமின் றிருந்தன னறிவழி குடாதுகோ
னதுதெரிந் துடன்விரைந் தவன்மனை யமைச்சரம் முனிவரனடிபணீஇ
முதுதவ முனிவரர் சிகாமணே முழுதுநி னடியல தரணிலேங்
கதுமென நசிக்குமா மேதையோர் காட்சியெத் தீமையு மென்பரால்.
அடிகளை முற்றவப் பெரும்பய னாகவிங் கடிதொழப் பெற்றனங்
கடிகவெம் பதிமதி மயலெனக் கழறுவ தென்னினி யேழையே
மொடிவறமுழுதுணர்ந்தருளெனுமொண்கலனணிகலனெனக்கொடே
ரெடிதருள் பெருந்தகைக் கெனப்பினு னோயணிந் தனரடிக் கடியரோ.

---

0 (தமக்கு ஊழ்முறையால்) உறுவதாகிய தீமைநீக்கத்தை எவ்வித அரிய தம்முனிவரும் பொருந்துவாரன்று எனனும் நூன்முறையால் தகைஇயினன் என்க. * தெரிபு எனப்பிரிக்க.

எழுமினும் மிறைபுரி பாதக மெவற்றினும் பெரிதுசற் பிரமண
ருழியவ மானஞ்செய் துற்றகில் வுழுபழி யகற்றரி தாயினும்
வழிபடு நும்பொருட் டிரக்கமும் வளர்ந்தெழு மூனநனி யாதலி
னொறிதரு முபாயமிங் கோதுது முணருமி னெனப்பினு மோதுமால்.

துமதிறை மனமழி சாபமு னுவன்றரு டாபத னியாவையு
மமைதர முழுதுணர் தூயனவ் வட்டவக் கிரப்பெய ரண்ணல்சொ
னிமிர்பெரு வலியின தாதலி னிறைபரி காரமுற் றுறினலா
தெம்தியல் வலிகொடு மாற்றரி திப்பரி காரமு மிவனலால். (கஎ)

ஏனையர் புரிதரி னிரிதரா திவன்மது பானவுன் மத்தனு
* யீனநிந் திதசபா பிட்டனு யினனறி வுற்றல தியல்வுறு
தூனமி லனையதிப் பாதலத் துனுற்றுதன் முறைமையன் றம்புவி
மேனல மாதல மீதுறு விதிமுறை புரிவதென் றோதிமேல். (கஅ)

மரைமலர் புரைதன காமவன் மத்தகந் தனின்முறை வைத்தனன்
காவிலவ் வத்தமத் தகசய்யோ கப்பெருந் தீக்கையி னுக்கமிக்
கொருவுணர் முழுதுறப் பழுகிலவ் வொருமுனி யிருபத மலர்தன
சிரசுறை வரவிழுந் திரைஞ்சுபு தீயவிப் பேயனே நீயலால். (கக)

அருள்பவர் பிறரில ரரணினை தடியல திலையென நமந்துள
முருகிய மேதகு சீதள வுதகமென் பதமிசை யாட்டியப்
பொருவில்பா தோதகஞ் சென்னிவாய்ப் புரோக்கணு சமனமு ளியற்றுபு
மருமலர் மதுவருக் காதியான் மாபினி லருச்சனை யாற்றினன். (உ0)

பூசனை புரிந்துட னஞ்சலி புரிந்தெதிர் தொழுவரு ணனன
நேசமு னீடிய நோக்குபு நிறையருள் செலுத்தவப் புனலிறைக்
காசறு முத்தம மந்திர மாற்றினின் வகித்திடு மாற்றன்முன்
மாசற நல்கிவெண் ணீறுமெய் வயங்குமுத் தாளன மாமனு. (உக)

திறன்மலத் திரையமொய்ந்சித்தொளிர்சிவத்துவப்பேற்றினை யளித்திட
லறிகுறி யெனுந்திரி புண்டர மணிமனு நியாசங்க ளிருடிகள்
குறியதி தேவதை சந்தமுன் கொளவுப தேசமுன் றந்துபின்
மறைநடு மத்தியின் மத்தியின் வயங்குயி ரக்கர பஞ்சகம். (உஉ)

பிரணவத் துடனுப தேசமும் பிறங்கிய புரிந்துதன் னோக்கினுற்
கரிசமுற் றொழிந்தொளிர் முத்தனுய்க் கவினுறு மவனுழி மேலுந்த
னருள்விரி தலினுயர் சிவாகமத் தவிர்முறை யிந்திர நீலமா
பரசிவ லிங்கமொன் றனையவண் பதிட்டைசெய் தருச்சனை புரிந்துபின்

* ஈனர்களும் நிந்திக்கும் நிந்தையுடன்கூடிய பாபிஷ்டனுயினன் என்க.

குடபதி கேண்மதி யிவ்வருட் குறியையநின் னுடலள விலுடையரு
திடர்தப மிடையுப சாரமுற் றியைதா மியதியி னொடொறுந்
திடமிகு மளிமிக வுளநனி திகழ்தர வருச்சனை முற்செயக்
கடவையென் றெதிரிறைஞ் சவனிரு காமிகை யருளினன் மாதவன்.

அரிபிர மாதிய தேவரு மருமறை யாதிய நூல்களுந்
தெரிவொழிந் தன்மைசொற் றேலிடச் சிவசிவ வுணர்பவ ருணர்வையு
மொருவியெந் நெறியினு மதீதமாமொருபொருளிருகாத்தொருமையின்
மருவியிங் கெளிதுற வெப்பெரு மாதவ கோடிகள் வாய்த்தனன். (௨௫)

வேறு

என்றுவெழு மாதா மீதுறவவ் விலிங்கேசனை யாசிரி யன்சொல்வழி
முன்னுமனுப் பாவனை யாதியெலாம் வழுவாதருச் சித்துப தேசமுறைத்
தின்றுவற நீள்குறி நல்கியரு ளியதேசிக பூசனை நேர்புரியா
வின்னிண்மணி யாதிய வாயதிர வியநேர்தொழு காலுரை நல்கியரோ.

தொழுதாங்கெழுந்தஞ்சலிசென்னியினிற்சூடித்திருமுன்னுறநின்றன
[ணம்
முழுமாதவ தேசிக னவ்வருணன் முகநோக்குபு கேண்மதி நீர்க்கிறைவ
வழுவாதமர்தாபதசாபவினைமாற்றுஞ்செயல்போற்றுதல்வேண்டுமெனக்
கெழுவாரிதி சூழ்புவி யின்கணலா லிவணீ செயி னும்பய னின்றதனால்.

புகுபாரினும் பாவன மாவனமே பொருத்தம்மெளி திற்பய னுமுடனத்
தருமாவனங் காவிரி யாமியதி சையின்மாமறைக் கானனமேற்றிசையிற்
றொருகுயோசனையோரிரண்டின்னுள தச்சுதாரணியத்தமர் தூமணியைச்
சுகபோதக ரூபவ நாமயனைத் தோன்றுத்துணை யாகும நாதியனை. (௨௮)

படிவாழு மணிச்சுடி கைப்புனித பணிராசசற் பூசித பாதனைமெய்
யடியாருளத் தாரமு தச்சுவையை யமுதேசனை யளிநிறை மனமுருகக்
கடிமாமல ராதிவி ராயவுப காரம்பல வோடள வாமணியா
லொடியாதமர்பூசனையாற்றுதிமேலுவணோர்சிவ லிங்கமு முன்பெயரால்.

மரபாற்பிர திட்டை புரிந்திறைவன் மகிழ்வேள்வியும் போற்றுதி யிவ்
[வகைநீ
புரிவாயெனிற் சாப நசித்திடுமப் பூசைத்திருத் தொண்டது வன்றியுமே
லொருவீடுமளிக்குமெனப்புகன்றானுதகேசனெழுந்தெதிர்தாழ்ந்திறைஞ்
[சிப்
பெருவாழ்வு தரப்புகு சற்குரவ பெரியோய்நின திரு†விலையாக்கலியை.

† விலையாக்கலி—ஆணை.

எவர்மாற்றுநர் சொல்வழி நிற்பனின்வாக் கிடையேழைவிண் ணப்பமொன்றையதிருச், செவிசாத்தியெ னையம கற்றியருள் செயவேண்டுவ லென்னவஃ தென்னையெனச், சிவசாத்திரம் யாவையு ஞானமலாற் றிகழ் மோக்கமின் றென்னவச் சூதவனத், தெவமாற்றமு தேச சயம்பிலிங்கத் திறைபூசனை நன்றருண் மென்றதே. (௰௧)

எனவேவருணன்புகல்கின்றதுகேட்டிறைகூறுமுன்னூலுரைசத்தியமே யனஞானமப் பூசனை யன்றியுரு தகத்தும்புறத் தும்புரி பூசனையான் மனதூய்மையச் சுத்தி பரம்பரையின் லருமாண்சிவ ஞானமப் பூசனையே முனமேதுவென்றே தலுஞ்சத்தியமேமுத்திக்கதுபாரம்பரையேதுவதாம்

அவிரோதமுன்சொன்னதுங்கேட்டதுமென்றறிநீபினுமத்தெளிவோ
[துதுங்கேள்
சிவபூசையொ டன்றிய லெத்தவமுஞ்சீவன்கழிதேகமென் றேதுமறை யவமேயவை யுத்தம பூசனையா மதுவேசிவ ஞானமென் றேருதியச் சிவபூசையுண் மந்திரம்பாவனைதாச் செயறந்திரமாதிய வாய்மையெலாம்.

முன்னூலுணர்வன்பருள்சாந்தமுதன் முற்றுங்கொளுமுத்தமசத்துவனு யன்னோர்மிடற்றேனருள்புக்குநின்றலறிவானதனருமைபல்பெருமை
[யெலா
மென்னேயினிப் பூசனையேயலதொன் றிறவாதவின் பீவதுமுண்டுகொ வின்னேகரநெல்லியினத்துவிதவிரும்போகமிப்பூசனையேதாலால்.[லோ
இதன்மேலுமெய்ப் பேறுயிர்க் குள்ளதுகொ லெந்நூலு மிசைத்தில துண்டெனவென், றதையேபுரிந் தத்துவிதானந்த வாழ்வடை வானென வோருதியீதலதுந், துதிசேர்சிவ மாதல வாசமுறீஇச் சயம்பீசவ ருட்குறிகோர்தொழுதி, யதிமேவினு முத்திபரம்பரையி னருண்மென்றுணருண்மையிதையுமுறேறல். (௰௫)

அல்லாமலு மத்தகு சூதவனத் தமுதாகர சயம்பிலிங் கேசனையரங் * கெல்லாருமுக் காலமு நேர்தரிசித் திரியாதுவ சித்திடு சீலனெவன் மல்லாரவன்றேகம்விடுக்கொழுதம்மனுநாயகன்றேவியொடும்புகுந்தே வில்லார்தரி சனமளித் தொப்புயர்வில் வீடுந்தரு வானிது நிச்சயமே.

இவ்வாய்மையையோர்வுறினித்தலமேயிறுங்காறும் வசித்துமெனும் விரதஞ், செவ்வேகொடு சாந்தமன்பாதி தினந்தின மோங்கியவிட்டலிங் கார்ச்சனையோ, டவ்வாசமு தேசதெரிசனமைந் தெழுத்தெண்ண றியானமுன்னுயபுரீஇத், தெய்வாதிப னாருண் மூழ்குநர்க்கத் தேவேசனளித்த றெரிப்பவரார். (௰௭)

* எல்—ஒளி,

வேறு

சேண்மி யாவுத கேசநாம் விரிப்பதென் கிளத்துஞ்
சேண்மு னேகுழும் மாவனஞ் சென்றமு தேசன்
றாண்மு னேபணிந் துன்பெய ரிலிங்கதா பனமும்
வாண்மு னீலலிங் கேசவான் மார்த்தபூ சனையும். (௩௮)

மரபின் வேள்வியுஞ் செயினட்ட வக்கிர முனிவன்
றரமுன் னீளிடர் புரிந்துள சாபமோ சனமாம்
வரத மெய்ச்சிவஞ் ஞானமா மகோததி மூழ்குந்
தரமு மாமவ னுறலொரு தலையெனச் சாற்றி. (௩௯)

அமல னும்விரு பாக்கமா முனிவர னகன்றுன்
சமல நீக்குமத் தாபத முனிவரன் றனதாட்
கமல மன்புறத் தாழ்ந்தருந் துதிபுரீஇக் கனிந்து
நமல நீப்பதித் தலமல திலையென நயந்தான். (௪0)

துணிவு கொண்டெழும் வருணன்முன் சூழ்பரி வாரந்
தணிவில் பற்பல பொருட்குவை புரோகிதர் தம்மோ
டணிசி றந்ததன் பத்தினி சகிதனு யனைய
பணித லத்தினும் பிலத்துவா ரத்தின்மேற் படரும். (௪௧)

பிலத்தின் மேல்வரு மவன்முன மருமையிற் பேணு
நலத்தி னத்தகு பாவன மாவன நாமத்
தலத்தி னோர்தடத் தெழுந்தன னத்திருத் தடமுன்
புலத்தின் மேதகு கௌதம முனிதரு புவனம். (௪௨)

அனைய தவ்வமு தேசலிங் கத்தின தவாசி
தனிலொர் முப்பது விற்கிடை தூரத்திற் றன்பா
லனக சானவி யாகுமா தீர்த்தமுற் றடுத்தே
யினிது நித்திய வாசஞ்செய் துறத்தனி யிலங்கும். (௪௩)

தேவ தீர்த்தமென் பெயர்பிர சித்தமா மனைய
வாவி யேற்றன மனைபரி வாரமோ டெழுந்த
சீவ னுதியன் மரபினத் திருத்தந்தோய்ந் தார்வ
மேவ நித்திய நியதிகண் முடித்துமே னிலவும். (௪௪)

மணியி லிங்கவான் மார்த்தபூ சனைமுறை வயக்கிக்
கணித மில்லுப காரணங்க ளோடுதன் காந்தை
பணிச னங்கள்பின் வரச்செலீஇப் பணியணி வேணித்
திணியி ருட்களத் தமுதிறை சினகரத் திருமுன். (௪௫)

தூல லிங்கமா கோபுர துவாரத்தி னிருபாங்
கேல வைங்கர னாறிரு செங்கர னெனுமப்
பாலர் பைங்கழன் முறைபணீஇப் படர்ந்துகோ புரத்துட்
சால வந்ததி காரநந் தீசர்தாள் சார்ந்து. (௪௬)

படியு றப்பணிந் துட்புகுந் தருள்பெறப் பரிந்து
விடையளித் தருள்கெனப் பராய் வேண்டுகொண் டடுத்தாங்
கிடப நந்திதாள் பத்திர விலிங்கநே ரிறைஞ்சி
முடியி னஞ்சலித் தாறிரு முறைவலம் புரிந்து. (௪௭)

இரவி யாவினு மிக்குய ரிமாசலை யெமையாள்
பெரிய நாயகி திருமுனம் பெருகுமன் புய்ப்ப
வருண்மு னீர்த்தெழ விருவிழி யருவிநீர் வெள்ளம்
சொரிய வுள்ளுறீஇ யள்ளெழிற் றிருவுருத் தோற்றம். (௪௮)

கண்கு ளிர்ப்பநேர் கண்டனன் றண்டெனக் கடிதே
மண்கு ளிர்ப்பவீழ்ந் * துயிருணர் வொழிபர வசனா
யெண்கு ளிர்ப்பவா னந்தவா ரிதிமி தந்தேறிப்
பண்கு ளிர்ப்பநே ரெழுந்துநின் றிண்ணனம் பராவும். (௪௯)

அகில மீன்றரு ளன்னையே நின்னசே யடியேன்
றகையின் மைந்தர்க்கே நிர்க்கதி நினைந்துளந் தயைகூர்ந்
தகல்வு றுதளிப் பதிலனைக் கார்வமே லென்ப
புகலி லேழைநான் புகல்வதெ னென்றெதிர் போற்றும். (௫௰)

வேறு

மலப்பகை யொன்றே சீவர் மாட்டொரு வாது டற்றுந்
தலைப்பகை யதனை மாற்று தலைத்தலை யாவ கித்தே
யலைத்தொழித் திடவெ ழுந்தாங் கம்மலம் வெளிறென் றேத
நிலைத்தொளிர் கருமை வாய்ந்து நெறித்தெழு மோதி போற்றி. (௫௧)

இருண்மல வெப்ப நீக்கி யின்னருட் டண்மை யாவிக்
கருள்வது தெரிக்கு மெண்ணா ளவிர்மதி யளிகம் போற்றி
தருமலக் காடு 0 லர்த்தித் தகித்துமேன் ஞானப் பைங்கூழ்
பெருகிய வமுதம் பெய்து பேணுமுக் கண்கள் போற்றி. (௫௨)

துக்கதுர்க் கந்த நீக்கிச் சுகமெனுஞ் சுகந்த மோந்தே
யொக்கவா ருயிர்முற் றுய்வா னுயிர்ப்பெழு நாசி போற்றி
தக்க o சொல் லமுத நாதன் றடஞ்செவி வழிமேய் யுள்ளம்
புக்குத ராண்டப் பைங்கூழ் போற்றெழிற் றிருவாய் போற்றி. (௫௩)

* உயிருணர்வு—ஆத்மபோதம். 0 உலர்த்தல் - தகித்தல் பெய்த லாகிய முத்தொழில் செய்து பேணும் முக்கண்களென்க. o சொல் லாகிய அமுதம் என்க.

சமர்புரந் தகித்த மூரல் சமழ்ப்பவாங் கவற்கும் பேரின்
பமைவிலா ரமுதம் வாக்கு மணிமணி முறுவல் போற்றி
நிமலனை காந்த ஞாச நிகழ்த்துப தேச வாய்மை
யமுதுல குயமடுக்கு மஞ்செவித் துணைகள் போற்றி. (ருச)

தெண்ணிறை மதியான் ஞான தேசமுற் றளித்த தேற்றுந்
தண்ணிறை மதிமு கத்தின் றனிப்பிர காசம் போற்றி
வண்ணவான் மடிமு லைப்பான் மானவன முகநிறைந்து
கண்ணிரு மதகிற் பாயுங் கருணையா ரமுதம் போற்றி. (ருரு)

உருவுக டோறும் வெவ்வே றுயிர்க்குயிர்க் குயிர்தா னெயாந்
தருணமங் கலப்பூண் டாங்கு தன்னிகர் கண்டம் போற்றி
யருள்பர வபர ஞான மாருயிர்க் களிப்பப் பூரித்
திருமணி நீல மூடி யிசைத்தபொற் றசும்பு போற்றி. (ருசு)

ஆயிர கோடி யண்டத் தாவிமுற் றெவ்வோர் சூலின்
மேயிய பெற்றுஞ் சர்றும் விகாரமி லுதரம் போற்றி
தூயசிற் றுதரத் தாவித் தொகையினைப் பிணிக்கு மாற்ற
லோயிருள் புறத்தி னோடு மொழுக்கம்நே ருரோமம் போற்றி. (ருஎ)

இருதய கமலங் கீழ்நின் றெழும்நீர் நிலைய வாவி
மருவு * மா வர்த்த மேய்க்கும் வலம்புரி நாபி போற்றி
புரகரன் சேமத் தேரிற் பொலிகடி தடச்சீர் போற்றி
யிரதமே லரம்பை யாக வியைகவா னிணைகள் போற்றி. (ருஅ)

பருமுலைக் குடைந்து கீழ்வீழ் பந்தினைக் காதி சேய்போ
லருளினி னிறுத்தி வைத்தாங் கவிர்முழந் தாள்கள் போற்றி
யிருவரால் வனப்பு வெள்ளத் திலங்கனேர் கணைக்கால் போற்றி
பெருகெழில் முதிர்சம் பீரம் பிளவுசெய் பாடு போற்றி. (ருகூ)

ஆமையொவ் வாமை மாமைக் கைந்தொடுக் கியும்வி ரித்தும்
0 போமெனப் பல்கா ளேக்கும் புறவடி விரல்கள் போற்றி
தாமரை யுபரி டங்கள் சுமந்திடப் பெறுத ரற்றத்
தேமிகன் புனத்தி லங்குந் திருவடிக் கமலம் போற்றி. (சு0)

உரைசெயி னகிலபோக முதலிமேல் வீடு நல்கும்
பெரியநா யகியென் றோதும் பெருந்திரு நாமம் போற்றி
கிரிசைநின் னருளி னல்லாற் கிட்டரு மமுத நாதன்
திருமுனுற் றருண்ம டுத்தல் சிறியனேற் குறுவ துண்டோ. (சுக)

---

* ஆவர்த்தம்-நீர்ச்சுழி. 0 போம் என்பதில் வினவிசை ஓகாரந் தொக்கது "செப்புதற்காமெனின்" என்பதிற்போல்.

சேயனை யணிய னாகச் சேர்ப்பது தந்தை பாங்கத்
தாயருட் கடனே யேழை சாற்றியும் பிழையி ழைத்தேன்
நீயவெஞ் சாப நோயாற் றியங்கிய சிறிய னாயே
னுயவிப் பிழையு மாற்றி யருடியா லன்னை யன்னே. (௬௨)

என்றுமுன் றுதித்துப் பல்கா லிறைஞ்சியா ரருள்பெற் றேகி
மன்றறுன் றிதழ் வேணி மந்திர நாதன் கோயில்
சென்றுநந் தீசபாத தெரிசன முறைசெய் துட்போய்
நின்றொளி ரமுத ரூப நிறையருட் குறிநேர் கண்டான். (௬௩)

கண்டனன் கரண மொன்றுங் கண்டிலன் றன்னைக் காணான்
றண்டெனப் படிந்தா னந்த சாகரந் தனிதி ளைத்துக்
கொண்டெழு சிவானு பூதி கூர்பர வசனா யொன்றிப்
பண்டுணர் வங்கு ரிப்பப் பைப்பயக் கரையி வர்ந்தான். (௬௪)

அண்ணலின் னமுத மேனி யம்பகங் குளிர நோக்கி
யுண்ணெகிழ்ந் துருகச் செங்கை யுச்சிமேற் குவிய நேர்நின்
றெண்ணரும் பிறவி தோறு மெப்பெருந் தவம்பு ரிந்தேன்
கண்ணெதிர் காணப் பெற்றேன் கருணையா ரமுத ரூபம். (௬௫)

எனமுனந் துதிய னேக மிசைத்தடிக் கடியி றைஞ்சி
மனமுவந் தமுத லிங்க வரதனுக் காதி சேடன்
புனைதிருப் பணிக ளோடம் பொன்மணி யணிக ளாதி
நனிவிளை நிலங்க ளாதி நல்குபு பெரும்பே றுற்ற. (௬௬)

அருட்டிறன் முற்றுங் கேட்டாங் ககமிகு வகையன் புந்தப்
பொருட்டிறன் முற்று மீட்டிப் புனிதமா நியாச மாதி
தெருட்டசீ ருருத்தி ராதி செபமகா வபிடே காதி
மருட்டெறு நிவேத னாதி வயங்கவா கமநூன் மாண்பால். (௬௭)

போற்றுமா பூசை மாசிப் பூரணை யாய வந்நா
ளேற்றிவ ரமுத நாதற் கியற்றுபு வேண்டு கோட
லாற்றினன் பதினூ லோதி யாய்ந்தமைந் தன்பின் வாய்மைத்
தேற்றுபிப் பிரார்க்குத் தானந் திறப்பட மகிழ்ந்த ளித்தான். (௬௮)

இன்னண மாரி னாளு மியற்றியத் தலநி வாச
மன்னுறக் காலந் தோறும் வந்துவந் தமுத நாதன்
றன்னடி பணிந்த மர்ந்து சாருநாட் பிலத்தி னின்று
முன்னெழீஇப் போந்த வாவி முதுதட மதனி லேகி. (௬௯)

சாலைநான் மரபிற் கோலிச் சாற்றுறும் வேள்வி யொன்று
மாலற வியற்றி யார்வ மலிதிருப் பணிகள் பல்ல

காலொளி மணிகள் பல்ல கவினுறப் புரிந்த ளித்து
வாலிய வமுத நாதன் மாபூசை மேன்மேன் மல்க. (எ0)

புரிந்தெதி ராண்டு மாசிப் பூரணை நாளி லன்ன
வரந்புரு பூசை முற்றி மறையவர் வெறுப்ப நல்கிப்
பரிந்தெதிர் நோக்கி யந்தப் பார்ப்பனர் குழாத்தை யென்பா
லருந்தை செய் சாப நீக்கி யருண்மினே யென்று தாழ்ந்தான். (எக)

வேறு

ஆங்கது வினவிய பனவரெலா மார்கலி நாயக கேண்மதியா
லீங்கமு தேசசு தரிசனநிற் கெப்பொழு தெய்திய தப்பொழுதே
நீங்கருந் தீவினை யாவுமுட னீங்கிய மாமுனி சாபவினை
தோங்கழி பாக்கினி வேண்டுவதென் றாயவ னுயினை நீயெனவே. (எஉ)

ஓதின ரோதுமச் சொன்முடிமு னும்பரி னெம்பெரு மானருளா
லேதறு மேற்றிசை காவலகே ளெம்முன மெய்திய வப்பொழுதே
யேதமு ளியற்றிய சாபமொன்றே வெப்பவத் தொப்பறு வெப்பிடருந்
தீசற முற்றொருங் கற்றனவாற் றிடமிது நின்மல னுயினைநீ. (எங)

இன்னினி யெண்ணிய காமியமுற் றெய்துபு வாழ்ந்திருந் தீற்றினுஞ்
சின்மய ரூபமெய்ஞ் ஞானமுறீஇத் திகழ்பர மோக்கமுஞ்சேர்கவெனாத்
துன்னருமின்னமுதொழுக்கெனவேதொடர்புறவெழுந்தனதாமொழியப்
பன்னசரீரத னிருசெவியாற் பருகின னுருகினன் பாடினனே. (எச)

ஆடின னேடின னீடியபே ரானந்த வாரிதி மூழ்கியெழுந்
தீடிரி பீடைகள் சாடியெளி யேனையு மேன்றுகொ ளத்தகுமோ
பீடிரி தீவினை புக்கியுறப் பேணிநின் றூற்றிய பீழையினேற்
கேடவிழ் 0 சுவன்னக வேணியமு தேசனிங் கருளிய தென்புகல்கேன்.

எந்தைசெ யாரரு ளென்றரமோ வெத்தகை யோர்க்கு மியம்பரிதென்
றந்திலவ் வம்புதி நாயகனவ் வமுதலிங் கேசன்மேல் லடிக்கமலஞ்
சிந்தையுஞ் சென்னியுந் திகழ்தரமுன் றிருந்தக வீழ்ந்தடிக்கடியிறைஞ்சி
முந்துபஃ றுதிபுகன் றரிதுசெலீஇ முளமிரு கண்டரு டனையனவன்.

நிறுவிய வருட்குறி யவாசியினி னிலவுதன் பெயரினி லோரிலங்க
முறுவிதி வழியினிள் பதிட்டைபுரிந் துளமிகு மளியுறப் பூசனைசெய்
தறிவுள மமுதலிங் கேசனடி யமைந்துறப் புறம்புகுந் தகமுழுதும்
பிறிகொடுத் துறுமவன் சுவாசிரய பாதலம் போந்தமர்ந் திருந்தனனால்.

---

0 சுவன்னகம்—கொன்றை.

○ அரதலந் தனிற்சிவ சிந்தனையோ டனைத்தையுஞ் சிவமெனக் கண்ட [மையும்
பரசிவ ஞானமொ டமர்ந்தனனப் பணிக்கட லரசைவிட் டொழிசாபம்
வருபயங்கரவுருவாயட்டாவக்கிரமாதலற்றொடார்ந்தன்று [வென்னே.
லொருவரு மனையவெஞ் சாபத்தீ யுருவினை யெதிர்தெரிந் திது

எனநனி கருதிமெய் யுணர்ந்தன்றே னெத்தகு பாதக வினையாவுந்
தனதெலை புகுமுனந் தொலைத்தின்பே தருவது சேகர வடவியென
மனனுறத் துணிந்தொரு நொடியாங்கே வந்தறன் மூழ்கிவெண் ணீற [ணிந்தாங்
கினிதெழுத்தைந்தெணியமுதேசனிணையடிமுறைபணிந்தெழுந்தேத்தி.

அமுதலிங் கேசபச் சிமபாகத் தருட்குறி நிறுவியாற் றினிற்பூசித்
திமிர்பயங் கரவுருக் கொடுமுன்சா ரிடர்முழு துடனற வினிதாங்கே
நிமலமந் திரமுதல் வனைநாளு நீடனி நீடனி யோடிறைஞ்சி [கேளா.
விமலமெய்த் தவமுதல் வளர்ந்தோங்க விழைந்தமர்ந் தனனென்னு முனை

அயன்மகனந்திசேவடிதாழ்ந்தெம்மண்ணலிவ்வருணன்மார்க்கண்டேசற்
கியலுறு தென்றிசை யிலிங்கநிறீஇ யினனென வுரைத்தனையம்முனிவ
னுயும்வழி யருடரு சிவலிங்க முற்றிவ ணிறுவிய வுதன்வாய்மை
மயரற வருளுதி யோவென்ன மறுவலு மறுவறு நந்தீசன். (௮௧)

கடிமல ரடியிணை முடிகொண்டு களியளி யொடுதொழு தருள்கென்ற
படியருள் கதைபக ருதுமென்று *பழமைசொன் முனிமுனி குலமுன்பு
நொடிதரு மிவணரு ளியவிந்த நுவல்கதை வினவினர் புகலன்பர்
வடுவொழி பிகல முழுதுண்டு மருவுவ ரிணையறு பரமின்பே. (௮௨)

வருணன் சாபமோசனச் சருக்கமுற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்—௩௬௬.

---

# மார்க்கண்டேயச் சருக்கம்.

சிந்து பூப சாபமோ சிந்த காதை யோதினங்
கந்த னேரு மாமிரு கண்டு சூநு மாவன
மந்தி ரேச சேவையு வந்த பேறு கேளென
நந்தி லாத சீருணந்தி நாத னோதுமால். (௧)

---

○ அரம்—பாதலம். *பழமைசொல்முனி—சூதமுனி.

வேறு.

வருதிசனற் குமரர்ம வளர்குரவ பரம்பரையின்
மருவுமழ வுருவகுரு மணியொன்று வந்துதிப்ப
பெருகியன்மா தவமாண்பு பேணிநிறை பெருஞ்சிறப்பி
னொருவரிய திருவெண்கா டுவரிநிலத் தொளிர்தருமால். (௨)

என்றுரைத்த பின்னுரைவா யெழுமுனெழுந் திணையடிதாழ்ந்
தொன்றுரைக்குஞ் சனற்குமா னும்பர்மணி முடியுரிஞ்சிக்
கன்றுறச்செய் மென்கமலக் கடிமலர்ப்பூங் கழலெந்தாய்
நன்றுரைத்த குருமணிதா வமதுபரம் பரைமணியேல். (௩)

அனையதிருத் தனையமணி யவனியிடைத் திருவெண்காட்
டினிலுதித்த காரணமென் னிளம்பருவ முதுசாவப்
புனைமணியின் செயல்யாது புகன்றருளி மேலெடுத்த
தினிதருடி யண்ணலென் றிறைஞ்சுதலு நந்தீசன். (௪)

தினதுவினு நனிநன்று நீவேட்ட படிபகர்து
மினியசிவா கமமிருபா னெட்டினுளுஞ் சாரமதா
யனகருரு முனிக்கமல னருளியதென் பதுதெரிபேர்
புனைரௌர வாகமத்திற் புகல்படலம் பலவவற்றுள். (௫)

பரவருஞ்சா ரார்சாரம் பாசவிமோ சனபடலம்
வரநிறையப் படலத்தின் மலிசீவ ரத்தினமா
யருள்பதியு முத்தமமாழ்ந் தாழ்ந்துடனேக் குறநோக்கக்
கருதருமெய்ப் பொருள்விரித்துக் காட்டுபெருஞ் சிறப்பமைந்து
தொகையுறவோர் பன்னிரண்டு சுலோகநிறைந் திலங்குமது
புகலவருஞ் சிவஞான போதமெனுந் திருநாமந்
திகழ்தருமென் றுபதேசத் திறத்தினரும் பொருள்விரித்து
நிகழவரு ளினன்கல்லா னிழலமர்பூங் கழலொருவன். (எ)

ஆயதிரு வருண்முறைநிற் கார்வமுற யாமுன்னு
ணையமிகு சமக்கார நிருவாண தீக்காதி
தூயவகை புரிந்தளிப்பத் தோமறுநீ யாமதனைச்
சேயமர்சத் தியஞான தெரிசனியென் பெருமுனிக்கு. (அ)

தந்தனையம் முறையனைய தவமுனிவெம் பவமுனிபு
வந்தனைசெய் பரஞ்சோதி மாமுனிக்கீந் தனனிதனு
னிந்தனையில் கல்லால நிகழ்பரம குரவசிவ
சிந்தனைசெய் பரம்பரையென் றிறனமையப் பெற்றனம்யாம்.

பாவருமிக் கைலாய பரம்பரைபூ வுலகினிடை
மருவிவளர் தரப்பெறுக மன்னுயிர்க ளின்னரு
திருண்மலநீத் தருணெறிசென் றின்புறுகென் றெம்பெருமான்
றிருவுளம்வைத் தமர்ந்தனனிச் செயலிவ்வா றிவணிகழ. (௧௦)

பண்ணிலவு தமிழ்வேதம் பாவுபெருஞ் சிறப்பினமர்
மண்ணுலகிற் றூங்கானை மாடமெனுந் திருக்கோயில்
கண்ணிலவு திருப்பெண்ணா கடமெனுஞ்சீர்த் திருப்பதியி
னுண்ணிலவு மொருவர்பர மோத்தமபுண் ணியசீலர். (௧௧)

இவர்பெயரச் சுதரெனமுன் னிலகுகளப் பாளரிவர்
தவமகிமை யாமுமுறை தரலரிதில் லறத்திவர்வாழ்ந்
தவமறநன் மகப்பேற்றி னார்வமுறீஇத் தமக்கென்று
மெவமகலுந் தீக்காதி யாவையுஞ்செய் குலகுரவன். (௧௨)

திருத்துறையூர் நகர்க்கதிபன் சிவத்துவிசர் குலத்தலைவ
னருத்திவளர் சிவாகமமே யருமறைமுன் னூலனைத்துங்
கருத்தொருமித் தோர்ந்துணர்ந்து காட்சிநிறை காரணத்தாற்
றிருத்துசக லாகமபண் டிதநாமச் சிறப்புடையோன். (௧௩)

ஆயவரு ணந்திசிவா சாரியனை யடுத்திறைஞ்சி
நேயமலி தங்கருத்தை நிகழ்த்தியவன் சொன்னெறியே
தூயசிவ தருமமெலாந் தொகப்புரிந்து மகப்பேறு
சேயதல ணித்தாகாத் திறத்தான்மீட் டுங்குரவன். (௧௪)

அடிபரவிப் புகன்றமைகேட் டருமறையிற் கோதிரித்து
வடிதமிழ்மா மறைமுறையை வழுத்தனைய சிவகுரவன்
கடிமலர்தூ யருச்சித்தக் களப்பாளர் தமைநோக்கி
நெடியதிருக் கயிறிதனி னீவகிர்ந்து சாத்துகென. (௧௫)

அச்சுதரக் களப்பாள * ரம்முறையி னம்முறை ○ யி
ரச்சுகரத் தெடுத்திமய நங்கையொரு பங்கனையுள்
வைச்சுரிய மூவரையும் வழுத்தியெளி யேற்கினிய
மெய்ச்சுதனல் குகவென்று வேண்டிவகிர்ந் திட்டனரால் (௧௬)

அனையதிரு வடங்கன்முறை யதனிலவ ரிடுங்கயிறு
தனையடையா ளங்தெரிந்து தணத்தியவண் முன்பினெவ்வோர்
யனையிதழ்க ளொடுத்துடன்முற் படியோலை யீற்றெழுந்து
பினையிதழின் முடிவுறுமப் பெருந்திருப்பாட் டெடுத்திசைப்பார்.

* அம்முறை—அத்திருமுறை. முறை—புஸ்தகம். ○ இரச்சு—கயிறு; ரஜ்ஜு என்னும் வடமொழி தற்பவமாயது.

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ளனவினை
வாயினவெ லாம்பெறுவ ரையுறவேண் டாவொன்றும்
வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையா ரவர்தம்மைத் தோயாவாந் தீவினையென். (கஅ)

பெறலரிய காழியருட் பிள்ளைதிருப் பாட்டுநிதித்த
திறனினைபச் சிவகுரவ சிகாமணியுள் ளுவந்துவியந்
திறையருணின் பான்முழுது மியைந்தனகேள் களப்பாள
நறையொழுகு வெண்காடு நண்ணுதியிக் கணமென்ன. (கக)

அருளியவச் சுதர்களப்பாளரும் வியந்தாங் கன்புநனி
பெருகியதம் பன்னியொடும் பேணுபல பொருள்களொடு
முருகுமனத் தொடும்புகுந்தொவ் வோர்தினமு முக்குளந்தோய்ந்
திருளறுபூ சனைவெண்காட் டிறைக்குநனி சிறப்பநடாய். (உ0)

வேறு.

இன்னண நியம விரதநன் னெறிநின் றியலுற வாங்கொரு நாளிற்
றுன்னுமவ் வேளாண் குலமணி யாமச் சுதர்களப் பாளர்தங் கனவிற்
பன்னுவெண் காட்டெம் மிறைபுகுந் தன்ப பரிந்துநீ யருந்தவம் புரிந்த
நன்னிலையுவந்தாநின் னுளம்விழைந்தநலமொன்றருங்களித்தலேமுறையாம்.

ஆயினு நினக்கிப் பிறப்பினின் மகப்பே றரிதுநின் கருமத்தி னளவான்
மேயநின் னரிய தவம்பழு தாகா விதமொரற் புதமக மேலைக்
கேயுற வளித்து மமைகெனக் கேட்டவ் விருந்தவப் பெரியவர் கிரிசை
நாயக வினிய செயக மகிழ நாப்பண்ணைத் தமர்ந்தரு ளம்ப. (உஉ)

எளியனேற் கினிய புத்திரப் பேறிங் கிலாமையா லென்னைகொலேதந்
தளிமக வருள்கி லாமையா லேழை கருத்தினிற் கவற்சியொன் றிலையாற்
றெளிவுறுவவசியம்பெரிதீண்டுச்செப்புவிண்ணப்பமொன்றெந்தா [பார்
யொளிர்செவி சாத்தியருள்கெனவேண்டியும்பர்கோன் றிருமுன முறைப்

அகிலமீன் றளித்த வன்னைபா லமர்ந்த வையபல் கோடியா மர்வி
நிகிலமு நின்சே யெனல்புதி தன்று னிசமிதே யாகவு நிகர்வன்
னகிலமர் குறமி ஞயகச் சேயை நனிமிகு காதலா னயந்து
முகிலமை நிமவெற் பன்னையு நீயு முனந்திரு நனந்தலை முதமே. (உச)

மருவனைத் தொருவா தமர்திரா லனைய மைந்தனே வந்தருண் வாய்மைக்
குருமணி தாழி வாழ்மணி சைவ குலமணி நலமணி சோதி
யருமைவாய் மலர்ந்த வருட்டிரு வாக்கு மகிர்தமா யொழிவதோ வந்தோ
கருமமார்ந் துழலிவ் வேழையா லெனுமக்கவற்சியேகணிப்பறவெழுந்து.

[லென்றுக்
முழுதுமென்னுளத்தைவாட்டுமாலினியான்மொழிவதொன் றாண்டுமெக
கழலிணை தொழலு முலகினுக் கன்பு காட்டிய நடித்த வெண் காட்டெ
மழலவிர் கரத்தோ னன்பரீ வேட்ட வரும்பொருள் வரும்பத மிறுவே
மழவின் மான் மிசுநாம்வகுக்கொணுதனக்குவாய்த்ததென் றருளுபு
[மறைந்தான்.

விழித்தெழுந் தனரச் சுதர்களப் பாளர் மிக்கெழு முவகையின் மிதந்தாங்
கொழித்திட லருமந் நியமநன் னெறிநின் றொழுகுநா ளுலகெலாமுய்ய
வழுத்துசுத் தாத்து வைதசித் தாந்த வாய்மைமாண் சைவமீ வாழ
விழுத்தகு தூய பரம்பரை யருளான் மேதினி மீதினி விளங்க. (உஎ)

திருவருள் பெருக வனையதம் பதிகள் செய்தவத் தெய்விகச் சிசுவா
யருளொளிப் பிழம்பா யவதரித் திடக்கண் டனனையுந் தாதையு மளவாய்
பெருகுமா னந்தவாரிதோய்ந் தருமைப் பெருந்தவக் குருந்திணைப்பேணி
யானரு ணினைந்து நினைந்துள முருகி யார்வநீட் டினரெடுத்தணைத்தார்.

இன்னவென் பருஞ்சீ ரருமைபா ராட்டு மிருஞ்செய லின்புறப்புரிவார்
தென்னில முயச்சா திருவவ தாரச் சிறப்புயர் திருவிழா முதல
பன்னரும் பெருமைத் தினவிழா வனைய பதியினர் கிளைஞர்களேனோர்
தன்னிக ருவகை பெருகிய புரிந்து சாதகன் மாதிகள் சமைத்தார்.

பல்லுகமொருவாதருந்தவம்பெரிதுபயிற்றினுங்கிடைப்பரும்பொருள்
நெல்லியங்கனியிற்கிடைத்ததென்றேகைநீர்முழுகிருமுதுகுரவ [கைந்
நல்லினுநீங்காவருந்துணையெனக்கொண்டவிர்மணிப்பணிநிரையணைத்து
நல்லுறப் பணிந்தா ருயிரினும் போற்று நலனெவர் நவிற்றுவா ரம்ம.

வைதிக சைவ தாபன குருவாய் வந்தருள் புரிந்தெதிர் மறையுஞ்
செய்துற நிறுவி யமர்ந்தன முன்னாட் டெய்விக சுத்தவத் துவித
சைவசித் தாந்தத் தனிக்குரு மணியாய்ச் சார்ந்தரு ளேபுரி குதமென்
றய்வருள் காழி வாழ்வுபின் னருமீண் டுதித்ததென் றவைப்புறுமுகம்.

வழுத்துமித் தூய சேயினைச் சுவேத வனப்பெரு மாளெனு நாமந்
தழைத்திட வழைத்தப் பதியினிற் சின்னாட் டங்கியச் சுவேதவ னேசற்
கிழைத்திடு விசேட பூசனை யாதி யியற்றியா ரருள்விடை பெறுபு
மழத்திரு மகவு மனையொடு தம்மூர் வந்தமர்ந் தனர்களப் பாளர். (ங௨)

ஆங்கமர் வுழிநன் மாதுலர் தமக்கின் னருண்மக வின்மையி னனைய
தேங்குதலையஞ்சொன்மகவையேதமக்குஞ்சேயெனப்பெறுநசையீர்ப்ப
தாங்குசோதரிமைத்துனரிடைவேண்டித்தம்பதிவெண்ணெய்நல்லூரிற்
பாங்குறப் பெற்று ரொடுந்தனிச் சேயைப் பரிந்தெடுத் தின்புறப்
[படர்ந்தார்.

மாதுலர் தமது மனையலங் கார வகையெலாந் தகைபெற மலிவித்
தாதர முந்த நேர்புகுங் காலங் கமர்பெருங் கிளையெலா மடுத்தே
சாதிமங் கலங்கள் பெருகுற நீராஞ் சனம் வளைத் தெதிர்தழீஇத்தனையந்
தீதகன் றுயவந் தருண்மக மணியைத் திருமணி மஞ்சமீச் சேர்த்தார்.

ஆங்குளார் தமக்கே யருமையிற் கிடைத்த வருந்தவச் செய்மணி யாகப்
பாங்குபா ராட்டி யன்னைதா ஊதையையும் பாக்கியம் பாக்கிய மென்பா
ரோங்குறு முபய குலமணி விளக்கிவ் வொண்சிசு மணியென வுவப்பார்
தேங்குமிக் கிளைமுன் போற்றிய வனைய செய்மணி தூய்மணி திகழும்.

அம்மணி யாங்கட் பாலலீ லாதி யமர்ந்துசெ யருட்செய லாதி
யெம்மனோ ரெவர்க்கு மியம்பரி தாக வின்பமீ துறவளர்ந் திடுநாட்
செம்மழலையஞ்சொலெனும்*தாரதமருந்திறந்தெரீஇத்தாதைமுற்கிளைஞ
ரிம்மகமணியுமுங்கையாகுகொல்லோவென்றுளத்தெண்ணமிக்கிருந்தார்.

இவ்வகை யிரண்டாண் டெய்திவா ழிளஞ்சே யேனைய மகாரொடு மேகி
யவ்வருள் பெருகும் வெண்ணெய்நல்லூரி னணிமறுகிடை விளையாடித்
திவ்விய மேனித் திருவொளி யெழுந்து திகழவீற் றிருந்திடுஞ் செவ்வி
யுய்வரு டருமிக் கயிலைநின் றேகி யொண்மலை யாசலமுனிபால். (௩௭)

அளவளா யினிய நண்புரை யாடி யமர்ந்துபி னியண்வரக் கருதி [வன்
வளனுலாந்தெய்வவெண்மணிவிமானமருவிவிண்வழிச்சென்றுறொருபெருகு
பளகறு மவனின் னருள்பெறு சீடற் பணிந்தருள் பெறுபரஞ்சோதி
ளொர்தரு மவனவ்விமானம்வீற் றிருந்துசெழுமுவா னெறிப்புகுங்காலை,

வெண்ணெய்நல்லூரினவ்விளஞ்சேய் தான்வீற்றிருந்தருண்மறுகதனோர்
விண்ணிலம்மானஞ்செலவொழிந்துறவுண்மிளிர்பரஞ்சோதிமாமுனிவன்
றுண்ணெனவியந்தெம்முளப்படியாண்டுந்தூரிசறவினைசெலுந்தெய்வக்
கண்ணகன்விமானந்தகையுறீஇநிற்குங்காரணமென்னெனக்காண்பான்.

திசைகளொன் பானுந் தடைசெயா நிலைமை தேர்ந்துபி னதோமுகனுகி
நசைதரு புவியை நோக்குபு விமான நன்னிழ றேய்வுறப் பெற்றுங்
கிலசதருமச்சேய்மணியொளிப்பிழம்பாயிலங்கல்கண்டினையசேய்விமான
மசைவறப்பிணித்துபெருவடநிழல்போலவிர்வதேயல்லதொன்றில்லை.

என்றுளந் துணிந்தாங் கன்புமா றருளு மின்புமற் புதமுநின் றியக்கச்
சென்றுளிர் விமானத் தோடுமம்மறுகிற்சிறார்வெருண்டோடவுமசையா
தொன்றுளிவிரியத்தனியமர்சேய்பாலுற்றுநேர்நோக்கியவ்வொருசேய்
தன்றனிக் குருவாஞ் சத்திய ஞான தரிசனி யுருவெனத் தயங்கும்.

---

* தூனும்—இடைக்குறை.

பெருகுமற் புதநேர் கண்டினி தெடுத்தப் பிள்ளையி னுள்ளிய மேனி
மருவியதுகடன் முவனையாற்றுடைத்துமடியில்வைத்தணைத்துடன்மகிழ்ந்தே
யருளின்மூழ்குவித்தாங்கதன்முழுகுவித்தின்பளிக்கும்வெண்ணீறுமெய்
யணிந்து, திருவருட்சத்தியோதிருவாணதீக்கையாநோக்கமுற்றளித்தே.

தீக்கைசெய் யுழியா சிரியனச் சீடற் சிவமக வாக்கிருஞ் செயலுக்
கேற்கநன் முமகாணஞ்செய்முறையாலெப்பெயரிடுதுமென்றெண்ணி
நோக்குதன் குரவன்சாயையேபோலுநோனமையாற்றந்தைபேர்மைந்தற்
காக்குதன் மரபான்மெய்கண்டானெனவேயவனைய தன்குரவன்பேரமைத்
[தான்

புனிதவத் துவித நிகழ்சிவ ஞான போதநூற் பொருண்முழு தமைய
வினிதுப தேசித் திதனைநீ மைந்தவிருந்தமிழ்மொழிபெயர்த் திதற்கோர்
தனியுரை வார்த்தி கம்மெனும் பெயராற் சாற்றுகென் றருளிமேலனைய
நனியொளிர் சேயை யுடன்கொடு மேலு நசையெழ வாங்கணித்தேகி.

பிறைநிகரொருகோட்டைந்துகைப்பொல்லாப்பிள்ளையார்திருவடிக்கமல
நறைமல ரனைய பிள்ளையோ டிறைஞ்சி நயத்துதிபலபுகன் றெதிர்நின்
றிறைவனே யடியா ரெண்ணியாங் கருளு மெந்தையே யிந்துசேகரனே
மறைசிவா கமார்த்த சொரூபனேயிந்த மைந்தனின் னடைக்கலமைய.

காமிக முதனு லேழ்சிவா கமமிக் கான்முளை கருத்தமைந் திலங்க
நீமிக வருள்கென் றத்தனிச் சேயை நேருற விருத்திமீண் டனைய
தோமிகன் முனிவ னீங்கின னுக்கத் தோன்றலை யென்றிப முகத்தோ
னேமிக வாத சிவாகம முழுது மினிதரும் பொருள்விரித் திசைக்கும்.

இன்னண மாங்க ணிபமுகத் தொருவ னிருங்குரு சிகாமணி யாகித்
தன்னமர் தனியி னன்னமெய் கண்ட தனையன்முன் வினைவிடையாதி
நன்னரு ற் றிடப்போ தித்திடுங் காலுங்காயகன் றளிப்புற நளினி
தன்னினீர்கொருமோர்தையலக்கோயிறனிலெழுமொலிசெவிச்சார.

அத்தனி நேர்நின் றுற்றுநோக்கினளாங்கனையசேய் தன்னையே கண்டா
ளித்தனிச் சேயை மூங்கையென் றந்தோ வினைவதென் றந்தைதாய்
[முதலோர்
வித்தக மொழிபற் பலபுகன் றீண்டு விளங்குமீ துணர்ந்திலர் போலு
மித்தகையவர்க்காங்குரைத்துநாமென்றுமுகேகினள் * செய்மையிற்கண்
[டாள்.

---

* செய்மையிற்கண்டாள்-வினையாலணையும் பேர்.

எங்கியாங் கவர்மு னென்னைகொ ணீர்து மிவர்ந்தனிச் செய்மணி யூங்கை
யாகியதெனத் துன்புறவொருகோடிபருண்மொழி தருவதின் றறிந்தேன்
மீசெழு பொல்லாப் பிள்ளையார்கோயின்மேவிநீர்காண்மி னென் றனளங்
வோகைவா சகந்தஞ் செவிப்புகு முன்ன ரோடெபு தாதையக் கோயில்.

முன்னுறச்சேய்த்தாய்வரும்பொழுதாங்கு மொழியெழு மொலியெதிர் கேட்டார்
பின்ன ராங்கொருவரிலாமையுங் கண்டார் பெருந்தகைச் சிசுசிகாமணியும்
பன்னுசீர்ப்பொல்லாமணியுமேயுடனுய்ப்பரிந்துவீற்றிருத்தலுங்கண்டா
ரென்னெனவணித்தாயேகினர்முன்னரெழுமொழியிலாமைபின்கண்டார்

ஆங்கவர் வரவு மாகம முடிவு மமையமொத் தமைந்ததோ வயலார்
பாங்குறி னேதப் படாதெனு மரயைப் பாதுகாத் திடுமுளத் தானே
நீங்கற முழுதுந் தெருள்கென வுளங்கொள் செய்தியான் முற்றிய [திறனே
வீங்குகாளடைவிற்றனித்துணர்த்துதுமென்றெண்ணியேயாயதெனவுண [ரேம்.

வேறு.

பொல்லா மணியுஞ் சேய்மணியும் புகலு மொழியொன் றின்றியமர்
வில்லார் தோற்றங் கண்டுவகை மேன்மேற் பெருக வீழ்ந்திறைஞ்சி
நல்லார் பரவு மிபமுகத்தெந் நாதா வேதா கமப்பொருளே
யெல்லா முணர்ந்து மெந்தாயெம் மிளஞ்சேய் மவுன மிரித்தனையோ.

மாமன் மலைப்பாம் புருவொழித்த வாத சாத வள்ளாலோ
சேம நிதியே நின்றிருமுன் றிருவாய் முதலிற் றிறப்பதெனுந்
தேமன் விரத நெறிநின் றான் றிருமுன் றிருவாய் மலர்சேயை
யூம னேவென் றுளங்கொண்டோ முண்மை யுணரு முரணில்லோம்.

என்று துதித்தா ரருட்சேயை யெடுத்தா ரணைத்தா ரின்புற்றார்
நன்று பியன்மேற் கொண்டுவந்தார் நணுகுங் கிளைஞர் நற்பதியோர்
துன்று மோகைப் பேரோதை துதையச் சூழத் தம்மனையிற்
சென்று மணியா தனத்தனைய சேய்வீற் றிருப்ப நேர்பணிந்தார். (௫௪)

ஈன்ற பொழுதிற் பெரிதுவந்தா ளிளஞ்சேய் சான்றோ னெனுமகிமை
தோன்ற நேர்கண் டின்புற்று றேக்கி யெடுத்தா ளேக்கமைத்தா
ளூன்று மன்பான் மார்பணைத்தா ளுச்சி மோந்தாண் முத்தமிட்டா
ளான்ற தாய்செ யருஞ்செயல்க ளறைத லெளிதோ வம்மம்ம. (௫௫)

நாளு நாளு மப்பதியோர் நவிற்றற் கருமிவ் வற்புதங்கேட்
டாளுங் குலதெய் வமிதுவென் றடுக்கு மேனைப் பல்பதியோர்
கேளிர் முதலோர் வந்துவந்து கிடைத்துக் காண்டன் மாத்திரையே
மூளு மிடர்நீத் திட்டமெல்லா முன்னி யாங்குப் பெற்றுவப்பார். (௫௬)

மதிவே ணியனை பொருளென்னும் வாய்மை யுணர்ந்து மனந்துணிந்த
வதிதீ விரசத் திங்பாதத்தமைதி வாய்த்த வுத்தமர்கண்
மூதிர்மா மனவா சகங்கடந்தார் முதலோ ரடுத்துச் சூழ்ந்திறைஞ்சத்
திதியா ரருளைக் களித்துரிய தீக்கை திகழ்பக் குவநோக்கி. (௫௭)

அருள்செய் குரவன் மொழிப்படியேயருமைத்தமிழின்மொழிபெயர்த்த
பொருள்செய் புனித சிவஞான போதந் தனைவார்த் திகழுடனே
தெருள்செய் தருளி யவ்வடியார் செறிந்து சூழ நாப்பணமர்ந்
திருள்செய் மலநீத் தத்துவித வின்பே தருமவ் விளங்குழவி. (௫௮)

இவ்வா றனைய மெய்கண்ட வின்ப மணிநா டொறும்பொல்லாக்
கைவா ரணமா முகத்தெந்தை கழல்போற் றமைதி முதனியம
முய்வா ரடுப்பப் புரிந்தமர்ந்தாங் குறவீற் றிருக்குஞ் செயல்கேட்டார்
சைவா தியர்தங் குலகுரவர் சகலா கமபண் டிதர்பாங்கர். (௫௯)

ஆக மாதி யருணூல்க ளனைய வோது மன்பர்சிலர்
சோக மாறி யமைந்துமனந் தூய்மை யுறுமா சிவானுபவ
மாக மாகி யதுபுணர்த்துந் தன்மை யவர்பா லின்மைதெரீஇ
யூக மாக வெண்ணெய்நல்லூ ருற்றார் காணப் பெற்றால். (௬௦)

முன்ன ரமர்சத் திங்பாத முதியர் பெறும்பே றுற்றாங்கு
நன்ன ரருளம் மெய்கண்ட நாதன் கழறாழ்ந் துடன்சூழ்ந்தார்
பின்ன ரனைய திருத்துறையூர்ப் பெரிய ரவர்சார் புணர்ந்துடனே
யின்னர் தமையீண் டழைத்துறுகென் றேயி னார்மா ணவர்சிலரை. (௬௧)

அவரு மனைய ராயினர்பின் னருஞ்சிற் சிலரை யனுப்பினரச்
சிவமா மறையோ ரன்றவருஞ் சென்றங் கவ்வா றுடனமர்ந்தா
ரிவர்மா ணுக்க ரெல்லாரு மிவ்வா றடுத்த வெண்ணெய்நல்லூர்த்
தவர்போற் றியன்மெய் கண்டமணி சரணே சரணச் சார்ந்தமைந்தார். ()

தம்மா ணுக்க ரெல்லாருந் தமைவிட் டேகத் தனித்தமரு
மம்மா தவரீ தென்கொனமை யடுத்து நமந்த களப்பாள
னம்மா ரருளாற் பெறுசிறுவ னவிற்றுங் குதலை யினுங்கிரம்பா
னெம்மாண் பினனென் றமைந்தமர்ந்தா ரெம்பான் முழுதோர் மாணவகர்.

நன்று நன்று கலிப்பெருமை நவிற்றற் கரிய தேயென்பா
சொன்று முணர்ச்சி நுண்ணியர்சென் றுற்ற தாகித் திடற்பாற்றே
சென்று காண்டு மென்பார்கஞ் சீடன் சிறுவ னெதிர்புகுந்து
நின்று காண்ட னம்பெருமை நிலைமைக் கடுக்கு மோவென்பார். (௬௪)

இவ்வா றனைய சிவமறையோ ரெல்லை கடந்து முறுசிவனார்
தவ்வா ணவமல் லபஞ்சாயு மமய மணித்தா தலுக்கிசைய
வொவ்வா வுரைகள் பலபுகன்றுங் குறலே துணிந்தா ரொருதலையா
யெவ்வா யுரினுந் தாழுணஞ்செ லெழுச்சி யணிக ளறச்சென்றார். (௬௫)

சிவிகை சிதைந்த புத்தகங்கள் செறியுஞ் சகட மச்சொடிந்த
கவிகை முதல முரிந்தபெருங் காற்றாற் சதனம் பலதடித்த
குவிகை யினரும் விட்டகன்றார் கூறு மிவற்று மாணவரோ
யவிகை தெளியப் பாதுகையோ டடுத்தா ரதுவுங் குமிழ்தெறித்து. (௬௬)

கருவி கழன்று சிவத்தோடு கலவுஞ் சுத்தாத் துவிதநிலை
மருவும் பெருமை தமக்கணித்தின் வாய்த்த வுணர்த்தாங் குடன்சூழும்
பொருள்க ளொழியத் தனித்தேகும் புனிதர் வெண்ணெய்ப் பதிமேவித்
தருநல் லருளே யுருவாமத் தனிமா குரவ சிகாமணிவாழ். (௬௭)

திருமா ளிகைநே ரணித்தாகச் சென்றா ரனைய மெய்கண்டா
னருளா னனநேர் புலிநோக்க வமர்ந்து நாப்பண் வீற்றிருப்ப
வொருவாப் பெரியர் திருமுறையேந் தொண்கை யினர்புற் பலர்சூழ்ந்து
பொருளா ரமுதுண் டதன்வசமாய்ப் போற்றுங்கோலு நேருறக்கண்டார்.

யாமுட் புகினேர் கண்டிறைஞ்சா ளிருக்கை யெழாநே ரிருக்கைதரா
ரேமற் றிடும் வாய்மையினுற் றேன்று மிவனேர் நிற்றலடா [ன்
தாமற் புதங்காண் பதும்வேண்டு மதற்கீண் டிதுவே யுபாயமெனத்
தாமப் புறத்தோர் செயல்பிறிதாற் சரிப்பார் போலக் குலவினரால் (௬௯)

அப்போ தனைய மெய்கண்டா னமைந்து சூழு மப்பெரியர்க்
கொப்போ தருமா ணவச்சிமிழ்ப்பி னுண்மை யுணர்த்து திறங்கேட்டா
ரிப்போர் மலத்தி னியலென்னை யென்றுங் குரப்பி வினவினரச்
சொற்போ யுறலு மெய்கண்ட தூய மணியாங் கோர்சிறிது. (௭௦)

பொழுது தாழ்த்து நிமிர்ந்திதுவே போலு மெனச்சுட் டுபுநோக்கத்
தொழுது வீழ்ந்தார் சென்னி மலர்த் துணைத்தா ளுரிஞ்சக் கிடந்தாங்கே
யழுது பொருமி யெந்தாயோ வறியாச் சிறியே னுற்றபிழை
முழுதும் பொறுத்தா னென்றுபல மொழியாற் றுதித்து நேர்பணிந்தார்

நேயம் வறந்து திரிசுருங்கு நிலைமைச் சுடர்மிக் கெழுந்தொளிர்ந்தே
மாயு முட்டனுங் கதுபோல வளரா ணவமே லெழவினவி
யோய * நிரீக்க ணங்கண்டாங் குடனா ரடிவீழ்ந் தெழாமலமர்
தூய சிட சிகாமணியைத் தூக்கி யெடுத்தொண் டக்கைமுறை. (௭௨)

---

* நிரீக்கணம்—பார்வை.

திகழு மலர்ப்பூந் திருவடிகள் சென்னி சூட்டிச் சிவம்புணர்த்திப்
புகல வருஞ்சீர்ச் சிவஞான போதந் தெருட்டி முன்புகுந்து
தகவு பெறுமா றெண்மருக்குந் தலைமை யளித்தவ் வேழெழுவர்
நிகர்மா ணவகர் சூழ்ந்திறைஞ்ச நிலவு மனைய விளங்குழவி. (௭௫)

திருவார் துறையூ ரருணந்தி சிவன்மெய் கண்ட சிசுமணிபாற்
பொருவா வினவுஞ் சிவஞான போதத் தாழ்நுண் பொருளெல்லாந்
தெருள்வாய்ந் திலங்கச் சிவஞான சித்தி யாரென் றுத்தமர்போற் [றார்
றொருமாண் வழிநூல் வழியடியா ருடன்கொண் டுய்வான் விரித்துரைத்

இந்நூ லுடனூர் நன்னூலென் றிருபா விருபஃ தெனும்புனித
மெய்ந்நூ றமது குருமணிபான் மேவுந் துதியாச் சிவஞான
முன்னூற் போதத் திருவிழியா முறைசெய் தமைத்துக் குருமணிதா
னன்னூல் சமர்ப்பித் தாங்கொருவா தமர்ந்தார் துறையூ ரருமறையோர், ()

சாற்று மிவர்பான் மறைஞான சம்பந் தருமாங் கவர்பாங்கர்ப்
போற்றும் பெரிய ருமாபதியும் புணர்ந்து தீக்கை யுபதேசப்
பேற்றின் வாழ்ந்தா ரிந்நால்வர் பெயர்சந் தான குரவரென்ப
தேற்று மனைய வுமாபதிபாற் றிகழ்சந் ததிகள் பற்பலவாம். (௭௬)

குலவு மினைய சந்தான குரவர் நால்வர் பெரும்புவியி
னுலக மெவையு முவந்திறைஞ்சி யுய்ந்து வாழ்சென் றிருவருளா
னிலவு கோயில் கொண்டமர்ந்து நிகழ்கின் றார்க ளெஞ்ஞான்று
மலரு மனைய மெய்கண்ட மணிவந் துதிப்ப மாதவஞ்செய். (௭௭)

பெருமை யுடைமை யான்முனநாம் பேணி யுரைத்தா மேலினியத்
திருவெண் காட்டிற் கணிமையினிற் றிகழ்சி புரமென் றொன்றதுசீர்
வருதண் கடவூ ரெனும்பெயரால் வயங்கு மனைய திருப்பதியின்
மிருகண் டருள்சேய் மார்க்கண்ட விமல முனிவந் தடைந்தாங்கே. (௭௮)

தன்றே § காய சானநிலை தணத்தி நீடா யுகந்தருவான்
மன்று டமலற் பூசித்து மன்று டெனு டொறும் புரிந்து
நின்ற னவனுக் கிறையளித்த நெறியா யுகமுற் றியதுணர்ந்து
குன்று விறலின் மறலியவட் குறுகி முறுகி வளரளியான. (௭௯)

ஓவா துஞற்று சிவார்ச்சனையி லொருமித் தமர்மார்க் கண்டனெதிர்
வாவா வென்னும் விளிமாற்றம் வழங்க வனையான் விளிமாற்ற
மேவாய்ப் புறச்செயர்ச்சனையின் றெதிர்நோக்கிலன்மேற்பிதிர்நோக்கத்
தாவாக் கினிசென் றுடல்வெதுப்பத் தன்கைப் பாசம் பிணித்தீர்த்
[தான்.

§ தேகஅவசானம்—தேகமுடிவு.

## வேறு.

ஈர்த்த பாசமுன் னிடைவெளி நீத்திமா சலைகோன்
றீர்த்த மேனியி லைக்கிய மாமெனச் சேர்த்த
கார்த்த சிந்தையர்க் கெவரெனும் புரியிடர் நணுகா
கூர்த்த வின்பமே யாமெனக் கூறுநூ றுணிந்தாம். (அக)

குழக னெண்கட லூரிறை பொருட் குறியைத்
தழுவி யெத்தினன் றனையனுங் கலையனைத் தளரே
லழிவு தொண்டருக் காற்றின ரிற்றின ராமென்
வழுவில் கூற்றையிக் கூற்றினிற் காட்டுது மைந்த. (அஉ)

என்று வாய்மலர்ந் திறலினம் மறலிவீழ்ந் திலைவா
னன்று தைத்தழித் தழிவிலா யுகமுனிக் கருள
வொன்று வெஞ்சின மடங்கலான் † மடங்கறன் னுடலங்
கன்று. வித்தவக் கருமையோர்ந் தருமைமார்க் கண்டன். (அங)

ஐய விப்பழு தெப்பொழு தகலுமென் றடிதாழ்ந்
துய்ய மெய்ப்பழு தொருங்கொழித் தடுத்தவர்க் குதவி
செய்ய முந்துறு சிந்துறழ் கருணைய திறம்பா
மெய்ய செய்யபொன் மேனிய வானியல் விமல. (அச)

எனத்து தித்தனு மன்பகே ளிப்புவி யிடையே
மனத்து தித்தபல் வரமெலா மளிக்குமா வனமொன்
றினத்து தித்தபன் முனிவர்சூ ழிடனதா மனைய
வனத்து தித்தவண் பச்சிம வாவியொன் றுளதால். (அரு)

ஏனை நீருடற் புறத்தழுக் கிரித்திடு மெல்லை
தானும் வேண்டுமோ முழுகுறி னக்கணந் தனிலுன்
மேனி நீன்மைபோ மேலெழின் மேலொளி மேவு
மான வாய்மையா லத்தட நீரினி யாடி (அசு)

ஆங்க ருட்சுயம் பழுதலிங் கேசனை யன்பு
தேங்க நேர்தொழு தமர்குதி திறலவெம் மறலூன்
பாங்க ரெப்பொழு தினுமினி யுறுதசீர் படைத்தே
யோங்கி வாழ்சிரஞ் சீவியா யுறுதியீ துறுதி. (அஎ)

அனைய தீர்த்தநின் றுமமே யகிலமும் போற்றப்
புனையு மென்று ௦ருக் கரந்தவா சகமிசைப் பொலிய
வினித வாய்மைதன் செவிபுகுந் துளங்குளிர்ந் தீர்ப்ப
வினைத பும்முனி பணிந்தருள் விடைபெறீஇ மீண்டான். (அஅ)

---

† மடங்கல்—யமன். ௦ உருக்கரந்த வாசகம்—அசரீரிவாக்கு.

சூத கானனத் தெய்தினன் றண்ணெனு மேல்பாற்
சீத வாவிதோய்ந் தெழுமுன மலின மெய் தீர்ந்து
பூத மேனியிக் கொளியெழப் போந்தமு தேச
பாத பங்கய முடியுறப் பன்முறை பணிந்தான். (௯)

எழுந்து நின்றமு துருவநோக் கிருகணீ ரருவி
பொழிந்து பாய்தரப் புரையிலான் புரைந்தன முருகி
வழிந்து சென்றருட் டுணையடிக் கமலமென் மலரி
லழுந்து மன்பினூற் றிருமுனின் றருந்துதி புகலும். (க0)

சோம ருத்திர வகிலமா நதிபதே சுருதி
நாம வுக்கிர வக்கிரே சுரபர நாத
பீம சாருவ வனபதே பிரணவ ரூப
பூம ணும்பிர வனேசநின் பொன்னடி போற்றி. (கக)

பரசு பாணிய பசுபதே யிரணிய பாகு
வரசு பதசகா மியபரி பூரண வரத
தரசு கங்கைய விரதமா தவப்பாந் தவபொற்
புரசு காம்பிர வனேசநின் பொன்னடி போற்றி. (கஉ)

வனச நேத்திர ०குசுமமா பூசக மாற்குத்
தனக ராம்புய சக்கர தாயக சடில
கனக * சம்மியா கந்தர கந்தர காள
புனித வாம்பிர வனேசநின் பொன்னடி போற்றி (கங)

அடிய ரெண்ணிய வெலாமியாங் கருளமு தேச
வடிகொள் சூலசா ‖ மிருகண்டு வம்மிச பால
முடிகொள் வானதி மதிபொதி முக்கண திருவெண்
பொடிகொ ளாம்பிர வனேசநின் பொன்னடி போற்றி. (கச)

உலக முற்றுமின் பளித்தினி தோம்பரு ளரிமை
நலமு ணும்பல வரும்பொரு ணிறைசிவ நாமந்
தலைகொ ளாற்றலனே றெவர்க்குமின் றொருதனக் கேயாய்ப்
பொலியு மாம்பிர வனேசநின் பொன்னடி போற்றி. (கரு)

என்றிவ் வாறுபஃ றுதிபுகன் றடிக்கடி யிறைஞ்சு
நன்றி கூர்மிரு கண்டுசே யானன நளினத்
தோன்றி முக்கணும் பானுவாய் மலர்த்திட வுவகை
துன்றி மந்திரேச் சுரனெதிர் தோன்றியி தருளும். (கசு)

---

० குசுமம்—புஷ்பம். * சம்மியாகம்—கொன்றை.
‖ மிருகண்டு சந்ததியாகிய அடியேனைக் காப்பவனே என்க.

கேட்டி யாவெலமக் கினியமெய் யன்பநீ கிளத்தும்
பாட்டி ருந்துதி யாவெலமக் கின்பமே பல்கும்
வேட்ட தென்கொலோ பகருதி யென்றனன் விமலன்
றேட்ட மிக்கவன் பின்னரும் பணிந்திது செப்பும். (௯௭)

பெரிய நாயகி மணாளநின் பிறங்கிரண் டெழுத்தா
மரிய வண்சிவ நாமமா மனுத்துய ரனைத்து
மிரிய நீக்கிமெய்ச் சிவத்துவப் பேறரு ளியற்கை
தெரிய வேதவா கமமுனா நிகழ்த்துமத் திறனால். (௯௮)

எந்தை நின்பத மன்றிமற் றெப்பொரு ளினையுஞ்
சிந்தை வேட்டிலேன் றிண்ணமே யின்னிலை திறம்பாப்
புந்தி நல்குக புத்தியா லபுத்தியாற் போத
கந்தி யெப்பொழு தாயினுந் தீவினை நவிற்றில். (௯௯)

திருந்து முற்றுணர் வுற்றிலாச் சிற்றறி வுடையேம்
புரிந்த யாவுநோக் காதருள் புரிகெனப் போற்றிப்
பரிந்து வேண்டலு மங்ஙன மாகெனப் பரய
னருந்த வத்திரு முனிக்கினி தருளிமே லறையும். (௪00)

வேறு

வருதியா லரிய தோன்றல் வந்திவண் முந்து நீதோய்
சாசுநின் பெயரி னாலச் சகமும்போற் றியநின் றேங்க
மருவியூழ் குறப்பெற் றோர்க்கு வல்வினை யனைத்து நீங்கி
யரியன புத்தி முத்தி யங்கையா மலக மாக. (௪0௧)

என்றினி தருளி மேலு மின்னுநீ வேண்டிற் றென்னை
நன்றுரை யெனவெம் பெம்மா னுமந்துமார்க் கண்டன் கூறுந்
துன்றியா ருயிர்க ளெல்லாந் தோய்ந்துய்வா னீண்டு வந்து
நின்றருள் வரமெந் நாளு நிலவுதல் வேண்டு மண்ணால். (௪0௨)

அடியரே முளத்தெ ழுந்தா னடியுறு மன்பெஞ் ஞான்று
மொடிவிலா திறுதி யாவிக் குறத்தகு மிடருற் றாலு
கெடிதுற வளர வேண்டு நிமலநீ யருளு கென்றுப்
படியுறப் பணிந்து பின்னும் பரவினன் பரனி யம்பும். (௪0௩)

மைந்தனிற் கெனவொன் றோதா மாண்பினை பரோபகார
சிந்தைய னாகி வேண்டுந் திறத்தினி துவகை கூர்ந்தா
முந்தற மெவற்றி னுள்ளு முக்கிய மிதுவே யின்ன
தயந்தொளிர் சீவன் முத்த விலக்கண முணர்ச்சி மிக்கோய். (௪0௪)

எவ்வகை யுயிர்க ளேனு மிறையுமோ ரிடருந் தம்மா
லவ்வுயிர்க் குறாமை யோம்பி யளிப்பது சீவன் முத்தர்
தெய்விக வியல்பென் றேதுந் திருந்துநூ லிதனின் மேலா
மெய்வரு ளறம்வே றின்மை யுண்மையே யுண்மை மைந்த (௧௦௫)

சாற்றுமிப் பரோபகார தருமமே பெரிய தென்னப்
போற்றிதி காச மொன்று புகலுதுங் கேட்டி மைந்த
பேற்றினி லுயர்ந்த தேவப் பிரியனோர் விப்பி ரேசன்
றேற்றுமவ் வேதியற்குந் திருமறு மருமந் தோற்கும். (௧௦௬)

முன்னிகழ் சம்வா தத்தின் முதுமறை யவனவ் விண்டு
தன்னெதி ருலகில் யாவன் சாற்றுகைம் மாறு நோக்கா
துன்னிய பரோப கார முஞற்றுவ னவன்பா லீச
னின்னரு ளுவகை கூரு மென்றனன் வினவு மாலோன். (௧௦௭)

நன்றுநன் றுலகில் யாவர் நயந்துதம் பொருட்ட லாம
லொன்றிய முயற்சி யேனோர்க் குஞற்றுந ருத்தா ளிங்க
வென்றிவெள் விடையோ னற்றுல் விழைந்தநி ளுவலென்னோ
தன்றனக் கலாமு யற்சி தரினவ ரறிவி லாரே. (௧௦௮)

தேவர்கண் முனிவ ரேனோர் செய்யருந் தவம னேக
மாவன யாவுந் தத்த மனுபவக் கலதொன் றுண்டோ
நீவிழைந் துரைத்த தொல்லா நிலையதென் றுரைப்ப மாலத்
தாவரு மறையோன் கூறுஞ் சாற்றிய தற்புதத்தே. (௧௦௯)

அகிலநா யகனின் முன்னோ ரஞ்சியோ டோட வாட்டுந்
தகுவிட மயின்ற மாண்புந் தன்பொருட் டென்னை போலும்
மிகவிழைந் துறுநீ கீர வீரைபல் விடருற் றேய்ந்து
மிகவுறு தமுத மத்திட் டீந்தது மற்றே போலும். (௧௧௦)

மலையமா தவனெம் பெம்மான் மணப்பெருந் திருவோ லக்கம்
புலனுறத் தெரிசித் தேத்தும் புனிதவாழ் வையும் விடுத்துத்
தலையற னிதுவே யென்னுச் சமநிலை புடவிக் கீந்த
நிலைமுதற் புரிய னேக நிகழ்ச்சியு மற்றே போலும் (௧௧௧)

சாற்றுப மன்னி யப்பேர்த் தகவனும் பகவன் சார்ந்து
போற்றிய கண்ணற் கின்பப் பூங்கழன் முடியிற் சூட்டித்
தேற்றுபு சைவ தீக்கை திருத்திமெ யருத்தி லாய்மை
யாற்றினிற் புகுத்த தாதி யனைத்துமாங் கற்றே போலும். (௧௧௨)

திருமுறை கண்ட சோழர் திறன்மனு நீதி கண்ட
வரசருட் சிபிவேந் தாதி யருட்பெருஞ் செல்வர் செய்த
பரிவெலா மற்றே போலும் பகர்ந்தது நன்று நன்று
சுரர்முனி வரர்மு னின்னோர் தூச்செய லுணர்ந்தி லாய்கொல். ()

என்னுளந் தெரிய வோதிற் றென்றிது துணிந்தேன் பூவின்
மின்னுறை மருமத் தண்ணன் மேதகு பரோப காரந்
தன்னின்மேற் றரும மில்லை சாற்றிய துண்மை யாகு
மன்னது சுவார்த்த முற்று மளிக்குமே லிசைப்ப தென்னும். ()

என்றரிக் கனைய விப்பி ரேசனோர்த் தெதிர்ம றுத்தா
னன்றருண் மைந்த விங்ங னவிற்றிய பரோப கார
வென்றிமா தரும மேன்மை விளம்புவ தினியெ னென்றே
வன்றரு ளமுத நாத னருட்குறி யதிற்க ரந்தான். (௧௧௫)

திருவமு தேசன் றன்செய் திருவரு ளுன்னி யுன்னி
யுருகிய வுளத்த னையவ் வுறுவர்கோன் மிருகண் டும்ப
லொருவிலான் சூத கானத் துறைந்தருண் மந்திரேசன்
மருமல ரடிமுப் போதும் வழுத்திவீற் றிருந்தான் மன்னோ. (௧௧௬)

வேறு

வீற்றிருந் தமர்மிரு கண்டருள் சேய் மேலெழு மன்புள முந்தவெழுந்
தாற்றினி லமுதிறை மேற்றிசையோ ரருட்குறி யத்தளி யுண்ணிறுவிப்
போற்றியர்ச் சனைதினம் புரிதருமுட் புரிவொடு மச்சிவ லிங்கத்தைச்
சாற்றுப மார்க்கண்ட லிங்கமெனச் சாற்றரிதன்பெருந்தகைமையென.

செங்கையினொளிர்தருபொன்புரிவேத்திரப்படையவனிவை யியம்புதலு
மங்கவை வினவிய சனற்குமா னடிகளு மடிதொழு மடியனெனைச்
சங்கையி னொழிவுற வருளுகெனத் தாழ்ந்திது புகலுவன் பெரியனைப்
பங்கனையாம்பிரமனேசனெனப்பகர்ந்தனையெந்தமணிதுகாறும். ()

மந்திர நாயக னெனும் பெயரு மத்தியின் மத்தியின் வழங்கினையான்
முந்தமி தானத்தின் பரியாய மோவிது வேறெனி லிடுகுறியோ
சிந்தைசெய் காரணப் பெயரேயோ திகழ்நிபமேலதை விரித்தெளியேன்
புந்தியி னயிர்ப்பற வருளுகெனப்போற்றினன்றுதைதன்புதல்வனரோ.

வினவியவேத்திரப்படைக்கரன்முன் விளம்புவன் கேண்மதி சனற்குமா
மனுவிறை யெனும்பெய ரதிகுய்ய மாண்பொரு ணிறைதரு நிபநாம
மெனவுண ருதியிது தெளிதருவா னியம்புது மோரிதி காசமென
முனமவ னருளிய வாகேண்மின் முனிவர்க ளெனமொழி தருஞ்சூதன்.

வேறு.

இத்திருகு மாகதை சொற்றமர் கேள்விய ரிச்சையர் சாதக ரெவரேனு
மெத்திய னீணிதி யுத்தம சேய்பல மிக்குய ராயுக முதலாய
சத்திக வாழ்முழு துற்றமர் வார்சிவ நற்குரு வாரருள் பெறுவார்பின்
வித்தையவாவொழிவுய்த்துணர்வாரொருமெய்ப்பரவீடெளிதுறுவாரால்.

மார்க்கண்டேயச் சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் ௬௧௮௭.

---

# இராமன் மந்திரோபதேசம் பெற்ற சருக்கம்.

---

சூர்த்த *காலை வென்ற கூறு துலங்கு காதை யோதினுஞ்
சீர்த்த ராமன் மந்தி ராதி திறங்கொள் வாய்மை யோதுவா
மார்த்த பாத வன்பு கூர வமர்ந்து கேண்மி யாவெனு
† நார்த்த பாத நந்தி நாத னயந்து கூறு மாலரோ. (௧)

வேறு.

சனற்கு மார கேண்மியா தனக்கு மாசன் மைந்தனு
மெனக்கொண் மாய னுமுனை யிழைத்த தீமை யினரு
மனக்கொ ளாத பாதக மதித்து மாத வப்பிரு
குனக்கி தாரு மென்றெமை யுலப்பி லாத யோனியில். (௨)

சென்று சென்று லைகளைச் செப்பு சாப முற்றுடைந்
தன்று நின்று வேண்டநீ யையி ரண்டு தோற்றமா
மென்ற வாணை லங்கன மெம்மி னுவ தன்றினி
நன்றி னுள்ளுந் தீமையு நவையி னுள்ள நன்மையும். (௩)

ஆவ செய்கை வகையினென் பதுபி ரத்தி யக்கமே
யாவு நம்மி னோர்ந்தனம் யாது தான வக்குலம்
வீவ தாற்று நன்மையுள் விளைந்த சாப மேற்கொடப்
பாவ காமு ணச்செலுற் பவத்து னன்மை வாய்ப்பதால். (௪)

நிருத ராதி துட்ட நீதி நீக்கி நீதியிற்
பொருவி லாத சிட்டரைப் புரக்கு நன்மை வாய்க்குமா

---

* காலை—யமனை. † நாரதபாத—அன்பு நீங்காத.

பிருகு சாப மீதருள் பிறங்கை நோக்கி யான்றவர்
திருகு கோப முங்கலஞ் செய்யு மென்ப தேர்ந்தனம். (௫)

என்றி வாதி யொவ்வொன்று யாவு மோர்ந்து ளந்துணிந்
தன்ற யோத்தி வாழ்தச ரதப்பெ யர்க்கொ ளாற்றல்சால்
வென்றி நாம வேந்தர்கோன் விழுத்த வப்பெ ரும்பய
னொன்றி நின்று வம்மெனா வுற்றெ திர்ந்த ழைத்திட. (௬)

ஆத வன்கு லங்கண்முற் றுற்ற ரும்பெ ருந்தவங்
கோதொ ழிந்த கோசல நாட்டி ருங்கொ ழுந்தவம்
பூத லஞ்செய் மாதவம் பொலிந்தொ ருங்க ழைத்திடக்
காதல் கொண்ட விந்திரை காத லன்னெ ழுந்தனன். (௭)

உரைத்த வேந்தர் கோளரி யுச்சி மேற்கொ ளும்பலாய்த்
தரைத்த லத்து தித்தனன் றனய னுக்கொ டாதைதன்
வரைத்த டம்பு யத்தினான் மகிசு மக்கும் வென்றி நாம்
விரித்த லென்ன வன்பெயர் விளக்கு மாற்றல் முற்றுமே. (௮)

தாசி ருக்கு மங்க ரளவி லெத்து ணைத்திற
லாசருக்கு மேனைய ரனைவ ருக்கும் போர்குறீஇ
வாமு தற்க ணெல்லையும் மருவொ ணாத சீர்த்திதன்
வாமி குத்த பேரினால் வயக்கு மேலு ரைப்பதென். (௯)

தன்னி கர்த்த தங்கர் தன்னின் மாலு தித்த பின்
றன்னின் மிக்க தென்ன முச் சகங்க ளுந்து தித்திடு
மென்னி லன்ன சேயினெண் ணிலாத சீர்த்தி யெண்ணுதும்
மென்னி லாவ தேகொல்வி சேட சேட னுக்குமே. (௧௦)

அண்ட மியாவுந் தேசமும் மகர மியாவு முற்றும்வாழ்
தொண்டர் யாரு மாதவர் சுத்த யோகர் சித்தருந்
தண்ட ளிர்க்கை யாருமைந் தரும்ர மித்திடுங்களிப்
பெண்ட ரச்செய் நீர்மையா லிராம நாம மெய்தினான். (௧

வேறு

தாம நாமமி ராம நாமமுன் சார மாவைகுந் தப்பிரான்
காம னொவருட் கந்த னொவெனக் கவினொ டேகலை வளரவே
மாம னாமென வுணர்வு ருவண மனுட னாமென வளர்ந்துபின்
பூமன் மாமக னாம்வ சிட்டனைப் போற்றி யாதர வேற்றியே. (௧௨)

போத நூல்பல கேட்டல் சிந்தனை புந்தி தேறுத னிட்டையே
யாதி யானவு நிரம்ப வாய்ந்துகா மாதி யாங்கலை யொருங்குநீத்

தேத மில்பொறை கருணை சத்திய மின்சொ லாதிய யாவுமேய்ந்
தோதொ ணாதசீர்ச் சீத வாசமா முறையி னுள்ளுல கெலாமுற. (௧௩)

அனுசர் மூவரோ டகன மர்ந்தரு ளன்னை தாதைசொ லவைமுடித்
தினிது மேவுழி முனிவ னுங்குயத் திளவ லோடழைத் திடப்புகுந்
தனல ருந்திறற் றுட காவத முனூற்றி மேன்மிது லாபுரிப்
பொனைம ணந்துவந் தன்னை தாதயைப் போற்றிவீற்றிருந் தானரோ. (௧௪)

வீற்றி ருக்குநாள் வேறொர் நாணனி விரும்பு தாதைசொல் கரும்புதேன்
போற்றி தித்துடல்பூரித் தொண்செவிப்புகு துமுன்னெழீஇப்போம்பிரி
வாற்றொ ணாதரு ளிளவல் சானகி யடிதொ டர்ந்திடக் கடிதுசென்
றேற்ற* கானநி வாசமே நமக் கென்று முள்ளதென் றேகினான். (௧௫)

கருத்த மாமர பிலங்க வந்தருள் காளை யேகிய கானனை
மிகுத்த நம்மதி தெய்வ மானுட மேனி கொண்டிவண் மேவமுன்
ஒருகுத்த மாதவ மென்கொ லென்றளி துலங்கு நாண்மலர் முகங்கணீ
ருகுத்து நிடலை வணங்கி யொண்பதத் தொழிவுறு மலர்முகங்கணீ. (௧௬)

மானி னம்பல பின்பு சானகி வாஞ்சை தீர்கெனு மாறெழு
மானி னம்பல வுங்கோ பாலனென் றறிந்த போனனி யார்த்தெழுந்
தேனி னம்பல விறைபி தாவெனத் தெரிந்த போலிசை செய்தெழும்
வானி னம்பல மேனி கண்டின மாமெ னத்தொடர் வானெழும். (௧௭)

வேழ நங்குலங் காத்த தெய்வத மேய தென்றெதிர் வீழ்ந்தெழுங்
கேழ னம்முரு மேற்கொ ணாதனைக் கிட்டி னோமெனக் கிளர்ந்தெழும்
பாழி மாவரி னாசி யவுற் பவமி தோவெனப் பதந்தொழும்
வாழ்கு டாவடி சாம்ப வன்பினர் வணங்கல் போற்பதமலர்தொழும். (௧௮)

குணங்க ணின்குறு முனிமு னேயொரு குலாதி பன்புகுந் தின்னினி
யணங்கு முற்றொழித் தின்ப வீடரு ளைந்தெ ழுத்துப தேசநன் [தமா
மணங்கொ ளுஞ்செயல் வாய்க்கு மாண்பினை மணங்கொ ளற்கொர்வ ழித்
திணங்கு தாரக சகித வைந்தெழுத் திதழி மாமலர் காட்டுமே. (௧௯)

நெடிய நீகுறு முனியைத் தாழ்ந்திடர் நீக்கு கென்றுட னேவல்போ
னெடிய பூருக நிரையி ராகவ னீங்க ழற்கணி றைஞ்சுமால்
கடிய மௌவல்சே வடிப ணிந்துல காதன் மாரன்கை வாளியாய்க்
கடியை யென்றுல கோது றும்பழி கடத்து கென்றலிற் கலவுமால். ()

இன்ன கானனத் தேகி ராகவ னிளவல் சானகி பின்வர
மூன்ன ரேபல வளங்கள் கண்டுமென் மொழியு வப்புறக் காட்டுபு

* கானம்—முல்லைநிலம்.

மன்னு தண்டக வனம்பு குந்தவன் வாழு மாதவர் சூழல்வா
யின்ன மந்தவ ராசி பெற்றினி தேகி மாமல யெசன்வாழி. (உ௪)

உடச முன்வின யிப்பு குந்தவ னெண்மலர்ப்பதந் தாழ்ந்தெழுங்
கடிக ளும்மடி யடிய னென்றெழுந் கடியின் மாதவ மென்னெனுத்
தடமலர்க்கைகூ வித்து நின்றதா சாரி யானன நோக்குபு
நெடிய பானுகு லேச மாசறு நின்வ ரத்துநல் வரத்தெனு. (உ௫)

முகமன் பற்பல கூறி யாசிகண் மொழிந்தி ருந்துபு முனிவாழ்
தகவி னெம்மனோர்க் கேய டுத்தத சரத சக்கர வர்த்திமா
மகனி னகிலவண் வரவ டுத்தவெம் மாதர் மாதவ கோதிலா
துகம்வ ழுத்தநின் றியலு மாறிட மொழித்த ளிப்பனை யுன்னியோ. ()

வேறு.

மைந்த நின்னிள வடிவு நோக்கலை மல்கு பல்லுரு வகையு நோக்கலை
தந்தை தாயர்போற் றுதலை நோக்கலைசார்வ மௌமனி தமியை போலவே
யிந்த மாவனம் வந்த காரணம் யாதி யம்பென வெழுந்தி ராமனு
மந்த ணாளரெ லார்க்கு மோரர சருந்த வத்தினே ராசு நீயரோ. (உ௬)

அகில லோகமு மடிப ணிந்திடி னவர வாக்குள குறைகண்மு ற்றெழிக்
திகந லங்களும் பரந லங்களு மிணையின் மோக்கவா யிலுமளித்திடத்
தருமோர் போர சாய நீயொரு தமிய னேனையு மாசனெல் பதோ
நசையு தாருமெம் மாச லக்கண நவின்ற தண்மையே ரசமி லாதவன். ()

என்னு மர்த்தமேல் யான்கொ ளத்தகு மெந்தைநின்னர செந்த நாளினு
மன்னு நித்திய சகவி யாபக வாத மாசிவ ஞான வானர [கிய
சென்னிமேலணழயெனிசைப்பதெங்ஙனமென் றமைந்து தன்னகர்நின்றே
தின்ன தென்றுமுற் றிசைத்துமேலுமோரேழைவிண்ணப்பநின்றிருச்செவி.

சாத்தி ரானுக தானு வேநிகர் சதுர முற்றுணர் சாந்த வேந்த வென்
றேத்தி நின்றெதி ரோது மையவிங் கெத்து லைத்தவர் தான மாதியி
னீத்தி டற்கரும் பவஞ்ச வாஞ்சையா நிறைகட்டற்கடந்திடுமுபாயமொன்
ருத்தி நீர்தர வருடியாமென வடிப ணிந்தன னலரி மைந்தனே. (உ௭)

அதுவி ளும்மல யாச லத்தெனமை யாள கத்திய மாமு னீந்திரன்
கதிர்கு லாதிப வுத்த மக்குண கண்ணங்கள் சேர்கரு ணூல கேண்மதி
யதிர்க டற்புவி யாளு பாயமுன் னுப காமுறு மரச ருள்ளக
மெதிரி லாமறை சிவாக மந்துணிந் தியம்பு மந்தண மினிது கேட்டனை.

மூதுவ சிட்டனிற் குணர்ந்துபோதகன் முதுக்குறைந்தெழுசனகன் மாது
லன், மிதில் கேள்வியொண் கதிரின் மைந்தனீ வினைத்த தொன்று

பின் விளைவொன் றுருமோ, வதிவி ருப்பநின கேள்வி யின்னமுக் கையை
ஐய்யவான் மெய்ய செய்யவன், பதியுணைக்கிது பகரு மார்வமே பல்கு
இன்றதிங் கென்று பன்னுமால். (உக)

காதி யாச்சிர மாதி யொன்றினுந் தவறி லுத்தம ஞான சீலருங்
காதல் கூர்சமு சார சாகரங் கடந்த ருட்கரை யிவர்ந்து வாழ்வுறற்
கேத மின்னிக மாக மந்துணிந் தீச னேயெவ ரினுந்தி யேயனென்
றோது மாபதி பாத பூசனை யுழுவ லன்பினு லுஞற்றல் வேண்டுமால். ()

அகில மூர்த்தன துடைமை யாகலைத் தானுமீசனுக் கனைய பூசனைத்
தருப ணிக்கண லாதி யாதினுஞ் சாரு மார்வமொன் றில்லை யாதலா
னெருமு ளத்தொடு மகம்பு றத்தினு நிகம வாகம முறைவ ழாமலப்
பகவ பூசனை யாற்று வானெவன் பவஞ்ச வாரிதி பாற்று வானவன். ()

அனைய பூசனைக் கின்றி யேயமை யாத முக்கிய மாகு மங்கமொன்
றனைய தென்றிடு லரிய மந்தண மினிய தோதுதுங் கேளி ராகவ
வினையை வெல்வது பவஞ்ச நீத்திட மேலெடுப்பது வேத வொண்சிரந்
தனைய டுத்தமெய்ப் பரசி வத்தின தனிச்செசா ரூபநிச் சயார்த்த பூரிதம்.

பரம வாசக மாயொ ளிர்வது பஞ்ச பாதக நாசஞ் செய்வது
வரம காசிவ ஞான சாதன மந்தி ரேசமாய் வயங்கு நீரது
திரம சாத்தியந் தேவர் மாதவர் தோந்துளோர்க்குமே செப்பு தற்கது
அரமன் மத்திய மறையின் மத்திப வுருத்தி ரத்தொளிவி ரித்த ரத்தினம்.

ஆய ரத்தினந் தூய மெய்த்திரு வைந்தெ ழுத்தென வறிய வோதுமாண்
மேய வனைமா மந்தி ரேசநின் மிளிர்செ விக்கணே குளிர வுய்க்குதும்
வாய விம்மநு நீகொண் டுன்னுமே மற்ற தற்கொரு முக்கி யாங்கமுந்
தோய வேண்டுமென் னதும லுச்சக தூய வெண்டிரு நீறு தாரணம். ()

பூதி தாரண மின்றி யிம்மனுப் புகலி னிட்பல மென்னு மாமறை
யாத லால்விர சாங்கி யின்விளை வாய சித்திதா யசுவெண் ணீற்றினை
யோது நான்முறை பர்வப் பூசிமே லொளிர்த் ருந்திரி புண்ட ரங்களு
மேதி லாதவர் கென்று கூறியாங் கிசைத்த வாவிர சாங்கி நீற்றினை. ()

முறைவி ளைத்தெடுத் தீதலுங்கா முளரி கூம்பிநேர் மலர யாங்குப
நிறையுத் தூளன புண்ட ரங்களு மெனரி யணிந்தெதிர்முறைபணிந்தனன்
கறையி லாமனத் திறையி ராகவன் கலச யோனியக் காகுத் தன்றனைக்
குறைதெ றஞ்சிவ தீக்கை யாற்றுபு குறித்த மந்திர வமுது குத்தனன்.

தூய தன்செவி வாயு தூத்தவச் சுவைய மந்திரா சமுத மாந்தினன்
வாய பேரின்ப வாரி யிற்றனை மறந்த மார்தொரு யாவெற ழுந்திட

னைய வாரியன் பாத தாமரை நேர்ப ணிந்தடிக் கடியெ மூர்த்திநின்
றேய்வி லாக்கரு ணாம்பு தேயென துடலு மாவியு முடலு முன்னதே.

செய்கைமாறிலாச்சிறியனாயினேன்செய்கைமாறுநின்றிருவருட்பெருஞ்
செய்கை கொள்கிலாச் சீரி தென்பது தேற்றமாகநேர்தெரியவந்ததென்
றுய்கை பெற்றசீ ராம னோதலவ் வடச னாதனுங் குடச மாதவ
னுய்கை செய்சிவ நாம மாயிரத் துண்மை யாவையு முணர நல்கினான்.

ஆச றச்சிவ தத்து வார்த்தங்க ளனைத்து முள்ளகத் தமையத்தேற்றிமே
லீச னேயொரு வன்றி யேயன்மற்றேனையோர்களெவ்வெவருஞ்சீவரே
மாச றத்தியா தாக்க ளென்றுமா மறைசொல் சூத்திர வாக்கி யந்தனைத்
தேச றத்தணி யோது மாசிவ கீதை நூலையுந் தெரிய நல்கினான். (௩௧)

இன்ன வாரகத் தியமு னீந்திர னிராம னுக்குநீ றளித்த மேன்மையாற்
றன்னு றும்பசுத் துவத்தை மாற்றிமேற்றுலங்குதாரகசகி தவைந்தெழுத்
தென்னு மந்திர செபத்தி னாற்சிவத் துவவி ளக்கமே லேற வேற்றியப்
பன்னு மந்திரஞ் செபித்தி டும்முறைபரசிவார்ச்சனைவிதியுணர்த்திமேல்.

வேறு.

பொறுதி யாகநாம் புகன்ற னக்குமுன்
பெறுதி யென்ற மெய்ப் பேறு கொள்கவென்
றிறுதி நீக்குமைந் திருஞ்சா தாக்கியத்
துறுதி லிங்கமொன் றருளிர நல்கினான். (௪௧)

இரவி மைந்தகே ளிவ்வி லிங்கநீ
யுரிய வாயுள்கா றொருவு றாமலே
பரவி நாடொறும் பயில ருச்சனை
வாசி வாகம மாபி னாற்றுதி. (௪௨)

மேவு மிவ்வெலாம் வேந்த நிற்கக்
காவ லாம்புறக் காவ லாகவிங்
கீவ கொள்கெனா வேதி கார்முக
மாவ நாழியாங் கவன்கை நல்கினான். (௪௩)

சருவ சத்திமா னாய சங்கர
னொருவ னேநிக ராய வுத்தமன்
றருச ராசனந் தாவி னாந்தகம்
பொருவி லாவுநேர் புகலற் பாலவோ. (௪௪)

மூன்று நல்கிய முனிவர் சேகர
னான்ற கேள்விய னாய ராமனைச்

சான்ற பஞ்சவ டித்த லத்தைநீ
யென்று காண்கென விளிது கூறினான். (௪௫)

முனிவ ருத்தமன் மொழிந்த செஞ்சொலு
மனைய னக்கிரி யம்பு சாதமுந்
தனது சென்னியிற் றழைப்ப ராகவ
னினிதி றைஞ்சினா னேத்தி நின்றனன். (௪௬)

பிரிவை நோக்கிடும் பெரிது மேங்கிடும்
வரதன் வாசக மறுக்கொ ணாமையும்
பெரிது நோக்கிடும் பேதுற் றஞ்சமத்
தரணி பன்றிறஞ் சாற்றெ ணாதரோ. (௪௭)

அரிய நூல்களாய்ந் தகன்றெ ளிந்துமெய்க்
குரவ ராளிறை குணத்தி ராமனே
பெருமி டர்ப்படிற் பெரிய வர்ப்பிரி
வருமை யிற்றெண வளக்க லாவதோ. (௪௮)

இருதலைப்படு மிதய ராமனுக்
கொருத லைத்துணிந் துமுவ லன்புள ட
பொருத லைப்பெரும் புணரி வாயனை
மருத லைப்புரீஇ வணங்கி யேகினான். (௪௯)

ஏகி ராகவ னிளவல் சீதையோ
டாகம் வேற்றுமை யறியொ ணாதுநீண்
மாக நீடுகான் வழிக டந்துபோ
யோகை மிக்கபஞ் சவடி யுற்றனன். (௫௦)

வேறு

வரம டுத்தகோ தாவரி மாநதிக்
கரைய டுத்தலப் பஞ்சவ டிக்கணே
புரையி ரித்த புனிதனி ராகவன்
விரவி யொத்துழி வீற்றிருந் தானரோ. (௫௧)

அங்க ணுடொறு மைந்தெழுத் தின்செபந்
திங்கள் வேணி யிலிங்க சிவார்ச்சனை
துங்க கீதை பாராயணந் தோமற
நங்கை சானகி நாத னவிற்றுபு. (௫௨)

நாளு நீளுமெய் யன்பு நதியொடே
யாளுமீச னருட்கட்ற் புக்குலாய்த்

தாளின் ஞானனந் தத்தனித் தண்சுதை
மீளி யுண்டு விளக்கமிக் காணமோ. (ருங)

இன்ன வாறுசின் னுள்க ளிரிந்திட
மன்னி ராமனை வாஞ்சித் திராவணன்
பின்னை நேர்ந்து பிதற்றின னன்ன தாற்
றன்ன நாசி தனைஞ்சிதை வுற்றனள். (ருச)

அதனி னூற்கர தூடண ரார்த்தெழு
வதைபு ரிந்தந் நிருதர் வருதினி
சிதைய வென்றமை தேர்ந்தங் கிராவணன்
கதமி குந்துமா ரீசன்ச காயத்தால். (ருரு)

எரி நெருப்பை மடியிலிட் டாலென
வரிய கற்பிற் கரசி யனுவுந்தற்
பிரியொ ணாத பிரியை சனகியைக்
கரவி னூர்றுக் கவர்ந்தனன் காதகன். (ருசா)

அவனி மாதவ மாய பிராட்டியைக்
கவர்பு சென்றபின் காகுத்தன் றம்பியோ
டவச னுய்ச்சரித் தங்கதர் காட்டிடச்
சவரி யஞ்சனை தன்றனை யன்றனுல். (ருஎ)

சுக்கி ரீபனைத் தன்னி யவன்பகைத்
தக்க வாலியைத் தான்செகுத் தாங்கவன்
ஒக்க லோடுறு வாழ்வங் குதவவம்
மிக்க பேருத விக்குள் ளுவந்தரோ. (ருஅ)

ஏக வன்செய் நலன்மற வாமலன்
போகை யுந்து வுடன்வட மேருமுன்
னாக நீளச லத்தமர் வானர
வாகி னிக்குல முற்றும் வருகெனு. (ருகூ)

வாவி னித்தத யாத்த மனவரை
விரவு கிட்டிசை மேற்றிசை யாகரம்
பாமன் வெள்ளிப் பருப்பதங் கூற்றினூர்
வரையி னுத்தர யாமிய வம்பலா. (சாo)

இடையி டங்களெங் கெங்குந் துருவிநங்
குடிபு ரந்தவிக் கொற்றவன் றேவியிப்
புடவி வாய்த்தபொன் பூங்கொம் பிருப்பிடந்
மூடனறிந்தொல்லை மீள்கென வுய்த்தனன். (சாக)

சென்ற வீரருட் டென்றிசை மாருதி
யன்றி லங்கை யுரைக்கணத் தேகினோன்
பொன்றி மேனி யொடுங்கிநின் றுள்ளுயி
ரொன்ற ராம னிதயத் திருப்பவும். (௬௨)

சோக முற்ற தென் றேகை யிராகவ
மேகமின்ப மழைவிரை விற்றரு
மோகை யாதென் றுணர்த்தலி னேங்கும
சோக வின்னிரைச் சூழலி னீழலில். (௬௩)

வீற்றி ருந்து மிளிருஞ் சனகியைப்
போற்றி நேர்கண் டணுகிப் புகுந்ததான்
றேற்றி ராகவன் றூதெனத் தன்னெனத்
தேற்றி நல்கினன் றீதிரி மோதிரம். (௬௪)

வாங்கிச் சென்னிகண் மார்பின் மணைத்துகைத்
தாங்கி நோக்குபு தாச ரதிதனை
யாங்க ணைந்தென வன்பிற் பெருகியே
தேங்கு மின்பக் கடலிற் றிளைத்தனள். (௬௫)

வருதி யையவென் மாதவ வாழ்வின
தருமை மேனி யனுவும் விகற்பியா
துரிய தம்பி யுடனுறை வோடுற்றே
வருவ தேகொ லசனித்தமர் வாழ்க்கை யோய். (௬௬)

என்ற கேள்விக் கிறைமுறை யேயிசைத்
தன்றி ராமற் களித்தசூ டாமணி
யொன்று கைக்கொண் டுடன்விடை கொண்டுதாழ்ந்
தென்று சேயமைச் செய்தினன் மீண்டரோ. (௬௭)

கண்டு வந்தனன் காகுத்த தாயினை
யெரண்ட னிர்க்கை யுதவுசூ டாமணி
யெண்ட ரும்மிஃ தென்றெதி ரிட்டவள்
கொண்ட நோன்புமுன் யாவையுங் கூறினான். (௬௮)

வினவி ராகவன் மீக்கெழு மூக்கமோ
டனகி யாய சனகி யமர்நிலை
தனைவி னேகித் துறமிடர் மாற்றியாங்
கினிது மீட்டற் கெழுந்தனன் முன்னொழும். (௬௯)

தம்பி பானு தனைய னனுமனே
பம்பு வானர வீர பதாதியோ
டும்பர் போற்றுற வொல்லையி னண்மினா
னம்பி ராமன் றனுதூ னாலையே. (எ0)

வேறு.

ஆங்கரு மறைகள் போற்று மடவியி னகில மீன்ற
தேங்குயாழ் பழித்த வின்சொற் றிருந்திழை பாகத் தெம்மான்
பூங்கழ லிறைஞ்சும் வாஞ்சை புகுத்தவா னரப தாதி
பாங்குறு தவனி ருத்திப் பானுசே யனுமன் றம்பி. (எக)

புடைவரக் குணக்கி னீள்கோ புரப்பெரு வாயின் முன்னர்ப்
படியுறநமந்து வேண்டிப் பரவிப்போய் வேத தீர்த்த
முடியுற வணங்கி மூழ்கி முறையின்வெண் ணீறுகண்டித்
தொடைபுனைந் தெழுத்தோ ரைந்துந் துகளறச் செபித்த லாதி. (எஉ)

நித்திய நியமம் யாவு நிகழ்த்துபு சிராத்த மாதி
சுத்தசேத் திரபிண் டாதி துரிசறப் புரிபுட்சென்றாங்
கத்தனை யமல வேதா ரணியனை யகில மூல
வித்தனை வீணா கான விதூடணி யுடனி றைஞ்சி. (எங)

அகநெகிழ்ந் துருக நின்றாங் கருந்துதி பலமுன் கூறி
யிகலரு மனையின் மேலு மிறைஞ்சியாங் கரிது நீங்கித்
தகுமுழி யமர்ந்து வாயு தனயன்முன் றுங்கு ரக்கின்
றொகையினை யாழி மீதோர் தூக்குரம் பிலங்கைக் கேக. (எச)

ஆற்றுக வெனப்ப ணித்தா னுணைதஞ் சென்னி மேற்கொண்
டேற்றெழு கவிக ளெல்லா மிரவிதோ யிரவி வான
மேற்றழை விருக்கமாதி வேரொடும் பிடுங்கிப் போகட்
டேற்றவார் கலியிற் சேதோர் தினத்தினே சனையேழ் செய்தார். (எரு)

வரம்பறு வலிமு கத்த வலிமுக பலச மூகம்
வரம்பறு பாரை வானீண் மரம்பல ||சுரும்ப னேகம்
வரம்பறு மாழி மீதோ வாதுவீழ்த் தியவே கத்தால்
வரம்புறு தடையாற் பொங்கி வருபிர ளயமோ வென்ன. (எசு)

பிரவகித் தியாண்டுஞ் சென்றெம் பிரானிகே தனத்தி னீள்கோ
புரதுவா ரத்துஞ் சென்று புகுதலப் பொழுதி யாரு
மரகர முழக்க மேலோ ரார்கலி யென்ன வாய்விட்
*டரகரன் சினக ரத்து ளச்சமுன் னீர்ப்பப் புக்கார். (எஎ)

---

|| சுரும்பு-மலை.    * அர-குறிற்கீழாகாரங் குறுகிற்று.

புக்கவ ரண்டம் விண்டாற் போன்மெனக் கதறு மோதை
யக்கணந் துரத்திச் சென்றாங் கார்கலி கோயில் வாயிற்
றொக்குளார் கலிபே ரோதை சூரலங் கரத்தன் காணா
தக்கன னுரப்பி னான்மன் னரலைநீ வரலை யென்பான். (எஅ)

நந்திநா யகனுங் காரநா தமச் சேது வேறாய்ச்
சிந்திய தகர்த்த தாழி சென்றடங் கிற்று முன்போ
லந்தில்வா னரக ணங்க ளச்சமிக் குலைந்த நோக்கி
லாந்திரா கவன்பின் மேல்பா னான்கியோ சனைசென் றாங்கு. (எகூ)

பின்னரு மன்னு கென்றோர் பேரணை யமைப்பித் தான்மற்
றன்னதும் பெருங்கான் மீன்க ளலைகளா னிலைகு லைந்த
தென்னினிப் புரிது மென்னா வேக்கமிக் குளங்க லங்கி
யின்னதென் றொன்றுந் தோன்றா திருந்தவ னிராம னந்த. (அ0)

அம்புதி தடத்தின் பாங்கோ ரகரமீன் பூச லென்ன
விம்பரின் விளங்கும் யாண்டு மிடாற வியல்வான் மீன்க
டம்பெரு வாலிற் சேது தனையடித் துடைத்த நீரா†
னம்பியவ் விராமன் முன்பின னவிற்றுமக் குரம்பி ரண்டும். (அக)

சிதைவுறப் பெற்றும் வாய்மை சீலமுற் குணங்க ளாதி
யிதமிகு புனித ராம னியற்றிய நீரா லன்ன
ததைகுரம் பமைந்த வாழித் தடம்புன லிடமி ரண்டு
துதிதிகழ் கோடி தீர்த்த மெனும்பெயர் துலங்க மன்னும். (அஉ)

முன்னவில் கோடி தீர்த்த முதுமறை வனபு ராணந்
தன்னலன் விரித்துக் கூறத் தயங்கும்பின் னவிநீர்த் தத்தை
மன்னல மணமேற் கோடி தீர்த்தமென் றுலகம் வாழ்த்தி
யின்னலங் கொழிய மூழ்கி யின்னல மெல்லா மெய்தும். (அங)

அத்திரு மணமேற் கோடி யவிர்தட நகரே ழொன்பான்
மெய்த்திரு மணிக டம்முண் மிளிர்குலச் சிறைமா ணிக்க
முத்திசெய் தன்பாற் றோன்று முழுத்தவப் பெருஞ்சீர்த் தென்றா
வெத்துணைப் புலவ ராலு மிசைந்திடற் பால தாமோ. (அச)

மங்கையர்க் கரசியாரு ஙிம்நெடு மாற னாரு
மெங்கள்சண் பையர்கோ வும்மே லிசைத்தமா ணிக்கந் தன்னோ
டங்கத னவதா ரச்சீ ரருமையி னுரிமை நோக்கித்
தங்கிவீற் றிருந்தார் பண்ணா ளென்றிடிற் சான்று வேறென். (அரு)

---

† நீரால், விளங்குமென்றியையும்.

தன்னிகர் சிவலோ கத்திச் சகத்தையேற் றேணி யாகி
மன்னுமிம் மணமேற் கோடி வளநகர் பாண்டி நன்னாட்
டின்னன வேணி யாகி யிலங்குமீ தனைக வொன்றாந்
தன்னுளந் தோன்று தங்கட் டங்கிய ராமன் கேட்ப. (அசு)

ஓரச ரீரி ராம வோரச மானு தீத
மாரச சூத கான மாரசங் கார ஞான
தாரக *மந்தி ரேசன் காரக மகல நின்று
||தாரக மூல மேநந் தாரக மெனத்து ணிந்து. (அஎ)

சீதின நீதி நந்தா நெறிபுரி சேபதி யான
மாதிபி ரீதி யோனு யமர்ந்தன னுத லாலச்
சூதகா னனம்பு குந்தச் சுயம்பமு தேச நேச
மீதெழ வருச்சித் தானுன் விழைவுமுற் றருளு மென்னு. (அஅ)

வானநின் றெழுந்த தந்த வாக்கிருந் திவ்வி யாமு
தானதொண் செவிவா யுண்டாங் களப்பருங் களிப்புண் மூழ்கி
வானர குழாமி லக்கு மணனருக் கனிலன் சேய்கள்
பானிழ லென்னச் சூழப் படருமா வனச மீபம். (அகூ)

அதரினோ ரிடபங் கான்யாற் றக்கரை யானைக் காமுற்
றதனையவ வாறு கீறி யடைப்பவா னுங்கு நின்று
மெதிர்கரை யேறித் தோழத் தேற்றெறநும் புகுதக் கண்டவ்
வெதிரிலான் சினைத மீட்சிக் கீதுநன் னிமித்த மென்றான். (கூ0)

பூங்கொம்பொர் கலிதன் பாங்கர்ப் பொன்னிறம் பழுத்த வின்றே
மாங்கனி கொடுசென் றற்ற மந்தியை வாலி வீட்டி
யாங்கது கைக்கொண் டேகி யமர்பனை யமரக் கண்டா
னீங்கிது போனி மித்த மெமக்குவே றென்கொ லென்றான். (கூக)

செறியுல கடவிக் கெல்லாஞ் சேகர மென்னு மேன்மை
யறிதரத் தெருட்டு சேக ராடவிக் கணிய னாகப்
பெறுபுமாங் குயிலெல லாமெம் பிரானரு ளுவந்தி ராம
வுறுதியிங் குறுதி யென்றங் கழைத்தென வொலிப்பச் சென்றான்.

பூவைபைங் கிள்ளை சாம்ப புராதன புனித னேமா
தேவசங் காசம் போசச் சிதாநந்த வமுத நாத

---

* மந்திரேசன்-எழுவாய். அது அடுத்த செய்யுளில் அமர்ந்தன னென்று முற்றுவினைகொண்டு முடிந்தது

|| தாரகமூலம்-பிரணவசகித சிவபஞ்சாக்கரம்.

சேவக விமலசோம சேகர மந்திரேச
மாவன நிவாச தேச மாதவ பூதநாத. (௯௩)

கண்ணமர் நெற்றி யானே கந்தர கந்தரேச
தண்ணம ரிதழி வேணித் தற்பர சைலராசன்
பெண்ணொர் சகில மீன்ற பெரியநா யகிச மேத
வண்ணமுஞ் சூத கான வாதவென் றிசைப்பக் கேட்டான். (௯௪)

இன்னன பலவ ளங்க ளெண்ணில கண்டு கேட்டுப்
பன்னருங் களிப்பு மேன்மேற் பல்கிய பேரன் புந்த
முன்னரு ளீர்ப்பச் சென்றம் முளரியின் வருண தீர்த்தந்
தன்னினூன் மரபினாடிச்* சபலவெண் ணீறு சாத்தி (௯௫)

கண்டிகை பலபூண் டைந்தக் கரமுறை செபித்து நீல
கண்டனீ ணிகேத னத்தங் கைத்தள பலிகொண் டேகிக்
கண்டருட் டூல லிங்கங் கைதொழு திறைஞ்சி யின்சொற்
கண்டமர் வலவை நேச கணேசனை யிளைய சேயை. (௯௬)

பணிந்துநந் தீசற் போற்றிப் பராயனு மதிபெற் றேகித்
துணிந்துசே கரசு கங்கா தரவமு தேசநாய
மணிந்துல கருளா நிற்கு மருந்தனை திருந்து வேதந்
துணிந்துரைப் பரிய சோதி சுயம்புலிங் கேசற் கண்டான். (௯௭)

காண்டலுங் கரண மெல்லாங் கைநெகிழ்ந் திரிய வன்பு
பூண்டவன் றனது போதம் போய்ச்சிவ போத பேத
மாண்டமெய்ஞ் ஞான னந்த மயபர வசனாய் நீண்ட
சேண்டரு வடியற் றூங்குத் திருமுன நமந்த மர்ந்தான். (௯௮)

எழுந்தொரு வாறு முன்னின் றியம்புவாய் குழறக் கண்ணீர்
பொழிந்துட னனைப்ப விம்மிப் புரிவதொன் றோர்தல் கூடா
தழுந்துமா னந்த வெள்ளத் தரிதெழும் வழுக்கி வீழுந்
தொழுந்தகை யிராம னுங்கச் சுயம்புநே ரூற்ற தூய்மை. (௯௯)

இன்னவா றென்ன யாரே யிசைக்குநர் நெடும்போ திங்ஙன்
பண்ணருந் திறத்த மைந்த பானுகு லேச னெம்மான்
றன்னரு ளகனு லாற்று சபரியைத் தொண்டி னோர்வந்
தன்னவேண் டுவன வெல்லாந் தோமற வினிதி னீட்டி. (௪௦௦)

---

* முன்னிரு நெடிலுங் குறிலாக்கொண்டு சாபால வெனக்கோடலுமொன்று.

உழுவலன் போக்க மேன்மே லுயர்சிவா கமநூ லாற்றின்
வழுவறச் சுத்தி யாதி வயக்கிவெற் பளித்த தாயோ
டழலவிர் மேனி யெந்தை யமுதலிங் கேசன் றாய
கழலடி பூசித் துள்ளங் கரைந்தடிக் கடிந மந்து. (௧௦௧)

திருமுனின் றினிய வாய்மை திகழ்துதி புகன்று வேண்டு
மொருவனே யோவா மூவ ரும்பனே யெம் பிரானே
யருவனே யுருவ னேநா யருவுரு வனேய தீதத்
திருவனே சூதகானச் செல்வனே போற்றி போற்றி. (௧௦௨)

உலகனே யுலகெ லாமா ளுடையனே விடைய னேயன்
பலகனே யலகி லானே யமலனே விமல வன்பர்க்
கிலகனே யிலகி லானே யேனைய ரெவர்க்கும் வானோர்
திலகனே சூத கானச் செல்வனே போற்றி போற்றி. (௧௦௩)

ஆரண முதல்வ போற்றி யாரணன் முடியாய் போற்றி
தாரண நீற்ற போற்றி தாரண பஞ்ச போற்றி
பாரண காள போற்றி பாரண சூல போற்றி
தோரண வமல கான சேகரச் செல்வ போற்றி. (௧௦௪)

திருவுருப் படிக மோர்வத் திரமது செம்பொ னொன்று
கருமையொன் றருண மொன்று கருதுபா னிறமொன் றுநின்
னுருவமே துணிதல் கூடா தறிவுன சொரூபம் யாரே
தெருளுவர் சூத கானச் செல்வனே போற்றி போற்றி. (௧௦௫)

அவனவ ளதுவொன் றன்றென் றருமறை யிசைப்ப துன்னை
யவனவ ளிரண்டு மொன்றி யவிருமோ ருருவாய் நிற்றி
யவனெனப் போற்று கோமற் றவளெனப் போற்று கோமன்
சிவசிவ யாதென் றோர்துஞ் சேகர வனத்தாய் போற்றி. (௧௦௬)

அரிபிர மேந்தி ராதி யகிலசீ வருமோ ரொன்றே
யுருவமுற் றுதித்தன் பாலே யொடுங்குவ ருலர்க்க தீதப்
பொருளென லிருமை யாநின் பொன்னுரு விடத்துங் கண்டுந்
தெருளிலா மூடர்க் கென்னோ தேற்றமா வனத்தாய் போற்றி. (௧௦௭)

அருநர காழு மூழா லனவில்கா முகனென் றந்தோ
வுருவுகண் டுரைநிர் மூடர்க் குரைப்பதெ னூடல் கூட
லொருவடி வினிலெங் கெய்து முணர்த்தினீ யன்றி யாவர்
தெருளுவர் சூத கானச் செல்வனே போற்றி போற்றி. (௧௦௮)

சீவர்க ளெவரு மின்பந் திளைத்திட விதஞ்செய் தேவ
பாவியேற் கின்று போந்த படரெலாம் படர வீட்டி
யாவிகாத் தருடி யைய வரணநின் சரண மேமா
தேவனே ருத காணச் செல்வனே போற் போற்றி. (௧௦௯)

வேறு.

என்று போற்றிநின் றடிக்கடி யிறைஞ்சின னிராம
னன்று மாதவ னனியுவந் தமுதலிங் கத்தி
னின்று மிந்தமர் வேணிய னீலமா மிடற்ற
னென்று நாற்கரன் சாம்பனேற் றிவர்ந்தரு ளொருவன். (௧௧௦)

உளத்தின் மிக்கெழு முவகைநே ருணர்த்துமொண் முறுவல்
வளத்தி னன்சிர மாலிகா பரணன்பால் வண்ணன்
கிளத்து மித்தகு முருவனுய்க் கிடைத்தனன் றனையுட்
டளர்த்தி ருத்திரா மனையரு ளேற்குபு சாற்றும். (௧௧௧)

வருதி ராகவ கேண்மியா மலயமா தவன்முன்
கருதி நிற்குணர்த் தியவரு ணெறியதே கவற்சி
தருதி றற்பவ சாகர தரணவாஞ் சையர்க்குச்
சுருதி சொல்லுபா யம்மிது சுத்தநிர்த் தோடம். (௧௧௨)

இதயத் தான்றக வின்னதே யென்றுமீ திருக்கத்
ததையற் கூந்தலஞ் சானகி பிரிவினிச் சமய
முதயச் சூரனை முகின்மறைத் தாலென வுன்பாற்
றுதையப் பேரிடர் தொலைப்பதற் குபாயமுஞ் சோறும். (௧௧௩)

ஈண்டைக் கோசனை யெட்டினிற் றென்றிசை யிலங்குஞ்
சேண்டக் கார்தொழு தேவிபட் டினத்திரு நகர
மாண்டைக் கேகிநீ யலகில்சத் திகளுட னமருந்
தேண்டற் பாலனாம் விந்தையைச் சிந்தைசெய் தன்பால். (௧௧௪)

ஆழி மீதனை யணைதிறன் குறித்தனை யருச்சித்
தூழின் வேண்டுதி யேலணை யுஞற்றுதற் குரிய
பாழி யாற்றறந் தின்னருள் புரிவளப் படியே
வாழி ராமநீ யவ்வுழிக் குரம்பினை வயக்கி. (௧௧௫)

ஆய போரனை வழிச்செலீஇ யிலங்கையை யடைந்து
தீய ராவண வதம்புரீஇச் சீதையை மீட்டு
மேய விந்திர வரத்தினுற் போர்வயின் விளிந்த
பாய வானர கணமுயிர்த் தெழும்வகை பயிற்றி. (௧௧௬)

உரிய சீதையோ டிளவல்செங் கதிர்மக னூதை
பிரியன் வானரப் பெருந்தொகை பீடணன் முன்னோர்
வரிபு சூழ்வர விரைகமழ் புட்பக விமானத்
தரிதி வர்ந்துசென் றயோத்தியிற் பரதனோ டமர்ந்தே. (கஎஎ)

நீதி வேத்தியல் புரிந்துவீற் றிருந்துயிர் நிரைகாத்
தேதி லாகமஞ் சிவப்பிர திட்டைக ளியற்றிக்
கோதி லிச்சிவார்ச் சனைதினம் வழுவறக் குயிற்றிப்
பேதி யாதவிப் பல்வகைப் பெருந்தவப் பேற்றால். (கஎஅ)

ஈற்றி னம்பதத் திரண்டறு நித்திய வின்பப்
பேற்றின் வாழ்கென வாய்மலர்ந் தருளியெம் பிரான்முன்
றோற்றி யாங்கருட் குறியிடைக் கரந்தன்ன் றொழுது
போற்றி ராகவ னளப்பருங் களிப்பெரும் புணரி. (கஎகூ)

தோய்ந்து மந்திர லிங்கபச் சிமத்தொரு தூய்மை
வாய்ந்த லிங்கமார்க் கண்டலிங் கத்தணி வடபா
லாய்ந்து தாபனம் புரிந்தருச் சித்துமீண் டனைபா
லேய்ந்த வாரமு தேசனைப் பினும்பணிந் தேத்தி. (கஅ0)

பொருமி யன்பின்மிக் கிருகணீர் பொழிந்துள முருகிப்
பிரிவி னைக்கொரு வகைபுற விடையருள் பெற்றாங்
கரிது போந்துகோ யிலின்புறத் தொருசிறை யடுத்தவ்
வான தேவிபட் டினம்புக மதித்தவ னிருந்தான். (கஅக)

வேறு.

ஈதிவ்வா றாக விதற்குமு னிளவ லிரவிசே யனுமன்சாம் புவனே
யாதிய ராங்காங் கருட்குறி நிறுவி யருச்சனை புரிந்துவந் தடுத்தா
ரோதவற் றிலக்கு மணனருச் சித்த வோரருட் குறியமு தேச
சேதனசுயம்புலிங்கத்தின்றென் மேற்றிசையினூற்குரோசத்திற்றிகழும்.

நவிலுமக் குறிவாழ் நகரந்தம் பிக்கு நல்லவன் கோட்டையென் றுமத்
தவிர்தரு மதன்கீட் டிசையின்முக்குரோசத் தமுதலிங் கேசதென் றிசை
திவன்குரோ சத்தி னெல்லையிற் றிகழுந்திருத்தகு சுக்கிரீ வன்செ [யோர்
யுவமைதீரிலிங்கமுவ்விடமுக்துப்பேட்டையென் றுரைப்பநின்றோளிரும்

திருந்துபூ சனைசெய் சுக்கிரீ வன்றான் றிருமுனின் றருந்துதிசெயுங்காற்
பெருந்தகை யிலிங்கத் தொள்ளொளிப் பொலிவும் பேரழ கமைதியுநோக்கண்
டருந்துணை யெந்தா யருட்டிரு மேனியழகனே யென்றகா ரணப்பேர்
பொருந்தியேயொளிகள்நிகரிலர்தோங்கிப்பொலிதனோர்காணலாமின்றும்

அத்திரு மேனி யழகனுக் கிசைந்த வழகியெம் மன்னையு மனைய
துத்திய நாமந் தான்வடி வழகி யென்றுல கிறைஞ்சிடத் துலங்கு
மத்திரு மேனி யழகனு மனையு மேத்துநர்க் கருணலங் களுமவ்
வுத்தம தலத்தின்சிறப்புமோராளப்பின் றுரைத்தவப்பெரும்பதிக்கீழ்பால்.

வருமொரு குரோசத் தெல்லையிற் சாம்பு வன்மெழுங் குறியிலங்கிடுமவ்
விருநகர் நாமஞ் சாம்புவ னுடை யெனப்பொலிந் திலங்குமிவ் வகையே
யொருவிலா ரொருவ ரும்புரி யிலிங்க முலப்பில பலப்பல நகரின்
மருவின் றிலங்கு மேலினி ராமன் மதித்தவா புரிசெயல் வகுப்பாம். ()

இளவலோ டனுமன் சுக்கிரீ வன்மற் றேவரு மேவரத் தேவி
வளநகர்க் கேகி மந்திர நாதன் வழங்கருள் வழிகுராம் பயற்றிக் [குதக்
கிளர்தரு மிலங்கை புக்கிரா வணன்முற் கெழுமுபன் னிருதரைப் பொ
ளனுற வீட்டி ராவணப் பிரம கத்திரா மேச்சுர மாகும். (கஎஎ)

மாதலத் திராம லிங்கதா பனத்தான் மாற்றுபு வீரகத் தியினை
வேதகா னனத்தைங் கரத்தொரு கோட்டு விமலபூ சனையினால் விலக்கிக்
காதமர் குடக்கா தவனிழ லானைக் காவிறை பூசையாற் கடிந்து
கோதற வயோத்தி புககமு தேசன் குனிர்திரு வருணனி குலாவ. ()

மலயமா தவன்றன் பதமலர் சிரமேன் மலரவீற் றிருந்தரு ணெறியே
யுலகெலாம் புரந்து சிவார்ச்சனை யாதி யுத்தம நெறிவழு வாது
நிலவிய வியற்றி வாழ்ந்தன னவற்கு நிமலமாந் திரவுப தேச
வலனளித் தமையாற் குதவ னேசன் மந்திரே சப்பெயர் வாய்ந்தான். ()

அன்னமா வனமவ் விராமன் சானகியை யடுத்துமீட் பதற்குள வுபாய
மென்னென வுசாவியெம்பிரானருளாலெண்ணியாங்கெய்துதற்கிடனாய்
மன்னிய வதனாற் றிருவுசாத் தான வண்பெயர் பெற்றதான் மலரோன
றன்னருந் தனய வென்றிவேத் திரக்கைச் சற்குரு நாதனே தினனால்.

வேறு.

என்றருணந்தி வாய்மை யிருஞ்சனற் குமரன் கேட்டாங்
கொன்றிய வுளத்த னாகி யுத்தம குரவ ரேறே
நின்றனி மூகாம்பு சாத நிறைசொற்றே னுகர்ந்து மேலு
மன்றறி லார்வங் கூர்வ நாடுமென் னெஞ்ச மன்றே. (கஅக)

இன்னுமிச் சூத கானத் திறைவனை யிறைஞ்சி யாவர்
துன்னுதம் மிட்ட சித்தி தோய்ந்தன ரெந்தை யாற்றும்
பன்னருள் விளக்கம் யாவை பகர்ந்தருள் பெரும வென்றான்
மன்னருணந்தி நாதன் வாய்மலர்ந் தருளு மாதோ. (கஅஉ)

அருந்தவ முனிவ கேண்முன் ஞானந்த தாண்டவத்திற்
பரிந்தெழு மனத்தன் காதி புதல்வன்பொன் மன்றி னின்று
பெருந்திரு நடஞ்செ யீசன் பிரசமென் மலர்த்தாள் பேணித்
திருந்தருந் தவம்பல் காலஞ் செய்துவேட் டமர்ந்தா னன்றே. ()

அன்னவன் றவக்கி ரங்கி யருட்டில்லை யம்ப லத்திற்
பொன்னடம் புரியெம் மான்முன் போந்தருள் கூர்ந்து காதி
தன்னரும் புதல்வ நீசெய் தவம்பெரி துவந்தும் வேட்ட
தென்னுரை யென்னத் தாழ்ந்திட் டிருகைகூம் புறநின் றோதும்.

யாவரு முணர்த றேற்றா விறைவனே யேழை நாயேன்
றேவரு நின்னா னந்த தாண்டவ தெரிச னத்தின்
மேவிய மனந்து ரப்ப விழைந்துனை யடைந்து ளேன்மா
தேவநின் றிருவு ளத்தின் செயலென விறைஞ்சி நின்றான். ()

வருதிகோ சிகனே யிந்த வரம்பெறு சிதம்ப ரத்திற்
பெரிதுள முவந்து முன்னாட் பேணிரு முனிவர்க் கல்லாற்
புரிதரு நடமின் றற்றென் புணரியந் தடத்து நல்லோர்
கருதுமோர் நறிய சூத கானன மிலகு மாங்கே. (கருசு)

நீவிழை நடனங் காட்டி நினக்கருள் புரிது மென்றே
யேவிய நமந்து போற்றி யெம்பிரான் விடைபெற் றேகி
மாவனம் புகுந்து கோசி கனமனங் கரைந்து வாழ்த்தி
யோவரு தடம்புக் காடி யோதிய பூதி யாடி. (கருஎ)

கண்மணி புனைந்து பஞ்சாக் கரங்களுந் துறச்செபித்து
வண்மணிக் கோயில் புக்கு மந்திரேச் சுரன்வான் போற்று
மொண்மணி கண்டன் முன்சென் றுளநெகிழ்ந் துருக வேத்தித்
தண்மணிக் கழலி றைஞ்சித் தாண்டவம் விழைந்தி ருந்தான். ()

முன்னருள் புரிந்தாங் கன்ன முனிவற்கு நடன நாதன்
றன்னருட் பெருக்கி னலத் தாண்டவந் தரிசிப் பித்தான்
பன்னரும் பரமா னந்தப் பரவையுட் படிந்து பல்வே
றின்னருட் டுதிகள் கூறி யடிக்கடி யிறைஞ்சி வாழ்ந்தான். (கருகூ)

இறையவ யார்க்குங் கிட்டா விப்பெரு நடன நாயேன்
குறைதப வளித்தா யெந்தாய் கோதிலா வருட்பெ ருக்கி
னிறைவெவர் சொல்ல வல்லார் நீசன்செய் கைமா றுண்டோ
மறையெலா மளப்பி லாத வள்ளலே யென்று தாழ்ந்தான். (கசு0)

அளவிலா னந்த மிக்கூர்ந் தனைய னோடோறு மன்ன
வளவிலா மோது சூத பாதவ கானத் தாலங்

களனிலூ வண்ணல் பாதங் கைதொழு தமர்ந்தான் பன்னாள்
வளனுலாம் புன்னை வேலி மறைவனத் தடைந்தான் பின்னாள். ( )

கோசிக னடங்கண் டன்பு கொண்டுவாழ் காதை யீதாம்
மாசறு தவத்தோய் பானு மதிமுத லென்பான் கோள்கள்
பேசுமிவ் வனத்தோர் காலம் பிரானடி பணிந்து போற்றித்
தேசுறு தவஞ்செய் திட்ட சித்திபெற் றருளின் வாழ்ந்தார். (கசஉ)

உத்தம முனிவ வேறொன் றுரைத்துநீ யுற்றுக் கேண்மோ
முத்தொழின் மத்தி வாய்ந்த முதுதொழிற் றிதிசெய் தேவன்
றத்துவ மார்க்கம் யார்க்குஞ் சாற்றுமா றாவன் வாய்மை
யுய்த்துணர் மறைநான் காதியுள்ளவா றுணர்ந்த மேலோன். (கசங)

இப்பெருந் தலைவ னாயு மிந்திரை கேள்வ னாழி
னப்பெரு வலிக டத்தற் கருமையா லாதி நாளிற்
றுப்புறு மசுரற் காற்றாச் சுரர்கட லமுதுண் டாற்றல்
கைப்பெறு மாபா லாழி கடைந்திடத் தொடங்குங் காலை. (கசச)

விக்கின நீக்க லாகல் விளைத்திடும் பெரிய தேவை
யக்கணம் பூசித் தேத்த வயர்த்தமு துணவின் வாஞ்சை
மிக்கெழ வமரர் சூழ வேண்டும்பல் கருவி கூட்டித்
தக்கபா லாழி மாலோன் றன்கடைந் தியல வாங்கே. (கசரு)

இந்திரை யிந்தி ராணி யிலங்குவெள் ளிபமுன் னாவ
வந்தவந் தெழலு மீது மற்றெமக் கெமக்கென் றேறி
முந்துமுந் தொவ்வொன் றாக முற்றும்பெற் றனங்க ளித்தார்
சிந்தனை விழைந்த வாறத் தெள்ளமு தெழக்காண் கில்லார். (கசசு)

மெய்வினைத் தீர்த்து வானோர் விசைதரக் கடைந்தா ரற்றாற்
பைவிரி யரவாற் றதப் பரவையும் வறப்பத் தன்வாய்
மைவிரி யாலங் கால மற்றெமக் கெமக்கென் றோர்முன்
கைவிரித் துதறி யஞ்சிக கால்விசை கால்வி சைத்தே. (கசஎ)

முழுவிசை யிதுவே யென்ன முட்டொருங் கோடி னாரப்
பொழுதிறை பாணித் தான்மா றுணர்த்தான் பொருகவென் றோடா
வழுவினவ் வால மீற்றின் வன்னியிற் சுடவெண் மேனி
பழுதுறீஇக் கரிய னாகிப் படர்கதி யலியி னுய்ந்தான். (கசஅ)

உருவிடந் துரப்பச் சென்ற மாயன்முன் வானோ ரச்ச
மொருவிடா தோடி யோடி யுலகெலா முழன்று மருதோ
வெருவிட மன்றி யாண்டும் வெற்பிட மின்றி யலைந்து
பொருவிடை யமலன் மூக்கட் புராரிபே ரருள்கை கூட. (கசகூ)

அடுத்தவ ரிடுக்கண் டீர்க்கு மருந்தசஞ் சீவி யாயிப்
படிக்கணை வயங்குஞ் சூத பாதவ கானத் தெய்தி
நடுக்கமுற் றெழுந்து கீழைக் கோபுர வாயி லெண்ணிப்
பொடிக்கொள்பொன் மேனியெம்மான் கோயிலுட்புக்கோலிட்டார்.

அண்ணலெம் மந்திரேச னடியின்கீ ழலறி வீழ்ந்தா
ருண்ணெகிழ்ந் துருகு மாயோ ரேதுமி தும்பர் கோவே
துண்ணென விரிந்த நஞ்சந் துரப்பவொந் தலைந்தா கூழிற்
றண்ணரு ளீப்பப் போந்துன் சந்நிதி யடைந்தே மெந்தாய். ()

ஒருகணந் தாழ்க்கி னெம்மை யுடன்றுடன் றொலைக்கு நஞ்சம்
வருகண மீற்றிலாடு மயானமித் தானமாகிப்
பெருகண வுசாத்தா னப்பேர் பிரியுமால் விரியு நஞ்ச
மருகண வுறாம லெம்மை யளித்தியா லருளின் வள்ளால். ()

வேறு.

என்று மாதவ ரிணையடி மாதவ னிறைஞ்சி
நின்று வேண்டலு நின்மல னாரரு ணிலையாற்
றென்றி சாமுக வாயிலின் வழிவெளிச் சென்று
பொன்று ருத்திறல் வைரவச் செம்மன்மேற் றிசைபோய். (கருங)

ஐந்து யோசனத்தி னெல்லையி னவ்விட மமர
ரைந்து ளாரென வினவலிற் கொதித்திரைந் தெழலுஞ்
செங்கை நீட்டிபு கவர்ந்தனன் றிருவுசாத் தானத்
தங்க ணாதனு யிடைப்புக வருட்காத் தளித்தான். (கருச)

அனைய வவ்விட மங்கையி னங்கயின் றதில
நினைய நீலகண் டேசநா மங்கொடந் நிலையிற்
புனைய ருட்டிருக் கோயில்கொண் டருளியப் புராரி
யெனையு மாள்பரன் வீற்றிருந் தருளுவா னென்றும். (கருரு)

இந்த மாதலத் தவ்விட மெந்தையை யளித்த
மைந்த னும்வடு கேசன்றென் மாதிர முகனு
மெந்த நாளுமத் தளியில்வீற் றிருந்தருள் புரியு
மந்த நற்றலத் தற்றருள் பெற்றுளா ரனேகர். (கருசு)

இன்ன நற்றலந் தாமரங் கோட்டையென் றிசைப்ப
வின்ன தியாவையுந் தருமய னகரின்மிக் கிலங்கு
மன்னு சீகண்ட நாதனுங் கருள்செயல் வாம
மன்னு காயறம் வளர்த்தநா யகிபெயர் வவக்கும். (கருஎ)

அறம்வ ளர்ப்பது நாமிரு நாழிகெல் லாமெத்
திறனி வர்க்கொடச் செயல்விரிக் குதுமெனத் தெளிந்தம்
முறைய ளித்தநெல் லாலுல கூட்டுமூ தருசீர்
நிறைவ ளத்தவே வாளர்கூட் டம்மவ ணிலாவும். (௧௫௮)

என்னையாளறம் வளர்த்தவ னெண்ணிய செயலை
முன்னி யாங்குமுற் றினரிவர் முதத்தினெம் மணித்தாய்
மன்னி வாழ்கெனத் திருவுளங் கொண்டமான் பாலோ
வன்னர் கூட்டமிக் கவிருமந் நகருமப் பாக்கும். (௧௫௯)

விடம யின்றரு ளண்ணறன் றூதமா விபினத்
திடைபி டைந்தமான் முதலினோர்க் கருள்புரிந் தினிநீர்
கடல்க டைந்திடற் கணேசனைப் பூசித்தே கடைபி
னிடவொ ழிந்திடுஞ் சென்மமென்ன றிசைத்தன னெம்மான். ( )

அன்ன வாறரு டலைக்கொடு மான்முத லமரர்
நன்ன ரேகின ரயன்றிருக் குமரமே லலங்கேண்
முன்ன ரோர்பகற் கௌதமன் மனுவிறை முளரி
யன்ன சேவடி பணிந்தக லிலைகதனை யடைந்தான். (௧௬௧)

குருகு லத்தினில் வருதிற லொருகுலக் கோமர்
னுருகு மன்பினிம் மந்திரேச் சுரனடி யுன்னிப்
பெருகு பூசனைப் பேற்றின்வா னுருப்பசி பிரியா
தருகு வாழ்மனை யாப்பெற்றி யின்பமுற் றமர்ந்தான். (௧௬௨)

சசிமு கத்தவான் சசிமுரு டைகுடன் றற் சார
கைசமி குத்தவை யுணர்ந்தெரீஇ யெரீஇயவ ணண்ணிப்
பசைமி குத்துள மந்திரேச் சுரனடி பணிந்தே
வசைமி குத்தவந் நகுடற்கு விபத்தினை வழங்கி. (௧௬௩)

அண்ணன் மந்திரேச் சுரனருள் பெற்றினி தடைந்து
விண்ணி லாகண்ட லன்றனை வேட்டெதி ருவப்ப
வுண்ணி லாவுமின் புறப்பொலிந் துடன்றழீஇ யமர்ந்தா
னெண்ணி யிந்திரன் மந்திரேச் சுரனடி யிறைஞ்சி. (௧௬௪)

அருள்பெற் றுங்கெதிர் விருத்திரற் றடிந்தினி தமர்ந்தான்
மருள்செ யாயுள்வே தியர்களச் சுவினிதே விருவர்
மருவி மந்திரேச் சுரனடி வழுத்தியா னவரோ
டொருவு றாதவிப் பாகநேர் பெற்றினி தவந்தார். (௧௬௫)

வேறு.

இப்படி யளப்பி லாதா ரிணையடி சூத கானத்
தப்படி முடியாற் போற்றி யடிக்கடி மலர்வாழ் வுற்று
ரெப்படி யுரைப்ப தெம்மா விருட்கடி மனத்தோ யென்றான்
றப்படி வேணி நந்தி தொழுதடி பரவிக் கேட்டான். (௧௬௬)

ஆயசீர்ச் சனற்கு மார னுமிர வனத்தெந்தம் பெம்மான்
றூயமான் மியத்தின் மேன்மேற் றெருட்டர்ந்தெழு மார்வந் தூண்ட
மாயன்முன மந்தி ரேசன் வாரண முகற்பூ சித்தே
நீயரி கடைகென் றேய நிறையருள் பெற்றா னன்றே. (௧௬௭)

பின்னரம் முராரி செய்த பெற்றியெ னுற்ற தென்கொ
லன்னது மருடி யாலோ வண்ணலென் றடியிற் றாழ்ந்தான்
மன்னரு ணந்தி யெந்தை மற்றவற் கவைவி ரித்துச்
சொன்னவா கேண்மி னென்னாச் சூதன்மா தவர்கட் கோதும். ()

வேறு.

அளியி னீடிய ராகவ னணுர்முன் வீடியவாழ்வுற வருள் செய்காதை
யை யாதிய, வொளிரி மான்மிய மோதின ருடன்வி னுயினர் நீள்பகை
யொருவ னுவிட மாதிய, பனசெ லாமெனி தோடிய படியில் சிரெழி
லார்மனே பலம கார்முத லாமிக, வளனு லாவுபல் போகமு மருவியேசிவ
ஞானமெய் வழிசெல் வாரொரு வீடரோ. (௧௬௯)

இராமன் மந்திரோபதேசம்பெற்ற சருக்க முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்-௩௨௬.

---

# அமுத நிவேதனச் சருக்கம்.

:o:

தசரதன் மைந்த னான மீளி தளர்வொழி புய்ந்து நீடு வாழ்வி
னிசைதரு மந்தி ரோப தேச மினிதுற நன்றி யோதி னாமுன்
னசையமு தங்கொ ளாமு ராரி நகமகள் கொண்க னார்மு னியு
நிசசரி தஞ்சொல் வாமெ னாவு ணிகழ்தர நந்தி நாதனே

வேறு.

சூதவன நாத னமர் தூச்சரிதத் திடைமேன்மேற்
காதல்வளர் சனற்குமா கரிசறுமா தவகேண்முன்
மாதவனெம் பிரானைவித்த மலியருடன் றலைமிசைவைத்
தாதரமிக் குறுநியினி யமுதுறுதி யெனத்துவர்ந்தே. (௨)

சுராசுரர் குழாந்தொடரத் தும்பிமுக நம்பியிரு
வரகமல மலரடிகண் மறவாம லுறவாழ்த்திப்
பரவுபொருள் பலகொடுசெ பரியைவிதி வழியாற்றிக்
கரமலருஞ் சலிமுடிமேற் கவினுறநின் றனன்றுதிப்பான். (ரு)

பிரணவமாந் தனிக்கூடம் பெயராத குஞ்சரமே
பிரணவமா மானானம் பிரியாத புகர்முகமே
பிரணவமா மலர்வாவிப் பெரிதாடும் போதகமே
பிரணவமாஞ் சேவகத்திற் பிறங்குமணி வாரணமே. (சு)

ஓங்கார வோங்கலகந் துதித்துலவுங் கிரிசரமே
யோங்காரத் திருக்குடிலை யுள்ளவிரு நதிசரமே
யோங்காரத் தேங்கான மொருவாத வனசரமே
யோங்காரப் பெருவீதி யுலாவருதந் தாவளமே. (எ)

தாரகமே முகமாகத் தயங்குபெரு மதங்கயமே
தாரகமே திருவுருவாத் தனிவிளக்கு மாதிரமே
தாரகமாம் பிடிகளிற்றிற் றனியெழுந்த கயமுனியே
தாரகத்தி னுள்ளுயிராய்த் தணவரிய குணகரியே. (அ)

திருவருளா மதவெள்ளந் திரைகொழிக்குங் கரவரையே
கிரியையறி விச்சையெனுங் கிளர்மதமூன் றொழுக்கிபமே
யிரவுபக லற்றொளிரு மிடத்தமருங் கடக்களிறே
வரவொடுபோக் கிலாதெங்கு மருவிநிறை மதாவளமே. (கூ)

பரவுமலப் பெருஞ்சேற்றைப் படர்ந்துழக்குங் கறையடியே
விரவுபவப் பெருங்காட்டை விரைந்தழிக்கும் புழைக்கரமே
வரவயிரா வணமுகைத்து வருங்களப நால்வாயே
யரவுதர பந்தனமா யார்த்தபெருஞ் சிர்த்தகமே. (க0)

ஐங்கரநால் வாய்முக்க ணருளிருதா ளொருமுனியே
சங்கரனீள் சடைக்காட்டிற் றனிவிளையாட் டியல்கயமே
கங்கையுத கம்புழைக்கைக் கவர்ந்திறைக்குங் கயந்தலையே
செங்கவேற் கோளரியோ டுடனுதித்த சிந்துரமே. (கக)

மறைமுடிப்பா துகையினடி மலர்சாத்துந் துடியடியே
மறையணிநூ புரமாக வணையணிமா வேழமே
மறைபுகன்மூ லப்பொருளா வழுத்தியன்மா தங்கமே
மறையுமனு குதற்கருஞ்சீர் வளர்களப சேகரமே. (கஉ)

கணராச குணராச கவிராச புவிராச
பணராச சடிலமணி பதிராச நிதிராச
வணராச மலரிதழி வனராச வனவலவை
மணராச துணர்வாச மலரடிக ளிணை போற்றி. (கக)

அகிலம்மலா முபக்கிரமத் தன்பினினை யேயிறைஞ்சத்
தகவுறுமச் செயன்முழுதுந் தனிமுடிப்பாய் வனிமுடிப்பாய்
திகழுறயாந் தொடங்குறுமிச் செயன்முடிப்பாய் பயமொழித்தெம்
பசவதிரு வருள்பொழிபூம் பதத்துணையே துணையென்று. (கஉ)

இன்னனபஃறுதிபுகன்றவ் விறையருளா னிறையுவகை
துன்னியசென் றம்முகுந்தன் சூதவன நாதனடி
சென்னியுற மறவாத சிந்தையனாய்ப் பாலாழி
முன்னிலையிற் சுராசுரரான் மோதமுறக் கடைவித்தான். (கங)

ஆங்கெழுந்த தினியசுவை யாரமுத மதுகடத்தின்
பாங்குறப்பூ ரிதம்புரிந்து பாங்குறவைத் தனன் பின்னர்
தேங்குசுரா சுரரனைய திருமார்ப னடிதாழ்ந்திவ்
வோங்கமுத முறைபகிர்ந்திங் குதவுகென வேண்டினரால். (க௪)

அதுவினவு மரியவரை யழைத்தசுர சுரகுலங்கள்
விதுமுடியாம் பிரவணத்தெம் விமலனரு ளாலிந்த
முதுசுவையா ரமுதெமக்கு முற்றுறப்பெற் றனமயனுக்
கிதுமனிவே தனம்புரிந்தவ விரும்பிரசா தங்கொளலே. (கரு)

மாபாகும் பொறுத்திருமின் வல்லையமு தளிப்பலென
வுரையாடி யமுதகட மொருங்குடன்கைக் கொண்டேகி
விரையார்தண் சூதவனம் விரையாலுந் தனையசுவைச்
சுவையார்பொற் றசும்பொருபாற் றுரிசறவைத் தமுதேசன். (கசு)

கழன்மறவா மனத்தொடுமோர்க் கண்டதோ ரங்கோய்ந்து
கிழன்மறையாக் கண்டிகைவெண் ணீறணிந்தைந் தெழுத்தோதிப்
பழமறைபோற் றருமமுத பாமசயம் பிலிங்கேசற்
றொழுமுறையா னயந்தேத்தித் தூசறுமா மலராதி. (கஎ)

அருச்சனைக்காம் பொருள்பலவு மமைத்தடிபூ சித்தனைய
மருச்சுவைத்தண் ணமுதகட மலிதரநேர் வைத்தண்ணால்
கருச்சுழியி லுறாதருட் செங் கைநீட்டி யெமையெடுக்குந்
திருச்சுடரே யமுதேசா சிறியேனின் றிருவருளால். (கஅ)

ஆழிகடைந் தெடுத்ததிரு வமுதினுஞ் சமுதாக்கொள்
வாழிதிருக் குமுதமலர் மதுவாக்கொண் டருளியெம
பாழிவினை யொழித்தின்னருள் பாலியெனப் பலமுறைதாழ்ந்
தேழிசைமா மறையணந்த மெடுத்தேத்தி யெதிரிறைஞ்சி. (௧௯)

பூசனைமுற் றுறமுடித்துப் புனிதநிவே தனவமுத
நேசனையாச் சண்டேசர்க் குள்பாக நிவேதனஞ்செய்
தீசனைநல் வாசனையா ரிதழிமதி நதிவேணித்
தேசனைமீட் டிம்பரவிச் சென்றனனவ் வமுதினொடும். (௨௦)

அன்னதிரு வமுதநுகர்ந் ததனாலோ வதுமேனித்
துன்னியோ முற்கலுழன் றனையமுதத் துளியாலோ
மன்னமிர்தந் தருதானவ் வடிவினுணர்த் திடவதுவாய்
முன்னரே முளைத்தெழுந்த முறையேயோ நாமறியோம். (௨௧)

அத்தகைய மாவனத்தவ் வருளிலிங்க மமுதமய
சுத்தவடி வாகவே துலங்கியொளிர் தருமென்றும்
வித்தகசே னவ்வமுத மிளிர்கடங்கொண் டேகியமால்
கொத்தசுர ருண்ணிலமரர் குலக்கிடரா மெனக்குறித்தே. (௨௨)

அவ்வசுரர் தமைவஞ்சித் தமரருக்கே யமுதமளித்
தொவ்வரும்பாற் கடலடைந்தாங் குரகபதிக் கொளிர்சூத
திவ்வியகான் விடந்துரத்தச் சென்றதுமந் திரநாதன்
றெவ்விடமுண் டுயிரளித்த திருவருளு மதன்மேலும். (௨௩)

எண்ணிலவா றமுதுகொளற் கிடர்புகுதா வுபாயமினி
துண்ணிலவ வுரைத்தருளி யுதுகிடைப்பித் தருளியதுந்
தண்ணியவின் னமுதநிவே தனங்கொண்டு பிரசாத
மண்ணலருட் டாப்பெற்றுங் கமாருண வளித்ததுவும். (௨௪)

ஆதியவச் சூதவனத் தமுதேச னருணனைத்து
மோதியமர்ந் தனன்கேட்ட வுரகேசனுதியுளத்
தாதரமிக் குறைத்திடநின் றமுதேச தரிசனமெப்
போதுகிடைத் திடுமினுமென் றப்பரமன் பதப்போதே. (௨௫)

மனத்திருத்தி வேண்டியவா மருதன்பர்க் கருடொழிலோய்
கனத்திருத்தி வைத்தமணி கண்டவெனக் கஞ்சலைநீ
யெனத்திருத்தி யுறவருளி யெளியேனைக் குளிர்சூத
வனத்திருத்தி நின்காட்சி வழங்கியநான் பெறுவேனே. (௨௬)

என்றுரைத்தங் கன்புநனி யெழுந்துசெல வினிதிருந்தா
னென்றுரைத்த நந்திகழ லிறைஞ்சியவம் முனிக்கதன்மே

னன்றுரைத்த வாறுமக்கு நாமுரைத்தல் கேண்மினென
நன் றுரைத்த வச்சூத நற்றவர்கோ னயந்துரைக்கும். (௨௭)

வேறு.

முகுந்த னுதவுநி வேதனு முதங்கொள் சரிதமி தோதினோ
ருகந்து வினவிய சீரினோ ருளங்கொள் செயல்கள்கை கூடுவார்
மிகுந்து வளரிக வாழ்வெலாம் விழைந்த படிநுகர் வார்பினீள்
சுகந்த மலரடி நீழல்வாழ் துலங்கு சிவகதி சேர்வரே. (௨௮)

அமுதநிவேதனச் சருக்க முற்றிற்று.
ஆகத் திருவிருத்தம்—௩௱௮௪.

---

௨

# இந்திரன் றிருவிழாச் சருக்கம்.

---

சந்திர சேகர னாமு தங்கொள மாலருள் சீரிது
மந்திர நாதனு லாவரு மங்கல நீடுவி ழாமுறை
யிந்திர னேதக வேபுரி யின்பினி யோர்துது நாவென
நந்திரள் பாதக மோசக நந்திபி ரானவில் வானரோ. (௧)

வேறு.

மைந்தகே ளணந்த னுங்கு வந்தமு தேசற் கந்நாண்
மைந்தம ரிராச சூடா மணியெனும் வளவற் கூய
மைந்தபல் வளந்து வன்ற மாபினி லுவகை மல்கி
*மைந்தறப் புரிம கோற்ச வத்திரு மாண்பு முற்றும். (௨)

வானநா டளிக்குஞ் சீர்த்தி மகபதி யுணர்ந்து சூத
கானநா டளிக்கு ணத்திற் கனிந்தமு தேசன் காள
பானனு டளிக்குட் போந்து பரவியத் திருவி ழாச்சீர்
மேனனு டளிக்கு லாவ விழுத்தக விதியாற் செய்தான். (௩)

அனந்தன்முன் னியற்று வித்தாங் கனந்தரம் வலாரியாற்றும்
வனந்தரு மனைய வாய்மை மகோற்சவத் திறஞ்சொல் வாமென்
றினந்தரு முனிவர் வானோ ரேனையர் தமையொ துக்குங்
கனந்தரு வேத்தி ரக்கைக் கண்ணுதல் கழறு கிற்கும். (௪)

---

* மைந்து—மயக்கம்.

வினவுதி சனற்கு மார வித்தக முனிவ ரேறே
யவாகனும் பனக வேந்த னுற்றமத் திருவிழாச்சீர்
தனகமோர்ந் தெழுசு நாசி தண்ணரு ளமுத நாதன்
கனகவம் பொரு கப்பூங் கழற்பதி கருத்த னுகி. (ரு)

தழைத்தெழு மன்பு முன்போ தரச்சதா கதியைத் தன்முன்
னழைத்தனி லேச கட்டி யாம்பிர கானத் தெம்முட்
குழைத்தரு ளுருவாய் மன்னுங் குலவமு தேசற் கிந்நாண்
மழைத்தரு சைத்தி ரோர்ச வம்புரி வாஞ்சை யுற்றும். (சு)

ஆதலி னமுத சூத வணிவனம் விரையச் சென்று
காதலி னுங்கு முன்னர்க் கவினிறை செயல்களெல்லா
மோதலி னதிக மென்ன வுஞற்றுகென் றனன்கேட் டாங்குப்
போதலி னார்வ மிக்குப் பொருக்கென வெழுந்தான் மன்னே. (எ)

ஆசுக மளிப்ப திந்த வருட்சிவ பணியே யன்றோ
வாசுக *மளித்து மாற்று மமுதலிங் கேச னம்பா
லாசுக வளிப்பா னுக வருட்டொடர் பிணித்தான் போன்மென்
ருசுக வேந்தன் மீது ரார்வமுந் துறச்செல் கின்றன. (அ)

செல்வுழி மயற்கூ யீது செப்பும்வான் றபதி கேட்டி
மல்வரு சைத்தி ரோற்ச வந்தனிச் சூத கானத
தெல்வள ரமுத நாதற் கியற்றிய விழைந்து மாங்கட்
பல்வகை யணிகண் முன்போய்ப் பயிற்றுதி வல்லை யென்னு. (கூ)

இந்திர னுனை யாரீ தென்பது மிசைத்தான் கேட்ட
தந்திர வழிசார் பெல்லாந ணவறத் தெளிவான் றச்சன்
மந்திர நாதன் சூத வனத்துட னனுச ரோடும்
வந்திர வகற்றுந் தூய மார்க்கண்ட தேயந் தோய்ந்து. (க0)

தளிபுகுந் தமுத நாதன் சந்நிதி தாழ்ந்தி றைஞ்சி
யளிமிகுந் துந்தத் தான்முன் னுற்றுமக் கோயிலெல்லாங்
களிமிகுந் தெழில்வி ளைக்குங் கான்முளை தன்னைக் கண்டாங்
கொளிபுகுந் திழுக்கக் கண்ணுற் றுரைப்பரு முவகை கூர்ந்தான். (கக)

இயலெழி லுலக மெல்லா மிலங்கிணு மிளஞ்சேய்க் கின்றோர்
செயலெழில் புணர்ப்பார் காதற் றிறத்தினச் செய்தி போல
வயலெழில் வேண்டா தென்று மவிருமத் திருக்கோ யிற்கு
வியலெழில் வகைக ளெல்லாம் விழுத்தக விழைந்து செய்வான். (கஉ)

---

* உகம்--உலகம்.

கவின்றுதற் கோபு ரம்முன் னந்திமண் டபத்து நீசி
யவிர்திசை யிடைவ சந்த மண்டபத் தகத்தி னடக்க
னுவமனெவ் வுலகத் துள்ளு முள்ளதன் றிதற்கென் றோதத்
திவ்யமா மணிப்பொன் வேதி சிற்பநூ றிகழக் கண்டான். (௧௩)

நிலவொளி வயிரத் தம்ப நிரையதி னிறுவி மேனின்
றிலகொளித் துகிர்க்கு டஞ்சா ரிந்திர நீலப் போதி
குலவொளித் தாள விட்டங் கோதில்செம் மணிவி டங்கங்
கலவொளி நிலமேன் மூன்று கவினவோர் விமானங் கண்டான். (௧௪)

தூமணித் தூபி யுச்சித் தொழு*மணி நிரைத்தா னந்தத்
தேமணி விமானக் கேற்குந் திறமணி யுறுப்பெ லாமுஞ்
சேர்மணி நிறையின் யாத்துக் குலமணி கிரிசையோடு
மாமணி கண்டன் மேவும் வனமணி பீடங் கண்டான். (௧௫)

அத்தகு வேதி கைக்காங் காயபொன் மணிச்சோ பானம்
வைத்தது சூழத் தூநீர் வந்துபோம் வழிய மைத்துச்
சுத்தநீ ராவகி யாத்துத் தூநறு மலப்ப ரப்பிச்
சித்திர நிரைக ளெல்லாந் திறத்திற னாகக் கண்டான். (௧௬)

பிறங்குகண் ணடியோ டென்னப் பித்திகை யாதி யேனைத்
திறங்குல வணிக ளெல்லாந் திருத்தக வமைத்துள் ளாலம்
மறங்குசெல் வியல சந்த மண்டபப் புறம்பு சூழக்
கறங்குசீ ரிளம ரக்காக் கமழ்ந்துல களப்பக் கண்டான். (௧௭)

திருத்தகு மபிமு கச்சீர்த் தெருத்துவா யிலினோ ரெம்மா
னுருத்தக வெழுந்து பத்தி யுலாநடைக் காவ ணந்தான்
குருத்தகு விதான மாதி குலமணித் தொங்க லாதி
மருத்தகு மாலை யாதி மலிந்தொளி வயங்கக் கண்டான். (௧௮)

மரகதத் திலைக டண்டு மணிபொனாற் குலைய மைத்து
விரவுபூத் துகிரிற் றூக்கும் விழுமிய வாழை வெண்பொ
னரைதுவர்ப் பழுக்காய் முத்தி னலர்முகை யாதிப் பூக
நிரைகள்பல் வகைய கன்ன னிரைநிரை யாகக் கண்டான். (௧௯)

நிலனெலாம் பளிங்கிற் சோதி நிலவெழச் சமன்செய் தன்ன
தலனெலா மதிதழூஉம்பசீ ரூகா கணங்க ளென்ன
நலனெலா நிறைந்த தூய நகுமணி நிரைக ளாய
குலனெலாம் விளக்க மாகிக் கொழுஞ்சுடர் பரப்பக் கண்டான். (௨0)

---

* மணி—இடைக்குறை.

விரையெலாம் விராய சாந்த மெழுக்கெலா முகனுஞ் செய்தான்
விரையெலாம் விராய பன்னீர் மேலெலா மணப்பப் பெய்தான்
விரையெலாம் விராய தூபம் விசும்பெலாங் கமழச் செய்தான்
விரையெலாம் விராய சுண்ண வீதமெலாம் விரியப் பெய்தான். (௨௧)

இடமிடந் தோறுஞ் செம்பொ னெழின்மணி குயின்ற தூய
வடிபுன னிறைத்துச் சென்னி மாவிலை மணிப்பொற் றேங்காய்
முடிதரு தருப்பை வாச மொய்ம்மலர் மாலை சேர்த்தி
நெடிதொளிர் பூரகும்ப நிரைநிரை யாக வைத்தான், (௨௨)

இன்னன மேலு மேலு மெண்ணில வெண்ணி யெண்ணி
மன்னிய புரீஇவ சந்த மண்டப முதற்கோ டித்தாங்
கென்னையாண் மந்திரேச னிமாசலை யாவு மீன்ற
வன்னைவாழ் நிகேத னங்கட் களவிலா வணிகள் செய்தான். (௨௩)

தினமரு தமர்ந்து போற்றுந் திருத்தொண்டி னிலையர் தாமு
மினமரு தியாமுன் றொண்டாற் றிருந்தளி யிதுவன் றென்று
மனமரு தையுற் றெந்தை வடிவினுற் றெளிவ ரென்று
லனமரு விழைவி னுற்று மணிநிலை யளக்கற் பாற்றோ. (௨௪)

உலகெலாந் தழைக்க வெம்மா னுலாவரத் தவஞ்செய் வீதி
நிலனெலாந் தருப்ப ணத்தி னிழலெழத் தூய்மை செய்தந்
தலனெலாம் வெண்ம ணற்றாந் தன்மையிற் றராஅ நுண்மைக்
குலனெலாம் பரப்பி வேணிக் குடிஞையென் றுவப்பச்செய்தான். (௨௫)

அம்மரு இருபாற் கன்ன லரம்பைபூ கதவொ ழுக்க
மம்மரு கனைய கங்கை யாற்றிரு கரைநி லாவுஞ்
செம்மலர்க் கதலி யாதிச் செறிவென நிறுவி மீது
செம்மணித் தொடைய லாதி திகழ்மக ரிகைகள் சேர்த்தான். (௨௬)

இவ்வகை யேனை யாவு மெழில்வகை நிரம்ப முற்றி
யவ்வகை மயன்முற் செனருங் கனிலனுக் குணர்த்த வன்றே
னுய்வகை முன்ன ரேய வும்பர்கோற் குணர்த்த வொல்லைச்
செய்வகை யமரர் சூழத் தேவர்கோ னங்குப் போந்தான். (௨௭)

ஆரரு ளீர்ப்ப முன்னின் றன்புபின் றள்ள வுள்ளம்
பேரரு ளுலகெ லாஞ்செய் பெரியநா யகிபான் மேய
சீரரு ளமேத நாதன் சேவடி தாழ்ந்து பல்கா
லோரருள் வெள்ள மூழ்கி நின்றுபஃ றுதிக ணவின்றான். (௨௮)

கானகந் தாம கேச ககனகந் *தாமா ரூச
†கானகந் தார்க்கு மோச கவிகைகந் தாமா னேச
||கான 0கந் தாசு தேச கலந்தகந் தாச பேச
※கானகந் தாச சூத கானசந் தாகி வாச. (௨௯)

வந்தனை கரண மூன்று மாறுறா வழிசெய் வார்க்கு
வந்தனை யினுமி ரக்க மலியமுன் பொலிய வாங்கு
வந்தனைத் தின்ப முற்றும் வழங்கமு தேச வாணி
வந்தனைத் துலகும் போற்று மாவனத் தாசே போற்றி. (௩௦)

0நாகவ ரசன வாத நகுமணிச் சுடிகை யுச்சி
நாகவ ரசன பூசை நயந்தவ தருமே காச
நாகவ ரசன காதி நற்றவ குரவ வாசை
நாகவ ரசனம் போற்று நறியமா வனத்தாய் போற்றி. (௩௧)

தருமமால் விடையாய் போற்றி சைலமேயார் புடையாய் போற்றி
யிருண்மனத் தடையாய் போற்றி யிதழியந் தொடையாய் போற்றி
சருமமுற் றிடையாய் போற்றி சதுர்மறை நடையாய் போற்றி
வருமயிற் படையாய் போற்றி மாவன முடையாய் போற்றி. (௩௨)

அளிவளர் மனத்தாய் போற்றி யடையலர்ச் சினத்தாய் போற்றி
களிவன ரினத்தாய் போற்றி காளபோ சனத்தாய் போற்றி
துளிவளர் கனத்தாய் போற்றி தூயசோ பனத்தாய் போற்றி
நளிவளர் தனத்தாய் போற்றி நவிலுமா வனத்தாய் போற்றி. (௩௩)

வேறு.

என்றிவ் வாதி துதிக ளியம்பிநேர்
நின்று செங்கர நீண்முடி மேலெழீஇச்
சென்று கூம்புறச் சிந்தை மலர்ந்துதா
னொன்று மன்பி னுவந்திரு வேண்டுமால். (௩௪)

ஐய வாரமு தேச வசலைபான்
மெய்ய மந்திர நாத விதுநதிச்
செய்ய வேணிய சின்னஞ் சிறியனே
னுய்ய வேண்டிநின் சந்நிதி யுற்றனன். (௩௫)

---

* தாம்-சிரசு. † கானகம்-கரியபாவம். || கானம்-மேகம்.
0 கம்-சிரசு. ※ சானம்-சூலம்.
0 நா-கவர் எனப்பிரிக்க.

உற்று ளேனின் சைத்திர வுற்சவ
முற்று நான்முறை தொட்டு முடித்திட
மற்றி வாழ்விருப் பெய்தின னேழையேன்
*பெற்று கந்தன் பேரருள் வேண்டுமால். (௩௬)

நலம தொன்றுறற் கெண்ணி னடுவிடார்
பலபு குந்திடும் பண்பினர்க் கும்மெனி
னலம தொன்றுமி லாயினேற் கன்னவை
பலமுற் றெய்தல் பகர்தலும் வேண்டுமோ. (௩௭)

செய்த லோத லியாதுந் தெரிதராப்
பைதல் வாழ்க்கையுட் பட்டுழ லேழைபா
லுய்த லில்லப ராதமொ ராயிர
மைந்த லெய்துற நண்ணினு மண்ணலே. (௩௮)

திருவு ளம்பொறுத் தாள்கெனத் தேவர்கோன்
மருவு ளம்புயத் தாளின் வணங்கிமேல்
வெருவு ளாதெறு நந்திமுன் வேண்டுபு
தருவு ளமபுரி யானை தலைக்கொளா. (௩௯)

தன்ன தேவர் குழாத்தினைத் தாளழைஇச்
தன்ன மும்மனம் வேறொன்றிற் சார்ந்திடா
தின்ன வுற்சவத் தின்புற நீர்விழைந்
தின்ன மின்ன வியற்றுகென் றேவினன். (௪௦)

ஆசை யாசையிற் போற்று மமரரை
நேச மிக்க நிமல நமரங்கா
ளேசி லாத விழாவிங் கியற்றுதல்
பேசி னுந்துணைப் பேறுகொண் டேயென. (௪௧)

முகம னேறி யுவருண் முதிர்ந்தித்
தகவற் கோதுவன் றக்கிணை யாதிய
தொகுபொன் னொடொறுங் காலந் தொறுந்தொறு
மிகவ ளிக்கும் வினைநினக் கென்றனன். (௪௨)

ஏழு நாக்கொ ளெரியினை நோக்குபு
வாழி வேண்டிடந் தோறும் வகைப்பல
கேழின் மிக்க சுவையிற் கெழுமுணா
வூழி னுக்குந் தொழிலுனக் கென்றனன். (௪௩)

* பெற்று-கடைக்குறை.

அனில வேட்டி யனகன் சினகரம்
புனித வீதிக வாதிய பூவெலா
மினிய கண்ணடி யென்ன விளக்குமவ்
வினைய ரிக்குதி யென்று விளம்பினான். (௪௪)

வருண வாதனச் சோதனி மாண்பணி
புரியி டந்தொறும் பூம்புன லாம்பணி
மருவ ழுக்கின் மெழுக்கு மலர்பணி
யுரிய வன்றனக் கென்றன னும்பர்கோன். (௪௫)

நிருதி யீண்டு நிருத ரசுரர்கள்
பெரிய பூதர்முற் பேத வகையினோர்
புரியுந் தீவினை யாண்டும் புகாதுநின்
றரிதி னோம்பணிக் காமென் றறைந்தனன். (௪௬)

கடுவ கேன்வரு காற்புறத் தோர்களு
மிடைநெ ருக்கை நடுவின் விலக்கிநின்
றிடரு றாநெறி செல்ல வியக்குகோ
னுடைய கைத்தொழி னிற்கென் றுரைத்தனன். (௪௭)

சோதி னுற்சவங் கொண்டருண் மண்டபத்
தாதி வீதி யெழுச்சியி லண்மிநின்
றோது கோற்றொழி லாற்று முரிமைநிற்
கேத கும்பணி யீசவொன் கென்றனன். (௪௮)

ஏற்ற வேற்ற பணிக ளியம்புபு
சாற்று சோதிடர் யார்க்குந் தனிக்குறு
போற்று தன்குரு வாம்பொன் னவன்மலர்க்
காற்று ணைக்க ணமந்து கழறுவான். (௪௯)

ஐய மந்திர நாத னருள்விழாச்
செய்ய லாந்தின மோரை சிறப்புற
வுய்ய வோர்ந்துரைத் தாள்கென வோர்ந்தவம்
மெய்ய னுளையென் றோதினன் மேதக. (௫௦)

நாளை யென்று தொடங்க நலந்தரு
நாளை யோதிய நற்றவற் போற்றியந்
நாளை யேதன் னவையொழித் தின்பரு
*னுளை யென்று நயந்தன னகர்கோன். (௫௧)

* ஐ-சாரியை.

## வேறு.

தந்திர நாதன் வேத தத்துவப் பொருளாய் நின்ற
மந்திர நாதன் செய்ய மகோற்சவத் திருநா ளிந்நாள்
வந்திர வகற்று காட்சி மனம்விழி குளிரப்பக் காண்கென்
றிந்திரன் முடங்க றீட்டி யெங்கணு மினிதுய்த் தானல். (௫உ)

உய்த்திடு முடங்கல் கண்டா ரொய்யென மண்ணோர் விண்ணோர்
பத்தியி னிறைஞ்சி யேற்றுப் பனிமலர் தூய்ப்பூ சித்தா
ரித்திசை யன்றோ சேர்த்த தெத்திசை களினு மென்றே
யத்திகழ் சூத கான மடுத்துநாற் றிசையுஞ் சூழ்ந்தார். (௫௩)

புல்லொடுஞ் சமிதை யோடு நூலொடும் போது வாரு
மில்லொடும் வேள்வித் தீக்கை யினையொடு மேகு வாருஞ்
செல்லொடு தோய்கா னின்று தவத்தொடுஞ் செல்லுவாருங்
கல்லொடு தோய்ந்த வாசக் கதிரொடுங் கமனிப் பாரும். (௫௪)

சமையம்வாய்ப் புறப்பெற் றெம்மான் றரும்பணி செய்கிற் பாரு
மமைவிசே டாதி வாய்ப்புற் றகம்புறத் தருச்சிப் பாருங்
கமைநடச் சிலம்பி னோசை கண்டுகேட் டுருக்கொள் வாருந்
தமையுணர்ந் தமைந்து சார்ந்து தாமிரண் டறவாழ் வாரும். (௫௫)

ஏற்புடை வேட்டன் முன்றூ விருதொழி லியற்று வாரு
நாற்படை சூழ வாழு நானிலப் புயத்தி னோரு
மேற்படை துலாக்கோ லாக மினிநிதி விளைவி னோருஞ்
சாற்படைத் தொழின்மீக் கூர்ந்து சகமுழு துய்விப் பாரும். (௫௬)

களிறொடு பிடிக ளென்னக் களியொடு நடவு வாரு
மிளிர்முடி லோடு நீங்கா மின்னென விரவு வாருங்
கிளியொடு மின்சொ லாடிக ளிளர்வொடு மேகு வாரு
மளியொடு புயத்த லங்க லலங்கலே ரண்முவாரும். (௫௭)

ஆமிவ ராதி யானோ ரனைவரு மாங்காங் கன்பான்
மாமகிழ் பூப்ப வன்னோர் மரபுறு நிலையுட் கொள்கை
தாமுணர்ந் தவர வர்க்காந் தரத்தினெட் டுணையுங் குன்று
தேமுற வசித்தற் கொத்த வசதியி னிருப்பச் செய்தான். (௫௮)

இன்னன வேலை யாவை யெழில்விழா விற்கு வேண்டு
மன்னன வங்க ளாக வமைத்தன னாக வானோர்
மன்னனச் சிறப்பு நோக்கி வான்வரு பானு தானுந்
தன்னன விழவு காண்பான் றேயமே னாலே புக்கான். (௫௯)

புள்ளின நாளை யென்னப் புராரிதன் றிருவி ழாவைத்
||தெள்ளின நமரங் காணுந் தெரிசனு யத்த மாக
*வள்ளினம் வருதல் வேண்டும வம்மினங் குடம்பைக் கென்று
நள்ளின வழைத்தல் போன்று நான்றன செல்வ வானில். (சு0)

உலகெலாம் பொதுவிற் கொள்வா னுள்ளமு நிறைக்கா நின்ற
நிலவுகண் டோர்புள் ளோகை நிமிரமற் றோபுள் ளாங்கோ
நலிவுற லகில லோக நாயகன் கருணை யொன்றே
பொலிவுறு மின்ப துன்பம் வினைவழிப் புகட்டல் காட்டும். (சுக)

ஆயதோர் காலை மாலை யவிர்மதி யமரர் கோமான்
மேயதோர் பணியு நம்பால் விதித்தில னாத லாலத்
தூயதோர் விழாவி னுன்செய் தூப்பணி நிகரின் றென்மார்
சேயதோர் பணிசெய் கென்னுத் தெளிகடற் குளித்தெ ழுந்தான்.

எழுந்திடு மதியோன் செய்த தென்னென வுரைத்து மம்மா
தழுந்தம பணிசெய் வானோர் தாம்வழி வந்த வேனோ
ரழுந்தம ரேசனுதி யனைவர்க்கு மமுத மாரப்
பொழிந்துயர் வொழித்து மேலும் புரிபணிக் காற்றல் செய்தான். (சுங)

புனிதன்முன் னால வாயிற் புரிந்தருள் புண்ணி யாக
வினையுறு சாந்தி போற்றன் விழுத்தகு கிரண சீதக்
கனியமு தனைய சூத கானன முற்றும் பெய்தாங்
கினியமா புண்ணி யாக மியற்றினன் மதியோ னென்பார். (சுச)

சார்ந்ததன் வண்ண மாதல் சாற்றுயிர்க் கியல்ப தென்ப
சார்ந்ததன் வண்ண மாமுன் றழலெறி கொடுங்கா றிங்கட்
சார்ந்ததன் வண்ணஞ் செய்த சாற்றரு வுயிர்போற் றூனுஞ்
சார்ந்ததன் வண்ணத் தாலோ தகுமிதென் றுவப்பிற் சால்வார். (சுரு)

வாட்டமிக் களிக்குங் காலம் பிரிவென்ப மகிழ்கூ ரின்ப
வூட்டமிக் களிக்குங் காலங் கலப்பென்ப வுண்மை தெய்வ
நாட்டமிக் களிக்கு மெல்லி நலியநற் பணிகள் செய்தோர்
கூட்டமிக் களிக்கு மல்லீ தெனக்கலாய்க் குலவி னூரால். (சுசு)

நாளொன்றை யொருபால் வெப்ப நண்ணவோர் பாதி தட்ப
மாளென்று வைத்த துய்வா னுவிகட் கென்ப கண்டாம்
வாளொன்று வெயிலி னெய்த்த வருத்தமுற் றவிர்வெண் டிங்கண்
மீளென்று விலக்கிற் றென்னு விழுத்தக வழுத்து வாரால். (சுஎ)

---

|| தெள்ளின-முற்றெச்சம். * வள்ளினம்-இதுவும[illegible].

இந்துகண் டுற்ற செய்கை யின்னன வாக விப்பான்
முந்துகண் டுறக்கு டாதூ மூரிநீர் மூழ்கும் பானு
வந்துகண் டிமைகோன் செல்வ மலிவிழா வின்பு துய்ப்பா
னந்துகண் டுறுகு ணாது நரலைமீ தெழுந்தான் மன்னோ. (௬௮)

வருபிர தீசி வேலை தோயுங்கான் மந்தி ரேசன்
றரிசன முறநி னைத்த தன்மையா னன்மையாலோ
வரியமேல் கடற்கு ளித்தோ னணியகீழ் கடலெ ழுந்து
துரிசறுத் தருளெ மப்பர் தோற்றமுந் துணையப் பெற்றான். (௬௯)

ஞாயிறுங் குத்த ராய ணத்தனா யுதீசி செல்வோ
னாயினு மருளாற் கீழை யார்கலி யெழீஇ விழாவி
னேயமிக் கீர்த்த லாலந் நிலையொழிந் தமுத நாதன்
கோயிலூர் நேர தாகக் குறித்துவா னிவந்து வந்தான். (௭௦)

வருடங்க டோறு மெந்தை மந்திர நாதன் செய்ய
வருடங்கு சைத்தி ரோற்சவந்தரி சித்தற் காங்கு
மருவுந்தன் மையினை யோரார் மாதமூன் றகன்ற தாலே
தெருடந்த விரவி நேரே செல்வதென் றுரைப்பர் மாதோ. (௭௧)

நாயக னுளத்திற் கேற்ப நடத்தலே குலத்திற் போந்த
தூயகற் பினர்மாண் பென்னுந் துணிவினைக் காட்டி யாங்குத்
தோயமுற் றெழுந்து கொண்கன் சுடர்முக மலர்ச்சி நோக்கி
மேயமுண் டகங்க டங்கண் மிளிர்முக மலர்ந்த மாதோ. (௭௨)

தாவில்சீர்க் குலமா தர்க்குத் தந்துணை நோவி னோதல்
சாவினிற் சாத லேயாந் தலையளி யென்ப தேற்று
மேவிய விரவி நேரில் விதுமுக வொளிம ழுங்கக்
காவியங் குமுதப் போதங் கண்முகங் கூம்பிற் றம்மா. (௭௩)

செயலொழி வுறக்க மீண்டு செயல்விழிப் பன்றி வேறு
மயறரு முறகக மில்லா வானவ ரோடு மேனை
முயல்வினை மாந்தர் யாரு முந்துறப் புரியுந தத்த
மியல்பணி யுள்ள மூக்க வெழுந்தன ரியற்று கிற்யார். (௭௪)

தேவர்கோன் குரவன் சொன்ன சித்திரைத் திங்க ளிந்து
மீவனர் பக்கத் தைந்தின் மிருகசீ ரிடநா டன்னி
லோவறு செயமு கூர்த்த மொன்றரு ளோத யந்தான்
மேவுமப் பொழுதே பண்பு மீக்கிளர்ந் தெழவெ ழுந்தான். (௭௫)

நித்திய மாதி மூன்று நிமலனு கமத்தி னாற்ற
லொத்திய றமக்கே நல்க வுறுமதி காரம் வாய்ந்தோர்

சத்திய சிவதீக் காதி சமக்கார முற்றும் பெற்றோர்
முத்திசெய் பரம னைந்து முகோற்பனர் வழிவந் துற்றோர். (௭௬)

வேறு.

ஆயசிவத் துவிசர்குழீஇ யமர்ந்ததிருக் கூட்ட முன்போய்
நேயமிகப் பணிந்தெழுந்து நோக்கின்றவ் வானவர்கோ
னாயகனை யான்மார்த்தம் பரார்த்தமென நவிற்றிருபாற்
றாய சிவார்ச் சனைபுரிந்தே யுலகமெலாந் தொழச்சிறந்தீர். (௭௭)

எந்தையமு தேசனுக்கின் டியற்றுவிழாத் தொடக்கமுத
லந்தம்வரை புரிசெயலு மன்றியுநித் தியமுதலு
வந்தசெயன் முழுவதுநும் மாண்செயலே யெனவோர்ந்து
மிந்தவிழா வியற்றுகென யான்வேண்டன் மிகையன்றே.|| (௭௮)

அமரரெலாந் தொழுவானத் தரசேநின் மொழியென்னே
நிமலன்மகோற் சவமிதனை நீவேண்டி நடத்துதலா
லெமது செய லியற்றுதொழி லேவுபெருஞ் செயனினதாற்
கமைதருகர்த் திருத்துவநின் கண்ணதென வுவந்தோதி. (௭௯)

அனுமதிபெற் றகமதியா லதைராச வனுஞையெனும்
வினைவிலக்கி யோதியுணர் வேதியர்தம் மனுஞையும்பெற்
றெனையருளு மமுதேச னிமாசலைபூ சனைசிறப்ப
வினிதுபுரிந் தெதிர்வேண்ட லெனுந்தேவ னுஞைபெற்றார். (௮௦)

அக்கடவுண் மாமறையோ ரனையமகோற் சவமிடையோர்
விக்கினமு முறாதினிது வேண்டியவா முடித்தருள்வான்
மிக்கமறை முதற்பொருளாம் விநாயகனை விதிமுறையாற்
பொக்கமிலாப் போன்பாற் பூசித்தா ரருள்பெற்றார். (௮௧)

பின்னனைய விழாவினுக்காம் பெருநிதியந் தாய்தாக
வன்னதனர்க் கனைபுண்ணி யாகவா சனமாதி
முன்னருளுந் தினர்வாதது சாந்திவினை முறைபுரிந்தார்
தன்னிகரா மறைபரவுந் தனிவிலவ நருமூலம். (௮௨)

நனிலமுத நாதனிரு தனையரொடு மிடத்தமர்ந்த
வனிதையொடும் பிதாவிருகால் வாங்கியவோர் காலினொடும்
புனிதவயிற் றேவினொடும் புடைமிளிர்பல் வரிசையொடு
மினிதினெழுந் தருளிவீற் றிருந்தருளப் புரிந்ததற்பின். (௮௩)

|| என்றுமனென்பதுவாய் நிலையாற்கொள்க.

விதிமுறையிற் பூசனையவ விருக்கமு லத்தியற்றித்
துதிசெய்திருத் திகையதன்பாற் றொட்டெடுத்துப் பட்டடுத்த
கதிர்மணிசூழ் பொற்கலத்திற் கைக்கொண்டு பக்கமுறப்
புதியமதி வேணியொடும் பொற்கோயில் புக்காரால். (அச).

இன்னமுறை யேதிருச்சந் திரகணமாங் கியற்றியபின்
னன்னதிருந் திகைமுக்கூ றுசகியவை யொவ்வொர்வகைச்
சொன்னமுளைப் பாலிகையிற் றாயேற்றின் றுவசமொடு
மன்னுவிழாத் தீர்த்தமென்மூ வகைக்குரித்தா முளைதெளித்தார். (அரு).

இவ்வகைசெய் தங்குராப் பணமிரட்சா பந்தனமீற்
றெவ்வமறப் புரிந்துவிடை யெழுதுபடம் பூசித்துத்
தவ்வீறுவ சாதிவா சனம்பேரி தாடனமுற்
கைவருபல் விளைகளுமக் கரிசறுமேல் லியின்முடித்தார். (அசு)

எண்டிசைகா வலர்களுமாங் கிருந்தொண்டு புரிந்துறினும்
பண்டிசைநூல் வழாதுதிசா பந்தனமம் முறையயிற்றி
வண்டருமக கிராமதே வார்ச்சனமு மரபியற்றித்
தொண்டர்மகிழ் தரவிமயத் தோகையொடு மழுதேசன். (அஎ).

தனக்கினிய விசேடபூ சனையாற்றி மகிழ்ந்தேத்தி
மனக்கினிய வருடருசே மாக்கந்தர் தமைத்தொண்ட
ரினக்கினிய மண்டபத்தி னெழுந்தருள்வித் தெதிர்மரபின்
வனக்கினிய மால்விடைமுன் வரைந்தபடந் துசத்துயர்த்தார்.. (அஅ).

ஓதுமுறை மாதுவசா ரோகணமீ தூனற்றியுடன்
மேதகவெண் கொடிகளினும் விடையுயர்த்தாங் குடன்யாக
வேதிதிகழ் சாலைபுகூஉ மேவுபரி வாரமுடன்
மேதகுயா கேசகடம் விதிமுறைபூ சனையாற்றி. (அகூ)

கோதான விலக்கிங்வ குண்டமுற முறையங்கி
யாதான முதலான வாற்றியா குதிசெல்லா
மீதானம் புரிந்தீண்டிவ் விதத்தங்கி விளைநிகழ
மாதான மமர்ந்தருள்சோ மாக்கந்தர் திருமுனுறீஇ. (கூ0)

அளிபெருக நனிசிறப்பி னமர்தருபூ சனையாற்றிக்
களிபெருக வாங்கோளி கவினவிரண் டணிந்தவாற்றி
னொளிபெருக வெம்பெருமா னென்றினுமை யென்றிவர்ந்து
தளிபெருக வலம்போந்து தகவின்மகச் சாலைதனில். (கூக).

எழுந்தருளி வந்தனைய விருஞ்சாலை யபிமுகமாய்த்
தழுந்தகைய பச்சிமதோ தான்பூர்வ முகததருமை

பொழிந்தருளி னின்றருளப் புரிந்துமகம் பூர்த்தியுற
மொழிந்தமுறை பூரணா குதியினிது முடித்ததன்மேல். (கூ௨)

அன்னமகச் சாலைநடு வமர்ந்துயர்ந்த வேதிகையின்
மன்னமுத நாதனிடம் வளர்பெரிய நாயகிதஞ்
சொன்னகடத் திருமஞ்சை தொடாவிரு பாஙகரினு
மன்னர்மகா தீபாதி நலம்பெருகு முறைபுரிந்தார். (கூ௩)

சான்றசிவத் துவிசரிவர் தம்பகும்ப விம்பமெனு
மூன்றினுமிம் முறைபூசை முடித்திடவத் திருக்காட்சி
யென்றுலகுக் களித்தவணின் றெழுந்தருளி யெம்பெருமா
னன்றதிரு வீதியிலெம் மன்னையொடு முலாத்தருவான். (கூ௪)

பானுமதி யெனுமிருவர் பல்லுருக்கொண் டெம்பெருமாற்
கானபணி புரிந்துய்வா னடுத்திருபால் வரவேய்ப்ப
மேனிமிர்வுற் றவிர்செம்மை வெண்மையன விரிகவிகைக்
கானநிரை நிரையாகக் கவிந்துநிழ லனிபரப்ப. (கூ௫)

ஒருபாறன் பாலாக வுமைகவர்ந்தா டவம்புரிந்தா
ளிருபாலும் பெறப்பணியீண் டியற்றுவலென் றடுத்தனள்பல்
லுருவாகிக் கங்கைதன தொண்டிரைவீ சுறுசெயல்போற்
றருவான மகளிர்பலர் சாமரைகள் புடையிரட்ட. (கூ௬)

பின்புதமை மடிக்கிடத்திப் பெ ராணச் சிறுகால்செய்
தின்புதவு மம்மையப்பர்க் கீண்டிதுஞ்செய் திடன்முறையென்
றன்புதரு தொண்டர்பல வருஞ்செயல்வீ சனங்கொண்டு
முன்புதனித் தனிவிசிறு முழுமணக்கான் முகமப்ப. (கூ௭)

தொடர்பிருபா லாலவட்டஞ் சுருட்டிநிரை யாதிசெல
மிடையுநெருக் கொதுக்குமுடி விடையொளிர்பொற் கோலுலவ
விடியகல்வான் பறந்தோடு மியலிருபுள் ளிவைமுதல
கொடிகடமக் கோரரசாய்க் குலவுவிடைக் கொடிமுனுற. (கூ௮)

யாமிதுகா றந்தோநம் மிருநடனத் திறநோரா
தாமர்முன நடித்தலுத்தே மோதுநட விகற்பமெலா
மேமுறவோர்த் திடுமெம்மா னிதுவன்றோ பெரும்பேறென்
றேமகல்வா னரமகளி ராங்கனெதிர நடித்துவர. (கூ௯)

காதமெலா மொடுங்குழிமுன் னண்ணியவா பின்புபல
பேதமுற விறைவன்முனம் பெருகவிரிந் தெழுவவென
வேதவொலி தமிழ்வேத மிக்கவொலி தொக்கபல
கீதவொலி பல்லியத்தின் கிளரொலிகள்

இருபாலு மெசுர்வேத மெடுத்தோதி மிசைபெருக
மருவாகின் றேனையமா மறையொலியின் மல்கிவரத்
தருவாய்மைத் தமிழ்வேதஞ் சந்நிதியின் மன்னிவர
வொருவாத சிவநாம கீர்த்தனத்தி னோசையெழ. (௧0௧)

வீணைமுதற் றந்திரிகண் மேயபல கருவியிசை
காணமர்வேய்ங் குழலாதி துளைவகைய கருவியிசை
யேணமர்தோற் கருவியிசை யியைதருதா ளத்தினிசை
கோணரிதாய் மிடற்றெழுந்த குலவுமிசைக் குலம்பெருக. (௧0௨)

வந்தியர்மா கதர்சூதர் மலிதருமங் கலம்வீரம்
பந்தியமா புகழ்முறையே பண்புறநின் றெதிர்பாட
முந்தியசீர்ப் பாவாணர் முதிர்சுவைநாற் கவிசூட
விந்தியசீத் தவர்போற்று மிருந்துதிபற் பலகூட (௧0௩)

குருக்கொண்ட மதிமௌலிக் குழகனருட் டேவெள்ள
முருக்கொண்டந் நிறம்பொலிந்தெவ வுயிர்க்குமளித தறல்போலத்
திருத்தொண்டர் திருமேனித் திருவெண்ணீற் றொளிபரவக்
கருத்தொன்று மரவோசை கண்மலர்நீத் திரைவிரவ. (௧0௪)

திருவருளி னடங்கிமலர் சிந்தைதெளிந் தன்புருகுந்
தாமிகுமெய் யடியர்சிவ தசபுரா ணத்தடைவின்
வருமரிய பெருமகிமை வகைநனியு வகைசிறப்பப்
பரவிவின வுநர்களிப்பப் பரிவினெடுத் தோதிவர. (௧0௫)

விண்மாரி யெனப்பொழியும் விழிமாரி யன்பர்தருங்
கண்மாரி சொரிவிரைப்பூங் கவின்மாரி சிவஞான
வண்மாரி தருதமிழ்மா மறைமாரி யெண்மூன்று
பண்மாரி முதலாய பலமாரி நலம்பெருக. (௧0௬)

எமதுரியு மேகாச மெனவடித்துச் சிறப்பளித்தோ
னெமையருளு மெனவடுத்தாங் கிபமணிந்து முன்போதக்
கமைதருமா மறைபரியாக் காதலித்தா னுதலினு
னமையருள்வா னெனப்பரிக ணடம்புரிந்தங் குடன்போத. (௧0௭)

*சிவனெனுநா மந்தனக்கே யுடையனென மறைதெளித்த
திவியதமிழ்ச் சுருதிபுகல் செழும்பொருணோர் தேற்றுதல்போற்

---

* சிவசப்தத்தின பொருள் மங்கலம். அது சர்வஞ்ஞதாதி எண்குணங்களாம். அப்பொருளைத் தேற்றுதல் போல அஷ்டமங்கலங்கள் எடுத்தேக எனது முடிக்குக.

சுவணகட முதற்றேவ மங்கலமாந் தொகையெட்டு
மயிரிழைவான் மடவார்க ளணித்தாக வெடுத்தேக. (௧௦௮)

மன்னனையோ ருதுமெல்லா முடையபிரான் றிருவெழுச்சிக்
கின்னமற் றென்னவுமாங் கெய்தாமலர் மணிமறுகின்
முன்னவன்மா தேவநிறை முக்கணனவந் தானென்று
சின்னமெலா மெதிர்த்தோதத் திருவுலாப் புறம்போந்தான். (௧௦௯)

திருக்கோயின் முன்போந்து தேவியொ டெடுத்தேந்துங்
கருப்பூரச் சுடர்முதல கவினுறவும் முறைசூழத்
தருக்காதி சைவர்செய்பூ சனையேற்றுட் சென்றருளி
விருப்பூரு மணியணைமேல் வீற்றிருந்தா னுமேசன். (௧௧௦)

இம்முறைநா ளேறேற விருஞ்சிறப்பு நனியேற
வம்மவிரு பொழுதுமெழுந் தருள்பவனி யெவரிசைப்பார்
நம்மையரு ளனைபெரிய நாயகியோ டுமேசன்
மும்மையுல குயவூரு முறையூர்தி வகைமொழிவாம். (௧௧௧)

வேறு.

பின்னர்வழிநாட் காலையிலெம் பிராட்டி யோடு மாந்தோளி
தன்னி லிறைவ னுலாக்காட்சி தந்தந் நாளின் மாலையினிற்
பன்னவரிய நித்திலப்பூம் பந்தர் நிழற்கீ ழுமேசன்
மன்னுகாழி மணியெழுச்சி மாண்பு நினைப்பித் துலாப்போந்தான். (௧௧௨)

மூன்று நாளிற் காலையுலா முன்னை முறைபோந் தன்றிரவிற்
றூன்றுழ்ந் தல்குற் குடைந்தபணி தன்னைச் சுமப்ப வுமைபோதக்
கோன்று னிவண்சார் பிரிவாற்றுக் துணைத்தி னடைந்து தரித்ததெனச்
சான்றோர் பரவு கயிலாயத் தளிகா கனமெம் பிரானூர்ந்தான். (௧௧௩)

வருநான் கெனுநாட் காலையுலா மாயிற் போந்தவ் விரவிடை
தெருளோ திமமூர்ந் துமைபோதத் திகழ்சே வமுன் முடிசூட்டும்
பெருவாழ் வினுமீ ததிகமெனப் பேணு நந்தி மிசையவற்குப்
பொருவா மூன் றூற் சிவஞான போத மணித்தே னுலாப்போந்தான். ()

ஐந்தென் றிடுநாட் காலையுலா வடைவிற் போந்தந் நிசிகாத்து
கந்தின் சொல்லா ரமுதருத்து கருணைக் கிதுகைம் மாறெனல்போன்
முந்துங் கிளியூர் தரவுமையெம் முதல்வன் கணேச னெனற்கிசைய
வந்தும் பூதந் தனைவசந்த விழாக்கொண் டூர்ந்தா னும்பர்பிரான். (௧௧௫)

இருமூன் றெனுநாட் காலையுலா வெழிலார் தரப்போந் தந்நிசியெம்
பெருமான் றனையூ டலின்வெல்லும் பெற்றி புறத்துந் தெரிப்பதென

வரியூர்ந் தனிமபோ தரவெம்மா னயிரா வணமூர்ந் ததுகயிலைக்
கிரியூர் பட்ட [illegible]னமீங் கிழமை தெரித்தாங் குலாப்போந்தான்.(கககூ)

அறமே வேழா நாட்காலையருமை யுலாப்போந் தன்றிரவி
லறமே யுருவா யென்றும்வள ரறமே புரிவா ளதுதெரித்தாங்
கறமே யுருவாம் விடையூர வண்ண லுருவிற் கலந்திடர்முற்
றறமே வியதோர்தொடர்புணர்த்தாங் கருமால் விடையூர்ந்தருள்புரிந்தான்.

இருநான் கெனுநாட் காலையுலா விணங்கப் போந்தெவ் வுயிர்க்கு முறை
யொருவா தூட்டி வளர்க்குமுயிர்த் தாய்தானெனப் புணர்த்தாங்குத்
திருவார் காம தேனுவுமை செலுத்த மால்பின் னவதாரத்
துருவா யருள்வேட் டிவண்மேற்கொண் டுற்ற னெனப்பாய்மாவூர்ந்தான்.

ஒன்பா னளி னுமைமொருகோட் டும்பன் மயிற்சேய் சண்டேச
னென்பா ரொவ்வோர் மாமணித்தே ரிவர்ந்து திருமா மணிமறுகி
லன்பா லுடன்போ தரவெம்மா னமுத நாத னணிமணித்தே
ரின்பா லூர்ந்தாங் கருட்கோலத் தெழிலார் காட்சி யினிதளித்தான்.(ககக)

ஒருபா னளிற் சிறுகாலை யுடையா னுடையா ளுடன்காட்சி
தருவாழ் வருளி யுவந்துதனித் தனிவெள் விடைமே னிருமலமாந்
தெருண்மா தீர்த்தந் தனிற்போந்து தீர்த்தங் கொடுத்தாங் குலகமெலாம்
பெருவாழ்வளித்தாங்கருள் வெள்ளப்பெருநீர்தோய்ந்தின் புறப் புரிந்தான்

பின்னர் யாக விசர்ச்சனநூல் பிறங்க வாற்றி யாகேச
சொன்ன கடநீ ரமுதேச சுயம்பு மூர்த்திக் கபிடேக
நன்ன ரியற்றி விசேடார்ச்ச னைமுன் புரிந்தவ் வமுதேசன்
முன்னர் விடைமாண் கொடியிறக்கி முதமீக் கூர்ந்தார் சிவத்துவிசர். ()

ஈற்றிற் புரிசண் டேசவிழா விலங்கப் புரிந்தா ரெண்டிசையும்
போற்று பாலாங் குரங்கள் புனைந்த விரட்சை விசாச்சனங்க
ளாற்றிற் புரிந்தா ரமுதேச னன்னை பெரிய நாயகிதன்
சாற்று கலியா ணோற்சவமுந் தயங்க மரபின் முறைபுரிந்தார். (கஉஉ)

வருநா டோறுந் தனிவசந்த மணிமண் டபத்தில் வீற்றிருந்து
திருவார் விழாக்கொண் டருளியவச் சிறப்பி னனந்த மடங்கின்றுட்
பெருகா நிற்பப் புதுநீர்சூழ் பிறங்க யாத்து நறுமலர்மெய்
தொருவா ஈப்பண் மணிபீடத் துமையோ டமையா ளமுதேசன்.

தனக்கு நபன கும்பாதி தாபித் தருச்சித் துறுமரபின்
மனக்கொண் டினிய வபிடேக வகைகள் பெருக நனிபுரிந்தோ
தனக்த வால்வர்க் காதிநிவே தனமா பூசைச் சிறப்பியற்றி
மனக்கு மகிழ்கூர் விடாயாற்று மாண்பின் விழாச்சீர் வயக்கினர். (கஉச)

உடனுங் கெழுந்துட் சூழன்முத லோரைந் தாவ ணங்களினும்
புடைமா மறைதே வாரசிவ புராண நிருத்த வாத்தியங்க
ளிடனீ ளோதை யோரொன்ற யிலங்கி முறையே தொடர்ந்துவர
நடநா யகன்சூழ் போந்திருக்கை நணிவீற் றிருக்கு நலம்புரிந்தார். (கஉரு)

சாற்று மிவ்வா றமுதேசன் சைத்தி ரோர்ச வஞ்சிறப்ப
வாற்றின் முடித்த சிவத்துவிச ரவிர்வெண் பூதி பிரசாதம்
போற்று வலாரிக் களித்தாசி புகன்றிவ் வரிய பெரும்பயனீ
யேற்று வாழ்கென் றுபசரித்தா ரிறைஞ்சி யேற்றா னுடல்பொடித்தான்.

பின்ன ரனைய சிவத்துவிசப் பெரியர்க் கரிய வணியாதி
மன்ன வணிந்து மாபூசை யயர்க்கிச் சிவிகை களினிவர்ந்தாங்
கன்னர் வீதி வலம்போந்தாங் கமரா சிரியோர் சகமுறையே
நன்ன ரியற்றி யடியுறைக ணயப்ப நனிதந் துளமகிழ்ந்தான். (கஉஎ)

அடைந்து நெகிழ்ந்து நெகிழ்ந்துருகு மன்பு பெருக வருள்வெள்ளங்
குடைந்து பணிந்தாங் கமுதேசன் குளிர்தா மரைச்சே வடிநிழற்கீழ்
கிடைந்து தனிவீற் றிருக்குமன மீட்க லாற்றான் புறவிடைபெற்
றடைந்து வினைநீங் கியமகவா னும்பரோடு மும்பருற்றான். (கஉஅ)

என்னை யுறைத்தாஞ் சூதவனத் தெய்தி யுய்ந்தார் பெருந்தொகையோ
ரன்னை யினும்பே ரருளுடையா னமுத நாத னடைந்தளவே
முன்னை வினைதீர்த் தருள்வகைகண் முற்று முகம்பற் பலகோடி
தன்னை நிலைசெய் துரைப்பினுமச் சேடன் றனக்குஞ் சாற்றரிதே. ()

மலர்மெய்ஞ் ஞான சனற்குமர மைந்த வினிநாம் விரிப்பதையென்
னுலகி னுயிர்க டிருவருள்பெற் றுயமெய்ந் நூல்சொல் சாதனம்பற்
பலவன் னவையா வருக்குமுறை பயிற்ற லருமை யவைக்கெல்லாந்
திலக மியற்றற் கெளியதிது சிவபு ராண சிரவணமே. (கரு0)

சிவபு ராண சிரவணமே தெளிநூல் பலசொல் லறங்களெலாஞ்
சிவபு ராண சிரவணமே சேர்க்குஞ் செல்வத் திறங்களெலாஞ்
சிவபு ராண சிரவணமே சேர்க்கு மனைநன் மக்களெலாஞ்
சிவபு ராண சிரவணமே சேர்க்கும் பலவா மின்பமெலாம். (கருக)

சிவபு ராண சிரவணமே சித்த சுத்தி முதலளிப்ப
சிவபு ராண சிரவணமே செறியும் மலத்தைத் தெறுவதுவே
சிவபு ராண சிரவணமே சீவ குணநீத் தளிப்பதுவே
சிவபு ராண சிரவணமே திகழ்பேரின்ப மருள்வதுவே. (கருஉ)

ஆன முறையா லவற்றிடைமிக் கருமை திகழிச் சூதவன
மேன புராண முழுதேனு மேவு சருக்க மொன்றேனு

மாண கவிகள் பலசிலவு மற்றொன் றேனு நியதிபெற
ஞான முறைமேவா [illegible]தல்கேட்ட ணயக்குமவரே பிறந்தவராம். (௧௫௩)

இன்ன சூத வனக்காதை யெழுது மவரே டுந்தவர்மேற்
பண்ணு முதவி புரிந்தவர்சீர் பரவு மவர்பூ சித்திடுவார்
சொன்ன முறையிற் பதிட்டைபுரி தூயர் முதலோ ரமேதசன்
றன்ன தருளா னினைத்தவெலாஞ் சார்ந்து வாழ்வார் சரதமிதே. (௧௫௪)

என்றங் கெமையா ணந்திமுடித் திசைத்த முறையா லெழுவேட்கை
குன்ற தெனினுந் திருவிரையாக் கலியைக் கடந்து மேற்கூற
னன்ற காதென் றமைந்திருந்தா னுங்கு முகன்சே யெனச்சூத
னன்ற தரித்த முனிகுலத்துக் கறைந்தா னுணைக் கமைந்தாரால். (௧௫௫)

வேதம் வாழி முகில் வாழி விளைசூழ் வாழி யுயிர்க்கின்ப
சீதம் வாழி திருத்தொண்டச் செல்வர் வாழி பூதிமுதற்
சாதம் வாழி சித்தாந்த சைவம் வாழி யருளமுத
நாதன் வாழி யனைபெரிய நங்கை வாழி வாழியவே. (௧௫௬)

---

இந்திரன்றிருவிழாச்சருக்க முற்றிற்று.

சூதவனபுராணம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்-௧௫௨௦.

சிவமயம்.

# பிழை திருத்தம்.

| பக்கம். | பாட்டு. | வரி. | பிழை. | திருத்தம். |
| --- | --- | --- | --- | --- |
| 2 | 7 | 2 | னாயகினை | னாயகின் |
| 3 | 9 உரை | | பன்னகம் | பனகம் |
| 4 | 13 ,, | | ரிக்குக | பிரிக்குக |
| 6 | 22 ,, | | எனவும் | எனப் |
| 8 | 31 ,, | | எந்தங் | எந்தச் |
| ,, | ,, ,, | | எது | எது |
| 19 | 61 | 4 | ஓதுக | ஓது |
| 21 | புட்னோ. | | உத்தி | உததி |
| ,, | ,, | | நிகாக்கொல் | நிகர்கொல் |
| ,, | ,, | | செளுந்தி | செருந்தி |
| ,, | ,, | | புறவுட | புறவு |
| 29 | 12 | 2 | யிளாநிர் | யிளாநீர் |
| 31 | 26 | 2 | மாகமி | மாகமீ |
| 36 | 57 | 1 | நகரி | நக |
| 37 | 61 | 3 | தெவ | தெவ் |
| 45 | 131 | | நாண | நாண் |
| 47 | 144 | 1 | முனிவா | முனிவர் |
| 64 | 19 | 2 | யதிகலித | யதிகவித |
| 67 | 4 | 1 | யொப்பரி | யொப்பரிதி |
| 68 | 17 | 1 | தனைவுனாய் | தனையுனா |
| 70 | 34 | 1 | டேகலி | டேகவி |
| 73 | 56 | 4 | தோன்றினன் | தோன்றின |
| 74 | 66 புட். | | அருணம் | அருண் |
| 76 | 79 | 1 | காசியினி | காசினியி |
| 86 | 69 | 5 | வைத்தனால் | வைத்தனால் |
| 88 | 12 | 4 | செய்வதே | செய்தே |
| 89 | 20 | 4 | சிலா | சிவா |
| 91 | 31 | 4 | வீடு | விடு |
| 94 | 1 | 3 | காதண் | காத்தண் |
| 97 | 31 | 2 | மினனிசை | மின்னிசை |
| 98 | 35 | 4 | நடங்கனா | நடனாங்க |
| 100 | 48 | 2 | முன்றிப | முன்றில |
| 103 | 11 | 2 | தோறு | தொறு |
| ,, | 12 | 2 | லொன்றி | வொன்றீ |

# பிழை திருத்தம்.

| பக்கம். | பாட்டு. | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|
| 104 | 20 | 1 | கலம் | நலம் |
| ,, | 21 | 1 | பில்லிங்க | பிலிங்க |
| 108 | 48 | 4 | மணிசட | மணிகட |
| 109 | 59 | 1 | மனி | மணி |
| 111 | 71 | 3 | தருச்சி | வருச்சி |
| 122 | 22 | 2 | சருனை | சுழுனை |
| 123 | 29 | 2 | டேற்றல | டேற்றவ |
| 125 | 44 | 3 | மாவி | மாலி |
| 127 | 66 | 4 | விலகு | லிலகு |
| 128 | 67 | 3 | பினந் | பீனந் |
| ,, | 69 | 3 | கென்னு | கென்று |
| 130 | 83 | 3 | கெவருவங் | கெவருங் |
| 131 | 91 | 3 | தோண | தோன |
| 136 | 9 புட். | | தம்முனி | நவமுனி |
| 139 | 32 | 3 | லருண்மா | வருண்மா |
| 140 | 43 | 1 | தேசவி | தேசவி |
| 141 | 49 | 4 | றிண்ணன | றின்னண |
| ,, | 50 | 1 | லன்னை | ளன்னை |
| 142 | 57 | 4 | லோயி | லோவி |
| ,, | 58 | 1 | எழும்வி | எழும்பு |
| 143 | 63 | 1 | பல்காவி | பல்காலி |
| ,, | 69 | 1 | மபரி | மாபி |
| 144 | 71 | 2 | வரங்யுரு | வரங்கரு |
| ,, | 77 | 1 | ரிலங்க | ரிலிங்க |
| ,, | ,, | 2 | ணிள் | ணிற் |
| 149 | 9 | 3 | ிகழ | நிழ |
| 156 | 85 | 4 | வாலி | வாவி |
| 163 | 19 | 3 | மணங் | மனங் |
| 164 | 25 | 3 | போர | போர |
| ,, | ,, | 4 | நகையு | நகையி |
| 169 | 66 | 1 | மரதவ | மாதவ |
| 171 | 81 | 4 | முன்பின | முன்பிள் |
| ,, | 84 | 4 | வெத் | லெத் |
| ,, | ,, | 4 | மிசைர் | மிசைத் |
| 178 | 137 | 3 | கோசிந | கோசிக |
| 194 | 63 | 1 | எழுந்தி | எழுந்தி |
| 200 | 113 | 4 | தளிவா | தனிவா |
| ,, | 114 | 4 | மணித்தேர் | மளித்தோ |